# சமூகக்கல்வி

191

1282




க. குணராசா, *B. A. Hons. (Cey.), C. A. S.*

கமலா குணராசா, *B. A. (Cey)*

1189

ஸ்ரீ லங்கா வெளியீடு

யாழ்ப்பாணம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPECIMEN COPY

191

1161

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M/0 09

# சமூகக்கல்வி

# 10

SPECIMEN COPY

(புதிய பாடத்திட்டத்திற்கு இணங்க
ஆக்கப்பட்ட நூல்)


ஆக்கியோர்:

**க. குணராசா B. A. Hons. (Cey.) C, A. S.**

[முன்னாள்:-
* புவியியற் பயிற்சியாளர், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை.
* புவியியல் உதவி விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம், கொழும்பு.
* அதிதிப் போதனாசிரியர், கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
* புவியியல் ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்,
* அதிதி விரிவுரையாளர், அரசினர் ஆசிரியகலாசாலை, கொழும்புத்துறை,
* உதவி அரசாங்க அதிபர், அனுக்காய்.]

**கமலா குணராசா B. A. (Cey.)**

(ஆசிரியை, நாவலர் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்.)



**ஸ்ரீ லங்கா வெளியீடு,**

234, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.


1187

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✶ முதற் பதிப்பு, ஓகஸ்ட், 1978.

✶ (C) MRS. K. KUNARASA,
82, Brown Road,
Neeraviady,
JAFFNA.

✶ அச்சுப்பதிவு,

✶ ஸ்ரீ லங்கா அச்சகம்,
யாழ்ப்பாணம்.

✶ நாமகள் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

300

விலை: ரூ. 8-40

✶

விற்பனை உரிமை:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
234, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) வகுப்பு மாண வர்களின், புதிய பாடத் திட்டத் திற்கு இணங்க, 'சமூகக் கல்வி' நூலொன்றை வெளியிடல் அவசியம் என ஆசிரியப் பெருமக்கள் பலர் வற்புறுத்தியதன் பேரில், இந்நூலை வெளியிடுகின்றோம். இந்நூலை எங்கள் வேண்டுகோளின் பேரில், பல புவியியல் நூல்களின் ஆசிரிய ரான திரு க.குணராசா அவர்களும், திருமதி கமலா குணராசா அவர் களும் ஆக்கித் தந்துள்ளனர்; உலக நாடுகள் என்ற பகுதி திரு. க. குண ராசா அவர்களால் ஆக்கப்பட்டது. மிகுதி யாவும் திரு.க.குணராசாவின் மீள்பார்வையில், திருமதி. கமலா குணராசா அவர்களால் ஆக்கப்பட் டது.

மாணவர்களின் தரம், கிரகிக் கும் தன்மை, திறன் என்பனவற்றை மனதிற்கொண்டு, மொழிநடை, விபரணை என்பன இந்நூலில் அமைந் துள்ளன. ஏராளமான விளக்கப் படங்கள், பொருட்செலவைக் கவனி யாது, இந்நூலில் சேர்க்கப்பட்டுள் ளன. படிக்கும் மாணவர்களுக்கும் படிப்பிக்கும் ஆசிரியப் பெருமக்களுக் கும் இவை உதவியாக அமையக் கூடியன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சமூகக் கல்வி — தேசப்பட வேலை' என்ருெரு படவேலைப் பயிற்சி நூலும் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. இந்நூலில், ஏராளமான விளக்கப்படங்களின் துணை கொண்டு, படவேலை விபரிக்கப்பட்டுள்ளது. இந்நூலின் இறுதியில் தேசப்படத் தொகுதி ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

'சமூகக் கல்வி', 'சமூகக் கல்வி — தேசப்படவேலை' என்ற இவ்விரு நூல்களும் மாணவர்களின் 'சமூகக் கல்வி' பாடத் தேவையைப் பூரணமாகப் பூர்த்தி செய்யும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

ஆசிரியப் பெருமக்களும், மாணவர்களும் இந் நூலினை உவந்தேற்பார்கள் என்று நம்புகின்ருேம். இந் நூலில் குற்றங்கள் காணப்படில், அவற்றை ஆசிரியப் பெருமக்கள் சுட்டிக்காட்டில், நன்றியுடன் அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்வோம்.

வணக்கம்!

நா. தெய்வேந்திரம்
வெளியீட்டாளர்

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
23-8-78.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக் கல்வி

பகுதி: ஒன்று

## ஜனநாயகம்

# I அரசியல் - அரசு - அரசாங்கம் அறிமுக விளக்கம்

### அரசியல்

நாகரிகம் அடைந்த ஒரு சமூகத்தின் அரசாங்கம், அடிப்படைச்சட்டம், குடிமக்கள், அவர்களுக்கிடையிலான தொடர்புகள், அவற்றை வகுத்துக்காக்கும் நீதி, சமூகத்தின் நிலைகள், குறிக்கோள்கள் என்பனவற்றை விபரித்துக்கூறும் ஒரு அறிவுத் துறையே அரசியலாகும். அரச அறிவியல் என இத்துறையைச் சொல்வர். பல்வேறு சமூக அறிவியல் துறைகளில் அரச அறிவியலும் ஒன்றாகும். மேனாட்டு அறிஞர்களின் கருத்துக்களில் அறியப்பட்ட செய்திகளின் ஆதாரத்திலேயே இன்றைய உலகின் அரசியல் அமைக்கப்பட்டுள்ளது; அரச அறிவியலிற்கு முன்னோடியாகக் கருதப்படுபவர், கிரேக்க அறிஞரான அரிஸ்டோட்டில் ஆவார். அவர் அரசியல் குறித்துத் தெரிவித்த செய்திகளைத் தொகுத்து அவரின் மாணவர்கள் ''பொலிடிக்ஸ்'' என்ற நூலாக வெளியிட்டனர். அதன் பின்னர் தோன்றிய அரசியலாய்வுகள் அரிஸ்டோட்டிலைப் பெரிதும் பின்பற்றி அமைந்தன. அரச அறிவியல் துறையின் பரப்பு விரிவானது. அரசாங்கம், அதன் பல்வேறு துறைகள், அவற்றின் அமைப்பு முறைகள்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் இயக்கம், பல்வேறு நிர்வாகத் தாபனங்களை உரு வாக்கி அவற்றைச் செயற்படுத்தும் தன்மைகள், அரசியல் நோக்கங்கள் பற்றிய கோட்பாடுகள் எனப் பல்வேறு விபரங் களின் தொகுப்பாக அரச அறிவியல் இருக்கின்றது.

பண்டைய மக்களின் அரசியல் வாழ்க்கை மரபு (*Tradition*), வழமை (*Custom*), சமய ஆசாரம் என்பனவற்றின் அடிப்படை யிலேயே அமைந்திருந்தது. அவற்றைப் பேணிக் காப்பதற்கென உள்ளூர்த் தலைவர்களும், சமயகுரவர்களும் இருந்தனர். இத் தகைய கட்டுப்பாடுகள் சமயச்சீர்திருத்தக் காலத்திற்குப் பின் னர் அழியத்தொடங்கின. பண்டைய மரபுகளைப் பின்பற்று வதைவிடத் தனி மனிதனின் பகுத்தறிவுக்கு உடன்பாடான நீதிகளையும் ஒழுங்குகளையும் அமைத்துக் கொள்வதே சிறந்தது என்ற எண்ணம் உருவாகியதால், அரசியல் கருத்துக்கள் உரு வாகத் தலைப்பட்டன. மாக்கியவல்லி என்ற இத்தாலிய அறிஞர் அரசியலுக்கும் பழைய நீதிக்கோட்பாடுகளுக்கும் இடையில் இருந்து வந்த நெருங்கிய தொடர்பை வேறுபடுத்தினர்; அதி லிருந்து அரசியல் தனித்துறையானது.

மனிதர்கள் எல்லாரும் சமூகத்தின் அங்கத்தினர்; பலர் ஒன்றுகக்கூடி வாழ்வது அவர்களின் இயற்கையான பண்பாகும்; மனிதன் நல்ல வாழ்வு வாழ்வதற்குத் தேவையான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே அரசியல், நாடு, அரசாங்கம் என்பன தோன்றி வளர்ந்து வந்துள்ளன என அரிஸ்டாட்டில் கூறியுள்ளார். அரசியலே சமூகத்தின் எல்லாத் துறைகளிலும் பார்க்க சிறந்ததொரு பேரியல் (*Master Science*) என அவர் கூறியுள்ளார்; ஒரு சமூகம் நிலைத்திருப்பது அச் சமூகத்தின் அரசாங்கத்தைப் பொறுத்தது; அரசியலானது பொருளாதாரத் துறையுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையது; பொரு ளாதாரத் துறையும் அரசியல் துறையும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய இணைப்பினைக் கொண்டுள்ளன; அரச அறிவியலின் வளர்ச்சி, வரலாற்றிலிருந்து பெறப்பட்ட விபரங்களை உள் ளடக்கியிருக்கும்.

அரிஸ்டோட்டிலின் குருவான பிளேட்டோ என்னும் கிரேக்க அறிஞர் அரசியலை, தத்துவவியல் அடிப்படையில் உருவாக்க முயன்றுள்ளார். அவருடைய கருத்துக்கள் பெரிதும் சிந்தனை முறையில் அமைந்தவை. அரிஸ்டோட்டில், மனிதன் உயிர் வாழ்வதற்கு அரசியல் வாழ்க்கை தேவையாக இருக்கிறது என்ற கொள்கையை வெளியிட்டார். இக்கொள்கை உயிரியல் அடிப் படையில் அரசியலை விளக்குகின்றது. மாக்கியவல்லி என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர், மதவியல், ஒழுக்கவியல் என்பனவற்றின் சார்பில் அரசியலை ஆராய்ந்தார்.

## அரசு - அரசாங்கம்

அரசு என்ப , ஆட்சி முறைக்குட்படும் ஆள்புலத்தையும் (நாடு), அந்த ஆள்புலத்தில் வாழும் மக்களையும் குறிக்கும்: நாடும் மக்களும் தாம் அரசு அவர்; எனவே அரசு (*State*) என்பது அரசாங்கத்தினின்றும் (*Government*) வேறுபடுத்தப் படல் வேண்டும். அரசாங்கம் என்பது அரசின் வேலைகளைச் செவ்வனவே செய்யப் பொறுப்புள்ளதாகவும் அதிகாரமுள்ள தாகவும் உள்ள ஒரு மக்கள் குழுவைக் குறிக்கும். அதனால்தான் "அரசாங்கம் மாறும் அரசு மாறாது" என்பர். இறைமை அல்லது மேலான அதிகாரம் அரசின் முக்கிய அம்சமாகும்.

ஓர் அரசின் அங்கங்கள் எவை?

ஓர் அரசின் அங்கங்களென (அ) ஆள்புலம் (*Territory*), (ஆ) மக்கள் (*Peoples*), (இ) அரசாங்கம் (*Gevornment*), (ஈ) இறைமை (*Sovereignty*), (உ) சட்டங்கள் (*Laws*) என்பனவற் றைக் குறிப்பிடலாம்.

## ஆள்புலம்

சமுதாயம் ஒன்று தனக்கென ஓர் அரசினை நிறுவி வாழ் வதற்கு பூமியில் ஒரு நிலப்பரப்புத் தேவை. ஒரு குறிப்பிட்ட எல்லைகளுள் அடங்கிய நிலப்பரப்பு ஆள்புலம் எனப்படும். ஆள் புலம் வத்திக்கான் போன்று ஒரு நகரமாகவும் இருக்கலாம். சீனு, சோவியத் சமவுடைமைக்குடியரசு, இந்தியா போன்ற பெரு நிலப்பகுதிகளாகவும் இருக்கலாம்; இலங்கை போன்ற சிறு தீவாகவும் இருக்கலாம். பரப்பைப் பொறுத்தளவில் இந் நாடுகள் பெரியனவாகவும் சிறியனவாகவும் வேறுபடினும் ஒவ்வொன்றும் தனிச்சுயேச்சை நாடாகவும், ஒவ்வொரு அரசாங்கத்தைக் கொண்டனவாகவும் விளங்கி வருகின்றன.

## மக்கள்

ஆள்புலத்தில் மக்கள் வாழும்போதுதான் உண்மையான அரசு உருவாகின்றது. ஒரு சமுதாயத்தின் சிறப்பான குறிக் கோள் எதுவோ அதைப் பின்பற்றுவதற்காகவே அரசு தோன்றி, அதை நிறைவேற்றுவதற்காகவே அரசாங்கம் அமைக்கப்படுகின் றது. மக்கள் ஒரு நாட்டில் பிறந்து வளர்வதாலும் அந்நாட்டு மொழியைப் பேசுவதாலும் தாம் பிற நாடுகளிலிருந்து வேறு பட்டவர்கள் எனக் கருதுவதாலும் நாட்டுப்பற்று (*Nationalism*) தோன்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைமை

அரசின் மிக முக்கியமான அங்கங்களில் ஒன்று இறைமையாகும்; மக்களிடையே ஒழுங்கை நிலைநாட்ட நிர்வாக அமைப்பும் சட்டங்களும் தேவைப்படுகின்றன. இதற்கு அரசிற்கு உதவுகின்ற ஆணை (Authority) எனப்படுகின்ற இறுதியான வல்லமையே (Coercive Power) இறைமையாகும். தம் அரசில் வாழ்கின்ற மக்களை ஆள்வதும், பிறநாடுகளின் தலையீடுகளுக்கோ ஆணைக்கோ பணியாததும் ஆன சுயேச்சை அதிகாரம் தான் இறைமை எனப்படுகின்றது.

## அரசாங்கம்

அரசினை ஆள்வது அரசாங்கம் எனப்படும். ஒரு சமூகத்தில் ஒருவனே அல்லது ஒரு தாபனமோ கட்டளையிட, அக்கட்டளைக்கு இணங்க அரசின் மக்கள் நடக்கும்போது அதனை அரசாங்கம் என்பர். அரசாங்கம் இல்லாத அரசு இல்லை. மக்கள் ஒன்று சேர்ந்து ஒரு அரசாகி, அதன் இறைமைக்குட்பட்டு, தமது குறிக்கோள்களைச் செயலாக்க உருவாக்கப்படும் தாபனம் அரசாங்கம் ஆகின்றது. பண்டைக்காலத்தில் மக்கள் தனித் தனிக் குடும்பமாகவும், சிற்சில குடும்பங்கள் இணைந்து சிறு சிறு கூட்டங்களாகவும் வாழ்ந்தனர். அக்கூட்டத்தைப் பாதுகாக்கவும் சரிவர நடத்தவும் ஒரு தலைவன் தேவைப்பட்டான். பல சாலிகளும், அறிவாளிகளும், திறமைசாலிகளும் இத்தலைமைப் பொறுப்பை எடுத்துக்கொண்டனர். இவர்கள் தலைவர்களாக அல்லது அரசராக மாற, அக்கூட்டத்தின் மற்றையவர்கள் அரசின் குடிமக்களாயினர். நாகரீக வளர்ச்சியால் தனிமனித ஆட்சி படிப்படியாகக் குறைந்து பலரின் இணைந்த ஆட்சி, மக்களாட்சி என்பன இன்று உருவாகியுள்ளன. மக்கள் ஒரு இடத்தில் நிலையாக வாழத்தொடங்கியதும் அரசாங்கம் உருவாகத் தொடங்கியது; முதலில் முடியாட்சி நிலவியது. மக்கள் அரசனிடமிருந்தும் பிரபுக்களிடமிருந்தும் தமது உரிமைகளைப் பெற்ற பின்னர் தான் ஜனநாயக மக்கள் ஆட்சி உருவானது;

## சட்டம்

அரசின் இறைமை எங்குள்ளதோ அங்கிருந்து உருவாகி மக்களிடையே நடைமுறைப்படுத்தப்படுவதே சட்டங்களாகும். சட்டமில்லாத நாட்டில் அரசாங்கமில்லை; அரசுமில்லை; அரசாங்கம் சட்டங்களை இயற்றும்; சட்டங்களை நிறைவேற்றும்; சட்டங்களை விளக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஜனநாயகம் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

மக்கள் தங்களைத்தாங்களே ஆளும் முறை ஜனநாயகம் எனப்படுகின்றது. ஜனநாயகம் என்பது மக்களால், மக்களி லிருந்து, மக்களுக்காகத் தெரிவு செய்யப்பட்ட ஆட்சி முறை யாகும் என்பர். மக்களாட்சியே ஜனநாயக ஆட்சியாகும்.

உலகின் நாடுகளில் காணப்படுகின்ற ஆட்சிமுறைகளைப் பண்டைய கிரேக்கர்கள் (அ) ஒருவர் ஆட்சி, (ஆ) சிலர் ஆட்சி, (இ) பலர் ஆட்சி என அவற்றை நடத்துபவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்துப் பிரித்தனர். தனி மனிதன் ஒருவன் நடத்தும் ஆட்சியை முடியாட்சி எனலாம். பரம்பரை யுரிமையால் ஒரு நாட்டின் அரசுகை வந்து ஆட்சி செய்பவர் களும், இராணுவப் படைப்பலத்தால் ஆட்சியைக் கைப்பற்றி ஆளுபவர்க்கும் இந்த வரையறைக்குள் அடங்குவர். எதேச்சாதி காரிகளாக இவர்கள் ஆள்வர். ஒரு சமூகத்தைச் சேர்ந்த அதன் பெருமக்கள் பரம்பரை அனுபவத்தாலும், செயல் திறமையா லும் பொதுநலத்தைப் பெரிதும் கருதி அரசினை நடத்தும்போது அது சிலர் ஆட்சி எனப்படும். இத்தகைய ஆட்சியில் சிறு குழு வுக்கு எதேச்சாதிகாரம் ஏற்பட இடமுண்டு. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பலர் ஒன்றுகூடி ஆளும் பலர் ஆட்சிமுறையையே ஜனநாயகம் அல்லது மக்களாட்சி என்பர்.

பொதுவாக உலகிலுள்ள நாடுகளின் அரசியலை அவ தானித்துப் பார்த்தால் அவை சர்வாதிகார ஆட்சி, ஜனநாயக ஆட்சி என்ற இருவகையினவாக அமைந்திருப்பதைக் காண லாம். உலகின் பெரும்பாலான நாடுகளில் இன்று ஜனநாயக ஆட்சியே நிலவி வருகின்றது. ஜனநாயக ஆட்சிமுறை முதன் முதலில் கிரேக்க நாட்டில்தான் தோன்றியது.

### ஜனநாயகம்

ஜனநாயக ஆட்சியில் மக்கள் அனைவரும் சமமானவர்கள்; இன்றைய ஜனநாயக ஆட்சி பண்டைய முடியாட்சி, அதன் பின்னர் தோன்றிய மக்களாட்சியின் வழி வந்ததாகும். இன்று உலகின் பெரும்பாலான நாடுகள் கூடிய சனத் தொகையையும் பரந்த நிலப்பரப்பையும் கொண்டன. இதனால் மக்கள் அனை வரையும் நேரடியாக ஆட்சிசெய்ய முடியாது. இவ்வாறான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலையால்தான் பாராளுமன்ற ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டது. இதுவே ஜனநாயக ஆட்சி. இந்த ஆட்சிமுறையில் வாக்குரிமை பெற்ற சகலரும் பொதுத் தேர்தலில் தமக்குரிய உரிமைகளில் ஒன்றான வாக்குரிமையைப் பயன்படுத்தி தேர்ந்தெடுத்த அபேட்சகர்மூலம் அரசியலில் கலந்துகொள்ள முடிகின்றது. இதுவே பெரும்பாலான நாடுகளில் நிலவுகிறது.

பொதுமக்களுக்கு அரசியலில் உள்ள பிரச்சனைகளை எடுத்துக் காட்டவும், பொதுத்தேர்தலுக்கு அபேட்சகர்களை நியமிக்கவும் பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றபின் அரசாங்கம் அமைக்கவும் அரசியல் கட்சிகள் தோன்றின. இக் கட்சிகள் சமதர்ம முறையில் பொதுநலக் கொள்கைகளையும், பொது நலமுறைகளையும் மக்களுக்கு விளக்கி, மக்களால் அவை ஏற்கப்பட்டு, பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்று மக்களின் பேரால் அரசாங்கத்தை நடத்த இக்கட்சிகள் முன்வருவதால் ஜனநாயக ஆட்சியே பெரும்பான்மைக் கட்சியின் ஆட்சியாக விளங்குகிறது.

ஜனநாயக ஆட்சி சமூகத்திற்கும் தனி மனிதனுக்கும் பயன் தரக்கூடிய ஆட்சிமுறை. இந்த ஆட்சியின் அரசியலமைப்பை மாறும் சமூதாயத்தின் தேவைக்கேற்ப இலகுவில் பெரும்பான்மையோரின் சம்மதத்தின் பேரில் மாற்றியமைக்கக்கூடியது. ஜனநாயக ஆட்சி அந்த அந்த நாட்டு இன, மொழி, கலாச்சாரப் பண்பாட்டிற்கமைய அமைக்கப்பட்டிருக்கும்.

ஜனநாயக ஆட்சி நடைமுறையிலிருக்கும் நாட்டில் மக்கள் அனைவரும் சமமாக மதிக்கப்படுவார்கள். நீதிச்சட்டங்கள் யாவும் சகல இன மக்களுக்கும் ஒரே மாதிரியானவை. உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்தும் ஆண்டவனின் குழந்தைகள் என மதிக்கப்படுவதுபோல ஜனநாயக ஆட்சியிலுள்ள அனைவரும் உரிமைகளாலும் சட்டங்களாலும் சமமாக நடத்தப்படுவர். இவ்வாறான ஜனநாயக ஆட்சியில் சர்வாதிகாரம் இடம் பெறாது.

ஜனநாயக நாட்டில் மக்களின் முக்கிய அரசியல் பொறுப்பு யாதெனில் பாராளுமன்றப் பொதுத் தேர்தலின்போது தமக்கு விரும்பியவரை, அதேவேளை தகுதிவாய்ந்த ஒருவரைத் தெரிவு செய்தலாகும். பொதுமக்கள் அரசியலில் பொறுப்புடனும், கவனத்துடனும் செயல்படல் வேண்டும். ஒவ்வொரு குடிமகனும் அரசியல் நடவடிக்கைகளில் பங்குபற்றினால்தான் ஜனநாயகம் நன்கு நடைமுறைப் படுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியாவிலும் பிரித்தானிய ஆட்சியைப் பின்பற்றிய ஏனைய நாடுகளிலும் நடைமுறையில் இருக்கும் ஜனநாயக ஆட்சியைப் பாராளுமன்ற ஆட்சிமுறையென்பர். பொதுத்தேர்தலில் மக்களின் பெரும்பான்மை ஆதரவுடன் எந்தக்கட்சி வெற்றியடைகிறதோ அந்தக் கட்சியின் தலைவர் பிரதம மந்திரியாகப் பொறுப்பேற்பார். இப்பிரதமரினால் அமைக்கப்படும் மந்திரி சபை ஆட்சியைக் கொண்டு நடத்தும். தேர்தலில் வெற்றி பெற்ற கட்சி ஆட்சி செய்யும் கட்சியாக நடைமுறைப்படும் அதே வேளை தோல்வியுற்ற அடுத்த பெரும்பான்மைக் கட்சி எதிர்க்கட்சியாக அமர்ந்து பாராளுமன்றத்தில் அரசியல் பிரச்சனைகளை விவாதித்து முடிவுசெய்யும். ஆளும் கட்சி ஏதாவது ஒரு முக்கிய விஷயத்தை விவாதிக்கும்போது சட்டசபையில் தோல்வியடைந்தால் ஆளும் கட்சி உடனே பதவியிலிருந்து நீங்கும். எதிர்க்கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு வேண்டிய அங்கத்தவரைப் பெற்றிருந்தால் எதிர்க்கட்சி ஆட்சிக்கு வரலாம். அவ்வாறு இல்லாது போனால் பொதுத்தேர்தல் நடாத்தப்பட்டு அதில் எக்கட்சி வெற்றி பெறுகின்றதோ அதுவே ஆட்சி நடத்தும்.

ஜனநாயக ஆட்சிமுறையில் பொதுமக்களுக்கும், சட்டசபைக்கும், அமைச்சரவைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பொதுமக்களது விருப்பத்தின்படியே ஆட்சி நடைபெறும். அரசியலமைப்புத் திட்டத்தில் மக்களின் அடிப்படை உரிமைகள் இன்னதென்று வரையறுக்கப்பட்டிருக்கும். மக்களுக்கு அடிப்படை உரிமைகளாக பின்வருவன ஜனநாயக ஆட்சி நிலவும் நாட்டில் அளிக்கப்பட்டிருக்கும். அரசியல் கட்சிகளை தமது விருப்பங்களுக்கேற்ப சுதந்திரமாக அமைக்கும் உரிமை, கூட்டங்கள் கூடுவது, தமது எண்ணங்களை வெளியிடுவது, பத்திரிகை பிரசுரிப்பது, பிறப்பினாலோ, இனத்தாலோ, உத்தியோகத்தாலோ, செல்வத்தாலோ தராதரம் பிரிக்கப்படாது சமமாக மதிக்கப்படல், எவருக்கும் தனிப்பட்ட சலுகை இல்லாதிருத்தல், நீதி அனைவருக்கும் ஒரே மாதிரி இருத்தல், நீதிபதிகள் கட்சித் தொடர்பற்றவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் இருத்தல் என்பனவாகும்.

மக்களாட்சிதான் ஜனநாயக ஆட்சி. ஜனநாயக ஆட்சி நடைபெறும் நாடுகளில் பாராளுமன்ற ஆட்சிமுறை நிலவும். அமெரிக்காவில் இது வேறுபட்டிருக்கிறது. அமெரிக்காவிலும் அதைப் பின்பற்றும் நாடுகளிலும் வேறுபட்ட மக்களாட்சி நடைபெறுகிறது. இதை ஜனாதிபதிமுறை என்று கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆட்சி முறையில் பொதுமக்கள் பொதுத்தேர்தல் மூலம் சட்டசபை உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதுடன் ஜனாதிபதியை யும் தேர்ந்தெடுத்துக்கொள்கின்றனர். எமது நாடான இலங்கை இதுவரை காலமும் பிரித்தானிய அரசியல் முறையைப் பின் பற்றி வந்தது. 1978-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4-ம் திகதி ஜனாதிபதியாக, 1977ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றிபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் திரு ஜே. ஆர். ஜயவர்த்தன பதவி யேற்றுள்ளார். இம்முறை அமெரிக்க மக்களாட்சியைப் பின் பற்றியதாகும்.

# 3 இலங்கையில் ஜனநாயக வளர்ச்சி

இன்று ஜனநாயகம் என்று கருதப்படுவது பாராளுமன்ற ஆட்சிமுறையாகும். இதுவே இலங்கையில் பின்பற்றப்படும் ஆட்சிமுறை. மக்களால் மக்களிலிருந்து மக்களுக்காகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் ஆளப்படும் ஆட்சிமுறை.

இந்த ஜனநாயக ஆட்சிமுறை இலங்கையில் இன்று நடை முறைப்படுத்தப்படுவதற்கு முன் எவ்வாறு இது வளர்ந்தது என்பதை நாம் அறிந்திருத்தல் நன்று.

இலங்கையில் 15-ம் நூற்றாண்டிற்கு முன் முடியாட்சி நிலவி வந்தது. 1505-ம் ஆண்டு போர்த்துக்கேயரது வருகையாலும் அதன்பின் வந்த ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோர் இலங்கை யைக் கைப்பற்றி ஆட்சி செய்தமையாலும் இலங்கையில் ஏகாதிபத்தியங்களின் ஆட்சிமுறை புகுத்தப்பட்டது. பிரித்தானி யரின் ஆட்சியின்போதுதான் இலங்கையின் இன்றைய ஜனநாயக ஆட்சிமுறை தோற்றுவிக்கப்பட்டது. திரு. உவில்லியம் கோல்புறூக் என்பவரால் சிபார்சு செய்யப்பட்டு 1833-ம் ஆண்டு நடைமுறைக்கு வந்த சட்டநிருபண சபை, சட்டநிருவாக சபை, என்ற இருசபைகளும். இலங்கையின் அரசியல் நிர்வாகத்தைப் பரிபாலித்து வந்தன. இந்த அரசியல்முறை நடைமுறைப் படுத் தப்படும்போது காலத்தின் தேவைக்கேற்ப பலமாற்றங்கள் 1910-ம் ஆண்டிலும் பின்னர் 1920—1924-ம் ஆண்டிலும் செய் யப்பட்டு, டொனமூர் அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வரும் வரை இருந்து வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொனமூர் அரசியலமைப்பு 1931—1938-ம் ஆண்டுவரை நடைமுறையிலிருந்தது. இந்த அரசியலமைப்பு முறையினால் 1931-ம் ஆண்டு 21 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் இரு பாலாருக்கும் சர்வசனவாக்குரிமை அளிக்கப்பட்டது. ஒரு ஜனநாயக ஆட்சிமுறை நிலவும் நாட்டில் மக்களுக்கு இருக்க வேண்டிய முக்கிய உரிமை வாக்குரிமையாகும். இவ் வுரிமை அந்நியரான பிரித்தானியரால் ஆளப்படும்போதே இலங்கை மக்களுக்குக் கிடைத்த உரிமையாகும். பிரித்தானிய மக்களுக்கு 1933-ம் ஆண்டுதான் சர்வசனவாக்குரிமை கிடைத்தது. எனவே 1931-ம் ஆண்டிலேயே ஓரளவு ஜனநாயக முறை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இக்கட்டத்தில் மாணவர்களாகிய நீங்கள் வாக்குரிமை ஏன் ஜனநாயகத்திற்கு அவசியமென்பதை விளங்கிக் கொள்வது நன்று. வாக்குரிமை இல்லாவிடில் பெரும்பான்மை இனமோ அன்றி அதிகாரம் பெற்ற குழுவோ, சிறுபான்மையினர் மீது ஆதிக்கம் செலுத்தும். ஜனநாயக ஆட்சி நிலவும் நாட்டில் அரசியலில் எல்லா மக்களுக்கும் உரிமையும் பங்கும் உண்டு. எனவே மக்கள் தமது உரிமையைப் பயன்படுத்தி அரசியலில் பங்கு பெற அவர்களுக்கிருக்கும் ஒரே ஒரு சாதனம் வாக்குரிமை. வாக்குரிமையில்லையேல் ஜனநாயக ஆட்சி நடைபெறமுடியாது. அங்கு சர்வாதிகாரமே தலை தூக்கும்.

இலங்கையில் முன்பு நடைமுறையிலிருந்த கோல்புறூக் அரசியலமைப்பின்படி சட்ட நிருபணசபை, தேசாதிபதியினால் நியமிக்கப்பட்ட உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தவரையும் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களையும் கொண்ட சபை. இந்த அரசியலமைப்பில் பொதுத்தேர்தலுக்கு இடமில்லை. தேசாதிபதியால் நியமிக்கப்படும் உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தவர்கள் அரசாங்கத்தையே ஆதரிப்பர். எனவே இது ஓரளவு சர்வாதிகார ஆட்சியாக விளங்கியது. இங்கு மக்களின் விருப்பு வெறுப்பிற்கு இடமில்லை. ஆயினும் இந்த அரசியலமைப்பு நடைமுறையிலிருந்தபோது பத்திரிகைச் சுதந்திரம் இருந்தமையால் பத்திரிகைகள் மூலம் அரசின் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டது. இதனால் நாட்டில் அரசியற் சீர்திருத்தம் வேண்டிக் கிளர்ச்சி செய்தனர். இந் நிலைமையில் தான் சர்வசன வாக்குரிமை கிடைத்தது.

டொனமூர் அரசியலமைப்பின்படி 61 அங்கத்தவர்களில் 50 பேர் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையில் தெரிவு செய்யப்பட்டனர். இம் முறையினால் ஜனநாயக ஆட்சிமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்படியாக இலங்கையில் நடைமுறைக்கு வந்தது? ஜனநாயக ஆட்சிப்படி உண்மையான பொறுப்பாட்சி ஒன்று உருவாகுவதற்கு சகல மக்களுடைய பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கும் ஒரு ஆட்சிமுறை நாட்டில் இருக்கவேண்டும். இந்த அரசியலமைப்பை அன்றே இலங்கைக்கு டொனமூர் அரசியலமைப்பு வழங்கியதெனலாம். தேர்தல் ஒழுங்காகவும் நேர்மையாகவும் நடைபெறவேண்டுமாயின் சகல இன மக்களுக்கும் வாக்குரிமை இருக்கவேண்டும். அபேட்சகர்கள் நேர்மையான முறையில் தேர்தலில் வெற்றி பெறவும் வாக்குரிமை உதவும். சகல மக்களுக்கும் வாக்குரிமை இருந்தால்தான் பொதுமக்களின் விருப்பங்களையும் அவர்களின் தேவைகளையும் ஆட்சியிலிருப்போர் அறிந்து அதற்கேற்றபடி ஆட்சி செய்வர். அன்றேல் ஆட்சிக்காலத்தில் தம் விருப்பப்படி எதேச்சாதிகாரமாக ஆட்சி நடத்துவர். பொதுமக்கள் அரசியல் உணர்ச்சி பெற வேண்டுமென்றால் அவர்கள் அரசியல் கருமங்களில் பங்குபற்ற வேண்டும். அவர்கள் பங்குபற்றுவதற்கு வாக்குரிமை இருத்தல் அவசியம். இதுவரை இலங்கையில் ஜனநாயகம் எவ்வாறு டொனமூர் அரசியல்மூலம் தோற்றுவிக்கப்பட்டதென்பதை அறிந்தீர்கள்.

அடுத்ததாக இலங்கை 1972-ம் ஆண்டுவரை நடைமுறையிலிருந்த சோல்பரி அரசியற் திட்டமும் இலங்கையில் ஜனநாயகம் வளர்ச்சியடைய வழி வகுத்தது. பிரித்தானியர் இலங்கையை திருப்பியளிக்கும்போது இலங்கையிலுள்ள சிறுபான்மையினம் பாதிக்கப்படாதிருப்பதற்காகப் பல திட்டங்களை வரையறுத்தனர். இது மக்கள் அனைவரும் சமன் என்னும் ஜனநாயகக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். பொதுத் தேர்தல்மூலம் 95 பேரும், நியமனமூலம் 6 பேர் சிறுபான்மையோரில் நியமிக்கும் முறையை ஏற்படுத்தினர். இவ்வாறு அங்கத்தவர் தொகை கூடியதால் பொதுமக்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டதோடு மக்களும் அரசியலில் அதிகளவு பங்குபெற வாய்ப்பு ஏற்பட்டது.

அடுத்ததாக அரசாங்கசேவைக்கும் நீதிபரிபாலன சேவைக்கும் உத்தியோகத்தரை நியமிக்கும் போது பாரபட்சம் காட்டாது எல்லோரும் சமமாக நடத்தப்படுவதற்கேற்ற முறையில் அரசாங்க சேவைக்குழு, நீதிபரிபாலன சேவைக்குழு என்பவற்றின் கீழ் விடப்பட்டன. இதனால் தனிப்பட்ட ஒருவரின் விருப்பு வெறுப்பிற்கு பிரஜைகள் ஆளாகாமல் நீதியாக நடத்தப்பட்டனர். மகாதேசாதிபதியின் அதிகாரங்களிலும் ஜனநாயக முறை புகுத்தப்பட்டிருந்தது. ஒரு இனத்தவருக்கு அன்றி ஒரு மதத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவருக்கு அநீதியை இழைக்கக்கூடியதும் அல்லது அவர்களது எதிர்ப்பினையுடைய சட்டத்தை சட்டமாக்க தேசாதிபதி அதிகார மளிக்கக்கூடாது, என்பதாகும்.

ஒரு மதத்திற்கோ அன்றி ஒரு சமூகத்திற்கோ தடைகளை உண்டாக்கக் கூடியதும் வேறு சமூகத்திற்கு அல்லது மதத் திற்கு அதே வேளை நன்மை பயப்பதும் ஒரு சமயத்தவருக்கு தனிப்பட்ட சலுகை அளிக்கக்கூடிய சட்டத்தை நிறைவேற்ற அங்கீகாரமளிக்கக்கூடாது. ஒரு சமயத்தை பின்பற்றுவதற்கு தடையோ கட்டுப்பாடோ விதிக்கக்கூடிய சட்டங்கள் என்பன வற்றை ஜனாதிபதி அங்கீகரிக்க முடியாது. எனவே இதிலிருந்து நாம் அறிவது யாதெனில் இன்றைய ஜனநாயக ஆட்சிக்கு முன்பு நடைமுறையிலிருந்த அரசியற் திட்டங்களும் வழிவகுத்தது எனலாம்.

இலங்கையின் தற்கால ஆட்சிமுறைபற்றி நாம் அறிந்திருந் தால்தான் இன்றைய ஜனநாயகமுறை பற்றியும் அறிவது சுலபம். 1948-ம் ஆண்டு மாசிமாதம் (பெப்ரவரி) 4-ம் திகதி இலங்கை சுதந்திர நாடாக மாறியது. அன்றிலிருந்து 1972-ம் ஆண்டு வைகாசி மாதம் (மே) 22ஆம் திகதிவரை இலங்கையில் நிலவிய அரசியல் அமைப்பு சோல்பரி அரசியலமைப்பைத் தழுவியதாகும்.

இலங்கையில் நிலவிய ஆட்சிமுறை பிரித்தானிய ஆட்சி முறையைப் போன்றதாகும். இலங்கையின் ஆட்சி, ஜனநாயகப் பாராளுமன்ற ஆட்சி எனப்பட்டது. 18 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாருக்கும் வாக்குரிமையுண்டு. பிரதிநிதிகள் சபை, மந்திரிசபை என்ற இரு சபைகளும் அரசியலை நிர்வகித் தன. பிரதிநிதிகள் சபையில் 157 அங்கத்தவர்கள். இதில் 151 அங்கத்தவர் தேர்தல் மூலமும் 6 பேர் தேசாதிபதியாலும் நியமிக்கப்படுவர். இந்த 6 பேரும் சிறுபான்மை இனத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். இதன் ஆட்சிக்காலம் 5 ஆண்டு களாகும்.

இன்றைய ஆட்சிமுறையில் பல அரசியல் கட்சிகள் உள்ளன. கொள்கைகளில் வேறுபட்டவர்கள் தமது கொள்கைகளுக்கேற்ப கட்சிகளை அமைத்துள்ளனர். பொதுத் தேர்தலில் எக்கட்சியின் கொள்கைகளை மக்கள் ஏற்கிறார்களோ அக் கட்சியே தேர்தலில் வெற்றி பெற்று அரசாங்கத்தை நடாத்தும்.

பொதுத் தேர்தலில் பெரும்பான்மை பெற்ற அரசியல் கட்சியின் தலைவரை மகாதேசாதிபதி அழைத்து அரசாங்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தும்படி கேட்பார். அவர் பிரதமமந்திரியாக இருந்து, மந்திரிசபையை அமைத்து நாட்டின் நிர்வாகத்தை நடாத்துவர்.

1972-ம் ஆண்டு வரை பிரித்தானிய அரசியே பெயரளவில் நாட்டின் அரசியாக இருந்து வந்தார். இப்பொழுது இலங்கை ஒரு குடியரசாகும். 1970—1977-ம் ஆண்டுவரை ஆட்சி நடத்திய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் 1971ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ஆம் திகதி இலங்கை குடியரசானது.

இந்த அரசியல் அமைப்பில் நியமன அங்கத்தவர்கள் இல்லை. இதில் அங்கம் வகிக்கும் 166 அங்கத்தவரும் பொதுத்தேர்தல் மூலமே தெரிவு செய்யப்படுகிறார்கள். இந்நியமன அங்கத்தவ முறையினால் குறிப்பிட்ட ஒருசில இனமக்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுவதாகக் குறை கூறப்பட்டது. இம்முறை ஜனநாயக ஆட்சிக்கு மாறானது என அநேகரால் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே இம்முறை இன்று ஒழிக்கப்பட்டுள்ளது. இன்றைய தேசிய அரசுப் பேரவையின் அங்கத்தவர்கள் யாவரும் மக்களின் விருப்பத்திற்கென நியமிக்கப்பட்டவர்கள்.

இன்று நம் நாட்டில் ஜனநாயக உரிமைகள் சகலதும் மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இலங்கைப் பிரஜை ஒருவன் தான் விரும்பும் மதத்தைப் பின்பற்ற உரிமையுண்டு. ஒருவன் தான் விரும்பிய மொழியைப் பேசவும் அம்மொழிமூலம் பட்டப் படிப்புவரை கல்விகற்க உரிமையுடையவனாவான். இலங்கைப் பிரஜை தான் விரும்பிய ஒரு அரசியல் கட்சியில் அங்கம் வகிக்கவும், அரசியல் விவகாரங்களில் தலையிடவும் உரிமை யுடையவனாவான். அவன் விரும்பினால் தனக்கென ஒரு கட்சியை அமைக்கவும் உரிமையுடையவன்.

பொதுத் தேர்தலில் வாக்குரிமையளிக்க தகுதிபெற்ற அனை வரும் பாராளுமன்ற அங்கத்தவராகப் போட்டியிடத் தகுதி பெற்றவர்களாவர். சிறைத்தண்டனை அனுபவியாதவராயும், சித்தசுவாதீனமற்றவராகவும் இருந்தால் தேர்தலில் அபேட்சக ராகப் போட்டியிடலாம். எந்தவொரு கல்வித்தகைமையும் வேண்டியதில்லை.

இன்று சகல மக்களுக்கும் பேச்சுரிமை அளிக்கப்பட்டுள்ளது. பிரஜை ஒருவன் எந்தவொரு மொழியிலும் அரசியல் சம்பந்த மாகவோ அன்றி மதம் பற்றியோ மேடைகளில் பேசுவதற்கும் பிரசாரம் செய்வதற்கும் உரிமை பெற்றுள்ளான். அதேபோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் விரும்பும் மொழியில் விரும்பியதை எழுதும் உரிமையும் பெற்றுள்ளான்; இலங்கைப் பிரஜை சகலருக்கும் ஒரே விதமான சட்டங்களே; நடைமுறையில் உள்ள சட்டத்தின் முன் சகலரும் சமன்; எனவே ஜனநாயக ஆட்சியிலுள்ள மக்களுக்குரிய வாக்குரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, அரசியல் உரிமை, மத உரிமை, மொழியுரிமை, நீதி உரிமை என்பன போன்ற சகல உரிமைகளும் மக்களுக்கு இன்றைய ஜனநாயக ஆட்சி முறையில் அளிக்கப்பட்டுள்ளது.

# 4 பிரசைகள் என்ற முறையில் ஜனநாயகம் நம் ஒவ்வொருவருக்கும் தந்துதவும் உரிமைகளும் கடமைகளும்

நாம் முன்னைய பகுதியில் ஜனநாயகம் பற்றியும் அது இலங்கையில் தோன்றி, வளர்ந்து இன்று செயல் படுவது பற்றியும் கற்றோம்; இந்த அத்தியாயத்தில் இலங்கைப் பிரஜை ஒவ்வொருவரும் பெற்றிருக்கும் உரிமைகளையும் கடமைகளையும் பற்றிக் கற்போம்;

பொதுத் தேர்தலின்போது பிரஜை ஒருவன் தனது வாக்குரிமையை தேர்தலில் போட்டியிடும் அபேட்சகருக்கு அளிப்பது அவனது உரிமை. அதேவேளை அவன் நாட்டை ஆட்சி செய்வதற்கும் நாட்டிற்கும் தனது தொகுதிக்கும் சிறந்த தொண்டாற்றக்கூடிய ஒருவரை தெரிவுசெய்வது அவனது கடமையாகும்;

சட்டத்தின் முன் சகல பிரஜைகளும் சமமானவர்கள்; அதேவேளை சட்டத்தினால் நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்கும் சகலவிதமான சமமான பாதுகாப்பிற்கும் உரிமையுடையவன்; இவ்வாறு உரிமையுடைய ஒருவன் சட்டமும் ஒழுங்கும் நாட்டில் நன்கு நடைபெற சட்டத்திற்கும் நாட்டின் அமைதிக்கும் பங்கம் விளைவிக்காத முறையில் வாழுதல் அவனது கடமையாகும்,

குற்றம் இழைக்காத ஒருவனது உயிரையோ, சுதந்திரத்தையோ அன்றி பாதுகாப்பினையோ அவன் ஜனநாயக ஆட்சி முறையில் இழக்கக்கூடாது. குற்றம் இழைக்காத ஒருவன் தண்டனை அனுபவிக்காதிருக்க நீதிமன்றத்தில் வாதாட உரிமையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றவாளியல்லாத எவனும் கைதுசெய்யப்படவோ தடுப்புக் காவலில் வைக்கப்படவோ சிறையில் வைக்கப்படவோ முடியாது. இவ்வாறு நேரும்போது சட்டப்படி வாதாட உரிமையுண்டு. அதேவேளை பிரசை ஒருவன் குற்றம் செய்யாது ஒழுங்கானவனுக வாழ்வது அவனது கடமையாகும்.

பிரஜை ஒருவன் தனது விருப்பப்படி சிந்தனை செய்யவும் தனது மனச்சாட்சியைப் பின்பற்றி நடப்பதற்கும் தான் விரும்பும் மதத்தை பின்பற்றவும் உரிமையுடையவன். தனது சமயத்தை அல்லது கோட்பாடுகள், நம்பிக்கைகள் என்பனவற்றைப் பகிரங்கமாக மக்களுக்கு எடுத்துக் கூறவும் பிரசாரம் செய்யவும் உரிமையுடையவன். அதேவேளை அவன் பின்பற்றும் மதம் வேறொரு மதத்திற்கு இடையூறு விளைவிப்பதாகவோ குறித்த இனமக்களைப் பாதிப்பதாகவோ நாட்டின் கலாச்சாரம் பண்பாட்டைப் பாதிப்பதாகவே இருக்கக்கூடாது.

சகல பிரஜைகளுக்கும் தமது சொந்தக் கலாச்சாரத்தை தனித்தோ அன்றி ஏனையவர்களுடன் சேர்ந்தோ அனுபவிக்கவும் அதனை அபிவிருத்தி செய்யவும் உரிமை உண்டு. தனது கலாச்சாரம் மங்கிமறையாது பேணுவது ஒவ்வொரு பிரஜையின் கடமையாகும்.

நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்படாத வகையில் ஒரு குறிப்பிட்ட இனத்தவரோ சமூகத்தவரோ ஒன்று கூடுவதற்கு உரிமையுண்டு அதேவேளை அவ்வாறு ஒன்றுகூடும்போது மற்ற இமைக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் நடந்துகொள்வது ஒவ்வொரு பிரஜைகளின் கடமையாகும்.

ஒவ்வொரு பிரஜைக்கும் தான் விரும்பும் விடயம்பற்றிப் பேசுவதற்கும், தனது கருத்தை வெளியிடுவதற்கும் உரிமையுண்டு. அதே நேரம் அப்பிரஜை தனது உரிமையை துஷ்பிரயோகம் செய்யாதிருத்தல் அவனது கடமையாகும். தனக்குள்ள உரிமையைப் பயன்படுத்தி ஒரு இன மக்களை அரசியற்கெதிராகவோ வேறு இன மக்களுக்கெதிராகத் தூண்டிவிட்டு கிளர்ச்சிகள், பிளவுகள் நாட்டில் ஏற்படச் செய்யக் கூடாது.

அரசாங்க உத்தியோகங்களில் தகுதிபெற்ற அனைவரும் நியமனம் பெற உரிமையுடையவர்கள். உதாரணமாக அரசாங்க சேவை, கூட்டுத்தாபன சேவை என்பனவற்றில் தகுதிபெற்ற இலங்கைப் பிரஜை உத்தியோகம் வகிக்க உரிமையுடையவனுவான். அவன் தான் வகிக்கும் உத்தியோகத்தின் மூலம் நாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிற்கும் நாட்டுமக்களுக்கும் சிறப்பான சேவையாற்றும் அதே வேளையில் இனமொழிப் பாகுபாடற்ற முறையில் கடமை யாற்றுவது அவனது கடமையாகும்.

இலங்கைப் பிரஜை ஒருவன் தான் விரும்பும் இடத்தில் வசிப்பதற்கு உரிமையுண்டு, இலங்கையின் எப்பாகத்திலும் அவன் வசிக்கலாம். அவன் இலங்கை முழுவதற்கும் தடையின்றிப் பிரயாணம் செய்யலாம். இது அவனுக்குள்ள உரிமையாகும். அவனது கடமை யாதெனில் தான் பிறந்த சமூகப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தலாகும். அவன் வாழும் சூழலுக்கேற்ப மாறுது வாழுதல் வேண்டும்.

ஒவ்வொரு பிரசைக்கும் தனது நாட்டின் தேசிய ஐக்கியம், ஒருமைப்பாடு, தேசத்தின் பாதுகாப்பு, நாட்டின் பொருளாதாரம், நாட்டு மக்களது பாதுகாப்பு, பொது மக்களின் ஒழுக்கம், பொதுமக்களின் சுகாதாரம், என்பனவற்றில் அக்கறை செலுத்த உரிமையுண்டு. அதே வேளை மேற்கூறிய உரிமைகள் நாட்டின் நன்கு செயல் பட தேசிய ஐக்கியத்திற்கும் ஒருமைக்கும் பங்கம் விளைவியாமல், வாழ்வதும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு தன்னாலான சேவை செய்வதும், பொதுமக்களின் பாதுகாப்பு, ஒழுங்கு, சுகாதாரம், ஒழுக்கம் என்பனவற்றிற்கு இடையூறு விளைவிக்காதவாறு தனது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதும் அவனது கடமையாகும். அரசாங்கத்திடமிருந்து உரிமைகளைப் பெறுவதுடன் மட்டும் ஒரு பிரஜை நின்றுவிடாது தான் பெறும் உரிமைகளை துஷ்பிரயோகம் செய்யாது நல்ல முறையில் பயன்படுத்துவது அவனது கடமையாகும்.

நாட்டின் அரசாங்கத்தில் நேரடியாக அல்லது தான் தேர்தல் மூலம் தெரிந்தெடுத்த பிரதிநிதி மூலம் பங்குபற்ற ஒவ்வொரு பிரசைக்கும் உரிமையுண்டு. உரிமையுண்டு என்பதற்காக அரசாங்கத்திற்கு தலையிடியைக் கொடுக்கக்கூடிய முறையிலோ அரசியல் ஒழுங்காக நடைபெறுவதற்கு முட்டுக்கட்டையாக தனக்குரிய உரிமையை பிழையான வழியில் பயன்படுத்தாது தனக்கும் நாட்டிற்கும் பயன் தருமுறையில் அரசியலில் பங்கு பெறுவது அவனது கடமையாகும்.

ஒவ்வொரு பிரஜைக்கு நாட்டின் பொதுச் சேவையில் ஈடுபட உரிமையுண்டு. எனவே மக்கள் பொதுச் சேவைகளில் பங்குபற்றி சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபடுதல் அவனது கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை பிரஜை ஒருவனது உரிமைகளையும் அதை அவன் பயன்படுத்த வேண்டிய கடமைகள் பற்றியும் கற்றீர்கள்; உரிமைகள் சட்டமூலமோ நடைமுறையிலோ இருப்பதுமட்டும் போதாது. அவற்றை உரிய முறையில் மக்கள் பயன்படுத்தி தானும், சமூகமும், நாடும் பயனடையச் செய்தல் ஜனநாயக ஆட்சிக்கு முக்கிய அம்சமாகும்.

# 5 நாம் வாழும் சமூகத்தில் ஜனநாயகம் செயல் பட்டுள்ளமைக்கான ஆதாரங்கள்

எமது நாட்டில் 18 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் வாக்குரிமை அளித்தல் வேண்டுமென்பது சட்டமாகும்: இது நடைமுறையில் சிறப்பாக நடைபெறுகிறது எந்தவொரு இனத்தவருக்கும் இது மறுக்கப்பட்டதில்லை. இலங்கையில் சிங்களவர் தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என்னும் இன மக்கள் வாழ்கிறார்கள். இவ்வாக்குரிமையின் வயதெல்லை இனத்திற்கினம் வேறுபடுத்தப்படவில்லை. ஜனநாயக நாட்டில் உரிமைகள் யாவும் சகல இனமக்களுக்கும் ஒன்றுனதே எனும் கோட்பாட்டிற்கிணங்க சகலருக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக ஜனநாயக நாட்டு மக்கள் அனைவருக்கும் தேர்தலில் பங்கு பற்றவும் தனது விருப்பத்திற்கு தகுதி வாய்ந்த பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்கும் உள்ள உரிமை, செயற்பட்டுள்ளமையை ஆராய்ந்தால் இம்முறை இலங்கையில் நன்கு வெற்றியளித்துள்ளதெனலாம். எந்தவொரு தகுதிவாய்ந்த பிரஜையும் எந்தவொரு தொகுதியிலும் போட்டியிடலாம்: ஒரு வாக்காளன் தான் விரும்பிய அபேட்சகரைத் தெரிவு செய்வதற்கு உரிமையுடையவன்.

குறிப்பிட்ட இனம் ஒரு குறிப்பிட்ட கட்சியைத் தான் ஆதரிக்க வேண்டுமென்றில்லை? ஜனநாயக நாட்டில் பிரஜை ஒருவன் தான் விரும்பும் கட்சியை ஆதரிக்க முடியும் என்பதை நடைமுறையில் நாம் காணக்கூடியதாக இருக்கிறது: பெரும்பான்மை இனமான சிங்களவரினுல் ஆதரிக்கப்படும் ஐக்கிய தேசியக் கட்சி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்பனவற்றை சிங்கள மக்கள் மட்டும் ஆதரிக்கவில்லை. தமிழ், முஸ்லிம் மக்களும் அக்கட்சியைப் பின்பற்றுகிறார்கள்: அதற்கு வாக்களிக்கிறார்கள். இது ஜனநாயக நாட்டு மக்களுக்குரிய அரசியற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரம், கடந்த பொதுத்தேர்தலில் தேர்தற்தொகுதி கற்குடாவின் தேசிய அரசுப் பேரவையின் பிரதிநிதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் திரு. தேவநாயகம் அவர்கள் போட்டியிட்டு தமிழ் மக்களது வாக்குரிமையையும் பெற்று தேசிய அரசுப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே இதிலிருந்து சகல இனமக்களும் தாம் விரும்பும் அரசியல் கட்சியில் அங்கம் வகிக்க உரிமை உண்டென்பது நடைமுறைப் படுத்தப்படுவதைக் காண்கிறோம்.

சகல இனமக்களும் தாம் விரும்பும் கட்சியில் அங்கம் வகிக்க நடைமுறையில் உரிமை இருப்பதுபோல சகல இனத்தவருக்கும் அரசியலில் பங்குபற்ற உரிமையுண்டு. ஜனநாயக நாட்டில் மனிதனுக்குரிய பேச்சுரிமை, எழுத்துரிமை எவ்வாறு நடைமுறைப்படுத்தப் படுகிறது என்பது பற்றி ஆராய்வோம்: அரசாங்கத்தை ஆதரித்துப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் மட்டும் பேச்சுரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை. எதிர்த்துப் பேசவும் எழுதவும் உரிமையுண்டு. அரசாங்கம் அவ்வப்போது செய்யும் தவறுகளை எதிர்க்கட்சித் தலைவரும் கட்சி அங்கத்தவர்களும் பாராளுமன்றக் கூட்டங்களில் பேசுவதை வானொலி பத்திரிகை என்பனமூலம் அறிகிறோம். தேசிய அரசுப் பேரவையில் அங்கத்துவம் வகிக்காத கட்சி அங்கத்தவர்கள் பத்திரிகை வாயிலாக விடுக்கும் கண்டனங்கள் மூலம் அறியலாம்.

எந்தவொரு இனத்தவரும் அரசியல் பேசவோ, எழுதவோ கூடாதென்ற சட்டம் இலங்கையில் இல்லை. சகலரும் தமது விருப்புவெறுப்பிற்கிணங்க அரசியல் பற்றிப் பேசவோ, எழுதவோ சுதந்திரமுண்டு.

ஜனநாயக நாட்டிற்குரிய மொழிச்சுதந்திரம் இலங்கையில் சகல மக்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. இலங்கைப் பிரஜைகளான சிங்களவர், தமிழர் ஆகிய இரு இனத்தவரும் தாம் விரும்பிய ஒரு மொழியைப் பயிலவும், பேசவும், எழுதவும், தான் விரும்பிய மொழியில் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளவும் உரிமையுடையவனுவான். ஒருவன் இங்கு தனது ஆரம்பக்கல்வியை தனது தாய் மொழியிலேயே ஆரம்பித்து அம் மொழி மூலம் பல்கலைக்கழகம் வரை கல்வி கற்க முடியும்.

பிரித்தானியரால் இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கில மொழியை மக்கள் கற்கவோ, பேசவோ, எழுதவோ, அம் மொழியை வளர்க்கவோ உரிமை மறுக்கப்படவில்லை. விரும்பினுல் ஒருவன் தனது ஆரம்பக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை ஆங்கில மொழிமூலம் கல்விகற்கலாம்; எனவே நடைமுறையில் இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் மொழிச் சுதந்திரம் அளிக்கப்பட்டது.

அடுத்ததாக மதச் சுதந்திரம் எவ்வாறு நடைமுறைப் பட்டுள்ளது என்பது பற்றி ஆராய்வோம்; இன்று இலங்கையில் பௌத்தம், சைவம், இஸ்லாம், கிறீஸ்தவம் ஆகிய மதங்கள் மக்களால் கைக்கொள்ளப்படுகின்றன. குறித்த ஒரு இனம் குறித்த ஒரு மதத்தைத்தான் பின்பற்ற வேண்டும் என்றில்லை. பிரஜை ஒருவன் தான் விரும்பிய மதத்தைப் பின்பற்றலாம். உதாரணமாக ஒரு சைவ சமயத்தவன் கிறிஸ்தவ சமயத்திற்கு மாற விரும்பினால் அதற்கு எதுவித தடையுமில்லை;

அந்நியராட்சியால் இலங்கையில் புகுத்தப்பட்ட கிறீஸ்தவம் இன்றும் இலங்கை மக்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. அது அந்நியநாட்டு மதம் என அதற்கு எதுவித தடையுமில்லை. மதச் சுதந்திரம் இருப்பதனால்தான் இந்தியாவில் தோன்றிய பௌத்தம் இலங்கையில் எதுவித தடையுமின்றி வளர்ச்சியடைந்துள்ளது;

எந்தவொரு மதமும் தங்களது வழிபாட்டு நிலையங்களை ஸ்தாபிக்க உரிமையுண்டு. எந்தவொரு கட்டிடக் கலைக் கலாசாரத்தைப் பின்பற்றிக் கட்டிடம் அமைக்கலாம். குறித்த ஒரு மதத்தவன் குறித்த ஒரு கடவுளின் விக்கிரகத்தை மட்டுமே வணங்கவேண்டுமென்ற கட்டுப்பாடு கிடையாது. இன்று சில பௌத்த விகாரைகளில் கணபதி, முருகன், கிருஷ்ணன் ஆகியோரது விக்கிரகங்கள் இருப்பதை நடைமுறையில் காண்கிறோம்; இது இலங்கையில் இருக்கும் மதச் சுதந்திரத்தின் விளைவாகும். குறித்த ஒரு மதத்தவர் மட்டுமே வழிபாட்டு நிலையங்களை நிறுவ முடியும் என்ற கட்டுப்பாடு கிடையாது; இலங்கையின் எப்பாகத்திலும் எல்லா மதத்தைச் சார்ந்தவர்களும் வாழலாம். தாம் விரும்பிய மதத்தை வளர்க்கலாம் கோயில் கட்டலாம்; உதாரணமாக யாழ்ப்பாணத்தில் சைவ சமயத்தவர் பெருமளவு வாழும் பகுதியில் நாகவிகாரை இருப்பதைக் காண்கிறோம்; சிங்கள மக்கள் பெருமளவு வாழும் கதிர்காமத்தில் முருகன் ஆலயம் அமைந்திருக்கிறது; நடைமுறையில் மதச் சுதந்திரம் நன்கு செயல்படுவதைக் காண முடிகிறது;

இலங்கையில் மக்கள் தாம் விரும்பிய பண்பாடு கலாச்சாரத்தைப் பின்பற்றும் ஜனநாயக உரிமையைப் பெற்றிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள்: குறிப்பிட்ட இனத்தின் பழக்கவழக்கங்களை, சம்பிரதாயங்களை, கலாச்சாரத்தை மற்றைய இனம் பின்பற்றக்கூடாதென்ற கட்டுப்பாடு கிடையாது. தாம் விரும்பும் நாகரிகத்தைப் பின்பற்ற உரிமையுண்டென்பதை நடைமுறையில் காண்கிறோம்.

வேலை செய்யும் வயதையடைந்த தகைமைபெற்ற அனைவருக்கும் வேலைவாய்ப்பளிக்க வேண்டுமென்பது ஜனநாயகக் கோட்பாடு. இதற்கிணங்க இலங்கை இன, மத வேறுபாடின்றி தகுதியடிப்படையில் வேலைவாய்ப்பளிக்கப்படுகிறது.

மக்கள் அனைவரையும் தொகுதி அடிப்படையில் வேறுபடுத்தாது ஒரு தொகுதி மக்கள் பெறும் அபிவிருத்தி, நிதி உதவி, கல்வி, மருத்துவ, சுகாதாரம் ஆகிய சேவைகள் மற்றைய சகல தொகுதியினருக்கும் அளிக்கப்படுகிறது.

பாடசாலைகளில் கல்வியின் தரம் ஒரே மாதிரியாக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் விகிதாசாரம் எல்லாத் தொகுதிகளுக்கும் ஒரே மாதிரியாக அமைக்கப்பட்டிருக்கிறது. தகுதிபெற்ற சகல மாணவனுக்கும் பல்கலைக்கழக அனுமதி அளிக்கப்படுகிறது.

கூட்டுறவு முறையில் மக்களுக்கு அளிக்கப்படும் சகல சேவைகளும் பங்கீடுகளும் வேறுபாடின்றி சகலருக்கும் அளிக்கப்படுகிறது.

ஜனநாயக நாட்டில் நீதி சகல மக்களுக்கும் ஒரே மாதிரியானதாக இருக்கவேண்டுமென்பது ஜனநாயகக் கோட்பாடு. இது நடைமுறையில் இலங்கையில் சகல இனமக்களும் ஒரே மாதிரியான சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சட்டத்தின் முன் எந்த இன மக்களுக்கும் பாரபட்சம் காட்டப்படுவதில்லை. நீதிபதிகள் அரசாங்கச் சார்போ அன்றி இனச் சார்பு அற்றவர்களாகக் கடமையாற்றுகிறார்கள். எந்த ஒரு பிரஜையும் தான் விரும்பிய மொழியில் வழக்கினைக் கொண்டு நடத்த உரிமையுடையவனாகிறான். குற்றமிழைத்த எந்தவொரு பிரஜை மீதும் வழக்குத் தொடர அரசாங்கத்திற்கு உரிமை உள்ளது போல பிரஜைகளுக்கு ஒருவர் மீது மற்றவர் வழக்குத் தொடர உரிமையுண்டு.

ஜனநாயக உரிமைகளில் ஒன்றான பத்திரிகைச் சுதந்திரம் சகல பத்திரிகைகளுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. பத்திரிகைகள் அரசியல் விஷயங்களை பாரபட்சம் காட்டாது; சகல மக்களுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் தெரியப்படுத்த செய்திகளைப் பிரசுரிக்க உரிமை பெற்றுள்ளது. அதே போன்று வானொலியும் அவ்வப்போது செய்திகளை மக்களுக்கு அறிவிக்க சகல உரிமையும் பெற்றுள்ளது.

இலங்கையில் எந்தவொரு பிரஜையும் இன, மொழியால் பிரிக்கப்பட்டு அரசாங்கத்தினால் பாரபட்சமான முறையில் நடத்தப்படுவதில்லை. ஜனநாயக நாட்டில் இருக்க வேண்டிய அரசியல், மதப்பேச்சு, எழுத்து, நீதி, பாதுகாப்பு என்பன போன்ற சகல உரிமைகளும் இன்று மக்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

# 6 ஜனநாயகத்திற்குச் சவாலாக அமையும் சக்திகள்

ஒரு ஜனநாயக நாடு நன் முறையில் வழி நடத்தப்படு வதற்கு அந் நாட்டின் தலைவன் அரசியல் அறிவில் தேர்ச்சி பெற்றவனாகவும், மதி நுட்பம் நிறைந்தவனாகவும் இருத்தல் வேண்டும். தலைவன் மக்களை தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத் திருக்கக்கூடிய வல்லமை பொருந்தியவனாக இருத்தல் வேண்டும். அச்சாணி இல்லாத தேர்போல சிறந்த தலைவன் இல்லாத நாட்டு மக்கள், நாட்டிலுள்ள அரசியல் விஷமிகளின் சொற்களை நம்பி அரசிற்கெதிராக கிளர்ச்சிகள் செய்வர். இவ்வாறு அரசுக்கெதிராக தூண்டிவிடப்படும் சதிகள் வளர்ந்து நாளடை வில் நாட்டில் குழப்பங்களை அதிகரிக்கச் செய்யும். அப்பாவி மக்கள் பிழையான வழியில் வழி நடத்தப்பட்டால் நாட்டின் அமைதி குன்றும். நாளடைவில் அரசியல் விஷமிகள் செல்வாக் குப் பெற்று அரசைக் கைப்பற்றக் கூடிய சந்தர்ப்பத்தை பெறவும் கூடும். எனவே மக்களைத் தன்வசப்படுத்தக் கூடிய வரும் மக்களுக்காகவும், நாட்டின் முன்னேற்றத்திற்கும், பொரு ளாதார வளர்ச்சிக்கும் முன்னின்று உதவக்கூடிய ஒரு தலைவன் இருத்தல் வேண்டும். தலையாட்டும் பொம்மை போன்ற ஒரு தலைவன் இருந்தால், தான் கொடுக்கும் வாக்குறுதிகளை நிறை வேற்ற முடியாதவனாகி மக்களது நம்பிக்கையை இழந்து விடு வான்.

ஜனநாயக நாட்டில் சிறந்த தலைவன் இருப்பது எவ்வளவு முக்கியமோ அதேபோல் சிறந்ததொரு எதிர்க் கட்சியும் இருத் தல் வேண்டும். எதிர்க்கட்சி அரசாங்கக் கட்சியிலும் பார்க்க அதிகளவு எண்ணிக்கை குறைந்த கட்சியாக இருக்கக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்க்கட்சியானது அரசாங்கக் கட்சியை எதிர்க்கக் கூடிய வல்லமை பெற்ற கட்சியாக இருத்தல் வேண்டும். எதிர்க்கட்சி என்பதால் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் யாவற்றை யும் எதிர்த்துக்கொண்டே இருக்கக்கூடாது. ஆக்க பூர்வமாக சிறந்த விஷயங்களை அரசாங்கம் செய்ய முற்படும்போது அதற்கு ஆதரவு அளித்து தனது ஆலோசனையை வழங்கக் கூடிய கட்சியாக இருத்தல் வேண்டும்.

அரசாங்கம் தவறான வழியில் நடக்க முற்படும்போது அரசின் தவறைச் சுட்டிக்காட்டி வழிநடத்தக் கூடிய கட்சியாக இருத்தல் வேண்டும். அரசின் தவறைச் சுட்டிக்காட்ட வேண்டு மாயின் எதிர்க்கட்சி ஓரளவு பலம்பெற்ற கட்சியாக இருத்தல் வேண்டும். எண்ணிக்கையில் அதிகளவு குறைந்த எதிர்க்கட்சி எவ்வளவுதான் திறமையாக செயல்பட்டாலும் அதனை அர சாங்கக் கட்சி மதித்து நடக்காது. நாட்டின் குறித்த ஒரு பிரிவு மக்களுக்குப் பாதகமான ஒரு மசோதாவை அரசாங்கம் நிறை வேற்ற முற்படும்போது அதனைத் தடுத்து நிறுத்த அம் மசோ தாவிற்கெதிராக எதிர்த்து வாக்களிக்க வேண்டும். அதற்கு வேண்டிய அங்கத்தவர் தொகை எதிர்க்கட்சிக்கு இல்லையாயின் எதிர்க்கட்சி தவறிழைக்க நேரிடும். எனவே சிறந்த எதிர்க்கட்சி ஜனநாயக நாட்டிற்கு அத்தியாவசியமானது.

எதிர்க்கட்சியினர், 'இன்று நாம் எதிர்க்கட்சி. நாளை நாட்டை ஆள்பவர்' என்ற எண்ணத்தால் அரசாங்கம் செய்யும் சகல கருமங்களையும் எதிர்த்துக்கொண்டே இருப் பர். அதுவுமல்லாமல் மக்களிடையே அச் செயல்களுக்கு தப்பான பிரசாரங்களைச் செய்து மக்களை அரசாங்கத்திற்கெதி ராகத் தூண்டிவிட்டு நம்பிக்கை இழக்கச் செய்வர். எனவே எதிர்க்கட்சியானது நாளை நாமும் ஆட்சிக்கு வந்தால் இப்படி யான சிக்கல்களை எதிர்நோக்க வேண்டும் என்ற மனப்போக் குடன் அரசாங்கம் நன்கு செயல்பட தனது ஆதரவையும், ஒத்துழைப்பையும் அளிக்கவேண்டும். நல்லதொரு எதிர்க்கட்சி அமையாவிடின் அங்கு ஜனநாயகத்திற்கு எதிரான சக்திகள் உருவாக இடமுண்டு.

அடுத்ததாக ஜனநாயகத்திற்குச் சவாலாக அமையும் பெரும் சக்தி பொதுமக்களாகும். நாட்டின் மக்களனைவரும் அரசியலறிவு உடையவர்களாயிருத்தல் வேண்டும். அறிவு இருந் தால் மட்டும் போதாது. அரசியலில் நடைபெறும் கருமங்களை அலசி ஆராய்ந்து அதற்குச் சரியான தீர்வு வழங்கக் கூடியவர் களாக இருத்தல் வேண்டும். பொதுமக்கள் எப்பொழுதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்புடன் இருத்தல் வேண்டும். அரசியலில் நடைபெறும் ஒவ்வொரு கருமங்களையும் ஆராய்ந்தறிந்து தமது அபிப்பிராயத்தைக் கூறவேண்டும். இவ்வாறு பொதுமக்கள் இருக்க வேண்டுமாயின் நாட்டின் பிரஜைகள் அனைவரும் கல்வியறிவு உடையவராக இருப்பது அவசியம். நாட்டு மக்களுக்கு அளிக்கப்படும் கல்வி ஒரு தலைப் பட்சமாக இருத்தலாகாது; எல்லோருக்கும் பொதுவான கல்வியாக இருத்தல் வேண்டும். கல்வியில் அரசியல் கலக்கக்கூடாது. மக்களுக்கு அறிவு வழங்குவதே கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும்; சிறந்த கல்வியறிவுள்ள மக்கள் அரசியலை நன்முறையில் நோக்குவர்.

மக்களுக்கு அரசியலறிவைப் பெருக்கும் சாதனங்களில் பத்திரிகை, வானொலி என்பன முக்கியமானவை; இவையும் ஜனநாயகத்திற்கு எதிராக அமையக் கூடிய சக்திகள். பத்திரிகைகள் அரசியல் சார்புடையதாக இயங்கினால் அவை மக்களிடையே தப்பபிப்பிராயங்களை வளர்க்க ஏதுவாகிவிடும்; பத்திரிகைகள் செய்திகளை திரித்துக்கூற முற்படும்போது மக்கள் பிழையான வழியில் வழிநடாத்தப்படுவர். பத்திரிகையும், வானொலியும் எந்தவொரு அரசியல் கட்சியினதோ, அரசியல் பிரமுகர்களினதோ கட்டுப்பாட்டிற்குள் இயங்காது. அவை சுதந்திரமாக இயங்கவேண்டும்; அதே வேளை பக்கச்சார்பு இன்றி நடுநிலையாக அரசியல் விஷயங்களை மக்களுக்கு உடனுக்குடன் வழங்க வேண்டும்; மக்களுக்கு மிக மலிவாகவும் விரைவாகவும் விஷயங்களை அறிய உதவும் சாதனம் பத்திரிகையும், வானொலியும் ஆகும். எனவே இவை மக்களை சரியான வழியில் வழிநடாத்த வேண்டும். தவறின் மக்களை ஜனநாயகத்திற்கு எதிராகத் தூண்டிவிடும் சக்தியாக மாறிவிடும்;

அரசியல் கட்சிகளும் ஜனநாயகத்திற்குச் சவாலாக அமையும் சக்திகளாகும். நாட்டில் பல கட்சிகள் இருப்பதும் ஜனநாயகத்திற்கு ஏற்றதல்ல; பல கட்சிகள் இருப்பதனால் நாட்டு மக்களிடையே பிரிவினைகளும், கருத்து வேறுபாடுகளும் வளர இவை இடமளிக்கும். இக்கட்சிகள் அரசாங்கத்திற்கு எதிராக மக்களைத் திசைதிருப்பிக் கொண்டே இருக்கும். அரசாங்கக் கட்சி பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றுப் பதவிக்கு வந்தாலும் அதன் பலம் நாளடைவில் இக் கட்சிகளின் பிரசாரங்களால் குறைய முற்படும். மக்களது ஆதரவுகுன்றவும் இவை ஏதுவாகும். அரசாங்கம் விடும் சிறு தவறுகளையும் இக் கட்சிகள் பெரிது படுத்தி மக்களை எதிராகத் தூண்டிவிடும். எனவே பல கட்சிகள் இருப்பதும் ஜனநாயக நாட்டிற்கு ஏற்றதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஜனநாயக நாட்டில் பல இன, பல மொழி பேசும் மக்கள் வாழ்வதும் ஜனநாயகத்திற்கு சவாலாக அமையும் சக்திகளுள் ஒன்ருக அமைகிறது. பொதுமக்கள் ஆட்சியாளரிடம் பெருந்தன்மை, நேர்மை, சமத்துவம் முதலிய அரிய குணங்களை எதிர்பார்க்கின்றனர். ஆனல் நடைமுறையில் இந்நாடுகளில் ஆட்சியாளரிடம் இவை கிடைப்பது அரிது. பல இனம் வாழும் நாட்டில் பெரும்பான்மை நிச்சயமாக ஆட்சியைக் கொண்டு நடத்தும். எனவே அவ்வினம் தனது இனத்திற்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும்போது இன்னெரு இனம் பாதிக்கப்பட நேரிடும், இந்நிலையால் இன்னெரு இனத்தின் இன, மொழிச் சுதந்திரம் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. இதனல் நாட்டு மக்களிடையே வேற்றுமை மனப்பான்மையை உருவாக்கி நாட்டு மக்களிடையே பிளவு ஏற்படுகிறது. இதனல் குறித்த சில மக்கள் ஜனநாயக உரிமையுடையவர்களாகவும், வேறு சில மக்கள் குறித்த ஜனநாயக உரிமை அற்றவர்களாகவும் ஆகிருர்கள்.

எல்லா மக்களும் சமன். சகல உரிமைகளும் அனைவருக்கும் ஜனநாயக நாட்டில் உண்டு. ஆனல் அரசியல் தலைவர்களும், பணம் படைத்தவர்களும், அரசியல் செல்வாக்குப் பெற்றவர்களும் தமக்குக் கிடைத்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தாம் தனிப்பட்ட லாபம் அடையவும், அரசியல் குரோதங்களுக்குப் பழிதீர்க்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிருர்கள். இச் செயல்களை முறியடிக்கவேண்டுமாயின் மக்கள் அனைவரும் அரசியல் விஷயங்களில் ஈடுபட்டு எப்பொழுதும் விழிப்புடன் இருந்து அவர்களது செயல்களுக்கு விளக்கம் கோரி அவர்களது போக்கை உடனுக்குடன் தடுத்து நிறுத்தவேண்டும். அவ்வாறில்லாது மக்கள் ஒதுங்கி இருத்தல் ஜனநாயகத்திற்கு எதிரானது.

அடுத்ததாக ஜனநாயகத்திற்குச் சவாலாக அமையக்கூடிய சக்தி அரசாங்கம் தான் செய்யும் செயல்களை மற்றைய கட்சி அங்கத்தவர்களுடன் கலந்து விவாதிக்காது செயல்படுவது. நடவடிக்கைகளைக் கலந்து விவாதித்து செயல்படுவது ஜனநாயகத்திற்கு அதிமுக்கிய அம்சமாகும். இவ்வாறு விவாதித்துச் செயல்படுவதனல் பொதுமக்களுக்கு தான் செய்யப்போகும் செயலுக்குரிய விளக்கத்தை அரசாங்கம் அளிக்கும். அதேவேளை மக்கள் அரசின் செயலை இலகுவில் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இதனல் மக்களது ஆதரவையோ அபிப்பிராயத்தையோ அரசாங்கம் அறிய வாய்ப்பேற்படுகிறது. இதனல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் தவறான பாதையில் செல்ல நேர்ந்தால் அது தன் தவறை உணர்ந்து திருந்த சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது: எனவே அரசாங்கம் விவாதித்து தீனது அரசியல் கருமங்களை ஆற்றும்; அதே வேளை மக்களும் அரசியலில் பங்குபற்ற வேண்டும். இது நடைபெறாதபோது ஜனநாயக எதிர்ப்புச் சக்திகள் தோன்ற வழிவகுக்கும்.

எனவே ஜனநாயகத்திற்குச் சவாலாக அமையும் சக்திகள் சிறந்த தலைவன் அரசாங்கத்தைக் கொண்டு நடத்தாமை, அரசியல் அறிஞர்கள் அரசியலில் பங்குபற்றாமை, சிறந்த எதிர்க் கட்சி இல்லாமை, பல கட்சிகள் இருப்பது, பத்திரிகை, வானொலி, நூல்கள் என்பன சிறந்த முறையில் மக்களை வழி நடத்தாமை, சிறந்த கல்வியறிவு இல்லாமையால் மக்கள் அரசியல் அறிவு பெறாமை என்பனவாம்.

# 7 ஜனநாயகம் பற்றிய எண்ணக் கருத்துக்கள்

இன்று உலக நாடுகள் பலவற்றின் அரசியலில் கைக் கொள்ளப்படும் ஜனநாயகத் தத்துவங்கள் படிப்படியாக உருவாக்கப்பட்ட எண்ணக் கருத்துக்களாம். ஒரு சிறு சமூகத்தில் கருவைப்போல உருவாகி காலப் போக்கில் வளர்ச்சிபெற்று இன்று உலகின் ஓர் அரசியல் தத்துவமாக விருத்தியடைந்துள்ளது.

பண்டைய குடிமக்களின் சமுதாய அமைப்பிலிருந்து ஜனநாயக ஆட்சித் தத்துவங்கள் படிப்படியாக வளர்ச்சியுற்றுள்ளன. மக்கள் நிலையாக ஒரு இடத்தில் வாழத் தலைப்பட்ட காலகட்டத்தில் இச் சமூகக் கூட்டத்தினரிடையே ஒழுக்கம், கட்டுப்பாடு, அமைதி, பாதுகாப்பு என்பனவற்றை நிலை நாட்டுதற்காக வலிமையுள்ள ஒருவன் தலைமைப் பதவியைத் தானே எடுத்துக் கொண்டான். அக்கால அரசியல் சமூகத்திற்கு மனித பலமே ஆதாரமாய் அமைந்தது. இம்முறையே நாளடைவில் முடியாட்சியாக உருவானது; நாளடைவில் முடியாட்சியின் சர்வாதிகாரப் போக்கால் பாதிப்புற்ற மக்கட் கூட்டம் முடியாட்சியை மாற்றி புதியதொரு ஆட்சியை நிறுவ முயன்றனர். இவ்வேளையின் ''வலிமைக் கோட்பாடு'' தன் வலிமையை இழந்துபோக சமூகத்தின் அறிவாளிகள் சிலர் ஆட்சியை ஏற்றுக் கொள்ள முன்வந்தனர். இவ்வாறு மக்கள் ஒன்றுசேர்ந்து தமக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென அமைத்துக் கொண்ட அரசியலே சமுதாய ஒப்பந்தமென் னும் கோட்பாடு (*Social Contract*) விளக்குகின்றது. இக் கோட் பாட்டின்படி மக்கள் இதுவரை தத்தமது எண்ணப்படி சுயேச்சை யாக வாழ்ந்த உரிமைகளைக் கைவிட்டு, சமூகத்திற்குப் பொதுவான சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வாழ ஒப்புக்கொண்டமையாகும். இச் சமூகத்திற்குப் பொதுவான சட்டதிட்டங்களை உருவாக்கி நிர்வகிக்கும் பொறுப்பு ஒரு தலைவரிடம் அல்லது ஒரு குழுவிடம் மக்களால் ஒப்படைக்கப்பட்டது. "சமூகத்தில் அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதற்காக மக்கள் தம் இயற்கைச் சுதந்திரத்திலும் பார்க்க சமூகத்தில் அரசாங்கத் திற்குக் கீழ்ப்படிந்து வாழ்தலே சிறந்தது என நினைத்ததால் சமுதாய ஒப்பந்தம் உருவானது" என ஆங்கில அரசியலறிஞ ரான தோமஸ் ஹொப்ஸ் (*Thomas Hobbes*) கூறியுள்ளார். "ஒரு சமூகத்தில் மக்கள் தொகை பெருகப் பெருக அவர் களிடையே ஏற்படும் தகராறுகளில் நியாயம் எது என்பது சந்தேகத்திற்குரியதாக மாறியபோது அவற்றைத் தெளிவாக்க ஒரு அமைப்புத் தேவை. அத்துடன் சமுதாயத்தின் பொதுப் பணிகளை ஆற்ற ஓர் அரசாங்கமும் தேவையாயிற்று. இந்த எண்ணக் கருத்தால் உருவான அரசியல் சமுதாயமே சமுதாய ஒப்பந்தத்தை உருவாக்கியதென" ஜோன் லொக் (*John Locke*) என்ற இன்னொரு ஆங்கில அறிஞர் கூறியுள்ளார். மேலும் லொக்கின்படி "மக்களின் உரிமைகளைக் காப்பாற்ற எழுந்தது அரசியல் சமூகம். அந்த உரிமைகளைத் தெளிவாக்கி காக்கும் பொறுப்புடையது அரசாங்கம். இந்த அரசாங்கம் குறிப்பிட்ட நோக்கங்களிலும், கடமைகளிலும் தவறும்போது அரசாங்கத்தை மாற்றியமைக்கும் அதிகாரம் மக்களிடையே உண்டு. இங்கு அரசியல் சமுதாயத்தில் எதுவித மாற்றமும் ஏற்படாது. அர சாங்க அமைப்பு முறைதான் மாற்றப்படுகிறது." என்பதாகும். 17-ம் நூற்றாண்டின் இறுதியில், பிரித்தானியர் தமக்கென அமைத்துக் கொண்ட ஒருவித மக்களாட்சியை மனதில் கொண்டு லொக் இக் கோட்பாட்டைக் கூறியபோதும் அரசாங்க அமைப்பு, முறையில் இது ஒரு பெரிய 'மக்களாட்சிக் கோட்பாடாக' மலர்ந்தது.

பண்டைய காலங்களில் வாழ்ந்தோர் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதற்காக ஆற்றிய சேவைகள் பல. அவர்களில் புராதன இந்தியர், புராதன கிரேக்கர், புராதன ஐரோப்பியர் ஆகியோரின் ஆட்சிமுறையில் உருவான ஜனநாயக எண்ணக் கருத்துக்கள் எவ்வாறு உருவாகின எனச் சுருக்கமாகக் கற்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 புராதன இந்தியாவிலிருந்து பெறப்பட்ட கருத்துக்கள்

இந்தியாவில் புராதன காலத்தில் முடியாட்சியே நடைபெற்றுள்ளது. மக்களது பசி, பிணி, பகை என்பனவற்றை நீக்க, மக்களையும் நாட்டையும் காக்கும் பெருந்தலைவன் அரசனாவான். இவனைக் காவலன் என்ற பெயராலும் அழைத்தனர். இத் தலைவனே நாட்டு மக்களுக்கு நீதி செலுத்துபவன். இவன் ஆற்றும் கருமங்களுக்கு உதவுபவர்கள் அமைச்சர்கள்.

கி. மு. 600 – 300இல் எழுதப்பட்ட பௌதாயன, கௌதம, ஆபஸ்தம்ப தருமசாத்திர நூல்களில் அரசர்களுடைய கடமைகளும், அவர்களுக்கும், அவர்களுடைய குடிமக்களுக்கும் இருக்க வேண்டிய உறவு முறைகளும் கூறப்பட்டுள்ளன. பாரதத்தில் "முற்காலங்களில் அரசே ஏற்படவில்லை. தாமாகவே மனிதர் நன் நடத்தையில் ஈடுபட்டிருந்தனர். நாளடைவில் சண்டை சச்சரவுகள் ஏற்பட மக்கள் எல்லோரும் கூடித் தங்கள் வாழ்க்கையை நியாயமாக நடாத்திச் செல்வதற்கு அரசர் ஒருவனை ஏற்படுத்தி அவனுக்குக் கூலியாக நிலவரியும் வேறு வரிகளும் கொடுத்தார்கள்" எனக் கூறுகிறது. பொதுவாக இராச்சியங்கள் யாவும் அரசனால் ஆளப்பட்டு வந்த போதும், சில கால கட்டங்களில் சில இடங்களில் அரசனில்லாத குடியரசு நடைமுறையில் இருந்துள்ளது. இவைகளைச் சங்கம், கணம், அரட்டம் என்னும் பெயர்களால் அழைத்துள்ளனர். இந்த ஆட்சிமுறை முக்கியமாக வட இந்தியாவில் இமயமலைச் சாரல்களிலும், கோசலநாடு, மிதிலைநாடு, பஞ்சாப், சிந்து முதலிய பகுதிகளிலும் நிலவி வந்துள்ளது. கௌடில்யன் தனது நூலில் அரசர்கள் இந்த இராச்சியங்களை தம் வசப்படுத்த செய்த பல சூழ்ச்சிகள் பற்றிக் கூறியுள்ளான். அரசன் தனது பட்டாபிஷேகத்தின்போது மக்கள் எல்லோரையும் சமனாகக் காப்பாற்றுவதாகவும், வர்ணாச்சிரம தர்மங்களையும், சாதி, குலம், தொழில், ஊர் முதலியவற்றின் பரம்பரை வழக்கங்களையும் காப்பாற்றுவதாக வாக்களிப்பதாக சாசனங்கள் கூறுகின்றன. அத்தோடு பண்டைய வழக்கிலுள்ள தருமத்திற்கு முரண்பட்ட சட்டம் எவற்றையும் அரசன் இயற்றக்கூடாது. மாறாக இயற்றினால் குடிமக்கள் அந்தச் சட்டங்களை அவமதிக்கலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. கௌடில்யனுடைய நூலில் மட்டும், 'அவசியமானபோது அரசனுடைய ஆணை பண்டைய வழக்கங்களையும் மாற்றலாம்' எனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கூறப்பட்டதற்குக் காரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌரிய சாம்ராச்சியத்தின், புதுமையும், விஷேடத் திறமையும் அக்காலத்தில் சிரியா, எகிப்து முதலிய நாடுகளில் கிரேக்க அரசர்கள் நடத்திவந்த ஆட்சிமுறையும் என ஊகிக்கப்படுகிறது: சங்ககாலம் தொடக்கம் உள்ள தமிழ் நூல்களில் அரசனதும் அவனது கடமை, நீதி வழுவாமை என்பன பற்றியும் கூறப் படுகிறது. தமிழ் நாட்டின் சிறப்புக்களில் ஒன்று ஆதி காலம் தொடக்கம் அங்கு கிராமஆட்சி மன்றம் இருந்து வந்துள்ளது. அது புறநானூறு முதலான நூல்களில் சிறப்பித்துக் கூறப்பட் டுள்ளது. அத்தோடு அரசனைச் சேர்ந்த ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் அரசியலங்கங்கள் என்றும் அவை கூறு கிறார்கள்.

இவ்வாறாக இந்தியாவில் முடியாட்சி நிலவிய காலத்திலும் குடியாட்சிக்குரிய அரசியல் முறைகளும் நடைமுறையில் இருந்து வந்துள்ளது. தமிழ் நாட்டில் கிராமங்கள் அனைத்தும் மக்கள் ஆட்சியின் கீழ் இயங்கிவந்துள்ளது. இல்லற வாழ்க்கையில் ஈடு பட்ட ஆண்மக்கள் அனைவரும் ஊர் நடுவே கூட்டமாகக் கூடி கிராமத்தின் நலன்கள் பற்றிக் கலந்துரையாடித் தீர்மானித்துச் சட்டங்களை நிறைவேற்றவும் கிராமத்தைக் கண்காணிக்கவும் பஞ்சாயத்தார்களை நியமித்தார்கள். அவர்களுக்குத் தலைவராக நாட்டாண்மைக்காரரையும் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். சட்டத்தை மீறியவர்கள் ஊர்மக்களின் மத்தியில் விசாரிக்கப் பட்டுத் தண்டிக்கப்பட்டார்கள். இம்முறை 19-ம் நூற்றாண்டு வரை இருந்துவந்துள்ளது. இந்நிலையில் ஆங்கிலேயர் இந்தியா வைக் கைப்பற்றி ஆண்டதால் ஆங்கிலக் கல்வியைப் பெற்ற மக்கள் இலகுவில் மேனாட்டு முறையில் குடியுரிமை, கடமை, ஆட்சித்தத்துவம் பற்றி அறிந்து நடைமுறைப்படுத்த பண்டைய ஆட்சிமுறை வழி வகுத்தது எனலாம்.

## 9 புராதன கிரேக்கத்திலிருந்து பெறப்பட்ட கருத்துக்கள்

வானியல், அறிவியல், கணிதவியல் முதலான துறைகளில் கிரேக்க அறிஞர்கள் ஏனைய நாட்டவர்களுக்கு முன்னோடிகளாக இருந்தனர். இத்துறைகளில் மட்டுமன்றி அரசியல் துறையிலும் அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. மக்களாட்சியின் கருத் துக்களுக்கு இவர்களே வித்திட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன கிரேக்க நாட்டில் சிறுசிறு இராச்சியப் பிரிவுகளில் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். கிரேக்கருடைய அரசியல் மலர்ச்சி ஹோமருடைய பெருங்காப்பியக் காலங்களில் தோன்றியதாகக் கருதப்படுகிறது. நாளடைவில் கிரேக்க நாட்டிலிருந்த ''முடியாட்சி' மறைந்ததும் 'ஆலிகார்க்கி' என்னும் 'சிலராச்சிகள்' தோன்றிப் பொதுமக்களின் வெறுப்புக்குள்ளானது. இவ் வேளையில் இந்த ஆட்சியாளரை எதிர்த்த பொதுமக்களில் சிலர், சிலராட்சிக்காரரை நீக்கிவிட்டுத் தாமே இராச்சியத்தைக் கைப்பற்றினர். இவ்வாறு இராச்சியத்தைக் கைப்பற்றியவர்களை 'இராச்சிய அபகாரிகள்' (*Tyrants*) என்றழைத்தனர். இவ் வாட்சியாளரிற் சிலர் சிறந்த முறையில் ஆட்சி செலுத்தினராயினும் படைப் பலத்தையே நம்பி ஆண்டு வந்ததால் இந்த ஆட்சியையும் மக்கள் வெறுத்தொதுக்கினர். இதன் பின்னர் தோன்றியது கிரேக்கரது ஜனநாயக ஆட்சி.

கிரேக்க நாட்டில் கி. மு. 5-ம் நூற்றுண்டில் நடைமுறையில் கைக்கொள்ளப்பட்ட ஜனநாயக ஆட்சியின் நிருவாகம் மிகவும் புகழுடைந்த ஒன்ருகும். ஆயினும் கிரீசின் தென்பகுதியில் வாழ்ந்த ஸ்பார்ட்டர்கள் தமக்கு ஒருவகைக் கம்யூனிசச் சமத்துவ ஆட்சியும், அச் சமூகத்திலிருந்த தாழ்த்தப்பட்ட மக்களிடையே அடக்கு முறையைக் கையாளும் ஆட்சியும் ஆன இரு வகையான அரசியல் நிர்வாகம் காணப்பட்டது.

கிரேக்க அரசியல் அறிஞர்களிடையே பொதுவான அரசியல் கருத்துக்கள் நிலவின. அவையாவன:- 1. மனிதனுடைய வாழ்க்கை இயற்கைக்கும் அறிவுக்கும் பொருத்தமானதாய் இருக்கவேண்டும்; (2) சகல மக்களும் அறிவுடையவர்களாதலால் அறிவுக்குட்பட்ட மிக உயர்ந்த முறையில் வாழ்க்கை அமையவேண்டும்; (3) இவ் வாழ்க்கை சாத்தியமாவதற்கு மனிதர்கள் ஒன்ருக வாழ்ந்து ஒன்ருகப் பொது அலுவல்களில் ஈடுபடவேண்டும்; (4) இக்காரணங்களால் தனி மனிதனின் நலங்கள் இராச்சியத்தோடு இணைந்து நிற்கின்றன. (5) இவ் இணைப்பை இயன்றளவு தனிமனிதர்கள் தங்கள் தனித்துவத்தை இராச்சியத்தின் தன்மைக்கேற்றவாறு அமைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாருன ஐக்கியம் முற்காலத்தில் கிரீசில் இருந்த நகர இராச்சியங்களில் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருந்தது; கிரீசில் இருந்த நகர இராச்சியத்தில் இருந்த பெண்கள், சிறுவர், அடிமைகள், அந்நியர் முதலிய பெருந் தொகையினருக்கு அரசியல் உரிமை மறுக்கப்பட்டிருந்தது. சிறு தொகையினரான நகரக் குடிகளான ஆண்களுக்கு மட்டும் அரசியல் உரிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கப்பட்டிருந்தது. இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களுக்குத் தேவையான சட்டங்களை அமைத்து அந்தச் சட்டங்களை நிறைவேற்ற அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தனர். அக்கால அரசாங்கங்களுடைய அலுவல், சட்டங்களை அமுல்செய்வதாகும். தற்காலம் போல சட்டத்தை இவர்கள் உண்டாக்கவில்லை. இம்முறையை இன்று நேரடி ஜனநாயகம் என்று அழைக்கிறார்கள்.

கி. மு. 5-ம் நூற்றாண்டில் சோபிஸ்டுகள் (*Sophists*) என்றழைக்கப்பட்டவர்கள் பொதுமக்களின் உள்ளக் கிளர்ச்சியைத் தூண்டித் தங்கள் இஷ்டம் போல ஆதிக்கம் பெறத் தொடங்கினார்கள். ஒவ்வொரு தனிமனிதனும் தனது நலனைத் தானே ஆராய்ந்து அறியவேண்டும். அதேவேளை இயல்பாகவே மனிதன் சுயநலப் போக்குடையவன். இராச்சியத்தின் சட்டங்கள் மனிதனது அறிவின் போக்கிற்கு வேறுபடக் கூடும். ஆனாலும் அறிவே உண்மைக்கு வழிகாட்டி என்று இவர்கள் கூறினார்கள். சோபிஸ்டுகளின் கொள்கையைப் பின்பற்றிய அறிஞர் சாக்ரட்டீஸ் (கி. மு. 469 – 399) என்பவர் அரசியல் கருத்துக்களுக்கு அற அடிப்படை ஒன்றைக் கற்பித்தார். "ஜனநாயகம் மக்களிடையே பொய்யான சமத்துவத்தையே நிலைநாட்டுகிறது: திருவுளச் சீட்டுமூலம் அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பது சிறந்த முறையல்ல. திறமைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் இராச்சிய நிருவாகம் நடத்தப்படுவது நன்றாகும்" என்பது இவரது கருத்தாகும். இவரது மாணவரான பிளேட்டோ (கி. மு. 427—347) தனது 'குடியரசு' என்ற நூலில் "சிறந்த அறிவும் திறமையும் படைத்த தத்துவ சாஸ்திரிகள் அரசாங்கத்தை நடத்துபவர்களாக இருக்கவேண்டும். அறிவின் எல்லையைக் கண்ட அவ்வறிஞர்களே அரசியலறிஞர்களாகவும் இருக்க வேண்டும்" என்று கூறியுள்ளார். இவர் ஜனநாயகம் என்பது பாமரமக்களின் ஆட்சி என்று கருதினார். சிலராட்சியும், இராச்சிய அபகாரிகளின் ஆட்சியும்கூட நேர்முறைக்கு மாறானது. நேர்முக ஜனநாயகம் அவரால் புறக்கணிக்கப்பட்டது. இராச்சியத்தின் அடிப்படை நீதியாக அமைதல் வேண்டும் என்பது பிளேட்டோவின் முக்கிய கொள்கையாகும்.

அடுத்ததாக பிளேட்டோவின் மாணவரான அரிஸ்டாட்டிலின் (கி. மு. 384— 322) கருத்துக்களை அறிவோம். இவர் அரசியல் ஸ்தாபனங்களின் வளர்ச்சியே முக்கியமெனக் கருதினார். இவரது 'அரசியல்' என்ற நூலில் "சமுதாயம் என்பது குடும்பம், கூட்டம் என வளர்ந்து வரும் ஒரு ஸ்தாபனம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் சமூகமாகக் கூடி வாழ்பவன். தனிமனிதன் தன்னுடைய விருப்பங்களையும் இலட்சியங்களையும் நிறைவேற்றி நல் வாழ்வைப் பெற உதவுவதே 'இராச்சியத்தின் கடமை; அந் நல் வாழ்க்கையைப் பெற மனிதன் கல்வி கற்றிருக்க வேண்டும். அதற்குப் போதியளவு நேரம் வேண்டும். அடிமைகள் அவனது வேலைகளைச் செய்தால் குடிமக்களுக்கு ஓய்வுநேரம் கிடைக்கும்; எனவே தனிமனிதனுடைய நலத்திற்காக அடிமை முறை இருக்கவேண்டும் என்பது இவரது கருத்து; அத்தோடு இவர் அரசாங்க அமைப்பு சமத்துவக் கொள்கையையுடையதாகவும், புரட்சிக்கு இடம் கொடாததாயும் இருக்க வேண்டும் என்று கருதினர்; இவ்வாறு இருக்க வேண்டுமாயின் நடுத்தர வகுப்பினர் திருப்தியோடு வாழ்க்கை நடத்தவேண்டுமென்று எண்ணினர்; தனிமனிதனின் முன்னேற்றம் பெரிதேயன்றி மொத்த மக்களது முன்னேற்றம் பெரிதென்று கூறுவது பண்பளவில் மட்டுமே பொருத்தமென்று கூறினர். இராச்சியம் நிலைபெற்றிருப்பதும், மிதக் கொள்கைகளை மேற்கொள்வதும் இராச்சியத்தின் இரு நோக்கங்களாயிருக்க வேண்டும் என்று கூறினர்; இவருடைய கருத்துக்களின் சிறப்பால் இவரை 'அரசியல் நூலின் தந்தை' என்று உலகம் புகழ்கிறது; மேலும் இவரது 'அரசியல்' என்னும் நூலில் ''மக்களாட்சி என்பது பலராட்சி; அதாவது கும்பலாட்சி. இதை ஆட்சியேயில்லாத நிலை என்று கூறலாம். இக் குழப்பத்தினின்று அமைதியை நிலைநாட்டக் கூடிய வல்லான் ஒருவன் வந்து தனியாட்சியை நிறுவுவான்; இவ்வாருக மாறிமாறி வந்து கொண்டிருக்கும் அரசியல் ஏற்பாட்டை நிலைப்படுத்தி அமைப்பிற்குட்பட்ட அரசாங்கமே சிறந்தது'' என்றும் கூறியுள்ளார்;

இவருக்குப் பின்னர் எபிக்யூரஸ் (கி. மு. 312—270) என்பவர் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் எந்த ஆட்சியையும் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்றும், திறமை வாய்ந்த எதேச்சாதிகாரமும் ஏற்றுக்கொள்ளத் தக்கதே என்றும் கூறினர். அநீதியைத் தடுப்பதற்கு மக்கள் தமக்குள்ளே செய்து கொள்ளும் ஏற்பாடு சட்டம் என்றும் அவர் கூறினர். இவ்வாருக பல அறிஞர்கள் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். இவர்களது கருத்துக்களை உற்று நோக்கும்போது கிரேக்கர் நகரச் சுயாட்சியும், நல்வாழ்க்கை அமைவும், தனி மனிதரின் சுதந்திரமும் முக்கியமானவையெனக் கருதியுள்ளார்கள். எனவே இவர்களது கருத்துக்களைக் கொண்டு அரசியல் முறையை நோக்கும்போது கிரேக்கர் புராதன காலத்திலிருந்தே ஜனநாயகக் கருத்துக்களைக் கொண்டிருந்தமையினுல் நமது அரசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லமைப்பையும் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கேற்றவாறு காலத்திற்குக் காலம் மாற்றியமைத்தமை புலனாகிறது.

# 10 மேற்கிலிருந்து பெறப்பட்ட ஜனநாயகக் கருத்துக்கள்

புராதன காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் மதமும் அரசாங்கமும் இணைந்து செயல்பட்டுள்ளது. காலப்போக்கில் இவை இரண்டும் வெறுக்கப் பட்டுள்ளமையை அரசியல் வரலாற்றை ஆராயும்போது தெளிவாகிறது. செனிக்கா என்னும் (*Seneka*) ரோமானிய அறிஞர் ''அரசாங்கமும் சட்டமும் தேவைப்படுவதற்குக் காரணம் மனிதனுடைய தீயகுணமே என்னும் இயற்கைச் சட்டம் என்று ஒன்று உண்டு என்னும் மனிதனுடைய அறிவை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இச் சட்டமே அரசாங்கச் சட்டத்துக்கு அளவுகோலாகக் கொள்ளத்தக்கது என்றும் இவர் கூறினர். மேற்கு நாடுகளில் இடைக்காலம் முழுவதும் இயற்கைச சட்டமும் தெய்வீகச் சட்டமும் இரு முகங்களாகக் கருதப்பட்டன. ஆதியில் கிறிஸ்தவ மதக் கோட்பாட்டின்படி மனிதன் ஆதியில் குற்றம் செய்யாத நிலையிலிருந்து பின்னர் குற்றம் இழைத்தமையால் பாவியானன். இந்நிலையால்தான் அரசாங்கம் தோன்றியது. குற்றமில்லாத மனிதனுக்கு இலௌகிக அரசாங்கம் தேவையில்லை. மனிதன் குற்றம் செய்யத் துணிந்தபோது அரசாங்கம் தேவையாயிற்று. எனவே இதிலிருந்துதான் மக்கள் அனைவரும் சமன் என்ற அடிப்படைக் கோட்பாடு தோன்றியதெனக் கருதுவாருமுளர்.

தெய்வீகத் துறையில் திருச்சபை தன்னைப் பிரதிநிதியென்று கருதியது. இலௌகிகத் துறையில் ரோமானிய இராச்சியம் தன்னைப் பிரதிநிதியென்று கருதியது. ஆயினும் சாம்ராச்சியத்தின் மீதும் திருச்சபைக்கு அதிகாரம் உண்டென யாரும் கருதவில்லை ஆயினும் இவ்விருவரினதும் அதிகாரம் பற்றிய பிரச்சினை இடைக்காலம் முழுவதும் வாதிக்கப்பட்டு வந்துள்ளது. இவ்விடைக் காலப்பகுதியில் வெளியிடப்பட்ட அரசியற் கருத்துக்கள் யாவும் மதச் சார்பானதாகவே உள்ளன. இடைக்கால அரசியற் கோட்பாட்டிற்கும் தற்கால அரசியற் கோட்பாட்டிற்கும் இடையில் நீக்கோலா மக்யவெலி இயற்றிய 'அரசன்' என்ற நூலில் இவர் கூறிய கருத்துக்கள் அரசியல் துறையில் தேசியம் என்னும் கருத்து வளர்வதற்கு துணையாய் அமைந்தது என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16-ம் நூற்றுண்டின் அரசியற் கொள்கை அக்காலத்தில் ஐரோப்பாவில் தோன்றிய சமயச் சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருந்தது. மாட்டின் லூதர் (1483—1546) வெளியிட்ட அரசியற் கருத்து யாதெனில் நாட்டு மக்கள் அனைவரும் அரசாங்கத்துக்குக் கீழ்ப்பணிந்து நடத்தல் வேண்டும். அத்துடன் நாட்டிலுள்ள அரசாங்கள் ஒவ்வொன்றும் தனிப்பட்ட முறையில் அரசியல் நடத்துவதுதான் முறையென்று கருதினர். ஒவ்வொரு நாட்டிலும் திருச்சபையின் அதிகாரமும் அரசியல் ஆட்சியும் தனிப்பட்ட முறையில் வேறுபட்டிருக்க வேண்டுமெனவும் கொடுங்கோல் மன்னனை எதிர்க்கலாமென்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

16-ம் நூற்றுண்டில் பொதுவுடைமைக் கருத்துக்கள் ஐரோப்பாவில் பரவின. 'ஆனபாப்ஸ்டிஸ்டுக்கள்' என்னும் வகையினர் ஜெர்மனி, நெதர்லாந்து முதலிய நாடுகளில் இக் கொள்கையைக் கையாண்டு வந்தனர். அரசாங்கம் இவர்களை அடக்கிவிடாமையால் மொரேவியாவில் குடிபுகுந்து ஒரு நூற்றுண்டு வரையில் தமது கொள்கைப்படி பொதுவுடைமை அமைத்து ஆண்டனர். மக்களின் பிரதிநிதியாக மூதியோர்களைக் கொண்டு ஆட்சி செய்தது. இந் நூற்றுண்டின் பிற்பகுதியில் மன்னனின் அதிகாரத்தைக் குறைக்கும் பொருட்டு சில கொள்கைகள் தோன்றின. அவையாவன: தேசிய சுதந்திரம், மதச் சுதந்திரம் தனிமனிதன் சுதந்திரம் என்பனவாம். மன்னனின் அதிகாரத்தைக் குறைக்க வாதாடியவர்களுள் பேரறிஞர் ராஸ்மசு என்பவரும் ஒருவராவர். இவர் தலைமுறை தலைமுறையாக வரும் முடியாட்சியால் வரும் தீமைகளையும் மக்களின் பிரதிநிதிகளால் சமூகங்களுக்குக் கிடைக்கும் நன்மைகளைப் பற்றியும் இவர் எடுத்துக் கூறியுள்ளார்.

இங்கிலாந்தில் 17-ம் நூற்றுண்டில் அரசியலில் போர் நீடித்து நடந்தது. ஸ்ருவார்ட் மன்னர்களின் வரம்பில்லாத ஆட்சியை திருச்சபைகளும், பாராளுமன்றமும் எதிர்த்தன. ஐரோப்பாவில் இருந்தது போல இங்கிலாந்திலும் இதன் விளைவாக மதச் சிறுபான்மையோர் பொதுமக்களுக்கே ஆதிக்கமும் உரிமைகளும் இருக்கவேண்டுமென வாதாடினர். ஆயினும் மன்னன் ஆட்சியே மேலோங்கியிருந்தது. இக்காலகட்டத்தில் ஜனநாயகக் கொள்கையை ஆதரித்தவர்களில் மில்டனும், லொக்கும் தலைசிறந்தவர்கள். இவர்களது கொள்கையை மக்கள் ஆதரித்தனர். இவர்களது கொள்கைப்படி அரசாங்கத்திற்கும் மதத்திற்கும் தொடர்பு இருத்தல் கூடாது. மில்ட்டன், சுதந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் பிறப்புரிமையாதலால் பொதுமக்களது ஆதிக்கத்தை ஆதரித்தார். இவருக்கு பொதுமக்கள் சபைகளின் நடவடிக்கைகளில் நம்பிக்கையில்லாததால் பிரதிநிதி ஆட்சியை விட ஜனநாயக ஆட்சியை மேன்மையானதெனக் கருதினார். இங்கிலாந்தில் போலிங்புரோக் பிரபு (16 8—1751) என்பவரும் அரசியல் துறையில் பல நூல்களை எழுதியுள்ளார். போலிங்புரோக், ஜனநாயகக் கொள்கையை ஆதரித்ததுடன் மன்னனுக்கும் மக்களுக்குமிடையே ஓர் ஒப்பந்தம் இருப்பதாகவும் நம்பினார். ஹியூம் சிறந்த அறிஞர், அக்கால அரசியல் கொள்கையில் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தியவர். அரசியல் கொள்கைகள் வரலாற்றையும் உளவியலையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென்று கூறினார். மக்கள் இயற்கையாகத் தன்னலமும் பெருமையும் கொண்டவர்களாதலால் அவர்களுக்குக் கட்டுப்பாடு தேவை. இக்கட்டுப்பாட்டை சட்டங்கள் மூலமும் நீதிபதிகள் மூலமும், நிறைவேற்றப் படலாமென்பதற்காக அரசாங்கம் கட்டாயமாக அமைத்தல் அவசியமெனக் கூறினார். அத்தோடு இங்கிலாந்தில் காமன்ஸ் சபையின் அதிகாரம் பெருகுவதைக் கண்டு அரசியலில் சங்கங்களின் அவசியத்தையும், பத்திரிகைச் சுதந்திரத்தின் அவசியத்தையும் எடுத்துக் கூறினார். இக் காலசட்டத்தில் ஆங்கில மக்களிடையே ஜனநாயகக் கொள்கைகள் பரவி அவர்கள் தங்கள் சட்டசபைப் பிரதிநிதிகளை அடக்கவும் ஆரம்பித்தனர். தனித்துவம் என்றும், பயன் முதற் கொள்கை என்றும் இரண்டு முறைகளில் இயற்கை உரிமைகள் பற்றிய கருத்து இங்கிலாந்தில் கையாளப்பட்டது; இவ் விரண்டாவது முறையை மேற்கொண்டவர்களில் பெந்தாம் (1718—1832) ஆஸ்ட்டின் (1740—1859) ஜான் ஸ்டூவர்ட்மில் (1806 1873) என்பவர்கள் தலைசிறந்தவர்கள். இவர்கள் இயற்கைநிலை, சமூக ஒப்பந்தம், இயற்கைச் சட்டம், இயற்கை உரிமைகள் என்பனவற்றைப் பற்றிக் கூறினார்கள். அரசாங்கம் சமூகத்தின் நலன் கருதி ஏற்படுத்தப்பட்டதால் அதற்கு முழு அதிகாரமும் இருத்தல் வேண்டும். அதை எதிர்ப்பது சட்டப்படி முறையல்ல என்றும் கூறினார்கள். பெந்தாம் அரசாங்கத்திற்கு அளவிறந்த அதிகாரம் கொடுக்கவேண்டுமென்றும், அரசியல் அமைப்பு எழுதப்படவேண்டியது அவசியமாயினும் அதைத் திருத்தும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கவேண்டுமென்றும் நம்பினார். தனிமனிதனின் உரிமைகளைக் காப்பது அரசாங்கத்தின் கடமையன்று. ஒவ்வோர் உரிமைக்கும் ஏற்ற கடமை இருக்கின்றது. அக் கடமையின் அளவை அதனுடைய பயனையன்றி வேறெதுவுமில்லை. தனிமனிதனின் உரிமைகள் அர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாங்கத்தால் கொடுக்கப்பட்டவை. அவை சட்ட உரிமைகள், அற உரிமைகள் என இரண்டு வகை. தனிமனிதனுக்கு மூன்று வகைக் கடமைகள் உள்ளன. அவை அரசியல், சமய, அறக் கடமைகளாம் அவனுக்குச் சட்டப்படி அரசாங்கத்தை எதிர்க்க உரிமையில்லை. சட்டப்படி அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கவே கடமைப்பட்டவன், என்று பெந்தாம் கூறினர். மேலும் ஜனநாயக ஆட்சியை மிகவும் போற்றி அதற்கு வேண்டிய பிரதிநிதிசபை, வாக்குச் சீட்டு முறையில் தேர்தல் வயது வந்தோர் வாக்குரிமை என்பவைகளை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமெனக் கூறினர். இவர்களது கருத்துக்கள் மூலம் ஜனநாயகத்தின் தோற்றத்தை நாம் அறிய முடிகிறது.

18-ம் நூற்றாண்டில் பிரான்சில் மான்டெஸ்க்கியூ இயற்றிய 'சட்டங்களின் சாரம்' என்ற நூல் பலநாட்டு மக்களின் அரசியல் கொள்கைகளைப் பாகுபாடு செய்யவும், அரசியல் சீர்திருத்தங்களைத் தூண்டவும் உதவிற்று. இவரின் கொள்கைகளில் மிகச் சிறந்தது அதிகாரப் பிரிவினைக் கொள்கை. அரசாங்க அதிகாரம், நிருவாகப் பகுதி, சட்டம் இயற்றும்பகுதி, நீதிப் பகுதி என மூன்ருகப் பிரிக்கப்பட வேண்டும் என்றும், அவை வெவ்வேறு இலாகாக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், அவ்வாறு பிரிக்கப்படாமலிருந்தால் அரசாங்கம் தனி ஆட்சிக்கு உள்ளாகும் என்றும், அரசியல் சுதந்திரம் கட்டுப்பாடுள்ள அரசாங்கத்திலேதான் நடைமுறைப்படுத்தப்படுமென்றும் இவர் கருதினர். ரூசோவின் கருத்துப்படி குடியரசே மேன்மையான அரசியல் முறையென 'சமூக ஒப்பந்தம்' என்னும் நூலில் கூறியுள்ளார்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்பை நிறுவிய ஜெபர்சன், ஆதம்ஸ் முதலானோர் கூட்டாட்சி முறையைப் பற்றிய பல கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இவர்கள் ஒப்பந்தம் செய்துகொள்ளும் மாகாணங்கள் ஒன்றுக்கொன்று சமமாக இருப்பதுடன்றி அவை எவ்வளவு சுதந்திரம் பெறக் கூடுமோ அவ்வளவு அவற்றிற்கு அளிக்கப்படவேண்டும் என்று கருதினர். அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசியல் அமைப்பை நிறுவிய அறிஞர்கள் பிரெஞ்சு அறிஞரான மான்டெஸ்க்யூ என்பவரிடமிருந்து அதிகாரப் பிரிவினை என்னும் கொள்கையை மேற்கொண்டனர் இதன்படி நிர்வாகத் தலைவரான ஜனதிபதிக்கும், சட்டசபைப பகுதியான காங்கிரசுக்கும், நீதிப்பகுதியான உயர் நீதிமன்றத்திற்கும் ஒன்றையொன்று கட்டுப்படுத்தாத முறையில் தனி அதிகாரம் உண்டு. அமெரிக்க ஜனதிபதியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிங்கன் ''நியாயத்திற்குக் கட்டுப்பட்டுப் பொதுமக்கள் கருத்திற்கிசைந்து நடக்கக் கூடிய பெரும்பான்மையோர் ஆட்சியே சுதந்திர மக்களின் உண்மையான ஆதிபத்தியமாம்'' என்று கூறியுள்ளார்.

இவ்வாறு மேலே கூறிய அறிஞர்களின் கருத்துக்களை உற்று நோக்கும்போது ஜனநாயகக் கருத்துக்கள் எவ்வாறு வளர்ந்தன என்பது பற்றி அறியக்கூடியதாகவுள்ளது:

## II பிரித்தானிய அரசியல் சட்ட மாற்றங்களின் மூலம் பெறப்பட்ட கருத்துக்கள்

ஜனநாயக ஆட்சிமுறை நன்கு நடைமுறைப் படுத்தப்படும் நாடுகளுள் பிரித்தானியா சிறந்த இடத்தை உலக நாடுகளில் பெற்றுள்ளது: பிரித்தானியாவின் ஜனநாயக அரசியலமைப்பை பல நாடுகள் பின்பற்றுகின்றன ஆயினும், பிரித்தானியாவின் அரசியலமைப்பு எந்தவொரு சாசனமூலமும் வரையறுத்து, எழுத்து மூலம் எழுதப்படவில்லை. இந்நாட்டின் அரசியலமைப்பு காலத்திற்குக் காலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் மூலமும், அந் நாட்டில் நடைமுறையில் இருந்து வரும் சம்பிரதாயப் பழக்க வழக்கங்கள் மூலமுமே நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. எனவே, நாம் பிரித்தானிய ஜனநாயகக் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக பிரித்தானிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சில சட்டங்களில் எவ்வாறு ஜனநாயகம் உருவாகி வளர்ச்சியடைந்துள்ளது என்பது பற்றி அறிய வேண்டும். முதலில் 1215 ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மக்ஞ கார்ட்டா (*Magna Carta*) என்ற சட்ட மூலம் பற்றி அறிவோம்.

### (அ) மக்ஞ கார்ட்டா — 1215

றிச்சர்ட் மன்னன் இறந்ததும் அவனது தம்பியான ஜோனை அரசனுக்கினர் ஜோன் மன்னனது ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்து, ஐரோப்பாவில் தனக்குரிமையாக இருந்த நாடுகளை இழந்தது. இவனது ஆட்சிக் காலத்திலிருந்த பிரபுக்கள் சிற்றரசர்கள் போல படைபலம், கோட்டை முதலான வசதிகளுடையவர்களாகவும் சக்தி வாய்ந்தவர்களாகவும் இருந்தார்கள். ஜோன் மன்னன்தான் நினைத்தவாறு தனது இஷ்டத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விதிப்பதை இப் பிரபுக்கள் வெறுத்தனர். இதனால் மன்னனுக்கு பிரபுக்களின் ஆதரவிற்குப் பதில் எதிர்ப்பே கிடைத்தது. அரசனுக்குப் பிரெஞ்சு அரசனுடனும் போப்பாண்டவருடனும் தீராப்பகை எழுந்தது. அரசன் சமயத்திலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்தியமையால் திருச்சபையுடனும் பகைமை உண்டாயிற்று. இவ்வித நடவடிக்கையால் மக்களும் இவனை வெறுத்தனர். எனவே 1215 ம் ஆண்டு ரன்னிமீட் (*Runnymede*) என்னும் இடத்தில் 87 பிரிவுகளைக் கொண்ட மக்ன கார்ட்டா என்னும் சாசனத்தில் கையெழுத்து இடும்படி மக்கள் அரசனை வற்புறுத்தினர். இச் சாசனம் மன்னனால் கையெழுத்திட்டு மக்களுக்கு அளிக்கப்பட்டது. இச் சாசனத்தால் மக்களுக்குக் கிடைத்த ஜனநாயக உரிமைகள் பின்வருமாறு:

(1) அரசன் மக்களை தக்க காரணமின்றிச் சிறையில் அடைக்கக் கூடாது.

(2) மகாசபையின் (*Great Council*) அங்கீகாரத்தைப் பெறாமல் வரி விதிக்கக் கூடாது.

(3) அரசன் திருச்சபையின் சுதந்திரத்தில் தலையிடக் கூடாது.

(4) அரச உத்தியோகஸ்தர்கள் மக்களின் வருமானத்தை பலாத்தாரமாக, அரசனுக்கு மானியம் செலுத்தாமைக்காக பறித்தல் கூடாது.

(5) குற்றவாளிகள் கைது செய்யப்படும்போதோ அன்றி தண்டிக்கப்படும் போதோ நாட்டுச் சட்டத்திற்கமைய செயலாற்ற வேண்டும் என்பனவாம்.

இச்சாசனம் மூலம் பெற்ற ஜனநாயகக் கருத்துக்கள் யாதெனில் சமயச் சுதந்திரம், சொத்துரிமை, சட்டத்தின் முன் எல்லோரும் சமன் என்பனவாம்.

(ஆ) உரிமை மனு

1625 ல் முதலாம் ஜேம்ஸ் மன்னனின் மகன் சார்ள்ஸ் மன்னனின் முதல் பதினைந்துமாத ஆட்சிக் காலத்தில் இரண்டு பாராளுமன்றங்கள் அடுத்தடுத்துக் கூட்டப் பெற்றுத் திடீரென்று கலைக்கப்பட்டன. இவனது ஆட்சிக்காலத்தில் இவனுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே பல பூசல்கள் ஏற்பட்டன. பக்கிம்ஹாம் என்பவரின் அறிவுரைகளை நம்பி, சார்ள்ஸ், ஸ்பெயின் நாட்டுடன் போரிட எண்ணம் கொண்டிருந்தான். இதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவு பொருள் தேவைப்பட்டது. சார்ள்ஸ் காமன்ஸ் சபை யிடமிருந்து பெருந் தொகையையும் அதேவேளை நிபந்தனையற்றது மான பணத்தை எதிர்பார்த்தான். ஆனால் கீழ்ச்சபை உறுப் பினர்கள் தங்களுடைய உள்நாட்டு உரிமைகளை அனுபவிப்பதற் கான வழிமுறைகளை உறுதிப்படுத்த எண்ணினார்கள். அதனால் போரை இவர்கள் விரும்பவில்லை. இதனால் பாராளுமன்றம் இரண்டு மானியங்களை மட்டும் வழங்கியதோடு டன்னேஜ், பவுண்டேஜ் வரிகளை ஒரு ஆண்டிற்கு மட்டும் அறவிடும் படியும், வாழ்நாள் முழுவதும் அறவிடக்கூடாது எனவும் தடைவிதித்தனர். ஆயினும் மன்னன் இவ்விரு வரிகளையும் பாராளுமன்ற அதிகாரம் இல்லாமல் அறவிட்டான். மேலும் கத்தோலிக்க மதத்தை அரசன் மீண்டும் புதுப்பிக்கலாமெனவும், பயந்து அரசருக்கு மான்யம் அளிக்கும் காரணத்தைக் கூறியதாலும், அரசன் கோபமுற்றுப் பாராளுமன்றத்தைக் கலைத்தான். இரண்டாம் பாராளுமன்றத் தில் பக்கிங்காம் மீது பாராளுமன்ற குற்ற நடவடிக்கை எடுக்க முனைந்தபோது, அரசன் அதில் தலையிட்டு அந்நடவடிக்கையை முறியடித்தான். இம்முறையால் நீதிச் சுதந்திரம் இருக்கவில்லை யென்பதைப் பாராளுமன்றம் உணர்ந்தது.

அடுத்ததாக காமன்ஸ் சபையைச் சேர்ந்த சேர் ஜான் எலியட், சேர் டட்லி டிக்ஸ் என்ற இருவரும் துடுக்குத்தனமாக அரசருக்குக் கோபமூட்டக்கூடியதாகச் சொற்பொழிவு ஆற்றினார்கள் என் பதற்காக டவர் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இதனால் கோபங்கொண்ட காமன்சபை உறுப்பினர்கள், காமன்சபை நட வடிக்கைகளில் பங்குபற்ற மறுத்தனர். இவர்களை சர் டட்லி கார்லிங்டன் என்னும் அரண்மனைத் துணைப் பாதுகாவலர், அரசன் பாராளுமன்றம் இன்றி ஆட்சிசெலுத்தும் நிலை ஏற்படலாமென அச்சுறுத்தி, இவர்களைப் பணிய வைக்க முயன்றார். முடிவில் பல பிரபுக்கள், சர் டட்லி டிக்ஸ், அரசருக்கெதிராகப் பேசவில்லை யென உறுதி கூறியதால் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார் கள். இந் நிகழ்ச்சியால் காமன்ஸ் சபையினர் தமது பேச்சுரிமை மறுக்கப்பட்டதை உணர்ந்தார்கள். பக்கிங்காம் மீது காமன்ஸ் சபை தொடுத்த வழக்குகளை நடத்தாது விடுப்பதற்காகப் பாராளுமன்றத்தைக் கலைத்தார். வேண்டியளவு பொருளை நிபந்தனையின் பேரில் கொடுக்க ஏற்கனவே வாக்களித்த வாக் குறுதிகள் நிறைவேறுவதற்குள், அவசர அவசரமாகவும் புத்தி யற்றமுறையிலும் பாராளுமன்றத்தைக் கலைத்ததால், அரசர் ஸ்பெயினுடன் நடாத்த விருந்த போரை நடாத்துவதற்கு பொருள் இல்லாது போனது. அதனால், அரசன் மீண்டும் சட்டத்திற்கெதிரான வழிகளைக் கையாண்டு பொருள் சேகரிக்க

முற்பட்டான். டன்னேஜ், பவுண்டேஜ் போன்ற வரிகளை தனது விருப்பப்படி வசூலித்தான். குற்றவாளிகள் தண்டனை அனுபவிப்பதற்குப் பதிலாக, பணம் கொடுத்து குற்றத்திலிருந்து தப்பிக்கலாம் என்ற ஆணையைப் பிறப்பித்தான். பிரிவிசில் எனப்படும் ஆவணங்களுக்குரிய அரச முத்திரைக்கும், கட்டாயக் கடன்கள் கொடுக்கவேண்டுமெனவும் பணக்காரர்களைக் கேட்டான். சப்பல்களுக்கு வேண்டிய ஆயுதங்களுக்குப் போதியளவு பணம் கொடுக்கும்படி கேட்டான். ஒவ்வொரு குடிமகனிடமிருந்தும் பொதுக்கடன் வசூலிக்கப்பட்டது. நிதி கொடுக்க மறுத்த பொதுமக்கள் இராணுவத்திலோ கப்பற்படையிலோ சேரவேண்டுமென கட்டாயப்படுத்தப்பட்டனர். பிரபுக்கள் பலர் இதை எதிர்த்தமையால் சிறையிலடைக்கப்பட்டனர். இராணுவத்தைச் சேர்ந்த பல அணிகள் கவுன்டிகள் பலவற்றிற்கு அனுப்பப்பட்டு, குடிமக்கள் அவற்றின் செலவை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தப்பட்டார்கள். இம் முறையால் மக்கள் சொத்துக்களை வைத்திருக்கும் உரிமையை இழந்தார்கள். மேலும் பொருள்கொடுக்க மறுத்த பிரபுக்கள் பலர் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இவ்வாறு அடைக்கப்பட்டவர்களில் சேர் தாமஸ் டார்னல், சேர் ஜான் கோர் பெட், சேர் வால் டர் எர்ல், சேர் எட்மண் ஹம்ப்டன் ஆகியவர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இவ் வழக்கின் தீர்ப்பு நீதிக்குச் சவாலாக அமைந்தது. சேர் நிகோலஸ் ஹைடு என்ற பிரதம நீதிபதி அரசருக்குச் சாதகமான தீர்ப்பை வழங்கினார். பிரபுக்கள் சிறைக்கு அனுப்பப்பட்டனர். அத்தோடு காலவரையறையின்றி இத்தண்டனை நீடிக்கப்படலாம், குற்றவாளிகள் விசாரணையின்றி சிறையிலடைக்கப்படலாமென்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இதனால் பொதுமக்களது வெறுப்பிற்கும் அரசன் ஆளானான். இத்தீர்ப்பினால் தனிப்பட்ட சுதந்திர உரிமை அழிக்கப்பட்டு விட்டதை உணர்ந்தார்கள். நீதியான முறையில் வழக்காடும் உரிமை மறுக்கப்படுவதையும் பொதுமக்களும் பாராளுமன்றமும் உணர்ந்தது.

பக்கிங்காமின் தூண்டுதலால் பிரான்சுடன் போர் தொடுத்து தோல்விகண்ட அரசன், மூன்றாவது பாராளுமன்றத்தை 1628-ல் கூட்டினான். இப் பாராளுமன்ற கூட்டத் தொடரில் கர்வம் கொண்டதும், மக்களைப் பயப்படுத்துவதுமான பேச்சொன்றைப் பேசினான். தனக்கு வேண்டிய பொருளை ஒவ்வொரு குடிமகனும் கட்டாயம் வழங்கவேண்டும், இல்லையேல் வன்முறைகளைப் பயன்படுத்தி பொருளை அறவிடுவேன், என்பதாக அப்பேச்சு அமைந்திருந்தது. எனவே காமன்ஸ் சபையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர், பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். (1) அரசருடைய ஆணைப்படியோ பிரிவுகவுன்சலின் ஆணைப்படியோ எந்தவொரு சுதந்திர மனிதனும் சிறைபிடிக்கப்படவோ விளக்கமறியலில் வைக்கப்படவோ கூடாது. அவர் மீது சட்டப்படி குற்றஞ் சாட்டப்பட்டால் தான் மேற்கூறியவற்றைச் செய்யலாம் (2) ஒவ்வொரு சுதந்திரப் பிரஜையும் சொத்துக்களையும் நிலபுலங்களையும் கொண்டிருக்க முழுமையும் வரம்பற்றதுமான உரிமை பெற்றிருப்பதுடன் அது பழமையான ஒன்றாகவும் இருக்கிறது. (3) பாராளுமன்றத்தின் அனுமதியில்லாமல் அரசரோ அல்லது அவருடைய மந்திரிகளோ எந்தவிதமான வரியையோ சுங்க வரியையோ, கட்டாயக் கடனையோ, நன்கொடைகளையோ அல்லது அதுபோன்ற ஏனைய வரிகளையோ விதிக்கக் கூடாது: மேற்கூறிய உரிமைகளை உறுதிப்படுத்தும் விண்ணப்பத்தை ஆயத்தம் செய்தனர். அதேவேளை அரசன் காமன்ஸ் சபையினரை திருப்திப்படுத்த தான் இனி ஒருவரையும் போதிய நியாயமான காரணமின்றிக் கைது செய்வதில்லையென்றும் அல்லது மகாசாசனத்தையும் ஏனைய பழைய சட்டங்களையும் மீண்டும் ஊர்ஜிதம் செய்து சுதந்திரத்தைக் காப்பாற்றுவதாக வாய்மொழி மூலம் கூறினான். ஆனால் சேர் எட்வர்டு கோக், வாய்மொழி மூலம் கூறுவதனால் நாட்டின் நடைமுறைச் சட்டம் என்னவெனப் புரியவில்லை; அதனால் ஒரு மசோதாவைக் கொண்டு வர வேண்டுமெனக் காமன்ஸ் சபைக்கு வேண்டுகோள் விடுத்தார். இதன் பயனாக சமர்ப்பிக்கப்பட்டதே உரிமை மனு ஆகும்.

இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட உரிமை மனுவில் கோரப்பட்டிருந்த உரிமைகள் வருமாறு:- நல்லாஜியம் என்ற வரியைக் கொடுக்க மறுக்கும் நாட்டுச் சட்டம், எட்வர்ட் மன்னன் காலத்தில் கட்டாயக் கடன் பெறக்கூடாதென நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கெதிராகவும் வேறு மரபு முறைகளுக்கெதிராகவும், பாராளுமன்றத்தின் அனுமதியின்றி, கடன்களையோ, வரிகளையோ வசூலிக்கக்கூடாது; அவ்வாறு பணம் கொடுக்காதவர்களைத் தண்டிக்கக்கூடாது; சுதந்திரக் குடிமகன் எவனும் சிறையில் அடைக்கப்படுவதும், சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதும், நாடுகடத்தப்படுவதும் நாட்டுச் சட்டப்படி நிறைவேற்றப்படல் வேண்டும்; சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் என்ன காரணத்திற்காகச் சிறைப்பிடிக்கப் படுகிறார்கள் என்பதை குறிப்பிட்டுக் காட்டவேண்டும்; வீடுகளில் இராணுவ வீரர்களை பாதுகாக்கவேண்டும் என்னும் சட்டத்தை நீக்கவேண்டும்; எந்த ஒரு மனிதனும் அவன் செய்த குற்றங்களை ஆராயும் முன்னர் தண்டனை பெறக்கூடாது; சில கடும் குற்றம் செய்தவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாயினும் காரணம் காட்டி தண்டனையிலிருந்து தப்பிக்க வைப்பதை நிறுத்தவேண்டும்—என இந்த மனுமூலம் கோரினர். அத்துடன் பாராளுமன்றச் சட்டத்தின் பொதுவான சம்மதமில்லாமல் எந்தவொரு மனிதனையும் கொடை, கடன், வரி என்பன கொடுக்கவேண்டுமெனக் கட்டாயப் படுத்தக் கூடாது எனவும், இராணுவச் சட்டப்படி பொதுமக்களுக்குத் தண்டனை வழங்குவதை நிறுத்தும்படியும் கேட்டனர். மேலே கூறப்பட்டவை அந்நாட்டு மக்களின் உரிமைகளும், சுதந்திரங்களுமாகும். இவை அந்த நாட்டின் சட்டப்படியும், விதி முறைப்படியும் வந்தவையாகும் என உரிமை மனுவில் கேட்கப்பட்டது.

இம் மனுவை அரசன் ஏற்றுக்கொண்டான். அதனால் கிடைக்கப் பெற்ற ஜனநாயக உரிமைகள் வருமாறு:

(1) பாராளுமன்றத்தின் அனுமதியில்லாமல் கடன் அல்லது வரிகள் வசூலிப்பது சட்டத்திற்கு மாருனது. அத்தோடு கடன் கொடுக்கும்படி மக்களைக் கட்டாயப் படுத்தக்கூடாது.

(2) மக்கள் தாம் விரும்பும் சொத்துக்களை வைத்திருப்பதற்குச் சொத்துரிமை;

(3) தனிமனிதன் ஒருவன் கைது செய்யப்படும்போது அதற்கான காரணத்தைக் கூறி கைது செய்யப்படல் வேண்டும். அதே வேளை அவன் விசாரணையின் பின் தண்டனை பெறல் வேண்டும். அவன் தனது குற்றத்திற்கெதிராக வழக்காடும் உரிமை. இதனால் நீதிச் சுதந்திரம் பெற்றனர்.

(4) எல்லா மக்களும் ஒரே விதமான சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டும் என்னும் உரிமை;

(5) சமாதான காலத்தில் இராணுவச் சட்டப்படி மக்கள் தண்டிக்கப்படக்கூடாதென்னும் உரிமை;

(6) மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்குள்ள உரிமை.

## (இ) ஹேபயஸ் கோபஸ் சட்டம் (Habeas Corpus act)

முதலாம் சார்ள்ஸ் காலத்தில் பாராளுமன்றத்திற்கும் மன்னனுக்கும் இடையில் இருந்த முரண்பாடுகளால் இங்கிலாந்து இரு கட்சிகளாகப் பிரிந்தது. மன்னனும் பாராளுமன்றமும் ஒருவருக்கொருவர் எதிராளியாகி போர் நடந்தது. போரில் பாராளுமன்றம் வெற்றிபெற்று சார்ள்ஸ் கொல்லப்பட்டான். பாராளுமன்றத்தின் படைக்குத் தலைமைவகித்த ஆலிவர் கிராம்வெல் காப்பாளனுக இங்கிலாந்தை 11 வருடகாலம் குடியர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக ஆட்சி நடத்திஞன். இவன் பாராளுமன்ற அனுமதியின்றி தன்னிஷ்டத்திற்கு ஆண்டான். இதனுல் மக்கள் இக் குடியரசை வெறுத்தனர். ஆலிவர் கிராம்வெல் இறந்ததும் றிச்சர்ட் கிராம்வெல் காப்பாளஞனுன். ஆனுல் இறுதியில் பாராளுமன்றம் கூடி பழைய அரசனது மகனை இரண்டாம் சார்ள்ஸ்சை 1660-ம் ஆண்டு அரசனுக்கியது. இவன் பதவிக்கு வந்ததும் பாராளுமன்றம் பல சட்டங்களை இயற்றியது. அவற்றுள் ஏக வழிபாட்டுச் சட்டமும் ஒன்ருகும். அரசனைக் கொல்லக் கத்தோலிக்கர் சதி செய்வதாக ஒரு வதந்தி கிளம்பியது. இதனுல் பல கத்தோலிக்கர் இரக்கமின்றிக் கொல்லப்பட்டார்கள். அதன்பின் பாராளுமன்றம் ஹேபயஸ் கோபஸ் சட்டத்தை 1679-ல் அமுலுக்குக் கொண்டு வந்தன.

இச் சட்டத்தில் கூறப்பட்டவை யாதெனில், சிறைப்பட்டோரை நீதிமன்றத்துக்குக் கொண்டுவர ஆணையிடும் சட்டமும், ஆளுரிமை காப்புச் சட்டமுமாகும். இதன்படி அரசாங்க உத்தியோகஸ்தர்கள் சிறைப்பிடிக்கப் பட்டவர்களை குற்றம் நிரூபிக்கப்படாதவிடத்து உடனடியாக விடுவிக்க வேண்டும்; குற்றவாளிகள் சிறைப்பிடிக்கப் பட்டதும், அவர்களது குற்றங்களை நிரூபித்து குற்றவாளிகளை நீதிபதி முன் தீர்ப்பிற்காக நிறுத்த வேண்டும். அதன் பின்பே அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படல் வேண்டும். குற்றங்கள் ஒரு குற்றவாளி மீது சுமத்தப்படாமல் அவனை சிறையில் தொடர்ந்து வைத்திருத்தல் கூடாது; கொலைக் குற்றம், மற்றவரிடம் பெற்ற கடனுக்கான குற்றம், அல்லது வேறு குற்றத்திற்காக சிறைப்பிடித்தல் தவிர வேறு சந்தர்ப்பங்களில் சட்டப்படி கைது செய்யப்பட வேண்டும். அரசர் மன்றத்திலிருந்து கைதியை விசாரணைக்காக நீதிமன்றத்திற்குக் கொண்டுவரல் வேண்டும். அவ்வாறு கொண்டுவரப்படும் கைதியின் உடலில் எந்தவித ஊறும் இருத்தலாகாது. நீதிபதி கைதியை விசாரித்து விடுதலை செய்யவோ தண்டனையளிக்கவோ பிணையில் விடவோ அதிகாரமுடையவராவார்.

இவ்வாருக இச்சட்டம் அமைந்திருந்தது. இச் சட்டத்தின் மூலம் மக்கள் தமது நீதி கோரும் உரிமையையும், குற்றவாளி மட்டுமே தண்டனையடைவான் என்ற நிலைமையையும் பெற்றனர்.

### (ஈ) உரிமைகள் சட்ட மூலம்—1689 (Bill of Rights)

1685-ம் ஆண்டு இரண்டாம் சார்ள்ஸ் இறந்ததும் யார்க் சோமகன் இரண்டாம் ஜேம்ஸ் பட்டத்திற்கு வந்தான். 1685-ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்மத் கோமகன், பட்டத்திற்குத் தானே வாரிசு என்று புரட்சி செய்து உயிரிழந்தான. மக்கள் ஆரஞ்சு இளவரசனிடம் தம்மை ஆளுமாறு கேட்டனர். அதற்கிணங்க 1688-ல் வில்லியம், டச்சுப்படையுடன் வந்திறங்கவே மக்கள் வெறுத்த மன்னன் பட்டத்தைத் துறந்து ஓடிவிட்டான். பாராளுமன்றம் ஜேம்ஸின் மகள் மேரியையும் அவள் கணவன் வில்லியத்தையும் (ஆரஞ்சு இளவரசன்) கூட்டாக ஆளும்படி நியமித்தது. இவர்களது ஆட்சிக் காலத்தில் பாராளுமன்றம் உரிமை மசோதாவை நிறைவேற்றி அரசனது உரிமையைக் கட்டுப் படுத்தியது. பண்டைய உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் வலியுறுத்துவதாக அமைந்த அம்மசோதாவில் கோரப்பட்ட உரிமைகள் வருமாறு:-

1) நடைமுறையிலிருக்கும் சட்டங்களை தள்ளி வைப்பதோ அன்றி பாராளுமன்றத்தின் சம்மதமின்றி, அரச அதிகாரத்தைக் கொண்டு சட்டங்களைச் செயன்முறைப்படுத்தலோ சட்டவிரோதமான செயல்;

2) நடைமுறையிலிருக்கும் சட்டங்களை நீக்குதலோ அல்லது அரசனின் அதிகாரத்தைக் கொண்டு சட்டத்தைப் பயன் படுத்துவதோ சட்டவிரோதம்.

3) சமய வழக்குகளுக்கென உயர் ஆணை மன்றத்தை நிறுவுவதற்கு ஆணையிடுவதும், அதேமாதிரியான பிற ஆணைக் குழுக்களும் சட்ட விரோதமானவை.

4) நீண்ட காலத்திற்கு பாராளுமன்றத்தின் சம்மதமின்றி அரசனின் சிறப்பதிகாரத்தைக் கொண்டு அரசாங்கத்திற்காக அதனுடைய உபயோகத்திற்காக பணம் திரட்டுவதும் மக்கள் விரும்பாத வழிகளில் நிதி திரட்டுதலும் சட்டவிரோதமாகும்.

5) அரசரிடம் விண்ணப்பித்தல் குடிமகனுடைய உரிமையாகும்; அவ்வாறு விண்ணப்பம் அனுப்பியதற்காக குடிமகன் குற்றஞ் சாட்டப்படுவதும், சிறையிலிடப்படுவதும் சட்டவிரோதம்;

6) பாராளுமன்றத்தின் சம்மதமின்றி அமைதிக் காலத்தில் நாட்டின் எல்லைக்குள் படைதிரட்டுதலோ அன்றி நிலையான படையை வைத்திருப்பதோ சட்டத்திற்கு மாறானது;

7) சட்டம் அனுமதித்தபடி தங்களுடைய நிலைமைக்கேற்ப தமது தற்பாதுகாப்பிற்காக புராட்டஸ்டெண்டு குடிகளும் படைக்கலம் தாங்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) பாராளுமன்ற உறுப்பினர்களுடைய தேர்தல்கள் கட்டுப் பாடற்றவையாக இருக்கவேண்டும்;

9) பாராளுமன்றத்தின் பேச்சுரிமையும், விவாதங்களும், செயல் முறைகளும் பாராளுமன்றத்திற்கு வெளியிலோ அல்லது நீதிமன்றத்திலோ குற்றச்சாட்டிற்கோ அல்லது விசாரணைக்கோ உள்ளாகக் கூடாது;

10) அளவிற்கு மீறிய ஈட்டுப் பணம் அறவிடப்படுவதும், அளவுக்கு மீறிய தண்டப் பணம் விதித்தலும் வழக்கத்திலில்லாத கொடூரமான தண்டனைகள் வழங்குதலும் கூடாது;

11) ஜுரர்களை முறையாக வழக்கு விசாரணையின்போது அழைக்கவேண்டும். அரசத்துரோகக் குற்றம் சுமத்தப் பெற்றவருக்கு தீர்ப்பளிக்கும்போது குடியுரிமைபெற்ற ஜுரர்கள் இருத்தல் வேண்டும்.

12) குற்றம் சாட்டப்பெற்று தண்டிக்கும் முன்னரே உதவித் தொகை அளிப்பதும், தண்டம், பறிமுதல் ஆகியவற்றிற் கான உறுதிமொழி அளிக்கப்படுவதும் முறையற்ற செயல் கள் ஆவதுடன் செல்லுபடியாகாதவையுமாகும்.

13) நாட்டிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்யவும், சட்டங் களைத் திருத்தியமைக்கவும், அவற்றைத் திடப்படுத்தவும், காக்கவும் பாராளுமன்றங்கள் அடிக்கடி கூடவேண்டும்.

இக் கோரிக்கைகள் மூலம் ஜனநாயக நாட்டுமக்களதும், பாராளுமன்றத்தினதும் உரிமைகள் அளிக்கப்படுகிறது. அத்தோடு ஜனநாயக நாட்டில் நிலவ வேண்டிய அமைதியும், நீதிச் சுதந்திரம், மதச் சுதந்திரம், பேச்சுரிமை, தனிமனித உரிமை என்பனவும் கிடைப்பதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது;

## 12 பிரித்தானிய அரசியலில் இடம் பெறும் சம்பிரதாயங்களும் பழக்க வழக்கங்களும்

பிரித்தானியாவில் நடைமுறையிலிருப்பது அரசியலமைப் பிற்குட்பட்ட முடியாட்சி, ஆனால் பிரித்தானியாவின் அரசிய லமைப்பு மற்றைய நாடுகளின் அரசியலமைப்பைப் போன்று ஒரே சட்டமானது அல்ல. சம்பிரதாயப் பழக்க வழக்கங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி மன்றங்களின் தீர்ப்புக்கள், அரசர்களின் கட்டளைகள், பாராளுமன்றத்தின் சட்டங்கள் உடங்கியவையே பிரித்தானியாவின் அரசியலமைப்பாகும். இந்த அரசியலமைட்பு எழுத்தில் எழுதப்பட்டது அல்ல;

சட்டங்கள் என்று கூறப்படுவது யாதெனில், பாராளுமன்றத்திலோ, நீதிமன்றத்திலோ வரையறுக்கப்பட்டு எழுத்தில் எழுதப்பட்டுள்ளவை. இவற்றில் ஏதாயினும் மாற்றம் செய்வதாயின் அவை பாராளுமன்றத்தில் மசோதாமூலம் பெரும்பான்மையினரின் வாக்குச் சம்மதத்துடன் நிறைவேற்றப்படல் வேண்டும். ஆனால் சம்பிரதாயங்களும் பழக்கவழக்கங்களும் மரபு முறையாக பின்பற்றப்பட்டு வருபவை. இவை வரையறுக்கப் படவில்லை. இவ்வாறு சட்டங்களோடு சம்பிரதாயங்களும் பழக்க வழக்கங்களும் நடைமுறைப் படுத்தப் படுவதற்குக் காரணம், நாட்டின் அமைதிக்கும், சமாதானத்திற்கும் பங்கம் ஏற்படாதவாறு அரசியலைக் கொண்டு நடத்துவதற்கேயாம். பிரித்தானியாவில் நடைமுறையில் பின்பற்றப்படும் முக்கிய சம்பிரதாயங்களும் பழக்கவழக்கங்களும் பின்வருமாறு:-

1) நாட்டின் தலைவர் குடிமன்னன். நாட்டின் ஆட்சியைக் கொண்டு நடத்துபவர் பிரதமமந்திரி. ஆனல் பெயரளவில் தலைவன் மன்னன்;

2) இம் மன்னனின் அரச உரிமை பரம்பரை வழியாகவுள்ளது. மன்னருக்குப் பின் அவனது மூத்தமகன் மன்னனுவார். மன்னனுக்கு மகன் இல்லாதிருந்தால் மூத்தமகள் அரசியாவாள். பரம்பரையில் வாரிசு இல்லாதுபோனல் அரச வம்சத்தில் ஒருவரை நியமிப்பர்;

3) மன்னர் ஆட்சி செய்வதில்லை. ஆனல் அரசாங்கத்தின் ஒவ்வொரு செயலும் மன்னரின் பெயராலேயே நடைபெறும்; பாராளுமன்றத்தின் ஆட்சிக் காலம் முடிவடைந்தாலோ அல்லது ஆளும் கட்சியால் தொடர்ந்து அரசாங்கத்தை நடத்தப் போதிய பலம் இல்லாது போனலோ மன்னர் பாராளுமன்றத்தைக் கலைப்பார். பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற கட்சியின் தலைவரை பிரதம மந்திரியாக நியமிப்பதும் மன்னரே.

4) ஒரு பாராளுமன்றம் கூட்டப்பட்டதும் அப்பாராளுமன்றத்தின் சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்துபவர் மன்னரே. இது ஓர் சம்பிரதாய வைபவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) மன்னரின் சம்மதமின்றி எந்தவொரு மசோதாவும் பாராளு மன்றத்தில் நிறைவேற்ற முடியாது. ஆனாலும் மன்னர் எந்தவொரு மசோதாவிற்கும் தனது சம்மதத்தை அளிக்க மறுப்பதில்லை.

6) மன்னர் நாட்டின் ஒற்றுமையின் சின்னமாக விளங்குவார்; சமூகத்திற்கு வழிகாட்டுபவரும் இவரே. உயர்ந்த சேவை யாற்றியவர்களுக்கும், வீரச்செயல் புரிந்தவர்களுக்கும், நாட்டிற்குத் தொண்டாற்றியவர்களுக்கும் பட்டம் அளிப் பவர் மன்னரே. இது சம்பிரதாயம்; ஆனால் யாருக்கு வழங்கவேண்டுமென சிபார்சு செய்வது அரசாங்கம்;

7) மன்னரே முப்படைகளதும் தலைவன்; உள்நாட்டு, வெளி நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டுத் தொடர்பு என்பன வும் இவர் பெயராலேயே நடைபெறும்.

8) குற்றவாளிகளை மன்னிக்கவும் அவர்களது தண்டனையைக் குறைப்பவரும் இவரே. ஆனால் அரசாங்கத்தின் சிபார்சின் பெயரில் நடைபெறும்,

9) பாராளுமன்றத்தை தேவையான காலங்களில் கூட்டுதல் வேண்டும். அவ்வாறு இயலாத பட்சத்தில் வருடத்திற்கு ஒருமுறையாவது கூட்டப்படல் வேண்டும்.

10) அரச உத்தியோகஸ்தர்கள் குற்றம் புரிய நேர்ந்தால் அவர் களையும் சாதாரண பிரஜைகளை விசாரிக்கும் நீதிமன்றத் தில் விசாரிக்கப்படல் வேண்டுமென்பதும் சம்பிரதாயம்.

11) உயர்தர அரச உத்தியோகஸ்தரை நியமிப்பதும் மன்னரே; இது சம்பிரதாயம். இந்த உத்தியோகஸ்தரை நியமிக்கும் படி சிபார்சு செய்வது அரசாங்கம்.

12) மன்னர் பிரதமமந்திரிக்கு ஆலோசனை கூறலாமென்பதும், பிரதமர் மன்னரின் ஆலோசனையை ஏற்று நடத்தல் வேண்டுமென்பதும் ஒரு வழக்கம்.

மேலே கூறப்பட்ட சம்பிரதாயப் பழக்க வழக்கங்கள் பிரித் தானிய அரசியலில் நடைமுறைப்படுத்தப்படுவதால் அரசனது அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டு பாராளுமன்றத்திடமும் மக்களிடமும் அரசியலதிகாரம் இருக்க வகை செய்கிறது; மன்னன் அரசாங்கத்தின் ஆட்சிமுறையில் தலையிட்டு இடைஞ்சல் கொடுக்க இடமில்லை; பாராளுமன்ற ஆட்சிமுறை திறம்பட நடைமுறைப்படுத்தவும் இம்முறைகள் உதவுகின்றன; ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படவும் மக்களை நல்வழிப்படுத்தவும் இச்சம்பிரதாயங்களும் பழக்க வழக்கங்களும் உதவுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 பிரதிநிதித்துவ ஆட்சிமுறை பற்றிய கருத்துக்கள்

ஜனநாயக ஆட்சிமுறை நேரடி ஜனநாயகம், பிரதிநித்துவ ஜனநாயகம் என இருவகையினதாக வழக்கத்திலிருந்து வந்துள்ளது. நேரடி ஜனநாயகம் வளர்ந்து வரும் ஜனத்தொகையால் செயல் படுத்தப்படுவது சாத்தியமாவதில் சிரமங்கள் பல. சுவிற்சலாந்து போன்ற சிறிய நாடுகளில் குடி ஒப்பம் வேண்டல், பிரதிநிதி நீக்கம், மக்களே சட்டம் இயற்றல் ஆகிய கருமங்களில் மக்கள் நேரடியாகப் பங்குபற்றுகிறார்கள். ஜனநாயக ஆட்சி நடைமுறைப்படுத்தப்படும் சகல நாட்டிலும் பிரதிநிதித்துவ ஆட்சிமுறையே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பிரதிநிதித்துவ ஆட்சிமுறை நடைமுறைப்படுத்தப்பட்ட முதல் நாடு பிரித்தானியா. பிரதிநிதித்துவ ஆட்சிமுறை இல்லையென்றால் அங்கு ஜனநாயக ஆட்சி நடைபெறமுடியாது. இப் பிரதிநிதித்துவ ஆட்சிமுறையில் முக்கிய அம்சங்கள் வருமாறு: சர்வசன வாக்குரிமை, அபேட்சகராக தேர்தலில் போட்டியிடும் உரிமை, பேச்சுரிமை, பத்திரிகைச் சுதந்திரம், அரசியல் கட்சிகளில் அங்கத்துவம் வகிக்கும் உரிமை, எழுத்துச் சுதந்திரம், கூட்டங்களில் பங்குபற்றும் உரிமை என்பனவாம்.

இந்த ஆட்சிமுறையால் மக்களது விருப்பங்கள் நிறைவேற்றப் படுவதுடன் தமது கொள்கைகளை வெளிப்படுத்தவும் உதவுகிறது. தேர்தலின்போது மக்கள் சுயமாகச் சிந்தித்துத் தமக்கு நன்மையளிக்கக் கூடியதும், நாட்டை நல்வழியில் இட்டுச் செல்லக் கூடியதுமான ஒரு கட்சியினரைத் தேர்ந்தெடுப்பர். இவ்வாறு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களுக்கெதிராக ஆட்சி செய்யமாட்டார்கள். பெரும்பான்மையினரின் விருப்பமே அவர்களது விருப்பம். எனவே பிரதிநிதித்துவ ஆட்சி மக்களாட்சியாக நடைமுறைப் படுத்தப்படுகிறது. பிரதிநிதித்துவ ஆட்சிமுறையில் அடிக்கடி தேர்தல் நடைபெறும். குறிப்பிட்ட ஆட்சிக் காலத்தின் பின் அரசாங்கம் கலைக்கப்பட்டுத் தேர்தல் நடைபெறும் எனவே, பிரதிநிதிகள் தமது ஆட்சிக் காலத்தில் மக்களுக்கெதிராக ஏதேச்சாதிகாரமாக அரசாங்கத்தை நடாத்தமாட்டார்கள். அவ்வாறு மக்களுக்குப் பாதகமான காரியங்களைப் பிரதிநிதிகள் செய்வார்களேயாயின் அடுத்த தேர்தலின் போது அப்பிரதிநிதிகளையோ அக்கட்சியினரையோ மக்கள் ஆதரியாது முற்றாக ஒதுக்கி விடுவார்கள். எனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதித்துவ ஆட்சி, மக்கள் கையில் இருப்பதால் இவ்வாட்சி சிறந்த முறையில் நடைபெறுகிறது. அத்தோடு பலம்வாய்ந்த ஓரிரு கட்சிகள்தான் பிரதிநிதித்துவ ஆட்சிக்குச் சிறந்தது. பிரதிநிதித்துவ ஆட்சிமுறையில் ஆட்சியாளர் தாம் செய்யும் கருமங்களை ஆராய்ந்தறிந்து அவற்றினால் மக்களிடையே ஏற்படும் பிரதிபலன்களையும் ஆராய்ந்து செயலாற்றுவர். தாம் அடுத்தடுத்து தேர்தலில் வெற்றிபெறவேண்டுமென்பதற்காக முன்னைய அரசாங்கம் செய்ததைவிட சிறந்த காரியங்களை அடுத்த அரசாங்கம் செய்யும்.

பல இன மக்கள் வாழும் நாடுகளுக்கு பிரதிநிதித்துவ ஆட்சி முறையே சிறந்தது. இம்முறையால் சிறுபான்மையினரின் பிரதிநிதிகளும் அரசாங்கத்தில் அங்கம் வகித்து, சிறுபான்மையினரின் நலன்கள் பேணப்பட்டு, அவர்களது வேண்டுகோளுக்கும் அரசாங்கம் செவிசாய்க்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறது.

பிரதிநிதித்துவ ஜனநாயகமுறையில் மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பேச்சுரிமை, எழுத்துரிமை என்பனவற்றைப் பயன்படுத்தி அரசாங்கம் பிழையான வழிகளில் செல்லும்போது பொதுமக்கள் தமது அபிப்பிராயங்களை வெளியிட்டு அரசாங்கத்தைக் கண்டிக்கலாம். அதே வேளை அரசாங்கமும் இக் கண்டனங்கள், ஆதரவுகள்மூலம் மக்களின் அபிப்பிராயத்தை அறிய வாய்ப்பிருக்கிறது.

பிரதிநிதித்துவ ஆட்சி பொறுப்புவாய்ந்த ஆட்சியாகும். ஏனைய ஆட்சிமுறைகளைக் காட்டிலும் பிரதிநிதித்துவ ஆட்சி முறையே சிறந்தது என்பது ஜான் ஸ்ருவட் மில் போன்ற அறிஞர்களின் கருத்தாகும் ஆனாலும் அரசியல் அறிவும், அரசியல் விஷயங்களில் கவனம் செலுத்தும் மக்களும், அரசாங்கத்தின் அதிகாரத்திற்குட்படாத ஒரு நீதி இலாகாவும், பொதுமக்களின் நன்மையில் விருப்பமுள்ள பிரதிநிதிகளும், நன்கு அமைக்கப்பெற்ற அரசியல் கட்சிகளையும் உடைய ஒரு நாட்டிலே பிரதிநிதித்துவ ஆட்சி சிறப்பாக அமையும்.

# 14 ஜனநாயகம் நமக்குப் பெற்றுத்தரும் உரிமைகள்

### அரசியல் உரிமைகள்

ஜனநாயகம் பெற்றுத் தரும் உரிமைகளில் சிறப்பானது சர்வசன வாக்குரிமையும், அவ்வாக்குரிமையைச் சுதந்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகப் பயன்படுத்தி பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையுமாகும். இலங்கை மக்களுக்கு முன்னர் 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமை இருந்தது; இப்பொழுது 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது. பிரித்தானிய மக்களுக்கு சர்வசன வாக்குரிமை இலங்கை மக்களுக்கு கிடைத்த பின்னர் தான் கிடைத்தது. இச் சர்வசன வாக்குரிமையால் பொதுமக்கள் தாம் விரும்பும் அபேட்சகரை தெரிவு செய்யலாம். அதேவேளை தனது வாக்குரிமையை இரகசியமாக வாக்கெடுப்பின் மூலம் அளிக்கலாம். இந்த உரிமையால் பொதுமக்கள் நாட்டிற்குகந்ததும் சிறந்ததுமான அரசாங்கத்தை அமைக்கக்கூடிய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் அதேவேளை, தவறான பாதையில் அரசாங்கத்தை ஏதாயினும் ஒரு கட்சி இட்டுச் சென்றால் அக்கட்சியை அடுத்துவரும் தேர்தலில் பொது மக்கள் ஒதுக்கி விடவும் வழி செய்கிறது. எனவே இம்முறையால் அரசாங்கம் மக்கள் தம்மை மீண்டும் மீண்டும் ஆதரிக்க வேண்டுமென்ற நோக்கத்தை மனதில் கொண்டு தமது ஆட்சியை மக்களின் விருப்பத்திற்கமைய நடாத்துவர். இவ் வாக்குரிமை முறை இருப்பதனால் குறிப்பிட்ட காலத்திற்குக் காலம் தேர்தல் நடைபெற வேண்டும், தேர்தலில் அரசாங்கத்தை தேர்ந்தெடுக்கும் உரிமை மக்கள் கையில் இருப்பதால் மக்களாட்சி சிறந்த முறையில் நடைமுறைப்படுத்த இந்த உரிமை பயன் படுகிறது.

அடுத்ததாக, தேர்தலில் வாக்குரிமை பெற்ற சகலரும் போட்டியிட உரிமையுடையவர்கள். இம் முறையால் குறித்த ஒரு மத்திய வகுப்பினரிடமோ அன்றி அரசியல் பிரமுகர்களிடமோ அரசாங்கம் திரும்பத் திரும்ப கையளிக்கப்படும் நிலைமை ஏற்படாது. பாமரமக்களிடையேயுள்ள பிரச்சனைகளை நன்குணர்ந்த ஒரு பிரஜைதான் அபேட்சகனாக தேர்தலில் போட்டியிடலாம். வெற்றி பெற்று அரசியலிலும் கலந்து கொள்ளலாம் எனவே சர்வசன வாக்குரிமை பெற்ற சகலரும் அரசியலில் பங்குபற்றும் உரிமையுடையவர்களாகிறார்கள்.

ஜனநாயக நாட்டுப்பிரஜை ஒவ்வொருவனும் தான் விரும்பும் அரசியல் கட்சியில் சேர்வதற்கு உரிமையுடையவன்; ஒருவன், தான் அங்கம் வகித்த கட்சியில் தொடர்ந்து அங்கம் வகிக்க விரும்பாதபோது அவன் அக்கட்சியை விட்டு விலகி தான் விரும்பிய ஒரு கட்சியில் அங்கம் வகிக்கலாம். விரும்பினால் அவன் தானே ஒரு கட்சியை அமைத்து அக்கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபடலாம். அக்கட்சியின் வளர்ச்சிக்காக அவன் பிரசாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யலாம்; பகிரங்கக் கூட்டங்களைக் கூட்டி மக்களது ஆதரவைப் பெறலாம். தனது கட்சி அபேட்சகருக்காகக் கூட்டங்களில் பேசுவதற்கும் உரிமையுடையவன்.

அரசியல் கட்சிகளை ஏற்படுத்த உள்ள உரிமைபோன்று சமாதானத்தைப் பேணும் எதிர்க்கட்சியொன்றை ஏற்படுத்துவதற்கும் உரிமையுடையவர்கள். இந்த எதிர்க்கட்சிமூலம் அரசாங்கக் கட்சியின் செயல்களுக்கான காரணங்களையும் விளக்கங்களையும் கோருவதற்கு உரிமையுடையவர்கள். அரசாங்கம் தவறான வழியில் செல்லும் போது இக்கட்சி மூலம் ஆலோசனைகளை வழங்கவும் உரிமையுடையவர்களாகிறார்கள். அரசாங்கக் கட்சியைச் சாராத மக்கள் இந்த எதிர்க்கட்சி மூலம் தமது நலவுரிமைகளைப் பாதுகாக்க வழிவகுக்கிறது.

## பொருளாதார உரிமைகள்

பொதுமக்களுக்கு அரசியல் உரிமைகள் இருப்பதுபோல பொருளாதார உரிமைகளும் அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தாம் விரும்பிய தொழிலைச் செய்வதற்கு முழு உரிமையுடையவர்கள். ஒருவனை அவன் பிறந்த குலத்தொழிலையன்றி வேறு ஒரு தொழிலும் செய்யக்கூடாதென தடைவிதிக்க முடியாது. அவன் விரும்பினால் அவனது குலத்தொழிலைச் செய்யாது விடலாம். கல்வித் தகைமை பெற்ற அனைவரும் தனது தகைமைக்கேற்ற ஒரு பதவியை வகிக்க உரிமையுடையவர்; அவன் அரசாங்கத்தை தனது தகுதிக்கேற்ற பதவியைத் தருமாறுகோரவும் பதவி வகிக்கவும் உரிமையுடையவன். அரசாங்க உத்தியோகஸ்தன் ஒருவன் விரும்பினால் தனது பதவியை தொடர்ந்து வகிக்கலாம். விரும்பாதபோது அவன் அப்பதவியிலிருந்து நீங்குவதற்குரிமையுடையவன். அரசாங்க உத்தியோகஸ்தன் அரசாங்கத்திலிருந்து விலகி தனியாகத் தொழில்புரிவதற்கு உரிமையுடையவன். உதாரணமாக டாக்டர் ஒருவர் அரசாங்கத்தில் பதவி வகிக்காது தனிப்பட்ட முறையில் தொழில் செய்வதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

ஒருவன் தன்னால் இயன்றளவு சொத்துக்களைச் சேகரிப்பதற்கு உரிமையுடையவன். அதேவேளை அவற்றைத் தனக்கே உரிமையாகவும் வைத்திருக்கலாம். ஒருவன் குறிப்பிட்டளவிற்கு மேல் சொத்துக்களைச் சேகரிக்கக் கூடாதென்று அரசாங்கம் தடை விதிக்கமுடியாது. ஒருவன் விரும்பினால் தனது சொத்துக்களை விரும்பியவருக்குக் கொடுக்கவும் உரிமையுடையவன். அவன் தான் சேர்த்த சொத்துக்கள் முழுவதையும் விற்கவோ அன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை விற்ற பணத்தைச் செலவு செய்வதற்கும் உரிமையுடையவன். ஒருவன் தனது சொத்தை பணமாகவோ, காணி, கட்டிடம், தோட்டம் என்பன போன்றவையாகவோ உருமாற்றவும் உரிமையுடையவன்.

ஒருவன் தான் விரும்பிய சங்கத்திலோ தாபனத்திலோ அங்கத்துவம் வகிக்க உரிமையுடையவன். குறிப்பிட்டவர்கள் மட்டும் குறிப்பிட்ட ஒரு சங்கத்தில் அங்கம் வகிக்கலாமென்ற கட்டுப்பாடு கிடையாது. விரும்பினுல் ஒருவர் ஒரு சங்கத்தையோ அன்றி ஸ்தாபனத்தையோ நிறுவுவதற்கும் உரிமையுடையவர். கைத்தொழில் ஸ்தாபனம், தொழிற்சாலை என்பனவற்றைக்கூட ஒருவன் தான் விரும்பியபடி நிறுவ உரிமையுடையவன். அதே வேளை ஒரு சங்கத்தில் அல்லது ஸ்தாபனத்தில் அங்கம் வகிப்பவன் தனக்கு விருப்பமில்லாதபோது அத் தாபனத்திலோ அன்றி சங்கத்தினின்றும் விலகிக்கொள்ளவும் உரிமையுடையவன். அதேபோல ஒரு சங்கத்தையோ, ஸ்தாபனத்தையோ நடாத்துபவன் தொடர்ந்து நடத்த முடியாத பட்சத்தில் அத் தாபனத்தை நிறுத்திவிடவும் உரிமையுடையவன்.

# 15 ஜனநாயகத்தில் எமக்குள்ள பொறுப்பு

ஐரோப்பிய மக்கள் தாம் முழு இறைமையுடன், அரசியல் வாழ்வு வாழவேண்டும் என்ற நோக்கோடு, 18-ம் நூற்ருண்டின் இறுதியில் ஜனநாயக ஆட்சிமுறையை உருவாக்கினர். 19-ம் நூற்ருண்டில் ஐரோப்பிய நாடுகள் முழுவதும் இவ்வாட்சி முறை பரவியது; இன்று உலகம் முழுவதும் பரவியுள்ளது. தனி நாடுகளுக்கேற்ற அரசியல் முறை ஜனநாயக ஆட்சியாகும்; ஒரு சமுதாயத்திலுள்ள பெரும்பான்மையினர் அச் சமுதாயத்தின் பழக்கவழக்கங்களையும், ஒழுங்குகளையும் மதித்து, சிறுபான்மையோரைக் கொடுமைப் படுத்தாது, பொதுநல நோக்கோடு ஆட்சி செய்தால் அது ஜனநாயக ஆட்சி. அரிஸ்டோட்டில் ''மக்களாட்சி யென்ருல் வரம்பற் பொது ஆட்சியாகும்'' என்ருர்.

பண்டைய காலந்தொட்டு இலங்கையில் முடியாட்சிமுறை நடைமுறையிலிருந்தது. ஐரோப்பியரது வருகையினுல்தான் எமது நாட்டின் ஆட்சிமுறையில் மாற்றம் ஏற்பட்டது. 1505ஆம் ஆண்டு தொடக்கம் 1948ஆம் ஆண்டுவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் அரசுரிமை அந்நியர் கையில் இருந்துள்ளது. ஆங்கிலேயரது ஆட்சியின்போது இலங்கையில் ஆங்கிலேயரால் புகுத்தப்பட்ட ஆங்கிலக் கல்வியால் மத்தியதர வகுப்பினர் தோன்றி, அவர்கள் அரசாங்கத்துடன் செய்த சாத்வீகப் போராட்டத்தினுல் தான் இன்றைய ஜனநாயக ஆட்சிமுறை எமக்குக் கிடைத்தது இலங்கையில் முன்பு வாழ்ந்த தமிழ், சிங்கள அரசியல் அறிஞர்கள் பலர் ஆங்கிலேயரிடமிருந்து பெற்ற அரசியல், சமூக, பொருளாதார உரிமைகளே இன்று நாம் கூறும் ஜனநாயக உரிமைகள் எனலாம். ஆங்கிலேயர் எமது நாட்டை ஆட்சி செய்தமையால் தான் முது பெரும் ஜனநாயக நாடான பிரித்தானியாவைப் பின்பற்றி ஆட்சிமுறை எமது நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டது. உலக நாடுகளின் வரிசையில் எமது அரசியல் அமைப்பும் போற்றத்தகு முறையில் அமையக் காரணம் ஆங்கிலேயர் வகுத்த ஆட்சி முறையேயாம். ஆங்கிலேய ஆட்சியால் சில தீமைகள் இலங்கைக்கு ஏற்படுத்தப் பட்ட அதேவேளை அரசியல், நீதி, நிர்வாகம் என்பனவற்றின் அமைப்புமுறை போற்றத் தகுந்தது. பல இனமக்கள் வாழும் இலங்கைக்கு ஏற்ற ஓர் அரசியல் அமைப்பை உருவாக்கிய துடன் சிறுபான்மையினரின் நலவுரிமைகள் பேணப்படுவதற் காகவும் சில சட்டங்களையும், உரிமைகளையும் அரசியலமைப்பில் ஏற்படுத்தியிருந்தனர். பிரித்தானிய மக்கள் சர்வசன வாக்குரி மையைப் பெறுவதற்கு முன்னரே இலங்கை மக்களுக்கு சர்வசன வாக்குரிமையை ஆங்கிலேயர் அளித்தார்கள். இவ்வித உரிமை களை நாம் அனுபவிக்கக் காரணமாக அமைந்தவர்கள் காலத் திற்குக்காலம் தோன்றி மறைந்த அரசியல் அறிஞர்களாகும். எமக்கு அளிக்கப்பட்ட உரிமைகள் சில கால கட்டங்களில் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன. எமது ஜனநாயக உரிமை களை மேலும் மேலும் பேணிப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு பிரஜையும் அரசியல் கருமங்களில் அக்கறை கொண்டு தனது உரிமைகளைப் பாதுகாத்தல் அவசியம்.

எனவே நாம் எமது நாட்டின் ஜனநாயகம் பற்றி அறிதல் அவசியம். 1833ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சட்டசபையின் பிரதிநிதிகளாக ஆங்கிலம் கற்ற இலங்கையரும், தோட்டச் சொந்தக் காரரான ஆங்கிலேயரும் அங்கம் வகித்தனர். பின்னர் 1910ஆம் ஆண்டில் ஆங்கிலக் கல்வியையும், செல்வத் தையும் அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட வாக்குரிமை மூலம் இலங்கையர் சிலர் அங்கத்துவம் வகித்தனர். 1931ஆம் ஆண்டு டொனமூர் அரசியற் சீர்திருத்தச் சட்டப்படி சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது; 21 வயதிற்கு மேற்பட்ட அனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக்கும் வழங்கப்பட்டது. ஆசியா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் காணப்பட்ட பிரித்தானிய குடியேற்ற நாடுகளுள், இலங்கைக்கே முதலில் சர்வசன வாக்குரிமை அளிக்கப்பட்டது. இந்த உரிமையினுல் தான் பெருமளவு இலங்கையர் அரசியலில் பங்கு பெற்றனர். பொதுமக்களும் அரசியலில் தமது உரிமைகள் மூலம் பங்கு பற்றியதால் 1948ஆம் ஆண்டு டொமினியன் அந்தஸ்து வேண்டுமெனப் போராடிப் பெற்றனர். பின்னர் 1972ஆம் ஆண்டு குடியரசு நாடாக இலங்கை பிரகடனப் படுத்தப்பட்டது. குறுகிய காலத்தில் சிறந்த அரசியல் வளர்ச்சி பெறக் காரணம் மக்களுக்கு அளிக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளேயாகும்.

ஜனநாயக நாடான இலங்கையில் எமக்குப் பல அரசியல், பொருளாதார, குடியுரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன. சில காலங்களில் ஆட்சியாளரின் சர்வாதிகாரப் போக்கினுல் உரிமைகளை, எம்மிடமிருந்து பறிக்கவோ, இந்த உரிமைகள் மறுக்கப் படவோ கூடிய நிலைமைகள் தோன்றலாம். அப்படியான காலங்களில் நாம் விழிப்புடன் செயலாற்ற வேண்டும். இவ்வாறுன சக்திகளை எதிர்க்கச் சிறந்த ஆயுதம் வாக்குரிமையாகும். இவ் வாக்குரிமை மூலம் எவ்வாறு நாம் எமது உரிமைகளைப் பாது காக்க முடியுமென ஆராய்வோம்.

வாக்குரிமைமூலம் பொதுத் தேர்தலின்போது தேசிய அரசுப் பேரவைக்கு எமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாம். உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது சிறந்த சேவை செய்யக் கூடிய உள்ளூராட்சி மன்றங்களை அமைக்கலாம். இடைத் தேர்தல் நடைபெற்றுல் முன் சிறந்த அரசியலை நிறுவுவதற்குத் நமது ஒத்துழைப்பை அளிக்கவும் பயன்படுத்தலாம். இவ்வாறு தாம் அரசாங்கத்தை தேர்ந்தெடுத்ததும் தமது பொறுப்பு நீங்கி விட்டதென மக்கள் அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொள்ளக் கூடாது! இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? நமது சொந்த அலுவல்களைக் கவனித்தால் மட்டும் போதும் என்ற மனுேநிலையில் நாம் இருத்தலாகாது. நாம் தெரிவு செய்த பிரதிநிதிகள் நிர்வாகம் சம்பந்தமாகச் செய்து கொள்ளும் தீர்மானங்கள் யாவை? அவை எத்தன்மையன என்பது பற்றி அறிதல் அவசியம்.

பொதுமக்களுக்கு திருப்தியளிக்காத வகையில் அரசாங்கம், கருமங்கள் செய்ய முற்பட்டால் உடனே நாம் எமக்குள்ள அரசியல் உரிமைகளைப் பிரயோகித்தல் வேண்டும். இப்படியான சந்தர்ப்பங்களில் நாம் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதெனில் நமது பிரதிநிதிகளை கேள்விகள் கேட்கும்படியும், கண்டனஞ் செய்யும்படியும், நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை நிறைவேற்றும் படியும் தூண்டலாம். பத்திரிகைகள் மூலம் கண்டனஞ் செய்யலாம் அரசுக் கெதிராக கூட்டங்கள், ஊர் வலங்கள் ஆகியவற்றை நடாத்தலாம். தேசிய அரசுப் பேரவைக்கு மனுச் செய்யலாம். மக்கள் தமது கருத்துக்களை வெளியிடுவதற்குக் கூட்டம் நடாத்துதலும், ஊர்வலம் நடாத்துதலும் ஜனநாயக உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு செயலாற்ற இரு வழிகளாம். தேசிய அரசுப் பேரவை செய்திருக்கும் தீர்மானத்தை மாற்றவோ, குறிப்பிட்ட ஏதாயினும் ஓர் விஷயத்தை செயற்படுத்தும் படியோ அரசாங்கத்தை இம்முறை மூலம் வற்புறுத்தலாம். இம்முறை தேர்தல் காலங்களிலும், மேதின ஊர்வலத்திலும் செயற்படுவதைக் காணலாம். இம்முறையை செயற்படுத்தும்போது நாட்டின் சட்டதிட்டங்களுக்கமைய நடாத்தப்படுதல் வேண்டும். இம்முறை மூலம் மக்கள் அரசியலில் மறைமுகமாகப் பங்குபற்றுகிறார்கள் எனலாம்.

பல்வேறு துறைகளுக்காக ஒதுக்கப்படும் நிதி தகுந்த முறையில் செலவழிக்கப்படுகிறதா, எனவும் பொதுமக்கள் கண்காணிக்க வேண்டும். நமது தேசிய அரசுப் பேரவையும், உள்ளூராட்சி மன்றங்களும் பெருந்தொகையான பணத்தை பல்வேறு திட்டங்களைச் செயலாக்க ஒதுக்குகிறார்கள். இவ்வாறு ஒதுக்கப்படும் பணத்திலிருந்து பொதுமக்கள் உரிய பயன்களைப் பெறுகிறார்களா? பெறவில்லையா? என்பது பற்றி அறியும் உரிமை வாக்காளருக்கு இருக்க வேண்டுமென்பதற்காக 1971ஆம் ஆண்டு மக்கள் குழுச் சட்டம் நிறைவேற்றப் பட்டது. இச் சட்டத்தின் மூலம் அரசாங்க நிறுவனங்களின் கருமங்களைப் பரிசீலனை செய்வதற்கும், சிற்சில சட்டங்களின் பிரகாரம் வழக்குகள் தொடர்வதற்கும் இக் குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக பயிர்ச்செய்கைக்குழு, மக்கள்குழு, இணக்க சபை என்பன நாட்டில் செயல்படுவதை நாம் காணலாம். உதாரணமாக, இப்பயிர்ச் செய்கைக்குழு விவசாயம் சம்பந்தமான திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படும் பிரச்சனைகளைக் கவனித்து மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க உதவுகிறது. இதனை நேரடி ஜனநாயக உரிமைகளிலொன்றெனக் கூறலாம்.

நாம் வாக்காளராக இருந்து பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதுடன் மட்டும் தான் எமது ஜனநாயகப் பொறுப்பல்ல, நாம் ஒவ்வொருவரும் அபேட்சகராகப் போட்டியிட்டுப் பாராளுமன்றம் செல்லலாம். அரசியற் கட்சியின் அங்கத்தவராக அங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகித்து கொள்கைகளையும், திட்டங்களையும் தீர்மானிக்கவோ, ஆலோசனை வழங்கவோ உரிமையுண்டு. எனவே இவ்வுரிமையை நாம் பயன்படுத்தவும் வேண்டும். எமது தேசிய அரசுப் பேரவையில் இருந்து அரசாங்கத்தைத் திறம்பட நடாத்தக் கூடியவர்களைத் தெரிவு செய்தல் வேண்டும். சிறந்த ஒரு அரசியற் கொள்கையுடையவர்களிடம் அரசை ஒப்படைக்க வேண்டும். அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் பெற்று நாட்டு மக்களின் நலனுக்குச் சேவை செய்யக்கூடிய ஆற்றல் பெற்ற ஒவ்வொரு பிரஜையும் அபேட்சகராகப் போட்டியிட்டு அரசாங்கத்தில் அங்கம் வகித்து அவற்றைப் பலம்வாய்ந்த கட்சியாக உருவாக்கி அவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபடல் வேண்டும். அதேவேளை பல கட்சிகள் தோன்றி நாட்டின் அரசியல் ஒற்றுமையை சீர் குலைக்காதவாறு கண்காணித்தலும் எமது பொறுப்பாகும். எனவே சிறந்த பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்தல், சிறந்த கொள்கைகளையுடைய கட்சிகளை உருவாக்குதல் என்பன எமது பொறுப்பாகும். அதே வேளை நடைமுறையிலுள்ள அரசாங்கம் பிழை செய்ய நேரிட்டால் அதைக் கலைத்து நாட்டிற்கு ஏற்ற அரசாங்கத்தை பதவியில் அமர்த்துவதும் எமது பொறுப்பாகும்.

அரசாங்க நிர்வாக சேவை, உள்ளூராட்சி சேவை, கூட்டுத்தாபன சேவை என்பன போன்றவற்றில் தகைமை வாய்ந்த எந்தப் பிரஜைக்கும் உரிமையுண்டு. இனம், சமயம், சாதி வேறுபாடு இன்றி தகைமையுடையவர்கள் பதவிபெற நியமனம் பெறல்வேண்டும். எனவே இவ் வுரிமையை தகுதிவாய்ந்தவர்கள் பயன்படுத்தி நியமனம் பெற்று சிறந்த நிர்வாகத்தை நடாத்தல் வேண்டும்; ஏனெனில், நாட்டில் ஜனநாயகம் நன்கு செயல்பட சிறந்த நிர்வாகம் இருத்தல் வேண்டும். இவ்வாறு நியமனம் பெறும் உத்தியோகஸ்தர்கள் கடமையுணர்வோடு நாட்டின் நலனிற்காகவும், பொதுமக்கள் நலனிற்காகவும் கருமமாற்ற வேண்டும். அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படும் திட்டங்களை இவர்களே விரைவாகவும், சிறப்பாகவும் செய்துமுடிக்க வேண்டியவர்கள். இவர்கள் கருமங்களை உடனுக்குடன் செயல்படுத்தாது பின்போடுவதாலும், மக்கள் நலனுக்காக சேவை செய்யாது சர்வாதிகாரமாகத் தமது எண்ணப்படி நடந்தால் மக்களுக்கு சேவை செய்வதில் பாரபட்சம் காட்டினால் நாட்டின் ஜனநாயக ஆட்சிக்கு மாறாக அமைந்துவிடும். எனவே நிர்வாக உத்தியோகஸ்தர்களான பொதுமக்கள் நாட்டைச் சிறந்த முறையில் நிர்வகிக்கும் அதே வேளை நிர்வகிக்கப்படும் பொதுமக்கள் ஒவ்வொருவரும் நிர்வாக உத்தியோகஸ்தருக்குத் தமது ஒத்

துழைப்பை நல்கி நாட்டை சிறந்த முறையில் நிர்வகிக்க உதவு வதும் நமது பொறுப்பாகும்.

அடுத்ததாக ஜனநாயக ஆட்சி சிறந்த முறையில் செயல் பட நாட்டில் அமைதியும், சட்டமும், ஒழுங்கும் பேணப்படல் வேண்டும். அவ்வாறு சட்டமும், ஒழுங்கும், அமைதியும் நாட்டில் நன்கு நடைபெற மக்கள் சிறந்த முறையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளல் வேண்டும். தமக்கு அளிக்கப்பட்டுள்ள சட்ட விதிகளுக்கமைய நடத்தல் வேண்டும். சட்டத்தை மீறி மக்கள் நடந்தால் நாட்டில் அஜாரகம் தலைதூக்கும். இந் நிலை நாட்டில் உருவானுல் ஆட்சியாளர் நாட்டில் அமைதியை ஏற் படுத்த சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிடும். இவ்வாறு ஏற்படுத்தப்படும் கடும் நடவடிக்கைகளில் சர்வாதி காரம் தலை தூக்கவும் ஏதுவாகலாம். எனவே ஒவ்வொரு பிரஜையும் நாட்டின் ஒழுங்கிற்கும், சட்டத்திற்கும், அமைதிக் கும் பொறுப்பானவன். இப் பொறுப்பை உணர்ந்து நடந்தால் தான் ஜனநாயக ஆட்சி நன்கு செயல்பட முடியும்.

ஜனநாயகத்தின் மாபெரும் எதிரி சர்வாதிகாரமாகும். எனவே இச் சர்வாதிகாரம் பல துறைகள் மூலம் தலை தூக்க லாம். மக்கள் எந் நேரமும் விழிப்புடன் இருந்து அரசாங்கத் தைக் கண்காணித்தால் தான் சர்வாதிகாரம் தலைதூக்காதிருக்க முடியும். அதே வேளை ஒவ்வொரு பொது மகனும் கல்வியறிவு உடையவனுகவும், அரசியலறிவு பெற்றவனுகவும் இருத்தல் வேண்டும் ஜனநாயக ஆட்சி பற்றி சிறந்த அறிவு பெற்றிருத் தல் அவசியம். இத் தகுதிகளையுடையவனுக இருப்பதற்குத் தினமும் அரசியல் விஷயங்களை அவதானித்து அதில் கலந்து கொள்ளல் வேண்டும். சர்வாதிகாரப் போக்கு ஏற்பட்டால் அதை ஒழித்து சிறந்த ஜனநாயகம் உருவாகப் பாடுபடுதலும்; தமது ஒத்துழைப்பை நல்குவதும் எமது தலையாய பொறுப் புக்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி: இரண்டு

# போர்கள்

# 1 மக்கள் யுத்தங்களில் ஈடுபடுவதன் காரணம்

உலகம் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை மக்கள் யுத்தங்களில் ஈடுபட்டுவருகிறார்கள். இன்று யுத்தங்கள் தவிர்க்கப்படவேண்டியவை என்று மக்கள் மனதில் தோன்றியதால் பல போர்கள் தவிர்க்கப்படுகின்றன. பழைய புராதன தமிழ் இலக்கியங்களில் போர், வீரம் என்பனவற்றிற்கே முதலிடம் கொடுத்துப் பாடப்பட்டுள்ளன. ஆதியில் ஒரு குடும்பமாக இருந்த மக்கள் காலம் செல்லச்செல்ல பல குடும்பங்களாகப் பெருகினர், இந்நிலையில் வல்லமை பொருந்திய ஒருவன் தலைமைப் பதவியை ஏற்ருன். அப்பதவிக்குப் போட்டியிட்டவர்கள் தமக்குத் துணையாக மக்களைத்திரட்டிப் போரிட்டனர். இவ்வாறு குடும்பங்களிடையே தோன்றியபோர் நாளடைவில் வளர்ச்சியடைந்து முடியாட்சி தோன்றிய காலத்தில் அயல் நாடுகளுடனும் நடைபெற்றது. மக்களைப் பெருமளவில் போர்த் தொழிலில் ஈடுபடுத்தியதுடன் கட்டாயமாகப் போரில் ஈடுபடவும் செய்தார்கள். முடியாட்சி உலக நாடுகளில் நடந்த காலகட்டத்தில் அரசனின் கீர்த்தி புகழ் என்பன அண்டை நாடுகளைக் கைப்பற்றும் திறமையில் கணிக்கப்பட்டது. அரசர் இடையருது போரில் ஈடுபட்டமையால் நாட்டை நிர்வகிக்கத் தேவைப்பட்ட பொருட்களை அந்நிய நாடுகளைக் கைப்பற்றிக் கொள்ளையடிப்பதன் மூலம் பெற்றனர். எனவே காலத்திற்குக்காலம் தலைமைப்பதவிக்காக உள்நாட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்களும், ஆதிக்க வெறியினால் அந்நிய தேசங்களுடனும் போர்கள் நடைபெற்றுள்ளன.

தலைமைப் பதவிக்காக ஆதியில் தோன்றிய போர்கள் பின்னர் தேசங்களைப் பிடிக்கும் போர்களாகவும், எல்லைகளைக் காக்கும் போர்களாகவும், மதப் போர்களாகவும், வம்சப் போர்களாகவும், ஏகாதிபத்தியப் போர்களாகவும், காலத்திற்குக் காலம், நாட்டுக்கு நாடு வேறுபட்டு நடைபெற்றுள்ளன. புராதன காலத்தில் மக்கள் கட்டாயமாகப் போரில் ஈடுபடல் வேண்டுமென்ற கட்டுப்பாடு இருந்தது. அரசன் மட்டுமல்லாது பிரபுக்களும், செல்வந்தர்களும் படைபலம் உள்ளவர்களாக இருந்தார்கள். ஒருவன் சமூகத்தில் மதிக்கத் தக்கவனாக இருக்க வேண்டுமாயின் அவன் அடக்குமுறைகளைக் கையாண்டே தனது மதிப்பைப் பெற்றான்.

நாடுகளைக் கைப்பற்றவும், செல்வங்களைச் சூறையாடவும் நடைபெற்ற போர்களுடன் மதப்போர்களும் நடைபெற்றன. ஒரு மதம் தனது மத வளர்ச்சிக்கான பிற மதமக்களைக் கொன்றுகுவித்து தனது மதத்தை மக்கள் மீது திணித்த வரலாறுகளை நாம் காணக்கூடியதாக இருக்கிறது இதே போல ஐரோப்பிய நாடுகளிடையே வம்சப் பிரிவினைகள் இருந்தன. இவ் வம்சங்கள் அரசாட்சியைக் கைப்பற்றுவதற்காகப் பல போர்களை நடாத்தியுள்ளன. உலக நாடுகளில் வலிமைமிக்க நாடு ஏனைய நாடுகளைக் கைப்பற்றி தனது ஆதிக்கத்தை நிலைநாட்டப் பல போர்கள் செய்துள்ளது. உதாரணமாக, பிரித்தானியா வட அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்களில் தனது ஆதிக்கத்தைச் செலுத்தப் பலபோர்களை நடாத்தியுள்ளது.

எமது இலங்கையின் வரலாற்றில் உள்நாட்டுப் போர்கள் மட்டுமல்லாது அந்நிய நாட்டவர்களும் இங்கு படையெடுத்துப் போர் நடாத்தி நமது நாட்டை தம் ஆதிக்கத்தில் வைத்திருந்ததை அறியக் கூடியதாக உள்ளது. அண்டை நாடான இந்தியாவின் சோழ அரசர்கள், எமது இலங்கையைக் கைப்பற்றி அரசாட்சி செலுத்தியுள்ளார்கள். அதேபோல் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகிய ஐரோப்பியர்களும் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செலுத்தியுள்ளார்கள். எனவே அண்டை நாடுகளை மட்டுமன்றி கடல் கடந்து பல மைல்களுக்கு அப்பாலுள்ள நாடுகளையும் கைப்பற்றியுள்ளனர். இப்போர்களின் நோக்கம் ஏகாதிபத்தியத்தை விஸ்தரித்தல், இந்நாட்டின் செல்வங்களை அபகரித்தல் அவர்களது மதத்தைப் பரப்புதல் என்பனவாம்.

எனவே அக்கால கட்டத்தில் போர்கள் தவிர்க்கமுடியாத ஒன்ருக இருந்திருக்கிறது. போர்களைத் தவிர்க்கும்படி அறிஞர்களும், உலக மதங்களும் கூறினுலும் கூட அவை கடைப்பிடிக்க முடியாத நிலையில் நாடுகளும் மக்களது மனேநிலையும் இருந்திருக்கின்றன. போரில் ஈடுபடுவது மக்களது வீரத்திற்குச் சிறந்தது எனவும்; போரில் ஈடுபடுவது பெருமை தருவது எனவும் அக்கால மக்கள் தவருகக் கருதினுர்கள்;

நாடுகளிடையே நடந்த யுத்தங்களினுல் ஏற்பட்ட பொருள் அழிவுகளையும் உயிர்ச் சேதங்களையும் மக்கள் உணரத் தலைப்பட்டார்கள்; கொலைகள், பாதகச் செயல் என்பதை மதங்கள், மக்களிடையே பிரசாரம் செய்தமையாலும் அறிவு வளர்ச்சியினுலும் போர்களைத் தவிர்க்க முற்பட்டார்கள். மக்கள் கல்வியறிவு பெறத் தொடங்கியதும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்பன வளர்ச்சியடையத் தொடங்கியதும், மக்களும், நாடும் முன்னேற்றம் அடையவேண்டுமாயின் போர்களை நிறுத்த வேண்டுமென்ற மனே நிலைக்கு மாறினுர்கள். விஞ்ஞான வளர்ச்சியால் போரில் நவீன முறைகள் புகுத்தப்பட்டதால் நாடுகளும், மக்களும் பெரும் அழிவை எதிர்நோக்கினர். இவற்றை நாகரீக வளர்ச்சியடைந்த மக்கள் வெறுத்தனர். ஒரு நாட்டில் நடக்கும் யுத்தத்தால் அண்டை நாடுகள் பாதிக்கப்படுவதுடன் அண்டை நாடுகளிலும் பெரும் அழிவுகள் தோன்றின. எனவே மதத் தலைவர்களும், அரசியல் அறிஞர்களும் காலத்திற்குக் காலம் போர் நடப்பதைத் தடுத்துவந்தார்கள். மக்களை விஞ்ஞானம், தொழில் நுட்பம், சமயம் என்பனவற்றில் ஈடுபடுத்தி மனித சக்தியை போருக்குப் பயன்படுத்தாது நாட்டுக்கும் மக்களுக்கும் பயன்தரு முறையில் பயன்படுத்தினர்.

புயல், பூகம்பம், வெள்ளம் முதலியன இயற்கையாக ஏற்படும் கேடுகள். ஆனுல் யுத்தமோ மனிதனே மனிதனுக்கு ஏற்படுத்தும் ஒரு பெருங் கேடாகும். நாடு பிடிக்கும் ஆசை, வாணிகச் சந்தை தேடும் முயற்சி போன்ற பல காரணங்களால் யுத்தங்கள் உண்டாகின்றன. இவற்றைத் தடுக்க ஒரே வழி உலக நாடுகளிடையே சமாதானத்தை ஏற்படுத்துவது என்பதை உலக நாடுகள் ஒப்புக்கொண்டன. முதலாம் உலகமகா யுத்தம், இரண்டாம் உலகமகா யுத்தம் என்பனவற்ருல் உலக நாடுகளும், மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டதனுல் தான் மூன்ரும் உலக மகாயுத்தம் ஏற்படாது தவிர்க்கப்படுகிறது. முதலாம் உலக மகாயுத்தத்தை நிறுத்தும்போது, மீண்டும் போர் மூளாதிருப்பதற்காக உவில்ஸனினுல் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இந்நடவடிக்கையால் சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனிவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் சர்வதேச சங்கம் அமைக்கப்பட்டது. 1922ஆம் ஆண்டு சர்வதேச நீதிச்சபை, சர்வதேச தொழிலாளர் சங்கம் என்பன நிறுவப்பட்டன. இச் சங்கங்கள், இரண்டாம் உலகப்போர் 1939 ஆம் ஆண்டில் ஆரம்பித்ததும், ஒழிந்து போயின. ஆனால் இச் சங்கங்கள் நிலைத்திருந்த காலத்தில் பல நாடுகளிடையே ஏற்பட்ட கலகங்களைச் சமாதானமாகத் தீர்த்தும், தீங்கு விளைவிக்கும் மருந்துவகை வியாபாரத்தைத் தடுக்கும் வழிகளைக் கையாண்டும் பல நன்மைகளைச் செய்தன.

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்ததும் சர்வதேச அமைப்பினைக் கொண்ட ஒரு நிறுவனம் நிறுவப்பட்டது. இது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் எனப்பட்டது. சமாதானத்தை மட்டுமல்லாது வறுமையை உலகிலிருந்து அகற்றுவதும் இதன் நோக்கமாகும். இவ் வமைப்பு முறையால் உலக நாடுகளிடையே முன்பு இருந்ததைவிட தற்போது பகைமை குறைந்திருக்கிறது எனலாம். எனவே நாடுகளிடையே தோன்றும் போர்களைத் தடுத்து நிறுத்த சகல நாடுகளும் மக்களும் உதவவேண்டும்.

## 2 பல்வேறு வகையான யுத்தங்கள்

உலகம் தோன்றிய காலம் தொட்டு உலகில் பல காரணங்களுக்காக யுத்தங்கள் நடைபெற்றுள்ளன, எந்த ஒரு காலகட்டத்திலும் உலகில் யுத்தம் நடைபெறவில்லையென்று கூறமுடியாது. இடையருது உலகின் பல பகுதிகளில் ஏதோ ஒரு காரணத்திற்காக யுத்தம் நடைபெறுகிறது. இந்த யுத்தங்கள் நடைபெறுவதற்கு நாடுகளைக் கைப்பற்றும் ஆசை, ஏகாதிபத்திய விஸ்தரிப்பு என்பவற்றுடன் வம்சங்களுக்கிடையேயான போட்டி வர்த்தகப்போட்டி, உள்நாட்டுப் பிரச்சினைகள், மதம், சித்தாந்தக் கருத்து வேறுபாடுகள், சுதந்திர உணர்வு என்பன காரணங்களாக அமைந்திருப்பதை நாடுகளின் சரித்திர வாயிலாக நாம் அறியக்கூடியதாகவுள்ளது.

### அரசவம்சப் போர்கள்

ஐரோப்பிய நாடுகளில் ஆஸ்திரியாவை "ஹப்ஸ்பேர்க்" வம்சம் 19 ஆம் நூற்றூண்டுவரை அரசாண்டது. 1273 ஆம் ஆண்டு ஹாப்ஸ்பேர்க் வம்சத்தை ரூடால்பு நிறுவினன். இவனை ரோமானியர்களுடைய மன்னனுகத் தேர்ந்தெடுத்தார்கள். இம் மன்னன் பொஹிமியர்களுடைய ஆதிக்கத்திலிருந்து ஆஸ்திரியாவை விடுவித்தான். 1278 ஆம் ஆண்டு ருடால்பு ஆஸ்திரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டை ஆட்சிசெய்யத் தொடங்கிய காலம் தொடக்கம் 1437 ஆம் ஆண்டு 5 ஆம் ஆல்பர்ட் புனித ரோமானியப் பேரரசனை வரையில் ஹாப்ஸ்பேர்க் வம்சம் மத்திய ஐரோப்பாவில் பெரும் ஆதிக்கத்தை நிறுவியிருந்தது. இவர்கள் 1918 ஆம் ஆண்டு வரையும் தங்கள் வம்சத்தின் சாம்ராச்சிய அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொண்டே வந்தார்கள். 1648 ஆம் ஆண்டில் வெஸ்ட் பேலியா உடன்படிக்கைப்படி, ஹப்ஸ்பேர்க் வம்சத்தினரின் ஆதிக்கம் ஆஸ்திரியா, ஹங்கேரி. பொஹீமியா முதலிய இடங்களில் செலுத்தப்பட்ட போதும் ஜெர்மனியும் பேரரசின் ஏனைய பகுதிகளும் இவர்களது ஆதிக்கத்திலிருந்து விடுபட்டன.

ஹப்ஸ்பேர்க் பேரரசு பல இனமும் பலமொழி பேசும் மக்களையும் கொண்ட பெரிய நிலப்பரப்பாகும். மேரியா திரேசாவின் ஆட்சிக்காலத்தில் (1740—45) ஆஸ்திரிய வாரிசுரிமைப்போரும் ஏழாண்டுப்போரும் (1756—63) நடைபெற்றன. இக் காலத்தில் பிரான்ஷிய மன்னனை மகா பிரடரிக் சைலீஸ்யாவை ஆஸ்திரிய ஆதிக்கத்திலிருந்து பறித்துக் கொண்டான். நெப்போலியன் ஹப்ஸ்பேர்க்குகளுடைய இராணுவ பலத்தை ஒடுக்கியதுடன் அவர்களுடைய பேரரசின் பரப்பையும் மிகவும் குறைத்தான். 1804 ல் அவன் புனித பேரரசாகிய சாம்ராச்சியத்தை ஒழித்து புதியதோர் ஆஸ்திரிய வம்சத்தை நிறுவினான். புதிய ஆஸ்திரிய இராச்சியம் உருவாகிற்று. வியன்னா மகாநாட்டின் முடிவாக ஆஸ்திரியா ஒரு பெரிய இராச்சியமாயிற்று. ஹப்ஸ்பேர்க் பேரரசு நிலைகுலையத் தொடங்கிற்று முதலாம் உலகமகா யுத்தத்தில் ஹப்ஸ்பேர்க் வம்சம், படைப்பலம், பேரரசு எல்லாம் மறைந்தன. 1938-ஆம் ஆண்டு ஆஸ்திரியா ஹிட்லரினால் ஜேர்மனியின் ஒரு பகுதியாக ஆக்கிரமிக்கப்பட்டது. இதுவரை ஆஸ்திரியாவின் அரசவம்சப் போர்கள் பற்றி அறிந்து கொண்டீர்கள். இனி நாம் இங்கிலாந்தின் அரசவம்சப் போர்கள் பற்றி அறிந்து கொள்வோம்.

ரோமானியச் சக்கரவர்த்தி கிளாடியஸ் (*Claudius*). காலத்தில் இங்கிலாந்து ரோமானிய சாம்ராச்சியத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. கி. பி. 410 வரை பிரித்தானிய ரோமானியப் பேரரசின் கீழ் இருந்தது. கி. பி. 410 ஆம் ஆண்டு ரோமானியர் இங்கிலாந்தை விட்டு வெளியேறியவுடன் இங்கிலாந்தின் மக்களால் தமது நாட்டை ஆள முடியவில்லை. வட ஐரோப்பாவிலிருந்த ''டியூட்டானிய' மக்கள் பெருமளவில் இங்கு வந்து குடியேறினார்கள். இவர்களில் ஆங்கிள்கள் (*Angles*) சாக்சன்கள் (*Saxons*) ஜூட்டுக்கள் (*Jutes*) என மூன்று பிரிவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார்கள். இம் மூன்று பிரிவினரும் இங்கிலாந்தில் ஏழு இடங்களில் ஏழு இராச்சியங்களை அமைத்துக் கொண்டனர். இந்த ஏழு அரசுகளும் தம்முள் ஒன்றோடொன்று போர் செய்து வலியற்ற நாடுகளைக் கைப்பற்றின. எக்பேட்டு (Egbert கி. பி. 802—839) அரசன் காலத்தில் வெசெக்ஸ் என்ற இராச்சியம் (ஏழு இராச்சியங்களிலொன்று) முன்னணியில் திகழ்ந்தது. இங்கிலாந்தின் பெரும் பகுதிக்கு இவன் அரசனாக இருந்தான். இவன் பின் ஆண்ட மன்னர்கள் வலிமையற்றவர்களாக இருந்தார்கள். இவர்களுடைய காலத்தில் 'டேனியர்கள்', நாட்டில் பல பகுதிகளுக்கும் கப்பல்களில் வந்திறங்கினர். கி. பி. 978—1016 வரை இங்கிலாந்தை ஆண்ட எதல்ரெது என்ற அரசன் திறமையற்றவன். டேனியர்களைப் பகைத்துக் கொண்டான். டேனிய அரசனான கான்யூட் 1016ஆம் ஆண்டு இங்கிலாந்தை தன் ஆதிக்கத்திற்குட்படுத்தி 1035ஆம் ஆண்டுவரை நாட்டை ஆண்டான். இவன் பின் வந்தவர்கள் திறனற்றவர்களாயிருந்ததால் 1042ஆம் ஆண்டு இங்கிலாந்தைப் பழைய அரச வம்சத்தைச் சேர்ந்த எட்வேர்ட் (Edward the Confessor) என்பவன் ஆளத் தொடங்கினன். இவன்பின் ஆண்ட மன்னர்களின் காலத்தில் போர்கள் நடைபெற்றன. 'நர்மானியராட்சி' கி. பி. 1066ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஆரம்பமானது. நர்மானியனான முதலாம் வில்லியம் ஹெரால்ட் மன்னனை, ஹேஸ்ட்டிங்ஸ் என்ற இடத்தருகில் நடந்த போரில் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றி நாடு முழுவதையும் தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தான். ஆறும் ஹென்றியின் ஆட்சிவரை இவ்வம்சம் ஆட்சி செய்தது.

ஆறும் ஹென்றிக்கு மகன் இல்லாததால் அடுத்த வாரிசுகளான சமர்செட்டும் யார்க்கும் போட்டியிட்டனர். போர் பல காலம் தொடர்ந்து நடந்தது. இதில் வெற்றியடைந்த ஏழாம் ஹென்றி தியூடர், மூன்றும் எட்வர்டின் மகன் ஜோனின் வழி வந்தவனுவான். இவனது ஆட்சியுடன் 'தியூட வம்ச' ஆட்சி ஆரம்பமாகியது. கி. பி. 1485—1603 வரை தியூட வம்ச ஆட்சிக் காலம். இவன் யார்க் வமிச அரச குமாரியை மணந்து இவ் வம்சத்தின் நட்புறவை சம்பாதித்துக் கொண்டான். கி.பி. 1603ஆம் ஆண்டு மேரி எலிசபெத் வாரிசு இல்லாமல் இறந்ததும் ஏழாம் ஹென்றியின் மகள் வழிவந்த ஸ்கொட்லாந்து மன்னன் ஆறும் ஜேம்ஸ் மன்னனுனன். இவனது ஆட்சியுடன் ஸ்ருவட் வம்ச ஆட்சி தொடங்கியது. இரண்டாம் சார்லஸுக்குப் பின் யார்க் கோமகன் இரண்டாம் ஜேம்ஸ் பட்டத்திற்கு வந்தான். 1685ஆம் ஆண்டு மான்மத் கோமகன் தானே பட்டத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரிசு என்று புரட்சி செய்தான். ஆனாலும் அவன் தோற் கடிக்கப்பட்டு உயிரிழந்தான். 1714ஆம் ஆண்டு ஆன் அரசி இறக்கும்போது வாரிசு இல்லாமையால் ஹனேவர் வம்சத்தைச் சேர்ந்த ஜார்ஜ் (முதலாம் ஜேம்சின் கொள்ளுப் பேரன்) அர சுரிமை நிருணயச் சட்டப்படி அரசனானான். இவ்வாறு இங்கி லாந்தில் காலத்திற்குக் காலம் அரச வம்சங்களிடையே போர் நடைபெற்று வலிமைபெற்ற அரசவம்சம் அரசைக் கைப்பற்றி ஆட்சி செய்துள்ளது.

இந்தியாவின் அரசியலை நாம் ஆராய்ந்தால் அங்கு பல அரசவம்சப் போர்கள் நடந்திருப்பதை அறியலாம். இந்தியா இருபெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை வட இந்தியா, தென்னிந்தியா என்பனவாம். வட இந்தியாவில் அரசாண்ட அரச வம்சங்களுள் மௌரிய வம்சம் பிரசித்தி பெற் றிருந்தது. கி. மு. 305 ஆம் ஆண்டளவில் மேற்கில் இந்துகுஷ் வரை இச் சாம்ராச்சியம் பரவியிருந்தது. இவ் வம்சத்தில் அசோகனது ஆட்சியின் பின் ஆண்ட பலமற்ற அரசர்களை எதிர்த்து சுங்க வம்சம் ஆட்சியைக் கைப்பற்றியது. மௌரிய வம்ச கடைசி அரசனை பிருகத்ரதனை அவன் சேனாதிபதியான புஷ்யமித்ரன் ஆட்சியிலிருந்து நீக்கி தானே அரசனாகி சுங்கவம்சத்தை நிறுவி னான். இந்நிகழ்ச்சி கி. மு. 184ஆம் ஆண்டில் நடைபெற்றது. இக் காலகட்டத்திற்கு முன் பின்னாக கலிங்கநாட்டில் சேட வம்சத்தவரும், தட்சிண தேசத்தில் சாதவாகன் வம்சத்தவர்களும் ஆட்சியைக் கைப்பற்றினர். சுங்கவம்சம் கி. மு. 184—72வரை அரசாண்டார்கள். சுங்க வம்சக் கடைசி மன்னனைக் கொன்று அவனது மந்திரி வாசுதேவன் அரசனானான். இவ் வம்சத்திற்கு காண்வ வம்சம் என்று பெயர். இவ் வம்சம் கி. மு. 72—27வரை அரசாண்டது. சாதவாகன அரச வம்சம் வட இந்தியாவின் சுயேட்சையான சாம்ராச்சியத்தை ஏற்படுத்தினர். இவ் வம்சத்த வர்களுடைய ஆட்சிக் காலத்தில் சவுகராத வம்சத்தவர்களுக்கும் சாதவாகன வம்சத்தவர்களுக்கும் அடிக்கடி வம்சப் போர் நடை பெற்றது. அத்தோடு கலிங்க தேசத்திலிருந்த சேத வம்சத்து அரசர்களும் சாதவாகன வம்ச அரசர்களுடன் போர் நடத் தினர், இவ் வம்சத்தை வீழ்ச்சியுறச் செய்தனர்.

வடமேற்கு இந்தியாவில் குஷாணவம்ச சாம்ராச்சியம் எதிர்ப்புக் களால் அழிந்ததும், குப்தவம்சம் சாம்ராச்சியத்தை ஸ்தாபித்தது. இவ் வம்சத்தின் சாம்ராச்சியம் ஏறக்குறைய கி. பி. 318ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. கி. பி. 477 ஆண்டுவரை குப்தசாம் ராச்சியம் நிலைபெற்றிருந்தது. ஆயினும் பல வம்சத்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுடன் போர் செய்து இவ் வம்சத்தின் சாம்ராச்சியத்தை நிலைகுலையச் செய்தனர். இவ் வம்சத்தின் பின் புஷ்பபூபதி வம்சத்து அரசன் ஹர்சவர்த்தனன் ஆட்சிசெய்தான். இவ் வம்சத்தவர்களது ஆட்சிக்காலத்தில் ஹூண வம்சத்தவர்கள் அடிக்கடி போர் செய்தார்கள். இவனது ஆட்சிக்காலம் கி. பி. 606—646 வரையாகும். இவ் வம்சத்தின்பின் பாலவம்சம், சேன வம்சம் எனப் பல வம்சங்கள் இராச்சியத்தைக் கைப்பற்றி ஆண்டார்கள்.

எட்டாம் நூற்றாண்டில் வட இந்தியாவின் மேற்பாகத்தில் பல ராஜபுத்திர வம்சங்கள் ஆட்சிபுரியத் தொடங்கின. இவ் வம்சங்களில் பிரசித்திபெற்ற வம்சம். கூர்ஜரப் பிரதிகாரவம்சம். இவர்கள் 8ஆம் நூற்றாண்டு தொடக்கம் 11ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தார்கள். துருக்க அரச வம்சத்தவர்கள் அடிக்கடி போர் செய்து சௌஹான வம்சத்து ராஜபுத்திரர்களையும், அன்ஹில்வாராவில் அரசாண்ட சாப வம்சம், சாளுக்கிய வம்சம் ஆகியவர்களையும் அடிக்கடி தம் ஆதிக்கத்தின்கீழ் கைப்பற்றினர். சந்தேல வம்சத்தவர்களின் இராச்சியம் யமுனை முதல் கேதி வரையும் சளஞ்சர் முதல் குவாலியர் வரையும் பரவியிருந்தது. டில்லி சுல்தான்களதும், ஏனைய வம்சத்தவர்களது போர்களினாலும் இவ்வம்சம் ஒழிக்கப்பட்டு இவர்களது இராச்சியம் கி. பி. 1310 ஆம் ஆண்டு டெல்லி சுல்தானால் தனது இராச்சியத்துடன் சேர்க்கப்பட்டது.

டெல்லியின் அடிமைவம்சம் என்ற வம்சம் ஆட்சிசெய்யத் தொடங்கியது. (கி. பி. 1206—1290) இவ் வம்சத்தை கில்ஜி வம்சம் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றி வட இந்தியாவின் பேரரசனாக அலாவுதீன் கில்ஜி விளங்கினான். இவ்வம்சம் கி. பி. 1290—1320 வரை ஆட்சிசெய்தது. இவர்களிடமிருந்து கி. பி. 1320-ம் ஆண்டு துக்ளக் வம்சம் ஆட்சியைக் கைப்பற்றி கி. பி. 1412 ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்தது. இவர்களை முறியடித்து கி பி. 1457 வரை சையத் வம்சம் ஆட்சி செய்தது. இவர்கள் பின் இவர்களிடமிருந்து லோடி வம்சம் டெல்லியில் ஆண்டது இவர்கள் மூலம் ஆப்கானியரசு டெல்லியில் ஏற்படுத்தப்பட்டது. டெல்லி யில் (கி. பி. 1526—1858) மொகலாயரும் ஆப்கானியரும் இடையறாது போர் செய்தவண்ணமிருந்தனர். இடையில் துருக்க அரசன் பாபர் வட இந்தியாவைக் கைப்பற்றினான். மீண்டும் ஆப்கானியரின் ஆதிக்கமே மேலோங்கியது. மொகலாயரது சாம்ராச்சியம் தொடர்ந்து பலகாலம் இருந்து வந்தது. இவர்கள் பின் சீக்கிய வம்சம், ஆங்கிலேயர் வட இந்தியாவைக் கைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றும்போது ஆட்சி செய்து, பின்னர் அந்நியரான ஆங்கிலேயர் வசம் ஆட்சிமாறியது.

இனி நாம் தென்னிந்திய வரலாற்றை ஆராய்ந்தால் அங்கு நடந்த அரசவம்சப் போர்களும் பலவாகும். இங்கு சேர, சோழ, பாண்டிய வம்சங்கள் புராதன காலம் தொட்டு ஆட்சி செய்துள்ளார்கள். சோழரின் தலைநகர் உறையூர், பாண்டியரின் தலைநகர் மதுரை, சேரரின் தலைநகர் வஞ்சிமாநகரம்; கி. பி. 190ஆம் ஆண்டின் சேர அரசன் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை, பாண்டியர், சோழர் ஆகிய அரச வம்சங்களுடன் போர் செய்து வென்று தனது ஆதிக்கத்தை நிலைநாட்டினுன். பின்னர் சோழவம்ச அரசர்களில் கரிகாலன், பாண்டியர், சேரர், வேளிர் ஆகிய வம்சங்களைத் தோற்கடித்து தன் ஆதிக்கத்தை நிலைநாட்டினுன். கி. பி. 210ஆம் ஆண்டில் பாண்டியன் நெடுஞ்செழியன் பகைவர்களை வென்று மீண்டும் ஆட்சியை நிலைநிறுத்தினுன். இவர்களின் காலத்திற்குப் பிற்பட்ட 3 நூற்ருண்டுகளும் இருண்டகாலம். ( ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வாதாபிச் சாளுக்கியர், காஞ்சிபுரப் பல்லவர், மதுரைப் பாண்டியர் ஆகிய அரச வம்சங்களுடன் போரிட்டு அரசைக் கைப்பற்றி ஆட்சி செலுத்தினர். தட்சிண பீடபூமியை மௌரிய வம்சம் கைப்பற்றியது. பின்னர் இதை சாதவாகன அரச வம்சம் தனதாக்கியது. வாகாடக வம்சம், கதம்பர், களப்பிரர் ஆகிய அரச வம்சங்கள், இராச்சியங்களைப் போர்செய்து கைப்பற்றி ஆண்டு வந்தன. பல்லவ அரசவம்சத்திற்கும் சாளுக்கிய அரச வம்சத்திற்கும் அடிக்கடி தொடர்ந்து போர்கள் நடைபெற்றன. பல்லவ அரச வம்சத்திற்கும் பாண்டிய அரச வம்சத்திற்கும் போர்கள் கி. பி. 7-ம் நூற்ருண்டில் நடைபெற்றுள்ளன. தொடர்ந்தும் பல அரச வம்சங்கள் போட்டியிட்டன. இறுதியில் கி. பி. 9-ம் நூற்ருண்டிலிருந்து 350 ஆண்டுகள் வரை தமிழ்நாடு சோழ அரச வம்சத்தவர் வசம் இருந்தது. இவர்களுக்கும், பாண்டிய வம்சம், பல்லவ வம்சம், ராஷ்டிரகூட வம்சம், சாளுக்கிய வம்சம், இலங்கையில் ஆட்சி செய்த அரச வம்சம், (5ஆம் மகிந்தன்) ஆகியவற்றுக்கும் அடிக்கடி போர்கள் நடைபெற்றன. இவர்களது ஆட்சியின் பிற்பகுதியில் பாண்டிய அரச வம்சம், சாளுக்கிய வம்சம், வேலநாட்டுச் சோடர் வம்சம் என்பன சோழ அரசுக்கெதிராகப் போர் செய்தன. பின்னர் பாண்டியர் சோழ வம்சத்தை வீழ்ச்சியடையச் செய்து ஆதிக்கம் பெற்றனர். கி. பி. 1334ஆம் ஆண்டின் பின் முகமதிய வம்சம் மதுரையில் ஆதிக்கம் பெறத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதவ வம்சம், காகதீய வம்சம், ஹெய்சாள வம்சம், பாண்டிய வம்சம் ஆகிய வம்சமன்னர்கள் போரினால் இராச்சியங்களைப் பங்கிட்டுக் கொள்ளும்போது கில்ஜி வம்சத்து அலாவுதீன் இவர்களைப் போரில் வென்று தமது ஆதிக்கத்தை தென்னிந்தியாவில் நிலை நிறுத்தினர். இவர்களை எதிர்க்க இந்து அரச வம்சங்கள் ஒன்று சேர்ந்ததன் விளைவாக விஜயநகர இராச்சியம் தோன்றியது. இது ஒரு புதிய அரச வம்சம். கி. பி. 1336—1565 வரை ஆட்சிசெய்து, இவ் இராச்சியத்தை கி. பி. 1565ஆம் ஆண்டு முகமதியர் எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெற்றனர். மீண்டும் கி. பி. 1570ஆம் ஆண்டு விஜயநகர மன்னனாக பட்டம் பெற்ற ஆரவீடு வம்சம் 1614ஆம் ஆண்டுவரை ஆட்சிசெய்தது. இவர்களின் பின் முகமதியரை எதிர்த்து நாயக்க வம்சம் மகாராஷ்டிரர், ஆரவீடு வம்சம், சிறு அரசுகளை ஆண்டார்கள். பெரும்பகுதி முகமதியரின் ஆதிக்கத்திற்குட்பட்டது.

16ஆம் நூற்றாண்டின் இறுதியில் வியாபாரத்திற்கென போர்த்துக்கேயரும் பின்னர் பிரெஞ்சுக்காரரர் ஆங்கிலேயர் ஆகியோர் இந்தியாவில் ஆதிக்கம் பெற்றனர்.

நாம் இதுவரை அரச வம்சம் போர்கள் பற்றிப் படித்தோம். ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான இங்கிலாந்தில் நடைபெற்ற அரசவம்சப் போர்களையும், ஆசிய நாடான இந்தியாவில் நடைபெற்ற அரச வம்சப் போர்களையும் விரிவாகக் கற்றோம். இதேபோல ஒவ்வொரு நாட்டிலும் அரச வம்சங்களிடையே போர்கள் நடைபெற்றுள்ளன. மேலே கூறிய அரசவம்சப் போர்களின் வரலாற்றிலிருந்து நாம் அறியக்கூடியது யாதெனில் எந்தவொரு நாட்டிலும் போர் நடைபெறாத காலகட்டம் இருக்கவில்லை யென்பதும், ஒரு வம்சம் மற்றைய வம்சத்தை அழிப்பதையே தனது இலட்சியமாகக் கொண்டு அரச வம்சங்களையும், மக்களையும், நாடுகளையும் அழித்து வந்துள்ளன. எனவே இவற்றின் அழிவுகளைப் பிற்காலத்தவர்கள் உணர்ந்து கொண்டதால் தான் போரை வெறுத்துப் போர் நடைபெறுவதைத் தடுத்து வருகிறார்கள்.

# 3 ஏகாதிபத்தியப் போர்கள்

ஒவ்வொரு நாட்டிலும் வலிமை பெற்ற அரசர்கள் அயலை இராச்சியங்களை மட்டுமன்றி தமது நாட்டிற்கு வெகு தூரத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள நாடுகளையும் கைப்பற்றித் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டிப் பெரும் ஏகாதிபத்தியங்களை நிறுவியுள்ளார்கள். இவ்வாறு நடைபெற்ற போர்கள் ஏகாதிபத்தியப் போர்கள் எனப்படும். புராதன காலத்தில் எகிப்து நாட்டில் வலிமைமிக்க அரசு இருந்தது. அயலிலுள்ள நாடுகளையெல்லாம் ஃபேரோஸ் என்ற எகிப்திய தலைவர்கள் போர் செய்து தமதாட்சிக்குட்படுத்தி இந்நாடுகளின் செல்வங்களைச் சூறையாடித் தம் நாட்டிற்குக் கொண்டு சென்று தமது கட்டிடம் கலை கலாச்சாரம் என்பனவற்றை அபிவிருத்தி செய்யப் பயன் படுத்தியுள்ளனர்.

கி. மு. 5 ஆம் நூற்றுண்டளவில் பாரசீகத்தில் பெரும் ஏகாதிபத்திய அரசு இருந்தது. இவர்கள் தமது ஏகாதிபத்தியத்தை வளர்ப்பதற்காக அண்டை நாடுகளுடன் போர் செய்தனர். இந்நாட்டின் அரசன் டேறியஸ் அயல் நாடுகள் பலவற்றைப் போரினுல் கைப்பற்றி ஆட்சிசெய்ததுடன் கிரேக்க நாட்டின்மீது போர் தொடுத்தான். ஆயினும், 'அதென்ஸ்' நகரத்து மக்களைத் தோற்கடித்து நாட்டைக் கைப்பற்ற இவனுல் முடியவில்லை.

அடுத்ததாக ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டியவர்கள் கிரேக்கர் எனலாம். கி. மு. 500 ஆம் ஆண்டளவில் 'பெரிக்கிஸ்ஸ்' என்ற அதென்ஸ் நகரத் தலைவன் ஆதிக்கத்தை விஸ்தரித்தான். 'ஸ்பாட்டா' என்ற அரசு இவனை எதிர்த்ததாலும் உள்நாட்டு, வெளிநாட்டுப் போர்களினுலும் அதென்ஸ் இராச்சியம் நிலை குலைந்ததும், மசிடோனிய அரசனுன இரண்டாம் பிலிப்பின் மகன் மகா அலெக்சாந்தர் அரசனுனதும் பெரும் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டினுன். இவனது ஆட்சிக் காலம் கி. மு. 353—323 வரை. இவனது தந்தை கொல்லப்பட்டதும் நாட்டில் கலவரங்கள் தோன்றியது. ஒரு பக்கம் கிரேக்கரும் மறு பக்கம் திரேசியர்களும் கிளர்ச்சி செய்தனர். இவர்களை அலெக்சாந்தர் போரில் வென்றுன். தெஸ்ஸாலியரையும், தீபங்களையும் அடக்கி நாடு திரும்பியதும் அலெக்சாந்தர் இறந்து விட்டானெனப் பொய் வதந்தி பரவியதால் தீப்ஸில் கிளர்ச்சி தொடங்கியது இவர்களுக்கு அதீனியர்களும் உதவினர்; உடனே அலெக்சாந்தர் தீப்ஸ் மீது போர் தொடுத்து அந் நகரை முற்றுக அழித்து, மக்கள் பலரை அடிமைகளாக்கி விற்றுன். இதனுல் கிரேக்க நகரங்கள் யாவும் அடிபணிந்தன. பின்னர் கி. மு. 334ஆம் ஆண்டு பாரசீகத்தின் மீது படையெடுத்துப் பல நகரங்களைக் கைப்பற்றியதுடன் மேற்கு ஆசியா மைனர் முழுவதையும் வென்றுன். மேற்கு ஆசியா மைனரிலிருந்து சிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக் கைப்பற்றியதுடன் மத்தியதரைக் கடலின் கிழ்ப்பக்க மிருந்த துறைமுகங்களைக் கைப்பற்றினன். பின்னர் எகிப்து நாட்டைக் கைப்பற்றி அங்கு அலெக்சாந்திரியா என்ற நகரத்தை உருவாக்கினன். பாரசீகப் பேரரசு முழுவதும் அலெக்சாந்தர் வசமானது. கடும் மலைகளையும் பாலைவனங்களையும் கடந்து எதிரிகளை வென்று அசியாவின் உள்நாடுகளையும் கைப்பற்றினன். கிழ்த்திசை நோக்கிப் பாக்டிரியாவிற்கும் வடதிசையில் ஆக்சஸ், ஜக்ஸார்ட்டிஸ் ஆறுகளைக் கடந்து துருக்கி ஸ்தானத்திற்கும் இறுதியாக தெற்கே இந்தியாவிற்குச் சென்று பல போர்கள் செய்து தனது ஏகாதிபத்தியத்தை விஸ்தரித்தான்; இந்தியாவில் ஜீலம் நதிக்கரையில் புருவம்ச மன்னனைத் தோற்கடித்தான்; இவ்வாறு ஐரோப்பாவில் மட்டுமன்றி ஆசியாவிலும் ஏகாதிபத்தியப் போர் பல செய்து தனது ஏகாதிபத்தியத்தை நிறுவினன்.

அடுத்ததாக உரோமானியர் நடாத்திய ஏகாதிபத்தியப் போர்கள் பற்றி அறிந்து கொள்வோம். முதலில் ஒரு நகர இராச்சியமாக இருந்த உரோம் பின், பெரும் ஏகாதிபத்தியத்தை நிறுவியது. முதலில் உரோமானியர் இத்தாலி மீதும், பின்பு நாளடைவில் கடல்கடந்து படையெடுப்புகள் நடாத்திப் பெரிய சாம்ராச்சியத்தை கி. மு. முதலாம் நூற்றண்டில் நிறுவிக் கொண்டனர். நகர இராச்சியம் மறைந்து ரோமானிய சக்கரவர்த்திகளின் சாம்ராச்சியம் தோன்றியது. ஜுலியஸ்சீசர் (கி. மு. 102—44), பிரான்ஸ் என்று இப்போ அழைக்கப்படும் கால் மாகாணத்தை ஆதிக்கத்திற்குட்படுத்திப் புகழ் பெற்றான்; பிரித்தானியாவிலும் சில இடங்களைப் போர் செய்து கைப்பற்றினன். இதற்கு 100 ஆண்டுகளின் பின் கிளாடியஸ் காலத்தில் இவர் பிரித்தானியாவைப் போரில் வென்று பிரித்தானியாவை உரோமானிய சாம்ராச்சியத்துடன் இணைத்தான். சுமார் 400 ஆண்டுகளுக்கு அதாவது கி. பி. 410 ஆம் ஆண்டுவரை பிரித்தானியா உரோமானிய இராச்சியமாகவே இருந்து வந்தது. இந்த உரோமானியர் தமது ஏகாதிபத்தியத்தை அயல் நாடுகளுடன் போர் செய்து வென்று ஸ்தாபித்திருந்தார்கள்.

அராபியாவில் இஸ்லாம் மதத்தவர் பேரரசை நிறுவினர். இவர்களது ஏகாதிபத்தியம் ஐரோப்பாவில் ஸ்பானியாவரை பரந்திருந்தது. இவர்களது பேரரசு நிலை குலைந்ததும் துருக்கிய சுல்தான்கள் தமது பேரரசை நிறுவினர். இந்தியாவில் சோழர் பேரரசை நிறுவினர். முதலாம் இராசராசன் பாண்டியர், சேரரை வென்று பேரரசை உருவாக்கினன். இவன் மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் இராசேந்திரன் (1014—1044) இலங்கை முழுவதை யும் வென்றதுடன் வட இந்தியா முழுவதையும் கைப்பற்றினன். இவ்வாறு சோழர் இந்தியாவை மட்டுமன்றி இலங்கையையும் போரில் வென்று ஏகாதிபத்தியத்தை நிறுவினர்.

ஐரோப்பிய நாடான பிரித்தானியா 19-ம் நூற்றூண்டில் பெரும் சாம்ராச்சியத்தை நிறுவியது. இந் நாட்டின் ஏகாதி பத்தியப் போர்கள் பற்றி இனி ஆராய்வோம், கி. பி. 410ஆம் ஆண்டுவரை பிரித்தானியர் உரோமானியர் வசம் இருந்தது. பின் டியூட்டானியரசு ஆட்சி தொடங்கியது. இவர்கள் உள் நாட்டிலிருந்து ஏனைய சிறு இராச்சியங்களுடன் போர் செய்து தமது ஆதிக்கத்தை நிலைநாட்டினர். முதலாம் எட்வர்ட் மன்னன் காலத்தில் வேல்ஸ் பிரித்தானியாவுடன் இணைக்கப்பட்டது. இவன் பின் ஆண்ட மூன்ரும் எட்வர்ட் காலத்தில் (கி. பி. 1337-ல்) பிரான்சுடன் ஏகாதிபத்தியப் போர் நடைபெற்றது. இப் போர் 100 ஆண்டுப் போர் எனப்பட்டது. இப்போரால் 1337-ல் கலே என்னும் பிரதேசம் (பிற்காலத்தில் பிரான்ஸ்) கைப்பற்றப்பட்டது. 16ஆம் நூற்றண்டில் ஐரோப்பாவில் இருந்த சாம்ராச்சியங்களிலொன்ருக பிரித்தானியா ஆதிக்கம் பெற்றது. இக்காலத்தில் சிறந்த கப்பற் படையைத் தன் வசம் வைத்திருந்ததால், கடல் கடந்த நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டதுடன் பல நாடுகளையும் போரில் வென்று ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டியது. முதலாம் ஜேம்ஸ் காலத் தில் அயர்லாந்துடன் போர் செய்து வெல்லப்பட்டது. வட அமெரிக்காவில் ஆதிக்கம் செலுத்தி பல ஆங்கிலக் குடியேற்ற நாடுகளை நிறுவினர். கிழக்கிந்தியக் கம்பனிமூலம் இதே கால கட்டத்தில் ஆசியாவிலும் ஆதிக்கத்தை விஸ்தரிக்கு முன்பே வாணிபத் தொடர்புகளை ஏற்படுத்தினர்.

பின்னர் ஆட்சி செலுத்திய ஒலிவர் குரொம்வெல் அயர் லாந்து, ஸ்கொட்லாந்து என்பனவற்றைப் போரில் வென்ருன்; பிரித்தானியாவுடன் இணைத்தான். கி. பி. 1702ஆம் ஆண்டில் ஸ்பானிய வாரிசுரிமைப் போர் தொடங்கிற்று. இப் போரில் இங்கிலாந்தும், ஹாலாந்தும், ஜெர்மனியும் ஒன்றுசேர்ந்து ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய நாடுகளை எதிர்த்துப் போரிட்டன. பிரித்தானியாவிற்கு நியூபவுண்லாந்து, ஜிப்ரால்ட்டர், மைஞர்க்கா முதலிய இடங்கள் கிடைத்தன. கி. பி. 1744ஆம் ஆண்டு யெல்ஹாம் பிரதமராஞர் இவரது காலத்தில் ஐரோப்பா வில் மட்டுமன்றி ஆப்பிரிக்கா ஆசியா (இந்தியா) வட அமெரிக்கா முதலிய நாடுகளில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் பரவியது. கி.பி. 1796ஆம் ஆண்டில் இலங்கையின் கரையோரப் பகுதிகளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியக் கிழக்கிந்திய சங்கம் கைப்பற்றிப் பின்னர் இலங்கை முழுவதையும் கைப்பற்றினர். இதற்காக இலங்கையிலும் பல போர்கள் பிரித்தானியருக்கும் இலங்கையருக்கும் நடைபெற்றது. அதே போல இந்தியாவிலும் பல போர்கள் செய்யப்பட்டது. 20 நூற்றாண்டின் நடுப் பகுதிவரை இலங்கையும், இந்தியாவும் பிரித்தானிய வசம் இருந்தது.

எனவே பிரித்தானியர் தமது ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டப் பலபோர்கள் செய்தது போல, ஏனைய ஐரோப்பிய நாடுகளாகிய பிரான்ஸ், ஸ்பானியா, போர்த்துக்கல், ஒல்லாந்து, ஜேர்மனி, இத்தாலி என்பன ஏகாதிபத்தியப் போர்கள் பலவற்றை நடாத்தியுள்ளார்கள். 19 ம் நூற்றாண்டில் உருவாகிய இத்தாலி, ஜேர்மனி என்பனவும் பல ஏகாதிபத்தியப் போர்களைச் செய்துள்ளன. பல நாடுகள் 19 ம் நூற்றாண்டின் இறுதியில் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டுவதற்கு முற்பட்டமையினால்தான் 1ம் உலகப்போரும் 2ம் உலகப்போரும் நடைபெற்றன. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தில் சூரியன் அஸ்தமிப்பதில்லையென வரலாற்று ஆசிரியர்கள் வர்ணிப்பர். அவ்வளவிற்கு பரந்த நிலப் பரப்பினையுடையது. எனவே இவ்வாறு ஆதிபத்தியத்தை விஸ்தரிக்கப் பல ஏகாதிபத்தியப் போர்களைப் பிரித்தானியா நடத்தியது.

## 4 வர்த்தகப் போர்கள்

வர்த்தகத்தில் தாம் ஏகபோக உரிமை பெற வேண்டும் என்பதற்காக, வர்த்தகத்தில் ஈடுபடும் மற்றொரு நாட்டுடன், முதலில் உரிமை வகித்த நாடு போர்களை நடத்தியுள்ளதை உலக நாடுகளின் வரலாற்றிலிருந்து நாம் அறியக் கூடியதாக உள்ளது. புராதன காலத்தில் அராபியரே வர்த்தகத்தில் ஈடுபட்டவர்களாவர். முதலில் பினிஷியர்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் நில வழியாக வாணிபம் செய்தார்கள். கி. மு 3000 — கி. மு. 2000 வரை எகிப்தியர்களுக்கும் பினிஷியர்களுக்கும் நெருங்கிய வர்த்தகத் தொடர்பு ஏற்பட்டது; அக்காலத்திலிருந்து பினிஷியாவிற்கும் எகிப்தியற்குமிடையே வர்த்தகத்திற்காகப் பல கடற் சண்டைகள் நடைபெற்றன. அதில் எதிப்தே வெற்றி பெற்றது.

பினிஷியர்களுக்கு அடுத்தபடியாக கிரேக்கர் கடல் கடந்து வர்த்தகத்தில் ஈடுபட்டனர். இவர்கள் பினிஷியர்களுடன் போரிட்டு பிற நாடுகளில் இவர்களுக்குப் போட்டியாக வர்த்தகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளங்களையும், குடியேற்றங்களையும் நிறுவினர். இவர்களின் செல்வாக்கும் வலிமையும் பெருக பினிஷியரின் வர்த்தகம் குன்றியது. கி. மு. 5-ஆம் நூற்றாண்டில் கிரேக்கர் நாணயத்தைப் பயன்படுத்தி வர்த்தகம் செய்தார்கள். கி. மு. 264 முதல் மூன்று நூற்றாண்டு காலம் ரோமாபுரி மேற்கு மத்திய தரைக் கடற்பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தியது. இவர்களும் பல நாடுகளுடன் வர்த்தகம் செய்தார்கள். பின்னர் ரோமப் பேரரசு வடக்கேயிருந்து வந்த அநாகரிகர்களின் படையெடுப்புக்களினால் சீர்குலைந்தது. வர்த்தகமும் பாதிக்கப்பட்டது. வர்த்தகம் மத்திய தரைக் கடலின் கிழக்குப் பகுதியில் மட்டும் நடைபெற்று வந்தது.

இவர்கள் பின் கிழக்கு ரொமானிய அல்லது பைஜான்டிய அரசின் ஆதிக்கம் குன்றியது. இத்தாலி வர்த்தகத்தில் ஓங்கிற்று. ரோமர் ஆதிக்கம் சீர் குலைந்தபின் மத்திய ஐரோப்பாவில் புது அரசாங்கங்கள் தோன்றின. ஜெர்மனியப் பட்டணங்கள் முன்னணியில் நின்று நாட்டின் நலத்திற்குப் பாடுபட்டன. இவை வர்த்தகத்திற்கென ஒரு சங்கத்தை நிறுவின. இச் சங்கத்தின் வேலை தன் உறுப்பினர்களுக்கு அயல் நாட்டில் வசதிகள் செய்து கொடுத்து வர்த்தகத்தை பேணுவதாகும்.

கி. பி. 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் போர்த்துகல், ஸ்பெயின், ஹாலாந்து ஆகிய நாடுகள் வர்த்தகத்தில் மேலோங்கின. போர்த்துக்கேயர் கடற் பிரயாணத்தில் சிறந்து விளங்கினர். அதேவேளை வர்த்தகத்திலும் சிறந்துவிளங்கினர். இவர்கள் பிறேசிலைக் கண்டு பிடித்து இதனுடன் வர்த்தகம் செய்தார்கள். இவர்களுடைய வர்த்தக முன்னேற்றத்தையும் வெற்றியையும் கண்ட ஸ்பெயின் நாட்டவர்களும் வர்த்தகத்தை மேற்கொண்டனர். இவர்கள் மேனாட்டு வர்த்தகத் தனியுரிமையை போப்பாண்டவரிடமிருந்து பெற்றனர். கீழை நாட்டு வர்த்தகத் தனியுரிமையை போர்த்துக்கேயர் பெற்றனர். போர்த்துக்கேயர் இந்தியாவில் பல இடங்களை போரினால் தம் வசமாக்கி வர்த்தகம் செய்தனர். இந்தியாவில் கோவாவில் தமது வர்த்தக நிலையத்தை நிறுவினர். இலங்கையையும் கைப்பற்றி இலங்கையிலும் வர்த்தக உரிமையில் ஆதிக்கம் செலுத்தி இலங்கையிலிருந்த வாசனைப் பொருட்களை மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தார்கள் போர்த்துக்கேயர். தாம் வர்த்தகம் செய்த நாடுகளில் குடியேற்றங்களையும் நிறுவினர்.

கி. பி. 1680 ஆம் ஆண்டு போர்த்துக்கேய அரசிற்கு வாரிசில்லாதிருந்ததால், ஸ்பெயின் மன்னன் இரண்டாம் பிலிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனானன். இக்காலத்தில் போர்த்துக்கல் பேரிழப்பிற்கு ஆளானது. போர்த்துக்கேயக் குடியேற்றங்கள் பலவற்றை டச்சுக்காரர்கள் கைப்பற்றினர். ஆங்கிலேயரின் கடலாதிக்கமும் கடல்வழி வர்த்தகமும் ஓங்கியது. பிரகன்ஸா பிரபு போர்த்துக்கேய அரசனாக முடிசூடியபின் இங்கிலாந்துடன் வாணிப உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டு இருநாடுகளுக்குமிடையில் வர்த்தகம் நடைபெற்றது.

போர்த்துக்கேயரது வர்த்தக உரிமையுடைய இடங்களிலெல்லாம் டச்சுக்காரர் போர்செய்து வர்த்தக உரிமையைக் கைப்பற்றினர். இலங்கையில் போர்த்துக்கேயருடன் போரிட்டு ஒல்லாந்தர் ஆதிக்கம் பெற்றனர். கி. பி. 1500—1650 வரை டச்சு ஆதிக்கம் ஓங்கியிருந்தது. இவர்களுடைய முக்கிய வர்த்தக நிலையம் ஆன்ட்வேர்ப் ஆகும். கி. பி. 1602 ல் டச்சுக் கிழக்கிந்திய சங்கம் நிறுவப்பட்டது. இக் கம்பெனி கீழைத்தேச வர்த்தகத்தை தன் அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்தது. இக் கம்பனி பல நாடுகளைக் கைப்பற்றி அங்கு டச்சுக் குடியேற்றங்களை நிறுவி ஆதிபத்திய நிலையை ஏற்படுத்தி தரையிலும் கடலிலும் படைகளை நிறுவிக் காத்து வந்தது. டச்சு நாட்டவர்கள் அமெரிக்காவில் வர்த்தகத் தலங்களை நிறுவி வர்த்தகம் செய்தார்கள். பிரித்தானியாவினால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட கப்பல் போக்குவரத்துச் சட்டம் டச்சு நாட்டவரின் ஏகபோக உரிமையை முடிவடையச் செய்தது.

கி. பி. 17 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாவின் வர்த்தகம் வலுவடைந்தது உலகத்தின் பல பாகங்களிலும் பலவாணிகக் கம்பனிகள் நிறுவப்பட்டன. இவை போர்த்துக்கல், ஸ்பெயின் ஒல்லாந்து, பிரான்ஸ், ஆகிய நாடுகளின் வர்த்தகத்திற்குப் போட்டியாக இருந்தன. இவர்கள் வர்த்தக ஆதிக்கத்தை நிலைநாட்ட டச்சுக்காரர்களுடனும், ஆதிக்கம் பெறும் நாடுகள் ஒவ்வொன்றுடனும் வர்த்தகப் போர்கள் பலவற்றை நடாத்தியே வர்த்தக ஆதிக்கத்தை நிலைநாட்டினர், உதாரணமாக இந்தியாவில் பல சிற்றரசர்களுடன் போர் செய்துள்ளார்கள். இலங்கையில் முதலில் டச்சுக்காரர்களுடனும் பின்னர் இலங்கையிலிருந்து சிறு இராச்சியங்களுடனும் போர் செய்துள்ளார்கள். பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனி என்ற வர்த்தகக் கம்பனி நிறுவப்பட்டது. இது 19 ஆம் நூற்றாண்டு வரை உலக நாடுகளுக்கிடையே வர்த்தக ஆதிக்கம் பெற்று வர்த்தகம் செய்து வந்தது. இவர்கள் கீழைத் தேசங்களுக்கு வர்த்தகம் செய்வதற்காக முதலில் வந்தார்கள். பின்னர் வர்த்தகத்திற்காகச் செய்த போர்களினால் கைப்பற்றப்பட்ட இடங்களில் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிபத்தியத்தை நிலைநிறுத்தி ஆட்சி செய்துள்ளார்கள். டச்சுக் காரரின் வர்த்தக உரிமையை தமதாக்கிக் கொள்ள இங்கிலாந்தும் பிரான்சும் டச்சுக்காரருடன் போர் செய்தன.

ஐரோப்பியர் ஆபிரிக்க நாடுகளில் ஆதிக்கம் செலுத்தி அங்கிருந்த நீக்ரோ மக்களை அடிமைகளாகப் பிடித்து அமெரிக்காவிற்கு விற்று வர்த்தகம் செய்தார்கள். இதில் பல நாடுகள் போட்டியிட்டமையால் இவர்களுக்கிடையே பல போர்கள் ஏற்பட்டன.

சீனாவில் 9-ஆம் நூற்றாண்டில் அராபியர்களால் அபினி புகுத்தப்பட்டது. அன்று முதல் சீனாவிலும் கிழக்கிந்திய தீவுகளிலும் அபினிப்பழக்கம் தொடர்ந்தது. இந்தியாவிலிருந்து சீனா, அபினியை இறக்குமதி செய்தது. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பிறநாடுகளிலிருந்து இதை இறக்குமதி செய்தது. இந்தியாவிலிருந்து அபினியை ஏற்றுமதி செய்த பிரித்தானியர், பிறநாடுகளிடமிருந்து சீனா அபினியை வாங்கக் கூடாதென்று 1840-ஆம் ஆண்டு கூறினர். இதனால் சீனருக்கும் பிரித்தானியருக்கும் யுத்தம் ஏற்பட்டது. இந்தப் போர் அபினிப் போர் எனப்பட்டது. இப்போரில் வெற்றி பெற்ற பிரித்தானியர், கொங்கொங்கை கைப்பற்றினர். 1906-ஆம் ஆண்டு சீனர் அபினி விலக்குச் சட்டம் செய்தனர். ஆனாலும் சீன—ஜப்பானிய யுத்தம் தொடங்கிய பிறகு ஜப்பானியர் மறுபடியும் பரப்பினர். 2-ம் உலக யுத்தத்துடன் சீனா அபினி வர்த்தகத்தை நிறுத்தி விட்டது.

பிரித்தானியா தனது ஏகாதிபத்தியத்தை அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய கண்டங்களிலெல்லாம் நிலை நிறுத்தி பல குடியேற்றங்களை நிறுவி ஆட்சி செய்தமையால் தான் கைப்பற்றிய நாடுகளின் வர்த்தக உரிமைகளைக் கைப்பற்றவும் பல வர்த்தகப் போர்களை நடத்தியுள்ளது.

# 5 உள்நாட்டுப் போர்கள்

உள்நாட்டுப் போர்கள் ஒவ்வொரு நாட்டிலும் காலத்திற்குக் காலம் நடைபெற்றுள்ளது. பிரித்தானியாவில் பல உள்நாட்டுப் போர்கள் நடைபெற்றுள்ளன. ரோமானியரின் ஆட்சியின் பின் பிரித்தானியாவில் டியூட்டானியரின் ஆட்சி தொடங்கியது. இவர்கள் ஆங்கிளியா, பர்சியா, நார்தம்பிரியா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஸெக்ஸ், எஸெக்ஸ், சஸெக்ஸ், கென்ட் என்ற பெயர்களைக் கொண்ட ஏழு அரசுகளை நிறுவினர். இந்த ஏழு அரசுகளும் தம்முள் ஒன்றேடொன்று போர்செய்து வலிமையற்ற நாடு களைக் கைப்பற்றின. இவர்களில் நார்தம்பிரியா இராச்சியம் இறுதிவரை ஏனைய இராச்சியங்களைக் கைப்பற்றி ஆட்சி செய்தது. நார்தம்பிரியரின் பின் நார்மானியர் ஆட்சி செய்தனர். நார்மானியரை வெறுத்த மக்கள் பல உள்நாட்டுப் போர்களில் ஈடுபட்டுக் கிளர்ச்சி செய்தார்கள்.

1216ஆம் ஆண்டில் அரசஞக இருந்த ஜோன் இறந்தவுடன் அவனுடைய மகனை மூன்ருய் ஹென்றி 10ஆம் வயதில் அரசனுனன். இவனுடைய ஆட்சிக் காலத்தில் அரசனுக்கும் பிரபுக் களுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டு போர் மூண்டது. ஹென்றியின் மாமன் சைமன் டி மான்பர்ட்டு பிரபுக்களுக்குத் தலைமை வகித்துப் போர் செய்தான். இப்போரினுல் அரசனது ஆதிக்கத்தைக் குறைத்தான்.

முதலாம் சார்ள்ஸ் காலத்தில் அரசனுக்கும், பாராளுமன் றத்திற்கும் தகராறு ஏற்பட்டது. 1628 ல் கூடிய பாராளுமன் றம் அரசனிடம் உரிமை மனுவை சமர்ப்பித்தது. அதற்கு அரசன் ஒப்பமிட்டுச் சம்மதம் அளித்தான். 1640 சார்ள்ஸ் பாராளுமன்றத்தைக் கூட்டியபோது அரசனுக்கும் பாராளுமன் றத்திற்கும் தகராறு மீண்டும் ஏற்பட்டது. பிரித்தானியா இரு கட்சிகளாகப் பிரிந்தது. பாராளுமன்றம், அரசனுக்கு எதிரி யாக மாறியது. பல இடங்களில் போாகள் நடந்தது. 1642 ல் நடந்த எட்ஜ்ஹில் போரும் 1644-ல் நடந்த மார்ஸ்டன் மூர் போரும் 1645-ல் நடந்த நேஸ்பி போரும் முக்கியமானவை. இறுதியில் பாராளுமன்றம் வெற்றிபெற்று இறுதியில் சார்ள் சைக் குற்ற விசாரணை செய்து கொன்றனர். மேலே கூறப் பட்ட போர்கள்போல பல உள்நாட்டுப் போர்கள் பிரித்தானி யாவில் நடைபெற்றுள்ளன.

அடுத்ததாக பிரான்ஸ் நாட்டில் நடந்த உள்நாட்டுப் போர் ஒன்றினைப் படிப்போம். பிரான்ஸில் ஜோன் கால்வின் என்ற அறிஞர் மதப் புரட்சிக் கருத்துக்களைப் புகுத்தினர். ஹியூகனுட்டுகள் என்பவர்கள் கால்வினைப் பின்பற்றினர். அரசன் கத்தோலிக்கனுனமையால் இரண்டாம் ஹென்றியின் காலத் திலிருந்து ஹியூகனுட்டுகளைத் தொல்லைப் படுத்தினர். 1562-ல் வாஸி என்ற இடத்தில் கடவுளை வழிபட வந்த ஹியூகனுட்டுக் களை கைஸ் கோமகனின் தோழர் கொன்றதால் இரு வகுப் பினரிடையே போர் மூண்டது. இப் போரின் விளைவாக ஹியூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னட்டுகளுக்கு மதவழிபாட்டிற்குச் சில சுதந்திரம் அளிக்கப்பட்டது. 19ஆம் நூற்ருண்டில் சமூகச் சீர்திருத்தம், குடியரசு முதலிய கொள்கைகள் மீண்டும் தலையெடுத்ததால் 1848ஆம் ஆண்டுக் கிளர்ச்சி ஏற்பட்டது. இதில் மக்கள் அரசனது மாளிகையைத் தாக்கினர். அரசன் இங்கிலாந்திற்கு ஓடினன். மக்கள் குடியாட்சியை அமைத்தனர். மீண்டும் விரைவில் மக்களிடையே சச்சரவு ஏற்பட்டதனல் முதலாம் நெப்போலியனின் மருமகனை நெப்போலியனை நான்கு வருடத்திற்குத் தலைவனுக அமர்த்தினர். இவ்வாறு பிரான்சில் காலத்திற்குக் காலம் போர்கள் நடைபெற்றுள்ளன.

அடுத்ததாக அமெரிக்காவில் நடைபெற்ற உள்நாட்டுப் போர்பற்றி ஆராய்வோம். 1861—1865 ல் ஜனதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் காலத்தில் தென் இராச்சியங்களிலிருந்த அடிமை நிலை ஆதரவாளர்களுக்கும், வட இராச்சியங்களிலிருந்து அடிமை நிலை எதிர்ப்பாளர்களுக்கும் இடையேயிருந்த மனவேறுபாட்டால், அமெரிக்காவின் ஒற்றுமைக்கு கேடு விளையக் கூடிய நிலைமை ஏற்பட்டது. எவ்வாருயினும் நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்டி அமெரிக்காவின் ஐக்கியத்தைக் காப்பாற்றி அடிமை நிலையை ஒழிக்க கங்கணம் கட்டிய ஜனதிபதி லிங்கனுக்கும் தென் இராச்சியங்களுக்கும் பகைமை ஏற்பட்டு உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. இறுதியாக ஆபிரகாம் லிங்கன் கட்சிக்கு வெற்றியேற்பட்டது. அடிமை நிலை அகற்றப்பட்டது. இவ்வாறு காலத்திற்குக் காலம் உள்நாட்டுப் போர்கள் நடைபெற்றுள்ளன. பிரித்தானியரது ஆட்சியை இலங்கை மக்கள் வெறுத்து பிரித்தானியருக்கெதிராகப் பல உள்நாட்டுப் போர்களை நடாத்தியுள்ளனர். எனவே ஒவ்வொரு நாட்டின் அரசியல் வரலாற்றை நாம் ஆராய்ந்தால் அந்த நாடுகளிளெல்லாம் உள்நாட்டுப் போர்கள் நடைபெற்றுள்ளதை நாம் அறியக் கூடியதாகவுள்ளது.

# 6 இலட்சியப் போர்கள்

பொதுவுடைமைக் கொள்கைதோன்றி அவை நாடுகளிடையே கைக்கொள்ளும்போது பல புரட்சிகள் நடைபெற்றுள்ளன. கார்ல்மாக்ஸ் வெளியிட்ட பொதுவுடைமைக் கருத்து யாதெனில் "சமூகத்தில் செல்வர்கள் தமது நிலைமையை மேலோங்கச் செய்யவும், அதேவேளை ஏழைகள் தமக்கு அடங்கி வாழவும், ஏற்றதாக அரசியலமைப்பை உருவாக்கி, தமக்குச் சாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமாக சட்டங்களை உருவாக்கி, பொதுமக்களைக் கொடுமைப் படுத்தும் கருவியாக அரசாங்கத்தை அமைத்தனர். இவ்வாறு தோன்றிய அரசாங்கத்தை செல்வந்தர், பொதுமக்களை அடக்கியாளும் கருவியாகப் பயன்படுத்தியமையால் முதலாளி, பாட்டாளி என்ற இரு வர்க்கங்களாகப் பிரிந்து இயங்குவதற்கு வழிவகுத்தது. காலத்திற்குக் காலம் நடைபெற்ற வாணிகத் தொழிற் புரட்சி காரணமாக சிற்சில வர்க்கப் போராட்டங்கள் நடந்து அவற்றின் விளைவாக ஒரு சாரார் ஆட்சிப் பீடத்திலிருந்த மற்ருெரு சாராரை நீக்கி வந்தபோதிலும் பாட்டாளி மக்கள் தாழ்த்தப்பட்டே வந்திருக்கின்றனர். இனி முதலாளித்துவ முறை முற்றிலும் முதிர்ந்த பிறகு பாட்டாளிகள் பொறுக்க முடியாத நிலையையடைந்து கொதித்தெழுந்து முதலாளிகளை ஒழித்து, பாட்டாளிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவர். அதன் விளைவாக எதிர்காலத்தில் எல்லா நாடுகளிலும், பாட்டாளிகளின் புரட்சிகள் வென்று, எங்கும் இனவர்க்க வேற்றுமைகளற்ற சமத்துவமுள்ள புதுப் பொதுவுடைமைச் சமுதாயம் தோன்றலாம்'' என்று கூறினர்.

ருஷியா, சீன ஆகிய நாடுகளிலும் வேறு சில நாடுகளிலும் பொதுவுடைமைக் கொள்கை பின்பற்றப் பட்டது. இக் கொள்கை கடைப்பிடிக்கப்படும் நாடுகளில் முதலாளிக்கும் பாட்டாளிக்குமிடையே வர்க்கப் போர் நிகழ்ந்தே தீரும். பாட்டாளிகள் ஒன்று சேர்ந்து முதலாளிகளை ஒழித்து பாட்டாளிகளின் அரசாங்கத்தை அமைப்பர்; சொத்துரிமைகள் எல்லாவற்றையும் அரசாங்க உரிமைகளாக்கி, ஒரு சமதர்ம சமுதாயத்தை உருவாக்கி, எல்லா மக்களும் ஒரே இனமாக வாழப் பழக்கப்படுவர்; இப்புதிய சமுதாயத்தில் அரசியல் கட்சிகள் மறைந்து ஏற்றத் தாழ்வுகள், பூசல் பொருமைகள் இல்லாத இலட்சிய சமுதாயம் உருவாக்கப்படும். இந்த இலட்சிய சமுதாயத்தை உருவாக்கும்போது சொத்துள்ளவர்கள் தம் பொருள்களையோ, பதவிகளையோ விடமாட்டார்களாகையால், அரசாங்கம் பலாத்காரத்தைக் கையாள நேரிடும். இந்நிலையில் முதலாளிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையே தகராறும் கிளர்ச்சிகளும் இடம் பெறும்; இதனல் பொதுமக்கள் புரட்சிகள் பல செய்து தமது உரிமைகளைப் பெறுவர்.

இப் பொதுவுடைமைக் கொள்கையைப் பல நாடுகள் எதிர்த்தன; மூசோலினி, ஹிட்லர் ஆகியோர் இதனை மும்மரமாக எதிர்த்தனர். ஏனைய நாடுகளான இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் என்பன எதிர்ப்புத் தெரிவித்தன. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் உலக நாடுகளிடையே பொதுவுடைமைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கை பெருமளவில் பரவியுள்ளது: இக் கொள்கைப்படி இலட்சிய சமுதாயம் அமைக்கப்படும்போது யுத்தங்கள் நடைபெற்றுள்ளன; வியட்னும், கொரியா ஆகிய நாடுகளில் இப் பொதுவுடைமைக் கொள்கையைப் பின்பற்ற முற்பட்டதால்தான் யுத்தங்கள் நடைபெற்றன. முதலாளித்துவ நாடுகள் இன்றும் இக் கொள்கையை எதிர்க்கின்றன;

# 7 மதப் போர்கள்

உலக நாடுகளிடையே நடைபெற்ற மதப் போர்களில் முக்கியத்துவம் வாய்ந்தது சிலுவை யுத்தங்களாகும். துருக்கியர் தமது பேரரசை விஸ்தரிக்கப் பல நாடுகளைக் கைப்பற்றினர்; அவ்வாறு நாடுகளைக் கைப்பற்றும்போது கிறீஸ்தவர்களின் புனித ஸ்தலமான ஜெருசலமும் கைப்பற்றப்பட்டு துருக்கியர் வசமானது. இந்நகரை மீட்பதற்காக 150 வருடங்களாகப் போர் நடைபெற்றது. போப்பாண்டவரும் திருச்சபையும் சேர்ந்து இவ் யுத்தத்தை நடத்தியது. இது 1095ஆம் ஆண்டு ஆரம்பமாகி நடைபெற்றது பெருந் தொகையான கிறீஸ்தவர்கள் இப்போரில் ஈடுபட்டார்கள். இப் புனித நகரத்தை கி. பி. 1099ஆம் ஆண்டு கிறிஸ்தவர் கைப்பற்றிய போதிலும் கி. பி. 1187ஆம் ஆண்டு திரும்பவும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது. இப்போரினுல் பெருந்தொகையான கிறீஸ்தவர்களும் முஸ்லீம்களும் இறந்தது மட்டுமன்றி பல தீமைகளும் நாடுகளுக்கு ஏற்பட்டது.

ஐரோப்பிய நாடுகளிடையேயும் மதப் போர்கள் நடைபெற்றுள்ளன. இவற்றை முப்பதாண்டுப் போர் என்பர். இப் போர் கி. பி. 1618—1648 வரை நடைபெற்றது. இப் போர் நடைபெற்றமைக்கான காரணம் யாதெனில் கத்தோலிக்க சமயத்திலிருந்த குறைபாடுகளைக் கண்ணுற்ற அறிஞர்கள் பல சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிட்டனர். இக் கருத்துக்களின் விளைவாக புரட்டஸ்தாந்து மதம் உருவாகியது. இம் மதம் ஐரோப்பிய நாடுகளிடையே பரவியபோது இதனை எதிர்த்த கத்தோலிக்க மக்கள் புரட்டஸ்தாந்து மதத்தைப் பின்பற்றிய மக்களுடன் போர் செய்தனர். எனவே ஐரோப்பிய நாடுகளிடையே மக்கள் தாம் விரும்பிய மதத்தை வளர்ப்பதற்காகவும் அதைப் பாதுகாப்பதற்காகவும் போர்கள் தொடுத்தனர். இப் போர் ஆரம்ப காலத்தில் சிறு போர்களாக உருவாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈற்றில் பெரும் போராக, முப்பதாண்டுப் போராக நடைபெற்றது.

இந்தியாவிலும் மதத்தை அடிப்படையாகக் கொண்டு இந்துக்களும் இஸ்லாமியரும் பல போர்களை நடத்தியுள்ளனர். கி. பி. 1806-ஆம் ஆண்டில் ஏற்பட்ட சிப்பாய்க் கலகம் மத அடிபடையிலேயே ஏற்பட்டது. போர் வீரர்களை அவர்களது சமயவுணர்ச்சிகளைப் புண்படுத்தும் முறையில் ஏற்படுத்தப்பட்ட சில விதிகளின் காரணமாகவே இக் கலகம் உண்டானது. எனவே ஒன்றுக்கு மேற்பட்ட மதங்களையுடைய சிறு நாடுகளில் கூட சிறியளவில் மதப் போர்கள் நடைபெற்றுள்ளன.

# 8 சுதந்திரப் போர்கள்

இன்று ஐக்கிய அமெரிக்கா என்றழைக்கப்படும் நாடு முன்பு பிரித்தானியரது குடியேற்ற நாடுகளிலொன்ருக இருந்தது. பிரித்தானியரது ஆட்சியால் இவர்களது சுதந்திரங்கள் பல வழிகளிலும் பறிக்கப்பட்டு வந்தது. ஏழாண்டுப் போரினல் ஏற்பட்ட தேசியக் கடனைக் கொடுப்பதற்கு குடியேற்ற நாடுகள் மீது பிரித்தானியா வரி விதித்தது. இதை குடியேற்ற நாடுகளிலொன்ருன அமெரிக்கா எதிர்த்தது. வட அமெரிக்காவில் பாதுகாப்புப் படை நிறுவ வேண்டிய பணத்தை முத்திரைப் பணம் மூலம் வசூலிக்க பிரித்தானியர் முற்பட்டபோதும் அமெரிக்கர் எதிர்த்தனர். பிரித்தானிய பாராளுமன்றத்தின் சட்டங்கள் தம்மைக் கட்டுப்படுத்தக்கூடாதென அமெரிக்கர் எண்ணினர். முத்திரைச் சட்டத்தை பிரித்தானிய பாராளுமன்றம் 1765-ஆம் ஆண்டு நிறைவேற்றியதும் கலவரங்கள் தோன்றின. அத்தோடு பிரித்தானியப் பொருட்களை வாங்க அமெரிக்கர் மறுத்துப் புரட்சி செய்தனர். 1767-ஆம் ஆண்டு இறக்குமதி வரிகள் பிரித்தானியரால் அமெரிக்கர் மீது விதிக்கப்பட்டது. இதை எதிர்த்தபோது தேயிலைமீது மட்டும் இறக்குமதி வரி விதிக்கப்பட்டது. 1773-ஆம் ஆண்டு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி மூலம் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையை கடலில் கொட்டித் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். (போஸ்ட்டன் தேநீர் விருந்து) இதனல் ஆங்கிலேயப் படை வீரரை குடியேற்ற நாடுகளில் நிரந்தரமாக வைத்திருக்க பிரித்தானியர் சட்டமியற்றினர். இத்தகைய செயல்கள் அமெரிக்கரின் சுதந்திரத்திற்கு ஆபத்தானது என்பதை உணர்ந்த அமெரிக்கக் குடியேற்றங்கள், பிலடெல்பியாவில் கூடி இங்கிலாந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் போக்கைக் கண்டித்துத் தீர்மானம் இயற்றி சமாதானமான முறையில் இதனைத் தீர்க்கும்படி மூன்றும் ஜோர்ஜ் மன்னனிடம் விண்ணப்பம் ஒன்றைக் கையளித்தனர். இதை மன்னன் மறுத்தான். கப்பல் வர்த்தகச் சட்டத்தை மீறி எல்லா நாடுகளுடன் வர்த்தகம் செய்தான். இதனால் அமெரிக்கா தனது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தியது. 775ஆம் ஆண்டு வர்ஜினியாவைச் சேர்ந்த ஜோர்ஜ் வாஷிங்டன் தலைமையில் 13 குடியேற்ற நாடுகள் 1783 ஆண்டுவரை போர் செய்து சுதந்திரம் பெற்றன.

பால்கன் பிரதேசத்து நாடுகள் துருக்கியரின் ஆட்சியை எதிர்த்துச் சுதந்திரப் போர் செய்து சுதந்திரமடைந்துள்ளன.

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி செய்தபோது, கண்டி மக்கள் ஹெப்பிட்டிப்பொலை தலைமையில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் செய்தபோதும் வெற்றி பெறவில்லை. ஈற்றில் ஹெப்பிட்டிப்பொலை சிரச்சேதம் செய்யப்பட்டான்.

இந்தியாவிலும் ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெறுவதற்காக 1857ஆம் ஆண்டு சிப்பாய்கள் போர் செய்து தோல்வியடைந்தனர். ஆயினும் பின்னர் தோன்றிய, மகாத்மா காந்தி போன்ற பல பெரும் தலைவர்களின் சுதந்திர இயக்க அகிம்சைப் போர்களினால் இந்தியா சுதந்திரம் பெற்றது. (1947) இலங்கை மக்கள் ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்துச் செய்த கிளர்ச்சிகளின் பயனாக இலங்கையும் (1948) சுதந்திரம் பெற்றது.

பிரான்சியர், ஒல்லாந்தர், போர்த்துக்கேயர் என்பவர்களும் தமது குடியேற்ற நாடுகள் செய்த போர்களினால் தமது குடியேற்ற நாடுகளுக்கு சுதந்திரம் அளித்தனர். ஆபிரிக்க நாடுகளும் சுதந்திரப் போர் மூலம் சுதந்திரம் பெற்றுள்ளன.

# 9 யுத்தங்களுக்கான காரணங்கள்

புராதன காலத்தில் போர்கள் வரவேற்கப்பட்டன. சிறந்த வீரனாக இருப்பது புகழுக்குரியதாகக் கணிக்கப்பட்டது. சிறந்த போர் வீரனுக்கு பட்டங்களும், விருதுகளும் அளிக்கப்பட்டன. போர் செய்வது சில காலகட்டங்களில் பொழுதுபோக்காகவும் சில காலகட்டங்களில் அது ஒரு விளையாட்டாகவும் மக்களிடையே நிலவியது. இப் போர்கள் தோன்றுவதற்கு இனவாதமும் ஒரு காரணமாக இருந்தது. ஒரு இனம் மற்ற இனத்தை அழிப்பதற்காகவும் போர்களை நடாத்தியுள்ளதை வரலாற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. ஸ்பாட்டா நகரத்தவர் போர் செய்வதிலுள்ள விருப்பத்தினுல் பல போர்கள் நிகழ்த்தினர். ஜெர்மனியில் ஹிட்லர் சர்வாதிகாரத்தை நிலைநாட்ட மக்களிடையே இனவாதப் பிரசாரத்தைப் பரப்பினுன். ஆளவேண்டிய இனம் ஆரிய இனம் என்றும், யூத இனம் அழிக்கப்படவேண்டிய இனம் எனப் பிரசாரம் செய்து பொதுவுடைமைவாதிகளையும், யூதர்களையும், ஜெர்மனிய மக்களின் எதிரிகளாக்கி அவர்களைக் கொடுமைப்படுத்தித் தனது சர்வாதிகாரத்தை நிலைநாட்டப் பல போர்கள் செய்தான்.

பொதுவுடைமைக் கொள்கைகள் நாடுகளிடையே பரப்பப்பட்டபோதும் முதலாளி, தொழிலாளி என்ற இரு வர்க்கங்களிடையே போர்கள் நடைபெற்றன. இக் கொள்கை உலக நாடுகளிடையே பரவக்கூடாது என்பதற்காகவும், பல நாடுகளில் வர்க்கப் போர்கள் நடைபெற்றுள்ளன. அடுத்ததாக அக்கால மக்கள் மதத்தில் மிகுந்த பற்றுடையவர்களாக இருந்தார்கள். ஏனைய மதங்கள் தோன்றும்போது தமது மதம் அழிந்து விடலாமென்ற அச்சத்தினுல் மதப் போர்கள் பல நாடுகளில் நடைபெற்றுள்ளன. அரசியல் தலைவர்களின் பிரசாரங்களும் போர்கள் நடைபெறுவதற்குக் காரணமாக அமைகின்றன. 'ஹிட்லர்' சர்வாதிகாரத்தை நிலைநாட்ட நாட்டில் பல பிரசாரங்களை நடாத்தியுள்ளான்.

போர்கள் தோன்றுவதற்கு உளவியல் காரணங்களும் காரணமாகவுள்ளது. அண்டை நாடுகள் தம்மீது படையெடுத்துத் தமது நாட்டைக் கைப்பற்றிவிடும் என்ற பயம். அத்தோடு அயல் நாடுகளையும் கைப்பற்றித் தமது நாட்டுடன் சேர்த்து ஆளவேண்டுமென்ற பேரவாவும் போர்கள் நடைபெறக் காரணமாக உள்ளன. இந்தியாவில் சோழராட்சிக் காலத்தில் இலங்கையைக் கைப்பற்றினர். இதற்கு அக்கால மன்னரின் பேராசையே காரணமாகும்.

முதலாம் உலகப் போரின்பின் ஜெர்மனிமீது விரோதத்தினுலும் பழிவாங்கும் உணர்வினுலும் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதுடன் நாட்டு மக்களுக்குத் தொல்லைகளும் அளிக்கப்பட்டு வந்தது. இதனுல் மக்கள் விரக்தியடைந்திருந்த வேளையில் ஹிட்லரின் பிரசாரத்தினுல் மக்கள் அவன் மீது நம்பிக்கை கொண்டனர். ஹிட்லரின் தனிப்பட்ட நம்பிக்கைகளை மக்கள் ஏற்றமையினுலும் மக்கள் போர் செய்தனர்.

அரசியற் காரணங்களுக்காக நடைபெற்ற போர்கள் யாவும் ஆதியத்தியத்தை விரிவடையச் செய்த போர்களாகும். ஆதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியக் கொள்கைகளினால் நாடுகளைக் கைப்பற்றும்போது கைப்பற்றப்படும் நாடு தனது இறைமையை இழக்கிறது. பின்னர் இந்த இறைமையைக் கைப்பற்றுவதற்காகவும் போர்கள் நடைபெற்றுள்ளன. உதாரணமாக நெப்போலியன் ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றித் தனது ஆட்சியின்கீழ் வைத்திருந்த போது அந்நாடுகள் அவனது ஆட்சியினால் நன்மையடைந்த போதும் தமது இறைமையை இழந்திருந்தன. இழந்த தமது இறைமையைப் பெறுவதற்காக அவனை எதிர்த்துப் போர்செய்து தமது இறைமையைக் கைப்பற்றினர்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் போன்ற ஐரோப்பியர் தமது ஆதிக்கத்தைப் பரப்பப் பல நாடுகளில் தமது குடியேற்றங்களை ஸ்தாபித்தனர். இக் குடியேற்றங்களைத் தொடர்ந்து தம் வசம் வைத்திருக்கவும், அக் குடியேற்றங்களிலிருந்து இதுவரை பெற்ற பயன்களைத் தொடர்ந்து பெறுவதற்காகவும் குடியேற்றவாதப் போர்கள் பலவற்றை நடாத்தியுள்ளனர்.

வலிமை மிக்க நாடு மற்றைய நாட்டைக் கைப்பற்றுவதற்கு முக்கிய காரணம் அந்நாட்டின் பொருளாதாரமாகும். ஒரு காலகட்டத்தில் ஆசியாவில் வர்த்தகத்தில் ஈடுபட்ட போர்த்துக்கேயர் ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோர் வர்த்தகத்திற்காக ஒரு நாட்டிடமிருந்து தாம் கைப்பற்றுவதற்காகப் பல போர்களை நடாத்தியுள்ளனர். இவ்வாறு பல நாடுகளில் வர்த்தகப் போர்கள் பொருளாதாரக் காரணத்திற்காக நடைபெற்றுள்ளன.

கைத்தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சியால் மூலப்பொருட்களை வாங்குவதற்கும் தாம் உருவாக்கிய கைத்தொழிற் பொருட்களை விற்கவும் சந்தைகளை ஏற்படுத்த வேண்டிய நிலைமை உண்டானது. இதனால் உலகச் சந்தைகளில் ஏகபோக உரிமை பெறுவதற்காக ஐரோப்பிய நாடுகள் ஒன்றோடொன்று போட்டியிட்டு பல போர்களை நடாத்தியுள்ளன.

ஆதிபத்திய நாடுகள் போர்கள் மூலம் அதிக செல்வத்தைத் தாம் கைப்பற்றிய நாடுகளிலிருந்து பெற்றன. அச்செல்வங்களை தாம் கைப்பற்றிய நாடுகளில் பின்தங்கிய நாடுகளில், முதலிட்டு அதிக செல்வத்தை மேலும் பெருக்கின. உதாரணமாக பிரித்தானியா ஆசிய நாடுகளிலிருந்து பெற்ற பெருந்தொகையான செல்வத்தை ஐரோப்பிய நாடுகளின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தொகைப் பெருக்கமும் போர்கள் செய்வதற்கு காரணமாகிறது. சிறிய நாடு தனது சனத்தொகைப் பெருக்கத்தைச் சமாளிக்க அண்டையிலிருக்கும் நாட்டைக் கைப்பற்ற முயல்கிறது. ஜப்பான் சனத்தொகைப் பெருக்கம் கூடியநாடு. இது சீனுவில் செல்வாக்குப் பெறுவதற்காகப் பல போர்களை நடாத்தியுள்ளது. சீனுவில் பிரித்தானியர், பிரான்சியர், ருஷியர் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். எனவே அண்டை நாட்டிலிருக்கும் நிலத்தை தமது ஜனங்களுக்குப் பயன் படுத்துவதற்காகவும் போர்கள் நடைபெற்றுள்ளன.

# 10 முதலாம் உலகப் போர் 1914-1918

முதலாம் உலகப் போர் ஐரோப்பிய நாடுகளிடையே சுமார் 5 ஆண்டுகளாக நடைபெற்றது. ஐரோப்பிய நாடுகள் உலகில் பல பாகங்களிலும் குடியேற்றங்களை ஸ்தாபித்திருந்தமையினுல் இப் போர் உலகம் முழுவதும் பரவியது எனலாம். இக் காரணத்தினுல் தான் இப் போரின் தீயவிளைவுகள் உலக நாடுகளின் பெரும் பகுதிகளைத் தாக்கியது. ஒவ்வொரு நாடும் இப்போரினுல் நேரடியாக அல்லது மறைமுகமாகத் தாக்கப்பட்டது. இப்போரில் ஐரோப்பிய வல்லரசுகளான இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ருஷியா, ஆஸ்திரியா, துருக்கி, இத்தாலி என்பனவும், ஜப்பான் அமெரிக்கா என்பனவும் ஈடுபட்டன.

இப்போரை விடக் கூடிய காலத்திற்கு வேறு போர்கள் பல நடைபெற்றுள்ளன. ஆயினும் குறுகிய காலத்தில் நடந்த இப் போரை உலகப் போர் என்பதற்குக் காரணம் உலகத்திலுள்ள பெரும் பகுதி மக்கள் இப் போரினுல் அழிவுற்றனர். பல நாடுகள் அழிக்கப்பட்டன. உலகின் பொருளாதார நிலைக்கு பெரும் ஆபத்து தோன்றி மறைந்தது. நவீன விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் போர் காலங்களில் 'டாங்கி' விமானப் படைகள், அணு குண்டுகள், நீர்மூழ்கிக் கப்பல்கள் என்பனவும் பயன்படுத்தப் பட்டன.

ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட சண்டையால் அதன் குடியேற்ற நாடுகளையும் எதிரிகள் தாக்கினர். விமான மூலம் அணுகுண்டுகளை நகரங்கள் மீது வீசியதால் றோட்டுக்கள், தொழிற்சாலைகள், கட்டிடங்கள் என்பன அழிந்ததுடன் பெரும் உயிர்ச் சேதமும் ஏற்பட்டது. நீர் மூழ்கிக் கப்பல்கள் கடற் போக்குவரத்தை தடை செய்ததால் குடியேற்ற நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் உணவுப் பஞ்சம் கூட ஏற்பட்டது. எனவே இப் போர் உலகத்திலுள்ள மக்கள் அனைவருக்கும் பயத்தையும் அழிவையும் கொடுத்ததினாலும், இப் போரின் தீயவிளைவுகளால் உலக நாடுகள் பலவும் பாதிப்புற்றதாலும் இப்போரை உலகப் போர் என்பது பொருத்தமானதே.

## (அ) காரணங்கள்

### ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சி:

ஐரோப்பிய நாடுகளில் இத்தாலியும் ஜெர்மனியும் தாம் எழுச்சி பெறவேண்டுமென்ற ஓர் நிலையில் இருந்தன. ஆனாலும் இவர்களை பல நாடுகள் அடக்க முற்பட்டபோதும் அவை பயன் பெறவில்லை. இத்தாலியும் ஜேர்மனியும் பிரிவினையால் நெடுங் காலமாக சீர்குலைக்கப்பட்டு வந்தன. இத்தாலியில் தோன்றிய திறமைமிக்க தலைவர்களான கவூர், கரிபால்டி, விக்ரர் இமானுவேல் என்பவர்களாலும், ஜெர்மனியில் தோன்றிய சிறந்த ராஜ தந்திரியான பிஸ்மார்க்கும் நாடுகளை ஒற்றுமையடையச் செய்தனர். இதனால் இந் நாடுகளும் ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போல் தாமும் பொருளாதாரம், வர்த்தகம் என்பனவற்றில் அபிவிருத்தியடைவதற்காக ஏகாதிபத்திய நாடுகளை எதிர்த்துப் போரிட்டு வெற்றிபெற வேண்டுமென விருப்பம் கொண்டிருந்தன.

### மொரோக்கோவைக் கைப்பற்ற பிரான்சும், ஜெர்மனியும் கொண்டிருந்த பேரவா:

பிரான்ஸ் நீண்ட காலமாக அல்ஜீரியாவைத் தன் வசம் வைத்திருந்தது. இதனை அடுத்திருந்த மொரோக்கோ தேசம் குழப்பமான நிலையிலிருந்தது. பிரான்ஸ் மொரோக்கோவையும் கைப்பற்ற விரும்பியது. அதே வேளை ஸ்பெயினும் மொரோக்கோ மீது கண் வைத்திருந்தது. ஜெர்மனி தான் மொரோக்கோவைக் கைப்பற்ற விரும்பியது எனவே ஜெர்மனி சூழ்ச்சியாக 1906 ஆம் ஆண்டு அல்ஜெசிறாசிற் மகாநாடு கூடியது. இதன் பின்னர் 1911 ஆம் ஆண்டு மொரோக்கோவில் உள்நாட்டுக் குழப்பம் அதிகரித்ததனால் அதனையடக்க அந்நாட்டு சுல்தான் பிரான்சியரின் உதவியைக் கோரினான். உடனே மொரோக்கோவில் இருந்த ஜேர்மனியருக்கு அபாயநிலை ஏற்பட்டதென போலிக் காரணம் கூறி அகடீர் என்ற அங்குள்ள துறைமுகத்திற்கு ஒரு பீரங்கிக் கப்பலை அனுப்பினர். இச் செயல் 1906 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்திற்கு மாறானதால் பலநெருக்கடிகளைத் தோற்றுவித்தது. பிரித்தானியா பிரான்சிற்கு நேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமாக உதவி செய்ததினுல் ஜேர்மனிக்கு பிரித்தானியாமீது வெறுப்புத் தோன்றியது. மத்தியதரைக் கடலிலுள்ள கப்பற் படையை பிரான்சியரைக் கவனிக்கும்படி பிரித்தானியா கூறியது. வடகடலில் பிரித்தானியரின் கப்பற்படை பெருமளவில் நிறுத்தப்பட்டது. இவற்றினுல் கசப்புற்ற ஜெர்மனி போருக்கு தன்னை தயார் நிலையில் ஆயத்தமாக்கியது.

### சிதைந்து வந்த துருக்கியில் ஜெர்மனியர் ஆதிக்கம்பெற முயன்றமை:

துருக்கிய விஷயங்களில் நீண்டகாலமாக ஜெர்மனி கவனம் செலுத்தி வந்தது. 1898 ஆம் ஆண்டு கைசர் உவில்லியம், கொன்ஸ்தாந்தி நோப்பிலுக்கும், பாலஸ்தீனத்திற்கும் விஜயம் செய்தபோது தான் எப்போதும் முஸ்லீம்களின் நண்பனுக இருப்பேன் என்று கூறியபோதே ஜெர்மனிச்கு துருக்கியிலிருந்த கவனம் உலகத்தாருக்கு வெளிப்படையாகத் தெரிந்தது விட்டது. பெருந்தொகையான முஸ்லீம்கள் பிரித்தானியர், பிராஞ்சியர், ருஷியர் என்போரின் ஆட்சிக்குட்பட்டிருந்தனர். ஜெர்மனியரும் துருக்கியில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். ஜெர்மனிய வியாபாரிகள் பெருந்தொகையினர் துருக்கியில் இருந்தார்கள். கொன்ஸ்தாந்திநோப்பிலுக்கு நேர் எதிராக இருந்த ஸ்குட்டாரியிலிருந்து பாக்டாட்டுக்கும் பாரசீக குடாவுக்கும் வியன்னுவிற்கும் பெரிளினுக்கும் புகையிரதப் பாதைகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பாதைகள் சேர்பியா பல்கேரியா நீங்கலாக, ஜெர்மனிக்கு நட்பான நாடுகளினூடாகச் செல்லும். இப்பாதை அமைக்கப்பட்டால் சேர்பியா பல்கேரியா ஆகியவற்றில் ஒன்றை ஜெர்மனி கைப்பற்றலாமென நம்பியது. பல்கேரிய அரசனை பெர்டினந்து, பல்கேரியா, துருக்கிக்குக் கீழ்ப்படாத ஒரு சுதந்திர நாடெனப் பிரகடனம் செய்தான். உடனே ஆஸ்திரியா எர்சகொவினுவை நிலையாகத் தனது இராச்சியத்துடன் சேர்த்துக் கொண்டது. உடனே ருஷியா பிரான்சை பிரித்தானியாவைக் கேளாது போர் தொடுத்து தோல்வியுற்றது. ஆஸ்திரியாவிற்கு ஜெர்மனி உதவி செய்தது. ஆஸ்திரியா இப்போரினுல் போஸ்னியா, எர்சகொவினு ஆகியவற்றை தன்னுடன் இணைத்தது. இதனுல் சோபியா ஆஸ்திரியா மேலும் வலிமை பெறலாமெனப் பயந்து ஆஸ்திரிய ஹங்கேரிக்குரிய பிரதேசங்களிலிருந்த சிலோவோனியரின் தேசிய உணர்ச்சியைக் கிளப்ப தன்னுலியன்றவரை முயன்றனர். இச் செய்கையால் சேர்பியா, பெர்லின் - பாக்டாட் பாதைக்கு ஒரு தடையென்பதையும் இவர்கள் ஆஸ்திரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹங்கேரிக்கு அபாயம் விளைவிக்கக் கூடியவர்கள் என்பதையும் ஜெர்மனியர் உணர்ந்தனர். எனவே ஜெர்மனியர் சூழ்ச்சியாக தமது செல்வாக்கை துருக்கியில் ஸ்தாபித்தனர். ஜெர்மனி வேண்டியபோது துருக்கியின் உதவியைப் பெறக்கூடிய நிலைமையை உருவாக்கியிருந்தது. ஜெர்மனியராதிக்கத்தில் பெர்லின் பாக்டாட் புகையிரத வீதி கூடிய விரைவுடன் அமைக்கப்பட்டது. இதுவே பிரித்தானியாவிற்கும், ருஷியாவிற்கும் பெருந்திகிலை ஏற்படுத்தியது. காரணம் இவ்விரு நாடுகளுக்குமுரிய ஆசியப் பிரதேசங்களை எதிர்க்கக்கூடிய நிலைமையை ஜெர்மனிக்கு இப் புகையிரதப் பாதையால் கிடைக்கக்கூடியதாகவிருந்தது.

### இத்தாலிமீது ஜெர்மனிக்கேற்பட்ட அவநம்பிக்கை

நீண்டகாலமாக ஆபிரிக்காவைக் கைப்பற்ற வேண்டுமென்ற ஆசைகொண்டிருந்த இத்தாலி, அகடீரில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருந்தபோது துருக்கி மீது போர் தொடுத்தது. துருக்கியின் மாகாணமான திரிப்போலியைத் தாக்கியது. இச் செயல் ஜெர்மனிக்கு இத்தாலி மீதிருந்த நம்பிக்கையை இழக்கச் செய்தது. மூவருடன்படிக்கையில் ஜெர்மனி, இத்தாலி, ஆஸ்திரியா என்பன ஒன்றுகூடி தமக்குள் ஒப்பந்தம் செய்திருந்தன. இந்த ஒப்பந்தப்படி துருக்கிக்கு ஜெர்மனி உதவ முடியாத நிலையிலிருந்தது. அதே வேளை ஜெர்மனியராதிக்கத்திலிருந்த துருக்கி மீது இத்தாலி போர் தொடுத்தமை விஷமத்தனமானது என ஜெர்மனி நம்பியது. இப் போரினால் இத்தாலிக்கு திரிப் போலியையும் ஈஜியன் கடலிலிருந்த சில தீவுகளையும் துருக்கி கொடுத்தது. எனவே இச் செயல்களால் ஜெர்மனி இத்தாலியை நம்புவதைக் கைவிட்டது.

### பால்கன் பிரதேசத்தில் நடந்த போர்கள்:

கி. பி. 1912ஆம் ஆண்டில் பால்கன் பிரதேசத்திலிருந்த கிறிஸ்தவ நாடுகள் துருக்கியருக்கு எதிராக ஒன்று சேர்ந்து போரிட்டு துருக்கியரை கொன்ஸ்தாந்திநோப்பிளிலும் அதற்கு அருகிலுள்ள நாடும் தவிர்ந்த ஏனைய பால்க்கன் தீபகற்பத்திலிருந்து துரத்திவிட்டனர். பின்னர் போரினால் கைப்பற்றப்பட்ட துருக்கியப் பிரதேசங்களைப் பங்கிடுவதில் போரிட்ட நாடுகளிடையே அபிப்பிராயபேதமேற்பட்டது. இதனை ஐரோப்பிய வல்லரசுகள் தீர்த்து வைத்தபோது புல்கேரியாவிற்கும் ஏனைய பால்க்கன் நாடுகளுக்குமிடையே மனத்தாங்கலை உண்டாக்கியதால் மீண்டும் போர் தொடங்கியது. ருமேனியா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்பியா, கிறீஸ் ஆகிய மூன்று பால்க்கன் நாடுகளும் வல்லரசுகளின் சம்மதமின்றி மாதான ஏற்பாடுகளைச் செய்தன. இதனால் பல்கேரியா துருக்கியுடனும் அதன் நட்பு நாடான ஜெர்மனியுடனும், ஆஸ்திரியா — ஹங்கேரியுடனும் சேர்ந்துகொள்வதாக அறிவித்தது.

சேர்பியா வெற்றி பெற்றமையை ஆஸ்திரியா — ஹங்கேரி விரும்பவில்லை. காரணம் சேர்பியா வெற்றி பெற்றதைப்போல் தாமும் விடுதலை பெறவேண்டுமென்ற தேசிய உணர்ச்சி ஆஸ்திரியா — ஹங்கேரியின் தென் பிரதேசத்திலிருந்த சிலாவியருக்கு ஏற்பட்டால் தனக்கு அது ஆபத்தை உண்டுபண்ணுமென ஆஸ்திரியா — ஹங்கேரி எண்ணியது. பெர்லின் — பாக்டாட் புகையிரத வீதியில் சேர்பியா முன்னை விட மேலும் ஜெர்மனிக்கு அதிக தடையாக இருந்தது. ஆஸ்திரியா — ஹங்கேரியின் தென் கிழக்கு மூலையிலிருந்த பல்லாயிரக் கணக்கான ரூமேனியரின் நிலைமையிட்டு ஆஸ்திரியா — ஹங்கேரியுடன் ரூமேனியாவும் போர் செய்தது. எனவே பால்க்கன் நாடுகளிடையே திருப்தியின்மையும் போர்மூளக் காரணமாயிற்று.

## 1914ஆம் ஆண்டு ஐரோப்பாவின் அரசியல் நிலைமை:

ஐரோப்பாவில் வல்லரசுகளும் அவர்களுடன் சேர்ந்திருந்த சிறு இராச்சியங்களும் சேர்ந்து இரு கட்சிகளாகவிருந்தன. ஒரு கட்சியினர் மூவருடன்படிக்கையைச் சார்ந்த வல்லரசுகள் இதில் ஜெர்மனி, இத்தாலி ஆஸ்திரியா ஹங்கேரி என்பன அங்கம் வகித்தன. இவற்றுடன் பின்னர் துருக்கியும் பல்கேரியாவும் சேர்ந்துகொண்டது. மற்றைய கட்சி மனமுவந்து நட்புறவு பூண்ட மூன்று வல்லரசுகளாகும். இதில் பிரான்ஸ், ருஷியா, பிரித்தானியா என்பன அங்கம் வகித்தன. ருஷியா சேர்பியாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. பெல்ஜியம், ஜெர்மனியின் செல்வாக்கிற்குப் பயந்து பிரான்ஸையும், பிரித்தானியாவையும் உதவிக்கு நம்பியிருந்தது. ரூமேனியாவும், கிரீசும் பிரித்தானியாவையும் பிரான்சையும் ஆதரித்தன. இவ்விரு கட்சிகளும் ஒன்றையொன்று கண்டஞ்சியது. இப்பயமே போர் மூளக் காரணமாக இருந்தது. போர் நடைபெற்றால் தம்மை எதிரியிடமிருந்து காக்க வேண்டுமென்பதற்காக வல்லரசுகள் தமது படைபலத்தை விருத்திசெய்தன. இவ்வாறு விருத்தி செய்தமையால் கட்டாயமாகப் போர் மூள வேண்டிய நிலையை எல்லா நாடுகளிலும் ஏற்படுத்தியது. ஒவ்வொரு நாடும் தனது நாட்டின் கடற்படையையும், தரைப் படையையும் விருத்தி செய்யும்போது அடுத்த நாட்டின் விரோதத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியச் சம்பாதித்துக் கொண்டது; பிரித்தானியா தவிர்ந்த ஏனைய நாடுகள் போரை வரவேற்றன; ஜெர்மனியப் போர் வீரர்களும், ஆஸ்திரியா—ஹங்கேரிய, ருஷ்ய, இராச்சியங்களின் இராஜதந்திரிகள் ஆகியோர் போர் தவிர்க்கமுடியாததொன் றெனக் கருதினர். 1914ஆம் ஆண்டிலேயே தமது நாடு போருக்கு ஆயத்தமென இவர்கள் கருதத் தொடங்கிவிட்டனர்; பால்திக்குக் கடலிலிருந்து வட கடலுக்கு மிகப்பெரிய சண்டைக் கப்பல்கள் செல்லக்கூடிய வசதியான கீல் கால்வாய் திறக்கப் பட்டதும் படைவீரரை ஒன்று சேர்த்து சண்டைக்கு ஆயத்தம் செய்யும் வேலைகள் முடிவடைந்தது;

உலகப் போர் தொடங்கியதற்கு உண்மையான காரணம் பெரிய வல்லரசுகள் ஒவ்வொன்றும் ஏனையவற்றுடன் கொண் டிருந்த ஆத்திரம், ஒவ்வொரு நாட்டுத் தலைவரும் தாம் சமா தானத்தை விரும்புவதாகவும் ஏனையோர் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தப்பான எண்ணம் கொண்டிருந்தமையும், ஒவ்வொரு நாடும் ஏனைய நாடு தன்னுடன் எந்நேரமும் வீணாகத் தன் னுடன் போர் புரியுமென எண்ணிப் பயந்திருந்தமையும், இரும் புருக்குத் தொழிற்சாலைகள் பெருகினமையால் பெருமளவு படைக்கலங்கள் செய்து குவிக்கப்பட்டமையும், இந்த உற்பத்தி யாளர்கள் போரை வரவேற்றமையும், உலக மக்கள் தமது அர சியல் விவகாரங்கள் முழுவதையும் அரசியற் தலைவர்களிடமும், இராஜதந்திரிகளிடமும் ஒப்படைத்து தாம் ஒதுங்கி வாழ்ந்த மையால் இவர்கள் தமது விருப்பத்தின்படி நாட்டை வழிநடத்திய மையும் போர்மூள அடிப்படைக் காரணமாக அமைந்தன.

### ஆஸ்திரிய இளவரசனின் படுகொலை:

ஆஸ்திரியா—ஹங்கேரிய இளவரசனாகவிருந்த பிரான்சு— பெர்டினந்து அந்நாட்டு விஷயங்களில் ஓரளவு அதிகாரத்தை, சிலாவியருக்கு அளிக்க விரும்பியவன்; இவன் தனது மனைவியுடன் போஸ்னியாவிற் பயணம் செய்தபோது, சேர்பியா நாட்டில் பற்று மிகுந்த போஸ்னிய இளைஞனால் செரஜேவோ என்ற நகரத்தில் கொலை செய்யப்பட்டான். சேர்பிய அரசாங் கம் இக் கொலைக்கு உடந்தையாக இருந்ததென குற்றம் சுமத்தி இக் கொலையைத் தமக்குச் சாதகமாக்க ஆஸ்திரிய அரசியல் நிபுணர் எண்ணம் கொண்டு ஜெர்மனியின் அங்கீகாரத்துடன் சேர்பியாவை போரிடுமாறு அழைத்தனர். ஆஸ்திரியா பல நிபந்தனைகளை சேர்பியா மீது விதித்தது. இதற்கு சேர்பியா இணங்க மறுத்தது. சேர்பியாவிற்கு ருஷியா உதவ முன் வந் தது. 1914ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28ஆம் திகதி சேர்பியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது ஆஸ்திரியா ஹங்கேரி போர் தொடங்கியது. ஜெர்மனி ருஷியாவுடன் போர் தொடுத்தது; பிரித்தானியா பெல்ஜிய நாட்டின் நடுநிலைமையைக் காக்கும்படி பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய இரு நாடுகளையும் கேட்டது. ஆயினும் ஜெர்மனி இதனை மறுத்து பெல்ஜியத்தினூடாகப் படைகளை அனுப்பியது. பிரான்சின் கடற்கரையை ஜெர்மனியின் கடற்படையினின்றும் காக்க பிரித்தானியா முன்பே உடன்படிக்கை மூலம் உறுதியளித்திருந்தது. பெல்ஜியமும் பிரித்தானியரை உதவும்படி கோரிக்கை விடுத்தது. எனவே ஆகஸ்ட் 4-ம் திகதி பிரித்தானியா ஜெர்மனியுடன் போர் தொடங்கியது.

இவ்வாறு வல்லரசுகளுக்கிடையே போர் தொடங்கியதும் விடுதலை வேண்டி நின்ற ஏனைய இராச்சியங்களும், போரின் மூலம் சமாதானத்தை நிலைநாட்டலாமென நம்பிய ஏனைய வல்லரசு நாடுகளும் திடீரென போரைத் தொடக்கின; இப்போர் உலகம் முழுவதும் பரவலாக நடைபெறத் தொடங்கியது.

## (ஆ) இப்போர் நிகழ்ந்தமுறை

பிரதான போர்க்களங்கள் ஐரோப்பாவிலிருந்தன. சில போர்க்களங்கள் ஆசியாவிலும், ஆபிரிக்காவிலுமிருந்தன. கடற் பிரதேசங்களும், பிரித்தானியாவிற்கும், ஜேர்மனிக்குமிடையே யிருந்த வடகடலும் மிகப்பிரதானமான போர்க்களங்களாக விருந்தன. மத்திய வல்லரசுகள் என அழைக்கப்பட்ட ஜேர்மனி ஆஸ்திரியா—ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி என்பன தம்மைச் சூழவிருந்த நேசதேசங்கள் என்றழைக்கப்பட்ட பெரிய பிரித்தானியா, பிரான்ஸ், பெல்ஜியம், ருஷியா, சேர்பியா, இத்தாலி என்னும் ஆறு வல்லரசுகளுடன் போர்செய்தன. இவர்களுடன் பிற்காலத்தில் இருவல்லரசுகள் பல நேச நாடுகளுடன் சேர்ந்து போர் செய்தன; ருஷியா 1917 ஆம் ஆண்டு போரிலிருந்து விலக அதன் இடத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகள் எடுத்துக் கொண்டது. பிரித்தானியாவுடன் பின்னர் பிரித்தானிய சாம்ராச்சியங்கள் முழுவதும் சேர்ந்து போரிட்டது.

போர்நடந்த முறையை இனி ஆராய்வோம்: ஜெர்மனி பெல்ஜியத்தினூடாகச் சென்று பிரான்சுடன் போர் செய்ததுடன் போர் தொடங்கியது. மேற்றிசையிலும், கீழ்த்திசையிலும் கடலிலும் போர் நடைபெற்றது. மேற்றிசைப் போர்க்களத்தில் நடைபெற்ற போரில் ஜெர்மனியரின் நோக்கம் ருஷியாவின் தாக்குதலில் இருந்து தப்பி பெல்ஜியத்தினூடே சென்று பிரான்ஸிய தலைநகரான பாரிசைத் தாக்குவது. பெல்ஜியம் போரிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவர் எவரையும் தன் நாட்டினுள் நுழையக்கூடாதென உடன் படிக்கை செய்திருந்தது. இதனை மதியாது ஜெர்மனி பெல்ஜியத்தினூடாகச் சென்றதால் பெல்ஜியமும் ஜெர்மனியும் பத்து நாட்கள் போர் செய்தன. இப் போரினால் பிரித்தானிய அவசரப்படை ஆங்கிலக் கால்வாயைத் தாண்டிச் சென்று மோன்ஸ் என்னும் பெல்ஜியப் பட்டினத்தைச் சுற்றிப் படைகளை நிறுத்த உதவியது. ஆயினும் பிரான்சின் இடது புறத்தை சுற்றிவந்த ஜெர்மனியரை எதிர்க்கக்கூடிய ஆயத்தம் இல்லாதிருந்த பிரான்சியர் ஜெர்மனியரிடம் தோற்று பாரீசுக்கு பின்வாங்கியதால் பிரித்தானியரும் பின்வாங்கினர். பெல்ஜியப்படை பின்வாங்கியதும் ஜெர்மனியர் பொதுமக்களைக் கொன்று குவித்துப் பல நகரங்களை அழித்தனர்.

பிரான்சியரை எதிர்த்த ஜெர்மனியர் இறுதிவரை வெற்றி பெறவில்லை, ஜெர்மனியப் படைகள் 'ஏன்' நதிக்கு கிழக்கு மேற்காக இருந்த தானங்களில் இருந்தது. இரு கட்சியினரும் ஆங்கிலக் கால்வாயின் கரையிலிருந்து துறைமுகங்களைக் கைப்பற்ற பல வழிகளைக் கையாண்டும், இறுதிவரை இருகட்சியினராலு கைப்பற்ற முடியவில்லை.

கடலில் நடந்த போரில் பிரித்தானியரை ஜெர்மனியரால் தோற்கடிக்க முடியவில்லை. பிரித்தானியரிடம் சிறந்த கப்பற் படை இருந்தமையால் ஜெர்மனியரால் வெல்ல முடியவில்லை. ஜெர்மனியர் கடலில் கடற் கண்ணிகளை வெடிக்க வைத்து தம்மைப் பாதுகாத்ததுடன் நேச வல்லரசுகளின் வியாபாரக் கப்பல்களை உலகின் பல்வேறு பாகங்களிலிருந்த ஜெர்மனிக் கப்பல்கள் நாசம் விளைவித்தன. ஜெர்மனியப் பெரிய போர்க்கப்பல்கள் அதிகமாக வெளியே வந்து போரிடுவதில்லை. பிரித்தானிய போர்க் கப்பல்கள் ஜெர்மனிக்குள் அயல்நாட்டுப் பொருட்கள் நுழைய முடியாதவாறு தடுத்துக் கொண்டே இருந்தது.

கிழ்த்திசைப் போர்க்களத்தில் ருஷியப் படைகள் பிரஷ்ஷியாவின் மீது படையெடுத்து வெற்றிபெற்று அந்நாடு முழுவதும் தம் இஷ்டம்போல் திரிந்தன இந் நிலைமையில் ருஷியரை ஜெர்மனியர் எதிர்த்தனர். ஆஸ்திரியப் படைகளை ருஷியர் எதிர்த்து வெற்றிபெற்றனர். சேர்பியாவை எதிர்த்த ஆஸ்திரியர் வெற்றி பெறவில்லை.

மத்திய வல்லரசுகளின் சார்பில் பல்கேரியாவும் துருக்கியும் நேசவல்லரசுகளின் சார்பில் போரிட்டமையால் 1919 ஆம் ஆண்டில் போர் ஏனைய இடங்களிலும் பரவியது. ஜெர்மனிக்குரியதாக பசுபிச் பிரதேசத்திலிருந்த இடங்களை யப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பற்றியது. தென்மேற்காபிரிக்காவிலிருந்த ஜேர்மனியப் பிரதேசங்களை நேசநாட்டுப் படைகள் கைப்பற்றின. இத்தாலி திரிப்போலியைக் கைப்பற்றிய நிகழ்ச்சியால் ஜேர்மனியைப் பகைத்திருந்தது. 1915 ஆம் ஆண்டில் ஆஸ்திரியாமீது இத்தாலியர் போர் தொடங்கினர். ஆனால் ஆஸ்திரியாவினுள் நுழைய முடியவில்லை. 9.7 ஆம் ஆண்டு ஜெர்மனியப் படையால் இத்தாலியர் தோற்கடிக்கப்பட்டனர். பின் இத்தாலிக்குதவிய பிரான்சிய, பிரித்தானியப் படைகளால் ஜெர்மனியரும், ஆஸ்திரியரும் தோற்கடிக்கப்பட்டனர்.

துருக்கியரை அவுஸ்திரேலிய, நியூசிலாந்துப் படைகளும் பிரித்தானியப் படைகளும் சேர்ந்து தோற்கடித்தன. துருக்கியர் தோல்வியடைந்ததும் பல்கேரியா மத்திய வல்லரசுகளுடன் சேர்ந்து கொண்டது. சேர்பியர் ஜெர்மனியராலும் பல்கேரியராலும் தாக்கப்பட்டு நாட்டிலிருந்து துரத்தப்பட்டார்கள்; சுயெஸ்கால்வாய், மெசபொட்டேமியாவிலும் பாரசீகத்திலும் உள்ள மண்ணெண்ணெய்க் கிணறுகள் என்பனவற்றை துருக்கி கைப்பற்றுதிருப்பதற்காக பலஸ்தீன மீதும், மெசப்பொட்டோமியாமீதும் படையெடுக்கப்பட்டது

1915 ஆம் ஆண்டில் ருஷியா ஆஸ்திரியரை தோல்வியடையச் செய்தாலும் பின்னர் ஜெர்மனியிடம் தோற்றது; அடுத்தவாண்டில் ஆஸ்திரியாவை திரும்பவும் வென்றது. 1917 ஆம் ஆண்டில் ருஷியாவில் ஏற்பட்ட புரட்சியால் ருஷியா போரிடுவதிலிருந்து விலகியது.

ஜெர்மனியர் பிரித்தானிய போர்க்கப்பல்களையும் வியாபாரக் கப்பல்களையும் நாசம் செய்வதுடன் நிற்காது, அமெரிக்கர்களுடைய கப்பல்களையும் நாசம் செய்து அழித்தனர். இதனால் ஐக்கிய அமெரிக்காவும் 1917 ஆம் ஆண்டு ஜெர்மனியுடன் போர் தொடங்கியது.

அமெரிக்காவிலிருந்த பெருந் தொகையான போர்வீரர் நேசவல்லரசுகளுக்கு உதவியாகப் போரிட அனுப்பப்பட்டனர். நேசவல்லரசுகளை முதலில் எதிர்த்த ஜெர்மனி 1918-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பின் வாங்கத் தொடங்கியது. இம்மாத இறுதியில் பல்கேரியர் சரண் புகுந்தனர். பின் துருக்கியும் போரை நிறுத்தியது. ஆஸ்திரியர் இத்தாலியிடம் தோற்று சரணடைந்தனர். நவம்பர் மாதம் ஜெர்மனிய மாலுமிகளின் புரட்சியால் நேசவல்லரசுகள் இலகுவாக ஜெர்மனிய எல்லைக்குள் பிரவேசித்தன. உடனே ஜெர்மனி போரை நிறுத்தும்படி வேண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோள் விடுத்துப் போரை நிறுத்திக் கொண்டது. ஜெர்மனியில், கைசர் நாட்டை விட்டு ஓட, குடியரசு பின்னர் அமைக்கப்பட்டது.

## 11 முதலாம் உலகப் போரின் விளைவுகள்

இப் போரினால் பெருந் தொகையான மக்கள் இறந்தார்கள். பல நாடுகளும் நகரங்களும் அழிக்கப்பட்டன. போருக்குப் பயன்படுத்தப்பட்ட வெடி மருந்துகளாலும், அணுக் குண்டு களாலும் மக்களது ஆரோக்கியம் பாதிக்கப்பட்டது. விஷ வாயுக்களால் பல தொற்று நோய்கள் பரவின. இந்நோய் பரவ பசி, பட்டினியும் காரணமாய் அமைந்தது. கடலிலும், தரையிலும் போர் நடைபெற்றமையால் உணவுப் பொருட் களின் ஏற்றுமதியும் இறக்குமதியும் தடைப்பட்டது. இதனால் உலக நாடுகள் பலவற்றில் மக்களுக்கு உணவு அளிப்பதில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இதனால் மக்கள் நோய், பசி, பட்டினி என்பனவற்றால் கஷ்டப்பட்டார்கள்.

உலகில் பல நாடுகளில் போர் நடைபெற்றமையாலும் மக்கள் விவசாயத்தைக் கைவிட்டுப் போரில் ஈடுபட்டமையா லும் உணவுப் பொருட்களின் விளைச்சல் குறைந்து உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. பலகைத்தொழில் தொழிற்சாலை கள் போரினால் அழிக்கப்பட்டதால் மக்கள் வேலையில்லாமல் திண்டாடினார்கள். இதனால் நாட்டின் வர்த்தகமும் பாதிக்கப் பட்டது.

அடுத்ததாக இப்போரினால் வல்லரசு நாடுகளிடையே சமா தான உடன்படிக்கைகள் செய்யப்பட்டன. இவ்வுடன்படிக்கை களால் நாடுகளிடையே அமைதியும், ஒற்றுமையும் நிலைநாட்டப் பட்டதுடன் மீண்டும் போர் ஏற்படாது தடுக்கும் நடவடிக்கை களும் எடுக்கப்பட்டன. இப்போரின் விளைவாக பல நாடுகள் சுதந்திரம் பெற்று குடியரசுகளை அமைத்துக் கொண்டன. சர்வதேச சங்கம் என்ற ஒரு சங்கம் நாடுகளிடையே ஒற்று மையை வளர்க்கவும், போரைத் தடுக்கவும் ஏற்படுத்தப்பட்டது.

சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக வேர்செயில்ஸ் என்ற இடத்தில் உடன்படிக்கை ஒன்று செய்யப்பட்டது. இதனை வேர் செயில்ஸ் உடன்படிக்கை என்பர். இவ்வுடன்படிக்கை 14 அம்சங் களைக் கொண்டது. இதனை அமெரிக்க ஜனாதிபதி உட்றோ உவில்சன் மற்றைய நேச நாடுகளின் சம்மதத்துடன் தயாரித்தார். இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPECIMEN COPY

உடன்படிக்கைப்படி 'ஜெர்மனியர், அல்சேசு-லோறன், றைன் நதியின் இடதுகரை என்னும் இடங்களிலிருந்து வெளியேற வேண்டும். ஜெர்மனியர் வசம் இருந்த போர்க் கப்பல்களையும், ஆயுதங்களையும், கைதிகளையும் நேச வல்லரசுகளிடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால் ஜெர்மனியக் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்படமாட்டார்கள் என்பன முக்கியமான நிபந்தனைகளாகும். இவ்வுடன்படிக்கையை 1919ஆம் ஆண்டு ஜெர்மனியுடன் செய்தார்கள். இதற்கு முதலில் ஜெர்மனி மறுத்தாலும் பின்னர் சம்மதித்தது. ஆஸ்திரியா, பல்கேரியா, துருக்கி ஆகிய நாடுகளுடன் தனியான உடன்படிக்கை செய்யப்பட்டது. துருக்கியுடன் 1923ஆம் ஆண்டு புதிய உடன்படிக்கை பின்னர் செய்யப்பட்டது.

இவ்வுடன்படிக்கையினால் பிரான்ஸ், அல்சேசு-லோறேன் என்ற பிரதேசங்களைப் பெற்றது. ஜெர்மனியர் பிரான்சிய நாட்டில் ஏற்படுத்திய நஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்காக சார் பள்ளத்தாக்கிலிருந்த நிலக்கரிச் சுரங்கங்களை 15 ஆண்டுகளுக்கு பிரான்சிற்குக் கொடுக்கப்பட்டது. இத்தாலி திரியஸ்தி துறைமுகத்தையும் அதனைச் சேர்ந்த பகுதியையும் பெற்றது. போலாந்து சுதந்திரம் பெற்றது. ருஷியராட்சிக்குட்பட்டிருந்த எஸ்தோனியா, லட்வியா, லித்துவேனியா, பின்லாந்து என்பன சுதந்திரம் பெற்று குடியரசை அமைத்தன. சேர்பியா நாடு, யூகோசிலேவியா என்னும் பெயருடன் சிலாவியர் வசிக்கும் ஏனைய நாடுகளையும் தன்னுடன் இணைத்தது.

பொறுப்பாட்சி நாட்டு முறை சில நாடுகளுக்கு வழங்கப்பட்டது. அதாவது எகிப்து, பலஸ்தீனு, மெசப்பொட்டேமியா, திரான்ஸ்-யோர்தனியா என்பவற்றைப் பிரித்தானியா பரிபாலனம் செய்தது. பிரான்ஸ், சிரியாவைப் பரிபாலனம் செய்தது இதேபோல ஒரு சில நாடுகள் பிரித்தானியா, பெல்ஜியம், பிரான்ஸ், ஆஸ்திரேலியா போன்ற வல்லரசுகளின் பொறுப்பில் விடப்பட்டன இவற்றின் கடமை, தம் பொறுப்பிலுள்ள நாடுகளில் அமைதியையும், பாதுகாப்பையும் பேணுதலாகும்.

ஜெர்மனிக்குப் பாரதூரமான தண்டனைகள் வழங்கப்பட்டது. அதனது தரைப்படை, கடற்படை குறைக்கப்பட்டதுடன் றைன் நதியின் அடுத்துள்ள பிரதேசங்களில் 15 ஆண்டுகளுக்கு நேச வல்லரசுகள் தங்க வேண்டும்; ஜெர்மனி பிரான்சிலும், பெல்ஜியத்திலும் நடாத்திய அழிவுகளுக்கு நட்டஈடு கொடுத்தல் வேண்டும் எனவும் உடன்படிக்கை செய்யப்பட்டது. இவ்வுடன்படிக்கை ஜெர்மனியை, ஏனைய நாடுகள் பழிதீர்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குடன் செய்யப்பட்டதாக இருந்தது இவ்வுடன் படிக்கை யின்போது உட்ரோ உவில்சனால் சமர்ப்பிக்கப்பட்ட 14 அம்சங் களிலொன்ருன சர்வதேச சங்கம் அமைக்கவேண்டுமென்ற கோரிக்கை ஏற்கப்பட்டு சர்வதேச சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

உலகம் முழுவதும் சமாதானத்தையும், அமைதியையும், சுதந்திரத்தையும் நிலைநாட்ட வேண்டுமென்பதற்காக ஜெனீவா வில் சர்வதேச சங்கம் அமைக்கப்பட்டது. (1920) இச் சங்கத் தின் முக்கிய நோக்கங்கள் தேசங்களுக்கிடையில் ஏற்படும் பிரச் சினைகளை மகாநாடு கூடி தீர்த்து வைப்பது, கூட்டு முயற்சியால் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதுமாகும். உலகத்திலுள்ள நாடுகள் பல இச் சங்கத்தில் அங்கம் வகித்தன. பிரான்ஸ், பிரித்தானியா, இத்தாலி, யப்பான் என்பன நிரந்தரமாக அங்கத்துவம் வகித்தன. துருக்கி, பிரேசில், மெக்சிக்கோ, ஐக்கிய அமெரிக்கா, ருஷியா என்பன இதில் சேரவில்லை. சர்வதேச சங்கம், சர்வதேச நீதிமன்றம், சர்வதேச தொழிலாளர் சங்கம் என்னும் சங்கங்கள் அமைக்கப்பட்டு உலக சமாதா னத்தை பாதுகாக்கப்படுவதற்கு பல வழிகள் கையாளப்பட்டன.

# 12 இரண்டாம் உலகப் போர்

முதலாம் உலகப் போரின் பின் வல்லரசுகளிடையே பொரு ளாதாரப் பிரச்சினை தலைதூக்கியது. சர்வதேச சங்கம் நாடு களிடையே ஏற்பட்ட பிரச்சினைகளைச் சிறந்த முறையில் தீர்த்து வைக்கவில்லை. அத்தோடு சர்வதேச சங்கத்திடம் வல்லரசு நாடு கள் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக தங்களுக்குள் மகா நாடுகளைக் கூட்டிப் பிரச்சினைகளைத் தீர்க்க முற்பட்டன. உலக நாடுகள் பலவற்றில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினை திசை திருப்பப்பட்டு விடுதலைக்கும், சமாதானத்திற்கும் எதிரான இயக்கங்களாக உருவெடுத்தது. இவ்வியக்கங்களால் நாடு களிடையே தேசிய வெறி முன்னைய காலங்களிலும் பார்க்க இக்கால கட்டத்தில் கூடுதலாகப் பரவியது. முன்னைய போரின் பின் மக்கள் இனி இப் போர் எழக்கூடாது என்றிருந்தாலும், வல்லரசுகள் திரும்பவும் போர் நடைபெறுவதை எதிர்க்கவில்லை. சர்வதேச சங்கம் உலக நாடுகளிடையே சமாதானம், பாது காப்பு, அவ்வப்போது நாடுகளிடையே எழும் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் என்ற நோக்குடன் நிறுவப்பட்டது. ஆனால் இதை உருவாக்கிய அங்கத்தவர்களே இதைப் பிற்காலத்தில் ஆதரிக்கவில்லை. அத்துடன் அமெரிக்க ஐக்கிய நாடும், ருஷியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் வகிக்காமையும். ஜேர் மனியும் இத்தாலியும் இச் சங்கத்திற்குத் தனது பூரண ஆத ரவை அளிக்காததாலும் சங்கம் திறம்பட செயல்பட முடிய வில்லை. பின்னர் ஜேர்மனி, யப்பான், இத்தாலி என்பன சங் கத்திலிருந்து விலகி தமது ஆயுத பலத்தை பெருக்கின, இம் மூன்று நாடுகளும் தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன: இந்நாடுகளில் சர்வாதிகார ஆட்சிமுறை நடைமுறையில் இருந் தது. பிரித்தானிய, பிரான்ஸ், செக்கோசிலவிக்கியா, பெல்ஜி யம், நெதர்லாந்த, சுவிற்சலாந்து என்னும் நாடுகளில் மக்க ளாட்சி நிலவியது.

## போருக்கான காரணங்கள்

முதலாம் உலகப் போரின் பின் ஜேர்மனியின் பொருளா தாரம் மிக மந்த நிலையில் இருந்தது. வேல்செயில்ஸ் உடன் படிக்கையின்படி ஜேர்மனி பெருந் தொகைப் பணத்தை நஷ்ட ஈடாக பிறநாடுகளுக்குக் கொடுக்கவேண்டியிருந்தது. வியாபா ரத்தில் மந்தநிலை ஏற்பட்டபோது இவர்களால் இத்தொகை யைச் செலுத்த முடியவில்லை. எனவே, ஜேர்மனி அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு நஷ்டஈடு கொடுக்க மறுத்தது. ஜேர்மனிய மக்கள் பொருளாதார மந்தத்தினால் பல கஷ்டங்களை எதிர் நோக்கினர். அத்தோடு வேலையில்லாப் பிரச்சினையும் நாட்டில் நிலவியதால் மக்கள் அரசியல் தலைவர்கள்மீது வெறுப்புற்றனர். இந்நிலையில் தேசிய சோஷலிஸ்டுகள் என்ற கட்சி நாட்டில் தோன்றியது. கொதிப்புற்ற நிலையிலிருந்த இளைஞர்கள் இக்கட் சியைப் பெருமளவு ஆதரித்து இக்கட்சியில் சேர்ந்தனர். ஜேர் மனியில் இளைஞர்கள் நஷ்டஈடு கொடுப்பது நாட்டு மக்களுக் கும் நாட்டுக்கும் அவமானமென கிளர்ச்சி மனப்பான்மை கொண்டிருந்தார்கள். இக் கட்சியின் தலைவனாக அடோல்ப் ஹிட் லர் பதவி வகித்தான். இக் கட்சி அரசாங்கத் தலைவர்களை நீக்கியதுடன் மக்களிடையே பிரசாரம் செய்து பெருமளவு ஆதர வைப் பெற்றது. இக்கட்சியின் தலைவன் ஹிட்லர் முதலாம் உலகப்போரில் சாதாரண உத்தியோகத்தனாக பங்குபற்றியதால் அவனுக்குத் தோல்வியால் கிடைத்த அவமானமும் ஏனைய நாடு களைப் பழிவாங்க வேண்டுமென்ற மனப்பான்மை கொண்ட தலைவனாக இருந்ததுடன், தனது நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய ஆற்றல் படைத்தவனாகவுமிருந்தான். இவன் சிறையிலி ருந்தபோது எழுதிய எனது பிரயத்தனம் (மெயின் காம்ப்) என்ற நூலில் ஜேர்மனிய மக்கள் செய்யவேண்டியவை பற்றி எழுதியிருந்தான். இவன் தனது புத்தகத்தில் அவனது கொள்

கைகளை மக்கள் கடைப்பிடிக்கக் கூடியமுறையில், சிறந்த சொல்லாற்றலால் மக்களைக் கவரத்தக்கதாக எழுதியிருந்ததால், மக்கள் இவனைப் பெருமளவு பின்பற்றினர் 'ஜேர்மனிய மக்கள் ஏனைய நாடுகளால் ஏமாற்றப்பட்டுள்ளார்கள், என்றும், பொதுவுடைமை வாதிகளும், யூதர்களும் பெருமளவு ஜேர்மனியை ஏமாற்றியுள்ளார்கள் என்றும், ஜேர்மனி உலகம் முழுவதையும் ஆளவேண்டிய நாடு என்றும், ஜேர்மன் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எதிர்த்து ஏனைய நாட்டை ஆளவேண்டுமெனத் தூண்டினன்.

இவ்வாறு இவனது திட்டங்களையும், கொள்கைகளையும் ஜேர்மனிய மக்கள் மட்டுமன்றி ஜேர்மனிய இராணுவ வகுப்பினரும் ஆதரித்தனர்; ஜேர்மனிய இளைஞர்களும் கூடுதலாக ஆதரித்தமையால் 1933 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் ஹிட்லர் வெற்றி பெற்று அரசாங்கத்தைக் கைப்பற்றி சர்வாதிகாரியானன். இவன் சர்வாதிகாரனுக ஆட்சி செய்தமையும், இவன் பிரதம மந்திரியானமையும் இரண்டாம் உலகப் போருக்குக் காரணமாக அமைந்த கொடுஞ் செயல்களுக்கு வித்திட்டது எனலாம்.

இத்தாலியில் நிலவிய நிலைமையை ஆராய்ந்தால் இந்நாட்டில் சர்வதேச சங்கத்தினுல் ஏற்படுத்தப்பட்ட சமாதான உடன்படிக்கையை நாட்டுத் தலைவர்கள் அவ்வளவாக ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நாட்டை முசோலினி சர்வாதிகாரியாக வழி நடாத்தினன். இவன் சிலகாலம் பிரான்சுடனும், பிரித்தானியாவுடனும் சேர்ந்து நின்று நாஜி ஜேர்மனிக்கு எதிராகச் சிலகாலமே வேலை செய்தான். இத்தாலியில் நிலவிய பொருளாதார மந்த நிலையைப் பயன்படுத்தி மக்கள் மனதை மாற்றி அபிசீனியாவை 1935 ஆம் ஆண்டில் தாக்கினன்; அபிசீனிய சக்கரவர்த்தி ஹெயிலி செலாசி தோற்கடிக்கப்பட்டு அபிசினிய இராச்சியம் இத்தாலியுடன் சேர்க்கப்பட்டது; தோல்வியுற்ற அபிசீனிய சக்கரவர்த்தி சர்வதேச சங்கத்திடம் முறையிட்டபோது, சங்கம் இத்தாலியுடன் அங்கத்துவ நாடுகள் வியாபாரம் செய்ய வேண்டாமென தீர்மானித்தது. இதனுல் அபிசீனியாவிற்கு எதுவித லாபமும் கிட்டவில்லை; ஆனல் இத்தாலி சர்வதேச சங்கத்திலிருந்து விலகிக் கொண்டது;

முசோலினி ஏற்படுத்திய கட்சி 'பாஸிஸ்டுகள்' எனப்பட்டது. இக் கட்சியின் கொள்கை பலம்வாய்ந்த ஒரு அரசாங்கம் நாட்டில் இருந்தால்தான் நாட்டின் வர்த்தகம், தொழில் வளர்ச்சியடையும்; இவை வளர்ந்தால்தான் பொருளாதார முன்னேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றத்தை நாடு அடையும் என்று கூறியது. இதனால் முதலாளி வர்க்கமும், செல்வர்களும் இவனை ஆதரித்தார்கள். தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களை முறியடித்து சர்வாதிகார முறையில் நாட்டை ஆட்சி செய்தான். இவனது சர்வாதிகார ஆட்சிக்கு ஹிட்லரின் ஆதரவும் கிடைத்துக் கொண்டேயிருந்தது. 1936ஆம் ஆண்டில் இரு சர்வாதிகாரிகளும் 'ரோம்-பெர்லின் அச்சு' என்னும் ஒரு உடன்படிக்கையைச் செய்து கொண்டார்கள். இவ்வுடன்படிக்கையின் நோக்கம் ஐரோப்பாவில் பிரித்தானியாவும், பிரான்சும் பெற்றிருக்கும் தலைமைப் பதவியை ஒழிப்பதாகும். முடியுமானால் அப்பதவியைத் தாம் கைப்பற்றுவது, இதற்காகப் போர் தொடுப்பதற்கும் இவ்விரு நாடுகளும் தயாராக இருந்தன. இந்த இரகசியம் உடன்படிக்கைக்கு யப்பானும் ஆதரவு அளித்தது.

யப்பான் நாட்டின் நிலைமையை இனி ஆராய்வோம். முதலாம் உலகப் போரின் பின் ஐரோப்பியரும் அமெரிக்கரும் சீனாவில் கொண்டிருந்த செல்வாக்கை இல்லாமற் செய்து அவர்கள் செய்து வந்த வியாபாரத்தை முற்றாகத் தடைசெய்து கீழ்த்திசை ஆசியாவில் யப்பான் தானே தனியரசு செய்ய வேண்டுமென நீண்ட காலமாக எண்ணம் கொண்டிருந்தது. இதற்காக இளைஞர்களை உள்நாட்டுப் பிரச்சனைகளில் தலையிடச் செய்யாது சீன ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் அவர்களது கவனத்தைத் திருப்பினர். 1931ஆம் ஆண்டு யப்பான் மஞ்சூரியா மீது போர் தொடுத்து அம்மாகாணத்தைக் கைப்பற்றி அதனைப் புதிய தனி யப்பானிய இராச்சியமாக வைத்திருந்தது. இதனை எதிர்த்து நான்கிங்கிலுள்ள சீன அரசாங்கம் சர்வதேச சங்கத்திடம் ஒரு விண்ணப்பத்தை அனுப்பியது. சர்வதேச சங்கம் யப்பானுக்கெதிராகத் தீர்ப்பைக் கொடுத்தாலும் ஏனைய அங்கத்துவ நாடுகள் யப்பானைக் கண்டிக்கவில்லை. ஆயினும் யப்பான் சர்வதேச சங்கத்தினின்றும் விலகிக் கொண்டது. 1933ஆம் ஆண்டு மஞ்சுக்கோ மாகாணத்திற்கு அருகிலிருந்த ஜெகோல் மாகாணத்தையும் கைப்பற்றித் தன்னுடன் சேர்த்துக் கொண்டது. 1937ஆம் ஆண்டில் மஞ்சுக்கோ எல்லைப் புறத்தில் சீனப்படைக்கும் யப்பானியப் படைக்குமிடையில் பெரும் யுத்தம் நடைபெற்றது. இப் போருக்குரிய காரணம் யப்பானியரின் பொருட்களை சீனர் பகிஷ்காரம் செய்தமையால் ஏற்பட்டது. வடசீனம் முழுவதையும் யப்பானியர் இப்போரில் கைப்பற்றினர். சங்காயைக் கைப்பற்றி சீனப்பிற நாட்டு வியாபாரக் காரியாலயத்தையும் அழித்து, தென்பகுதியினுள் புகுந்து சியாங்கை சேக்கை தலைநகரிலிருந்து (நான்கிங்) துரத்தி சீன மக்களுக்குக் கொடுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார்கள்; சியாங்கை சேக் சுங்கிங்கில் தனது தலைநகரை அமைத்து சேனைப்படைகளைத் திரட்டிக் கொரில்லாப் போர் செய்தார். இறுதியாக இப்போர் இரண்டாம் உலகப் போருடன் சேர்ந்து கொண்டது. சர்வதேச சங்கத்திலிருந்த அங்கத்துவ நாடுகள் இப்போரில் தலையிடாதிருந்தமை ஆக்கிரமிப்பு நாடுகளுக்கு இப்போர் வழிகாட்டுவதாக அமைந்தது. யப்பானை ஜெர்மனியும், பின்பற்றி சர்வதேச சங்கத்திலிருந்து விலகியது.

அடுத்ததாக ஸ்பெயின் நாட்டின் அரசியல் நிலைமையை ஆராய்வோம். முதலாம் உலகப்போரின் நடுநிலைமை வகித்துக் கொண்டிருந்தது. ஆனால் 1920—1930 வரை உள்நாட்டுக் குழப்பங்கள் அதிகரித்து அங்கே சர்வாதிகார ஆட்சி நடைபெற்றது. ஆனால் 1931ஆம் ஆண்டு அரசனைத் துரத்திவிட்டு குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது. இந்த அரசாங்கம் ரோமன் கத்தோலிக்க சமயத்தையும், ஏனைய வலிமையுடைய நாடுகளையும் எதிர்க்க முயன்றது. இதில் சோஷலிஸ்ட் தாராளக் கட்சியினர் அங்கம் வகித்தனர். இவ்வரசாங்கம் வீழ்த்தப்பட்டாலும் திரும்பவும் 1936ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று அரசாங்கத்தை அமைத்தது. இதற்கு எதிராக பிராங்கோ என்னும் தளபதி ஸ்பானிய மொரோக்கோவிலே கலகம் செய்தான். இக்கலகம் ஸ்பெயினிலும் பரவியது. தரைப்படையும், திருச்சபையும், ஒரு சிலமக்களும் பிராங்கோவை ஆதரித்தனர். கடற்படையும், தொழிலாளரும் பெருமளவு மக்களும் குடியரசை ஆதரித்தார்கள்; நாட்டில் பெருமளவு குழப்பம் நடைபெற்றது. அட்டூழியங்களும் நடைபெற்றன. இக் கலகத்தில் வெளிநாடுகளும் தலையிட்டன. சோவியத் ஐக்கிய நாடு போர்த் தளபாடங்களை குடியரசிற்குக் கொடுத்துதவியது. ஜெர்மனியும் இத்தாலியும் பெரும் படையையும், போர்க்கருவிகளையும் பிராங்கோவிற்குக் கொடுத்துதவியது. இப்போர் ஐரோப்பியப் போராக மாறலாமென்ற பயம் எல்லா நாடுகளிடமும் பரவியதால் பிரித்தானியாவும், பிரான்சும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உதவியுடன் இக் கலகத்தை ஐரோப்பியப் போராக மாறாது தடுத்தன. பிற நாடுகள் இப்போரில் தலையிடக்கூடாதென்ற உடன்படிக்கை செய்யப்பட்டது. ஆனாலும் ஜெர்மனியும், இத்தாலியும் இரகசியமாக பிராங்கோவிற்கு உதவி செய்துகொண்டேயிருந்தது. ஜெர்மனிய ஆகாயவிமானங்கள் ஸ்பானிய நகரங்களின்மேற் குண்டு பொழிந்தது. இத்தாலிய நீர் மூழ்கிக் கப்பல்கள் ஸ்பானியக் குடியரசிற்கு வெளிநாடுகளிலிருந்து பண்டங்களை ஏற்றிவந்த கப்பல்களை கடலினுள் மூழ்கடித்தது; பிறநாடுகள் தலையிடக் கூடாதென்ற கொள்கையால் குடியரசே பெருமளவு பாதிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது; 1938ஆம் ஆண்டு பிராங்கோ வெற்றிபெற்ருன். இவ் வெற்றி ஹிட்லரதும், முசோலினியினதும் வெற்றியாகும். அவர்கள் பகிரங்கமாகவே இதனைக் கூறிக்கொண்டார்கள்; இப் போரின் மூலம் இத்தாலியும், ஜெர்மனியும் தம் எதிர்காலத்தில் நிகழ்த்தவிருந்த போருக்காகச் செய்த டாங்கிகள், விமானங்கள், குண்டுகள் என்பனவற்றைப் பரீட்சித்துப் பார்த்ததுடன், ஸ்பானியாவின் புதிய சர்வாதிகாரியையும் தம்முடன் உதவிக்குச் சேர்த்துக் கொண்டார்கள்.

அடுத்து நாம் ஹிட்லர் எவ்வாறு இரண்டாம் உலகப் போர் ஏற்பட வழிவகுத்தான் என்பதை ஆராய்வோம். ஜெர்மனியின் படைபலத்தை அதிகரித்தான். இவனுக்கு குடியரசின் தலைவர் ஹிண்டன் பர்க்கும், போரில் விருப்புற்ற ராணுவ வகுப்பினரும் ஆதரவு கொடுத்தார்கள்; பொருளாதார நெருக்கடியாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தினுலும் பாதிப்புற்றிருந்த மக்களை போர்க் கருவிகளைச் செய்வதற்குப் பயன்படுத்தினுன்; பெருமளவு விமானங்களையும், போர்த் தளபாடங்களையும் செய்தான்; இவையெல்லாம் சமாதான உடன்படிக்கைக்கு எதிரானதாக இருந்தாலும் பிரித்தானியாவும், பிரான்சும் எதுவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை;

அடுத்து ஹிட்லர் ஜெர்மனியில் வாழ்ந்துகொண்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சியினரையும், யூதர்களையும் தாக்கினுன். நாஜிப் படையினரின் உதவியுடன் பலரைக் கொன்றதுடன் பெருந் தொகையினரைச் சிறையில் அடைத்தான். நாஜிக்கட்சியில் விசுவாசமற்ற தலைவர்களெனக் கருதியவர்களைக்கூடக் கொன்ருன். குடியரசு ஸ்தாபனங்களை அழித்ததுடன் அரசாங்கத்தின் அதிகாரத்தைத் தலைவர் ஒருவன் கீழ்க் கொண்டுவந்தான்; பாடசாலைகளில் நாஜிக் கல்வித் திட்டம் கொண்டுவரப்பட்டது. 'ஜெர்மனிய மக்கள் 'ஆளும் இனம்' ஆரிய இனம் என்றும் அகில உலகத்தையும் ஆளப்பிறந்தவர்கள். இவர்களது நோக்கம் பிற நாடுகளைக் கைப்பற்றி ஆட்சிபுரிவது என்றும்' போதிக்கப்பட்டது; 1918ஆம் ஆண்டின் பின் வந்த தொல்லைகள் யாவும் யூதர்களால் ஏற்படுத்தப்பட்டதென்றும், முதலாம் உலகப்போரில் ஏற்பட்ட தோல்வி யூதர்களால் ஏற்படுத்தப்பட்டதென்றும் யூதர்களுக்கெதிராகக் குழந்தைகளையும் பொதுமக்களையும் திசைதிருப்பினுன். 1934ஆம் ஆண்டு ஹிண்டன்பர்க் இறந்தபின் ஹிட்லர் தலைவனுனுன்;

ஜெர்மனியின் முழு அதிகாரத்தைக் கைப்பற்றிய ஹிட்லர் போர் தொடங்குவதற்கு ஆயத்தமானுன்; 1938ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு மக்களுக்குக் கட்டாயப் போர்ப் பயிற்சி செய்வித்தான்; 1936ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் ஜெர்மன் மக்களாகப் பிறந்த அனைவரையும் ஒன்று சேர்ப்பதும், ஜெர்மனி முதலாம் உலகப் போரில் இழந்த நாடுகளைக் கைப்பற்றுவதுடன் மேலும் பல நாடுகளைக் கைப்பற்றவும் விரும்பினான். உலகம் முழுவதையும் ஆள வேண்டுமென்ற பேரவாக்கொண்டிருந்தான். இவ்வெண்ணத்திற்கு முதற் படியாக றைன்நதிப் பிரதேசத்தைக் கைப்பற்றினான். பிரித்தானியாவும், பிரான்சும் இச் செயலைக் கண்டிக்காதிருந்தமை ஹிட்லர் முன்னேறிச் செல்ல உற்சாகமளிப்பதாக இருந்தது. அடுத்து ஹிட்லர் மிகுந்த சிரமத்தின் பின் ஆஸ்திரியாவைக் கைப்பற்றி ஜெர்மனியப் பிரதேசமெனப் பிரகடனம் செய்தான். பின்னர் செக்கோசிலவாக்கியாவின் வடமேற்குப் பகுதியில் சுடேற்றன் பகுதியையும் டான்சிக் பிரதேசத்தையும் கைப்பற்றுவதற்காக முயன்றான். இதனைத் தடுக்கப் பிரித்தானிய பிரதமர் முயற்சியால் மியூனிச் என்ற இடத்தில் 1938 ஆம் ஆண்டில் ஒரு உடன்படிக்கை செய்யப்பட்டது. ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ் இத்தாலி ஆகிய நாடுகளுக்கிடையில் இந்த உடன்படிக்கை செய்யப்பட்டது. இதன்படி சுடேற்றன் பிரதேசம் ஜெர்மனிக்கு கொடுக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கைக்கு சோவியத் ஐக்கிய நாடுகளை அழைக்கவில்லை. இது பெருந்தவறான செயலாகும்.

1939 ஆம் ஆண்டில் உடன்படிக்கை தகர்த்து எறியப்பட்டது. ஹிட்லர் எஞ்சியிருந்த செக்கோஸ்லாவியப் பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டான். அதேவேளை இத்தாலி, பால்கன் தேசத்திற்குரிய அல்பேகியாவைக் கைப்பற்றியது; இதனையடுத்து பிரித்தானியரும், பிரான்சியரும் போருக்கு ஆயத்தம் செய்தார்கள். பிரித்தானியாவில் கட்டாய இராணுவச் சேவை ஏற்படுத்தப்பட்டது பிரித்தானியா துருக்கியுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. அடுததபடியாக ஹிட்லர் போலாந்தைத் தாக்கப்போவதை அறிந்து மேலைத்தேய வல்லரசுகள் சோவியத் ஐக்கிய நாட்டின் உதவியைக் கோரின. ஆனால் ஸ்டாலின் 1939 ஆம் ஆண்டு ஹிட்லருடன் ஒருவரை ஒருவர் தாக்குவதில்லையென ஓர் உடன்படிக்கை கொண்டிருந்தான். இதனால் வல்லரசுகள் மட்டுமன்றி சோவியத் குடியரசு நாடுகளுக்கெதிராக ஹிட்லருடன் கொமின்ரேண் எதிர்ப்பு உடன்படிக்கை செய்து கொண்ட ஜெர்மனிய நட்பு நாடுகளும் பயந்தன. செப்ரெம்பர் மாதம் முதலாந் திகதி ஹிட்லர் போலாந்தின் மீது போர் தொடுத்தான். இரண்டு நாளின் பின் பிரித்தானியாவும் பிரான்சும் சேர்ந்து ஜெர்மனியுடன் போர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுத்தன; இவ்வாறு இரண்டாம் உலக மகா யுத்தம் ஆரம்பித்தது. போர் நிறுத்தம் செய்வதற்கென அமைக்கப்பட்ட சர்வதேச சங்கத்தை வல்லரசு நாடுகள் அவமதித்து அதன் ஆலோசனைகளைப் பெறாது காரியங்களைச் செய்தமையினாலேயே திரும்பவும் போர் ஆரம்பிக்கப்பட்டது.

# 13 இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்த முறை

இப்போர் 1936 ஆம் ஆண்டு தொடக்கம் 1945 ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. இப்போர் உலகில் பல நாடுகளில் நடைபெற்றது. சில நாடுகள் போரில் ஈடுபடாது நடுநிலைமை வகித்தன. போலாந்தை ஜெர்மனி கைப்பற்றியது; இந் நாட்டின் தலைநகர் வார்சோவும் பல இடங்களும் குண்டுகளால் அழிக்கப்பட்டது. சோவியத் ஐக்கிய நாடு போலாந்தின் கீழ்ப்பாகங்களைக் கைப்பற்றியது. பிரான்சியப் படை மகினோ மதில் என்ற அரணுக்குப் பக்கத்தில் அணிவகுத்து நின்றது; தென்னாபிரிக்காவில் பிரித்தானிய பொதுநல நாடுகள் தாய் நாட்டிற்காகப் போர் செய்ய முன்வந்தன; தென் அயர்லாந்து ஒரு பக்கமும் சாரவில்லை; இத்தாலியும் யப்பானும் முதலில் போரில் ஈடுபடவில்லை.

ஜெர்மனி 1940 ஆம் ஆண்டில் நடுநிலை நாடுகளான நோர்வே, டென்மார்க், ஒல்லாந்து, பெல்ஜியம், லக்ஸம்போர்க் ஆகிய நாடுகளுடன் போர்செய்து வெற்றியடைந்தது. பிரித்தானியர் நோர்வேக்கு உதவிசெய்தபோது தோற்கடிக்கப்பட்டார்கள். பிரித்தானியாவின் தோல்வியால் பிரித்தானிய மக்கள் பிரதமராகவிருந்த சேம்பர்லேனினை நீக்கி வின்ஸ்டன் சேர்ச்சிலை நியமித்தார்கள். இவரின் திறமையினால்தான் இறுதிவரை ஜெர்மனியரால் பிரித்தானியாவைக் கைப்பற்ற முடியவில்லை.

அடுத்து ஜெர்மனியப் படைகள் பிரான்சிய அரண்களை வெற்றிபெற்றதுடன் நேச நாடுகளின் படையைத் தோற்கடித்து பிரான்சை சரணடையச் செய்தன. பிரித்தானிய படைகள் இப்போரில் பின்வாங்கி ஓடின. இச் சந்தர்ப்பத்தில் பிரித்தானியாவுடன் இத்தாலியும் போர் தொடுத்தது. ஜெர்மனி பெருமளவு பிரான்ஸிய இராச்சியத்தைக் கைப்பற்றியது: ஒரு சிறு பகுதிக்கு பிரான்சியனான பேற்றன் என்பவன் நியமிக்கப்பட்டான். இவன் ஜெர்மனியின் ஆதரவுடன் சமாதானமான ஆட்சி செய்தான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியப் படைகளைத் தோல்வியுறச் செய்தாலும் பிரித்தானியாவை வெல்வது ஜேர்மனிக்குச் சிரமமாகவே யிருந்தது. காரணம் பிரித்தானியாவிடம் சிறந்த கடற்படை இருந்தது; அத்துடன் ஒடுங்கிய ஆங்கிலேயக் கால்வாயை ஜெர்மனி கடப்பதும் சிரமமாக இருந்தது. ஜெர்மனியர் பிரித்தானியரது படைகளுக்குப் பெருமளவு சேதம் விளைவித்தார்கள்: ஆகாயப்படை மூலம் குண்டுகளைப் பொழிந்து பிரித்தானியத் துறைமுகங்களையும், ஆகாய விமான நிலையங்களையும் தாக்கினார்கள். இவர்களைப் பிரித்தானியா எதிர்த்து வென்றது. ஜெர்மனியரால் பிரித்தானியாவை வெல்ல முடியவில்லை. இதனால் தரைப்படையை ஜெர்மனியர் எதிர்க்காது இரவில் விமானங்கள் மூலம் குண்டுகளைப் பிரித்தானியாவின் நகரங்கள், துறைமுகங்கள், பட்டினங்கள், கிராமங்கள், தொழிற்சாலைகள் என்பனவற்றின் மீது பொழிந்து பெரும் சேதம் விளைவித்தார்கள்.

பிரித்தானியாவை ஜெர்மனி கைப்பற்றுது போரிட வேண்டிய நேரத்தில் இத்தாலி வட ஆபிரிக்காவிலும், கிழக்காபிரிக்காவிலும் போர் செய்தது. பிரித்தானியா இத்தாக்குதலைச் சமாளிக்கப் போதிய இராணுவ பலம் இல்லாதிருந்த போதும் வின்ஸ்சன் சேர்ச்சில் ஆபிரிக்காவிற்குப் போர் வீரர்களை அனுப்பிப் போர் செய்வித்தார். இத்தாலியிடம் சிறந்த கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை என்பன இருந்ததனால் எகிப்தையும், கெனியாவையும் தாக்கத் தொடங்கியது. ஆயினும் பிரித்தானியா, ஆஸ்திரேலிய, நியூசிலாந்திய, தென்னபிரிக்க, இந்தியப் படைவீரர்களின் உதவியுடன் இத்தாலியப் படைகளை அபிசீனியாவிலிருந்து துரத்தியதுடன் எகிப்தின் மேற்கெல்லைக் கப்பால்வரை துரத்தினார்கள். 1941 ஆம் ஆண்டில் ஜெர்மனியர் பால்க்கன் குடாநாட்டுத் தேசங்களைக் கைப்பற்றினர். ஆனால் கொன்ஸ்தாந்திநோப்பிளைச் சுற்றித் துருக்கி யுத்தம் முடியும் வரை நடுநிலைமை வகித்தது. கிரேக்க தேசத்திற்கு உதவ பிரித்தானியர் படையனுப்பியும் அப்படை கிரேக்க தேசத்திற்கு ஜெர்மனியரின் படையெடுப்பால் செல்லமுடியாது திரும்பியது: ஜெர்மனியர் கிரேக்கரின் கிறீற் தீவைக் கைப்பற்றினர்.

அடுத்ததாக சோவியத் ஐக்கிய நாடுகளும், அமெரிக்க ஐக்கிய நாடுகளும் போரில் ஈடுபட்டன. ஜெர்மன் படைகள் சோவியத் ஐக்கிய நாட்டுக்குள் புகுந்திருந்தாலும் ருஷியாவை அவர்களால் கைப்பற்ற முடியவில்லை;

சர்வாதிகார ஆட்சிமுறையைக் கொண்ட நாடுகள் போரில் வெற்றிபெறுவதை அமெரிக்கா விரும்பயில்லை; அமெரிக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் பிரித்தானியாவிற்கு போர்க்கருவிகளை விற்றுர்கள். பின் கடனுகக் கொடுத்து வந்தார்கள். 1941ஆம் ஆண்டு ஆவணி மாதம் பிரித்தானியாவும், அமெரிக்காவும் கூடி ''அட்லாண்டிக் சாசனம்'' என்னும் உடன்படிக்கையைச் செய்து கொண்டன.

யப்பான் இந்தோசீனத்திலுள்ள போர்த்தளங்களைக் கைப்பற்றியதுமல்லாமல் ஹாவாய் முத்துத்துறையில் நங்கூரமிட்டு நின்ற அமெரிக்க பசுபிக் கப்பற் படையைக் குண்டு பொழிந்து நாசப்படுத்தியதால் பிரித்தானியா யப்பானுடன் போர் தொடங்கியது. யப்பான், மலேயா, பர்மா ஆகிய பிரித்தானியரது ஆட்சி நாடுகளைக் கைப்பறியதுடன் கிழக்கிந்திய தீவுகளையும் கைப்பற்றியது. இவ்வாறு யப்பான் செய்த போரினுல் விளைந்த விளைவுயாதெனில் மிகப் பலம் வாய்ந்த அமெரிக்க ஐக்கிய நாட்டை வலியப் போர் செய்யத் தூண்டி அச்சுரசு நாடுகளைத் தோல்வியடையச் செய்தமையாகும்.

எகிப்தின் எல்லையிலிருந்த பிரித்தானியர் ஆபிரிக்காவிலிருந்த ஜெர்மனிய, இத்தாலியப் படைகளை எதிர்த்து வெற்றி பெற்றனர். சிசிலியையும் பின் இத்தாலியையும் இவர்கள் கைப்பற்றினர். சோவியத் குடியரசைத் தாக்கிய ஜெர்மனியப் படைகளும் தோற்கடிக்கப்பட்டன. ஜெர்மனியரிடம் இருந்த ஒரு சில போர்க்கப்பல்கள் படிப்படியாக பிரித்தானியரால் அழிக்கப்பட்டது. ஆனுல் ஜெர்மனியர் நீர் மூழ்கிக் கப்பல்களாலும் குண்டு வீசும் ஆகாய விமானங்களாலும் பிரித்தானியாவினதும், அமெரிக்காவினதும் நகரங்களையும், தொழிற்சாலைகளையும், பெருமளவு அழித்தனர். 1943ஆம் ஆண்டு ஜெர்மனியர் சோவியத் படைவீரர்களிடம் தோல்வியுறத் தொடங்கினர். அமெரிக்க—பிரித்தானிய சேனை ஐரோப்பாக் கண்டத்தில் போர் செய்வதற்காக 1944ஆம் ஆண்டு ஆனி மாதம் பிரான்சின் வடகரையில் வந்திறங்கியது. சிறிது காலத்தின் பின் தென் கரையிலும் பெரும்படை வந்திறங்கியது. இவ்விரு படைகளும் பிரான்சைக் கைப்பற்றின. சோவியத் இராணுவம் ருமேனியா, ஹங்கேரி ஆகிய இடங்களிலிருந்து ஜெர்மனியப் படைகளைத் துரத்தியது.

1945ஆம் ஆண்டில் ஜெர்மனி கிழக்குப் பக்கத்தாலும் மேற்குப் பக்கத்தாலும் தாக்கப்பட்டது. நேசநாட்டுப் படைகள் வட இத்தாலிக்குள் புகுந்தது. இவ்வாறு நடைபெற்ற சண்டையின்போது முசோலினி தனது தேசமக்களால் சிறைப்பிடிக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டான். சோவியத்படை பேர்லின் நகரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பற்றியது. ஹிட்லரும், பல நாஜித்தலைவர்களும் தற்கொலை செய்து காலஸ்டார்கள். 1945ஆம் ஆண்டு வைகாசி மாதம் ஜெர்மனிய இராணுவம் சரணடைந்தது.

ஆசியாவில் பிரித்தானியரும், அமெரிக்கரும் யப்பானை எதிர்த்து நீண்ட நாள் போரிட்டார்கள். யப்பானியர் வசம் இருந்த பல தீவுகளை அமெரிக்கர் கைப்பற்றினர், இவோஜீமா, ஒக்கினவா என்னும் தீவுகளைக் கைப்பற்றினார்கள். பசுபிக் களத்தில் 'சுப்பெபோற்றெஸ்' என்னும் பிரமாண்டமான அமெரிக்க விமானங்கள் யப்பானில், ஹிரோஷிமா, நாகசாக்கி, நகரங்கள் மீது அணுக்குண்டுகளை வீசி பெரும் அழிவை ஏற்படுத்தியதுடன் யப்பான் சரணடந்தது.

பர்மாவைத் தாக்குவதற்காக நேச நாடுகளின் 'தென் இழக்காசிய அதிகாரம்' என்னும் காரியாலயம் மௌன்ட் பேற்றன் பிரபுவின் பொறுப்பில் வட இந்தியாவில் நிறுவப் பட்டுப் பின் இலங்கைக்கு மாற்றப்பட்டது. நேச நாடுகள் யப்பானியப் படையைத் தோற்கடித்துப் பர்மாவைக் கைப் பற்றின.

இவ்வாறு அமெரிக்க ஐக்கிய நாடுகளதும், சோவியத் ருஷியாவினதும் ஒத்துழைப்பினால் இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்தது.

# 14 இரண்டாம் உலகப் போரின் விளைவுகள்

இப்போரினால் உலக நாடுகளிடையே பெருமளவு அழிவு ஏற்பட்டது. முதலாம் உலகப் போரில் பயன்படுத்திய ஆயுதங்களை விடக் கொடிய அணுக்குண்டுகளை வல்லரசுகள் பாவித்தமையால் நகரங்கள், தொழிற்சாலைகள், பெருமளவு அழிந்ததுடன் பெருந்தொகையான மக்கள் உயிரிழந்தார்கள். ஒவ்வொரு நாடும் தனது நாட்டு மக்களது நல்வாழ்விற்காகப் பெருந்தொகைப் பணம் செலவழிக்க வேண்டிய நிலையிலிருந்தது. அதே வேளை நாடுகள் ஒவ்வொன்றும் பொருளாதார நெருக்கடிக்கும் ஆளாகியது.

ஜெர்மனியரின் ஆட்சியின் கீழிருந்த நாடுகளைக் கைப்பற்றிய நாடுகள் ஜெர்மனியை பிரிவினை செய்தார்கள். இரண்டாம் உலகப் போரைத் தொடங்கி வைத்த ஜெர்மனியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுபோட்டு அதன் பலத்தைக் குறைக்கவேண்டுமென பல நாடுகள் விரும்பின. ஆஸ்திரியா திரும்பவும் ஜெர்மனியிலிருந்து பிரிக்கப்பட்டது. ஆஸ்திரியாவும், ஜெர்மனியும் திரும்பவும் தனித்தனி நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவிலும் அமெரிக்க, பிரித்தானிய, பிரான்ஸிய, சோவியத் படைவீரர்கள் இருந்தார்கள். இவற்றின் தலைநகரங்களான பெர்லினிலும் வியன்னுவிலும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டது. ஆனல் பெர்லினில் கூட்டரசாங்கம் அதிக காலம் நீடிக்கவில்லை. இன்றும் ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி. மேற்கு ஜெர்மனி எனப் பிரிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கிறது.

யப்பானில் அமெரிக்கப் படைவீரர்கள் நிறுத்தப்பட்டு யப்பான் அமெரிக்கர் வசம் விடப்பட்டது.

உலகம் இரு போர்ப் பாசறையாக திரும்பவும் பிளவுபடாது என்ற மக்களது எண்ணத்திற்கு மாருக திரும்பவும் பிளவுபட்டது. இதனைச் "சீதளப் போர்" நிலை என வர்ணிப்பர். சோவியத் ஐக்கிய நாடும் அதனைச் சார்ந்த ஏனைய கொம்யூனிஸ்ட் நாடுகள் ஒரு பக்கமும் மறுபக்கம் வடஅமெரிக்காவும் மேற்கு ஐரோப்பாவும் வல்லரசுகளாக வளர்ந்தன. இவ்வாறு இரு அணியாக அமெரிக்காவினதும் ருஷியாவினதும் தலைமையில் கூட்டணிகள் வளர்ந்தமையால் பாதுகாப்பிற்காகப் பல உடன்படிக்கைகள் செய்யப்பட்டன. நேட்டோ, சியாட்டோ வார்சோ போன்ற உடன்படிக்கை "இச் சீதளப்போர்" நிலையால் செய்யப்பட்டவைகளாகும்.

ஜெர்மனியில் அமெரிக்கப் பிரான்ஸியர். பிரித்தானியர் ஆகியோரின் ஆதிக்கம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு ஜனநாயக அம்சங்களை ஓரளவு அடிப்படையாகக் கொண்ட "சமஷ்டிக் குடியரசை' ஜெர்மனியர் நிறுவினர். சோவியத் படைவீரர் தங்கிய பிரிவில் கொம்யூனிஸ்ட் அரசாங்கம், மக்களது விருப்பத்திற்கு மாருக சோவியத் படை வீரர்களால் ஸ்தாபிக்கப்பட்டது.

முதலாம் உலக யுத்தத்தின் பின் ருஷியாவில் பொதுவுடைமைக் கொள்கை நிலைபெற்றது போல சீனுவில் இரண்டாம் உலகப் போரின்பின் பொதுவுடைமைக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. யப்பான் போரில் தோற்றதும் பொதுவுடைமைவாதிகள் மாவோவின் தலைமையில் எழுச்சி கொண்டு பிற்போக்குக் கொள்கையைக் கொண்ட சியாங்கை முறியடிக்கக்கூடிய நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையை ஏற்படுத்தினர். இங்கு பொதுவுடைமைக் கொள்கை யும் கலாச்சாரமும் வரவேற்கப்பட்டு விரைவாகப் பரவியது.

இரண்டாம் உலகப் போர் சர்வாதிகாரிகளாலேயே ஆரம் பிக்கப்பட்டது. உலக நாடுகளுக்கிடையே சர்வாதிகாரம் வளர்ந் தால் மீண்டும் மீண்டும் பெரும் உலகப் போர்கள் நடைபெ றுமென்பதை உலகநாடுகள் இரண்டாம் உலகப்போரின் முடி வில் உணர்ந்து கொண்டார்கள். உலக நாடுகளிடையே சமாதா னமும், பாதுகாப்பும், அமைதியும் நிலவ ஜனநாயக ஆட்சிமு றையே சிறந்ததென உலகநாடுகள் உணர்ந்து திரும்பவும் ஜன நாயக ஆட்சிமுறையைப் பின்பற்றினர். ருஷியாவில் தோன் றிய லெனின் பொதுவுடைமை ஆட்சியைத் தோற்றுவித்தான். இக் கொள்கை சீனவிலும் பின்பற்றப்பட்டது. பிரித்தானியா அமெரிக்கா ஆகிய நாடுகளில் ஜனநாயக ஆட்சிமுறை மீண்டும் தோற்றுவிக்கப்பட்டது. இன்றும் ஜனநாயக ஆட்சி இந்நாடுக ளில் சிறந்து விளங்குவதுடன் ஏனைய நாடுகளுக்கு இவை முன் மாதிரியாக அமைந்தன. எனவே மேற்கு ஐரோப்பாவில் ஜன நாயகக் கொள்கையும் கிழக்கு ஐரோப்பாவில் பொதுவுடை மைக் கொள்கையும் தோன்றியது. ஆனல் ஜனநாயகக் கொள்கைதான் பெரும்பாலான உலக நாடுகளால் கடைப்பி டிக்கப் பட்டு இன்று உலக அரசியல் அரங்கில் சிறந்து விளங் குகிறது.

அடுத்ததாக இரண்டாம் உலகப்போரின் விளைவுகளில் ஐக் கிய நாடுகள் ஸ்தாபனம் அமைத்தமையும் ஒன்ருகும். யுத்தம் முடிவதைக் கண்ட உலக நாடுகளின் தலைவர்கள் மீண்டும் சமா தானத்தையும், பாதுகாப்பையும் நிலைநாட்ட சர்வதேச சங் கம் போன்ற ஒரு ஸ்தாபனத்தை நிறுவ விரும்பினர். 1945 ஆம் ஆண்டு யுத்தம் முடியுமுன்னரே இவ்வகையான ஸ்தாப னத்தை நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டது. மீண்டும் போரி கள் நடைபெருது தடுக்கவும், நாடுகளிடையே தோன்றும் பிரச் சினைகளை சுமுகமான முறையில் தீர்த்து வைக்கவும் இந்த ஸ்தாப னத்தில் சகல நாடுகளையும் அங்கம் வகிக்கச் செய்து நிறுவ முயன்ருர்கள். தூரகிழக்கில் போர் முடியும் முன்னரே ஐக்கிய நாட்டு ஸ்தாபன நிபந்தனைச் சாசனம் எழுதப்பட்டு 51 நாடு கள் கையொப்பமிட்டன. இந்த ஸ்தாபனத்தில் அமெரிக்கா சோவியத் நாடுகள் என்பனவும் இன்னும் வேறு பல நாடு களும் ஆரம்பத்திலேயே அங்கத்துவம் வகித்தன. சர்வதேச சங்கத்தில் அமெரிக்கா, சோவியத் நாடுகள் அங்கம் வகிக்க வில்லை; இந்நாடுகளின் தலைவர்களான ஜனதிபதி பிருங்லின்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றூஸ்வெல்ற், மாஷல் ஸ்டாலின், பிரித்தானியாவின் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் ஆகியோர் இந்த ஸ்தாபனம் சிறந்த முறையில் செயல்பட ஒத்துழைத்தனர். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் பொதுச்சபையும் பாதுகாப்புச் சபையுமென இரு சபைகள் ஆரம்பிக்கப்பட்டது; பின்னர் பல கிளைச் சபைகள் நிறுவப்பட்டு இன்று சிறந்த ஒரு ஸ்தாபனமாக உலக நாடுகளிடையே செயல்பட்டு வருகிறது;

# 15 நாடுகளின் பாதுகாப்பைப் பேணுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒத்துழைப்பு வேலைத்திட்டங்கள்

## (அ) உடன்படிக்கைகள்

நாடுகளிடையே ஏற்பட்ட போர்களையும், உள் நாட்டில், ஏற்படும், கிளர்ச்சிகள், குழப்பங்கள், சண்டைகள், என்பனவற்றைத் தீர்த்து வைப்பதற்கு காலத்துக்குக் காலம் உடன்படிக்கைகள் செய்யப்பட்டும், மகாநாடுகள் கூட்டப்பட்டும் முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன; முதலாம் உலகப் போரின் முன் செய்யப்பட்ட உடன்படிக்கைகளும் சமாதான மகாநாடுகளும் சிறப்பாக செயல்படவில்லை.

உலக நாடுகள் ஒவ்வொன்றும் தனித்து நின்றும் தமது தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத காலகட்டங்களில் வேறு நாடுகளுடன் ஒன்றுசேர்ந்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் உடன்படிக்கைகளையும் மகா நாடுகளையும் கூட்டியுள்ளனர். நாம் முதலாம் உலகமகா யுத்தத்தின் முன் உலக நாடுகளிடையே ஏற்படுத்தப்பட்ட மகாநாடுகள், உடன்படிக்கைகள் பற்றி மேலோட்டமாக அறிந்து கொள்ளுவோம்;

### முதலாம் உலகப் போரின் முன்

நெப்போலியனது ஆட்சிக் காலத்தில் அவன் பல நாடுகளைக் கைப்பற்றித் தன்வசப் படுத்தினான்; இவனது எதிரி நாடுகள் பலமுறை சமாதானஞ் செய்து கொள்வதற்காக மகாநாடு கூடும்படி கோரியபோது நெப்போலியன் உடன்படவில்லை; இவன் லிப்சிக் என்ற இடத்தில் நடந்த பலசாதியினரில் போரில் தோற்று சிங்காசனத்தைக் இழந்து எல்பாத் தீவிற்கு நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடத்தப்பட்டபின், நட்பு பூண்ட நாடுகள் ஐரோப்பாவில் ஏற்பட்டிருந்த குழம்பிய நிலையையும், பிரச்சனைகளையும் தீர்த்து வைப்பதற்காக வியன்னவில் மகாநாடு கூட்டினர். இம் மகாநாட்டில் பிரதானமானவர்களாக விளங்கியவர்கள் 1 ம் அலெக்சாந்தரும் ஆஸ்திரிய அரசியல் நிபுணனுன மெட்டர் நிக்குமாவர். இவர்கள் இம்மகாநாட்டின் மூலம் இயன்றவரை ஐரோப்பாவைப் பழைய அரசியல் நிலைக்குக் கொண்டுவரவும் புரட்சிகள் செய்வதற்குத் தோன்றிய இயக்கங்களை அடக்கவும் தீர்மானித்தனர்.

1815 ஆம் ஆண்டு ருஷியா, ஆஸ்திரியா, பிரஷ்யா என்னும் நாடுகளுக்கிடையில் கிறிஸ்தவக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ''பரிசுத்த ஒப்பந்தச் சங்கம்'' என்ற சங்கம் அமைக்கப்பட்டது. இதில் பிரித்தானியா முதலில் சேர மறுத்துப் பின்னர் சேர்ந்து, 1822 ல் விலகியது. இச்சங்கம் எதிர்பார்த்தளவு சித்தியடையவில்லை. ஆயினும் போரினுல் இதுவரை தீர்த்துவந்த விஷயங்களை நட்பு முறையில் கூடிச் சமாதான முறையில் தீர்க்க முயல்வது நாடுகளிடையே ஏற்படும் சிறப்பம்சமாகும்.

நெப்போலியனை எதிர்க்க ஒன்றுகூடிய நாடுகள் முக்கியமான அரசியல் விஷயங்களையும் பிரச்சனைகளையும் மகாநாடுகள் மூலம் முடிவு செய்யும் முறை பிற்காலங்களில் வளர்ச்சி பெற்றது. 19 ஆம் நூற்றுண்டில் யுத்தமுறை மூலம் பிரச்சனைகளை தீர்க்க முயன்றும் முடிவில் பலமகா நாடுகள் கூடி உடன்படிக்கைகள் செய்து பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன. ''ஐரோப்பியக் கூட்டுறவு'' என்ற கொள்கை வளர்ச்சியடைந்து வேர்சேல்ஸ் மகாநாடு, சர்வதேச சங்கம், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பின்னர் தோன்றிய ஒப்பந்தங்கள் என்பன தோன்றக் காரணமாய் அமைந்தது.

1818ஆம் ஆண்டு ஏலாஷெப்பல் மகாநாடு கூட்டப்பட்டது. 1821 ஆம் ஆண்டு லேபாக் மகாநாடு கூட்டப்பட்டது. பிருஷ்ஷியா, ஜேர்மனி செல்வ நிலைமையில் முன்னேற்றம் அடையக்கூடிய ஒரு ஏற்பாடு செய்தது. அதுவே 1833 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட சுங்கவரி ஐக்கியச் சங்கம் (*Zollverein*). ஆஸ்திரியா இச் சங்கத்தில் சேரவில்லை. இதனுல் ஜேர்மனிய நாடுகள் பிருஷ்ஷியாவைப் பின்பற்றின. இதனுல் ஜேர்மனியின் செல்வ நிலைமை வளர்ச்சி பெற்றது. பிருஷ்ஷியாவின் நோக்கம் ஓரளவு நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கன் தீபகற்பத்தில் சிலாவியரிடையே ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்கத் துருக்கி கடும் நடவடிக்கைகளை எடுத்தபோது ருஷியா துருக்கியுடன் போர் தொடுத்தது. (1877) ருஷியர் இப்போரில் வெற்றிபெற்று உடன்படிக்கைக்கான நிபந்தனைகளை விதித்தார்கள். பின்னர் ஐரோப்பிய வல்லரசுகள் தலையிட்டு பேர்லினில் மகாநாடு ஒன்றைக் கூட்டி ருஷியாவை துருக்கிய நாடுகளை சுயராச்சியமாக ஆட்சிசெய்ய விடும்படி கோரியது. இம் மகாநாடும் ஏனைய மகாநாடுகள் போல பயனளிக்கவில்லை. ஆயினும் நாடுகளிடையில் ஏற்படும் பிரச்சனைகளைச் சர்வதேச அரங்கில் தீர்த்து வைக்கலாம் என்ற முறையை இம் மகாநாட்டுமூலம் அறிமுகப் படுத்தப்பட்டது. ருஷியா தனது எண்ணப்படி நடக்கும் முறைக்கு ஓரளவு தடைவிதிக்கப் பட்டது.

முதலாம் உலகப் போர் நடைபெறலாமென ஐரோப்பிய நாடுகள் ஒன்றுக்கொன்று பயந்திருந்த நேரத்தில் சமாதானத்தைப் பேச்சு வார்த்தை மூலம் ஏற்படுத்துவதற்கு சில நாட்டின் தலைவர்கள் முயன்றார்கள். 1899ஆம் ஆண்டில் சாரின் தூண்டுதலினால் ஒல்லாந்திலே ஹேக் என்னும் இடத்தில் சமாதான மகாநாடு கூட்டப்பட்டது. பிரச்சனைகளை விவாதிக்குப்போது தீர்ப்பு வழங்குவதற்காக மத்தியஸ்தர் சபையொன்று நிறுவப் பட்டது. ஆனால் இம் முதலாம் மகாநாடு பயனளிக்கவில்லை. 1907ஆம் ஆண்டு இரண்டாம் முறையும் மகாநாடு ஹேக்கில் கூட்டப்பட்டது. திட்டவட்டமான பயன் அளிக்கவில்லையாயினும் அமெரிக்க ஐக்கியநாடு பிரான்சுடனும் பிரிதானியாவுடனும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டது.

மொரோக்கோ மீது பிரான்ஸ் ஆதிக்கம் செலுத்த முற்பட்டபோது ஜேர்மனி இவ் விஷயத்தை மகாநாடு ஒன்று கூட்டி ஆலோசிக்க வேண்டுமென விரும்பியபோது 1906ஆம் ஆண்டு அல்ஜேசிருசிற் கூட்டப்பட்டது. இதன்படி ஒரு உடன்படிக்கை செய்யப்பட்டது. இம்மகாநாட்டின் பயன் யாதெனில் ஐரோப்பாவில் அபாயகரமான நிலைமை உருவாவதை ஏனைய நாட்டு அறிஞர்களும் அறிந்து கொண்டமையாகும்.

1864ஆம் ஆண்டு சர்வதேச தொழிலாளர் சங்கம் நிறுவப்பட்டு தொழிலாளரின் நலன்கள் பேணப்பட்டது. இவ்வாறு காலத்திற்குக் காலம் இந்த உடன்படிக்கைகள் முன்னேற்றமான முறையில் பயனளிப்பனவயாக அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் உலகப் போருக்கு முன்:

முதலாம் உலகப்போர் முடிவடைந்ததும் 1919ஆம் ஆண்டு வேர்செயில்ஸ் என்னும் இடத்தில் ஓர் மகாநாடு கூட்டப்பட்டது. இம் மகாநாட்டின் நோக்கம் திரும்பவும் ஜேர்மனி போர் செய்யாதிருக்கும் பொருட்டு சில நியதிகட்கு உட்படுத்துவதற்காகும். இந் நியதி அமெரிக்க ஜனாதிபதி வில்சனால் 14 விதிகளைக் கொண்டதாக ஆக்கப்பட்டது. இந் நியதியை ஏனைய நேச நாடுகளும் ஆதரித்து இந்த உடன்படிக்கைப்படி ஜேர்மனியர் அல்சேசு-லோறன், றைன் ஆகிய இடங்களிலிருந்து வெளியேறுவதுடன் தன்வசமிருந்த போர்க்கப்பல்கள், ஆயுதங்கள், ஆகியவற்றையும் கைதிகளையும் தேசவல்லரசுகளிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பதாகும். இந்த உடன்படிக்கை 1919ஆம் ஆண்டு ஜேர்மனியுடன் செய்யப்பட்டது. ஆஸ்திரியா, பல்கேரியா, துருக்கி என்பனவற்றுடனும் தனித்தனியான உடன்படிக்கை செய்யப்பட்டது. துருக்கியுடன் 1923ஆம் ஆண்டு புதிய உடன்படிக்கை பின்னர் செய்யப்பட்டது. இந்த உடன்படிக்கைகள் இசைந்ததன் நோக்கம் திரும்பவும் உலக நாடுகளிடையே போர் ஏற்படாது தடுப்பதாகும். இதற்காக போர் தொடுக்கும் நாடுகளின் படை பலத்தைக் குறைத்தும் போர்க்கருவிகள், பீரங்கிகள், விமானங்கள் என்பனவற்றின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தியும் நாடுகளிடையே அமைதியையும், பாதுகாப்பையும் ஏற்படுத்த உடன்படிக்கைகளும் மகாநாடுகளும் உதவுமென நம்பி இவற்றைச் செயல்படுத்தினார்கள். ஆயினும் ஓரளவு பயன் கிட்டியது எனலாம்.

ஜெனிவாவில் உலக நாடுகளிடையே ஒற்றுமையை நிலவச் செய்யவும், சமாதானத்தையும், பாதுகாப்பையும் நிலைநாட்டுவதற்காக சர்வதேச சங்கம் அமைக்கப்பட்டது. இது 14 நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்டது. ஆலோசனைச் சபை, மகாநாடு, நிரந்தரக் காரியாலயம் என மூன்று பிரிவுகளைக் கொண்டதாக இயங்கியது. அமெரிக்க, ருஷியா, துருக்கி போன்ற சில நாடுகள் சேரவில்லை. வெவ்வேறு தேசங்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க சர்வதேச சங்கத்தினால் முடியாமற் போனமைக்குக் காரணம் இதன் அங்கத்துவ நாடுகள் சங்கத்திற்குக் கட்டுப்பட்டு நடக்காமையேயாகும். மீண்டும் போர் எழக்கூடாதென இச் சங்கம் நிறுவப்பட்டது. ஆனால் 1939ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் ஆரம்பித்ததை இச் சங்கத்தால் தடுக்க முடியாது சீர்குலைந்து போயிற்று.

ஹேக் என்ற இடத்தில் சர்வதேச நீதிமன்றம் நிறுவப்பட்டது. திறமையான நீதிபதிகள் இந் நீதிமன்றத்திற்கு சர்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேச சங்கத்தால் நியமிக்கப்பட்டார்கள். வெவ்வேறு நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட சச்சரவுகள் இந் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுத் தீர்க்கப்பட்டது.

சர்வதேச தொழிலாளர் சங்கம் சர்வதேச சங்கத்து அங்கத்தவரைக் கொண்டதாக இருந்தது. உலகம் முழுவதுமுள்ள தொழிலாளர்களதும், முதலாளிகளதும் பிரச்சனைகளை விசாரித்து இரு சாராருக்குமிடையில் சமரசம் செய்து வைத்தது. தீங்கு விளைவிக்கும் மருந்துவகை வியாபாரத்தைத் தடுத்தது. இச் சங்கம் ஏனைய சங்கங்களைவிட ஒரளவு சிறப்பாக இரண்டாம் உலகப்போர் தொடங்கும் வரை நடைபெற்றது.

சமாதான உடன்படிக்கைகளின் பயனாக உலக நாடுகளின் பலவற்றில் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றன. ஓரளவு சமூக ஒற்றுமை நிலவியது. ஹங்கேரி சமாதான உடன்படிக்கையை எதிர்த்தமையால் எல்லைகளைத் திருத்தும் வேலைகளைத் தடைசெய்வதற்காக செக்கோசிலவாக்கியா, ருமேனியா, என்பன யுகோசிலாவியாவுடன் சேர்ந்து சிறு மூவர் நட்பு என்றொரு ஒப்பந்தம் செய்தது.

1923ஆம் ஆண்டு கிறீசுக்கும் இத்தாலிக்கும் ஏற்படவிருந்த போர் "சமஸ்தான தூதர்" மகாநாட்டினால் தடுக்கப்பட்டது. 1925ஆம் ஆண்டு லொகாணேவில் மகாநாடு கூட்டப்பட்டது. சர்வதேச சங்கம் கிறீசுக்கும் பல்கேரியாவிற்குமிடையில் ஏற்படவிருந்த போரைத் தடுத்து நிறுத்தியது. 1927ஆம் ஆண்டு ஜெனிவாவில் போர்க்கருவித் தணிக்கை மகாநாடு பயனளிக்கவில்லை. 1928ஆம் ஆண்டு போர் ஏற்படாது தடுப்பதற்காக பிரயண்டும் கெல்லோக்கும் செய்த உடன்படிக்கைக்கு அநேக உலக நாடுகள் கையொப்பமிட்டுச் சம்மதித்தன.

இரண்டாம் உலகப் போர் ஏற்பட அமைந்தவற்றுள் சமாதான உடன்படிக்கைகள் தகர்க்கப்பட்டதும், சர்வதேச சங்கத்திற்கு அங்கத்துவ நாடுகள் கட்டுப்பட்டு செயல்படாதமையும் ஒரு காரணமாக அமைந்தது. எனவே உடன்படிக்கைகளும், மகாநாடுகளும் உலக நாடுகளிடையே, சமாதானம், பாதுகாப்பு, அமைதி, பொருளாதார வளர்ச்சி என்பன நடைபெறுவதற்குக் காலத்திற்குக் காலம் உதவி புரிந்துள்ளன.

## இரண்டாம் உலகப் போருக்குப் பின்

இரண்டாம் உலகப் போர் நடைபெற்றபோது முதலில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் போரில் கலந்து கொள்ளவில்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மறைமுகமாக பிரித்தானியருக்கு உதவி செய்து கொண்டிருந்தது. இந் நிலையில் 1941 ஆம் ஆண்டு ஆவணி மாதம் பிரித்தானியாவும், அமெரிக்க ஐக்கிய நாடுகளும் சேர்ந்து தாம் கைக்கொள்ள வேண்டிய கொள்கைகளை ''வட அத்திலாந்திக் சாசனம்'' என்னும் உடன்படிக்கையை எழுதிக் கொண்டன. இந்த ஒப்பந்தம் சமாதானமும் ஒற்றுமையும், ஆக்கிரமிப்பு ஒழிப்பையும் நிலைநாட்டுவதாக அமைந்திருந்தது.

1943 ஆம் ஆண்டு மொஸ்கோவில் தலைவர்கள் மகாநாடு கூடி அமைதி, ஒற்றுமை, பாதுகாப்பு என்பன நிலைநாட்டப்பட வேண்டுமாயின் சர்வதேச அமைப்பு ஒன்று நிறுவப்பட வேண்டுமெனப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதனை மொஸ்கோப் பிரகடனம் என அழைக்கப்பட்டது.

இரண்டாம் உலகப்போர் முடியும் முன்னரே சர்வதேச சங்கமென்ற ஒரு ஸ்தாபனத்தை திரும்பவும் நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டு நிபந்தனைச் சாசனம் எழுதப்பட்டு 51 நாடுகள் கையொப்பமிட்டு சம்மதமளித்தன. வின்ஸ்சன் சேர்ச்சில், பிருங்க்லின், றூஸ்வெல்ற், மாஷல் ஸ்டாலின் ஆகியோரினால் கூட்டப்பட்ட மகாநாட்டின் தீர்மானப்படி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் என்றதொரு ஸ்தாபனம் நிறுவப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின்பின் உலக நாடுகளிடையே 'சீதளப்போர்' நிலைமை நிலவியது (சோவியத் நாடும் அதனைச் சார்ந்தவைகள் ஒருபுறமும், அமெரிக்காவும் அதனைச் சார்ந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளும் இன்னொரு புறமுமாக இரு அணிகளாக பிளவுபட்ட நிலைமை) இந்நிலையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஸ்திரமான முறையில் செயல்படவில்லை. எனவே போர் மீண்டும் எழாது தடுக்கவும், பொருளாதார அபிவிருத்தினைச் செய்வதற்கும் ஒற்றுமையை ஏற்படுத்த வேறுபல ஒப்பந்தங்களும் செய்யப்பட்டது. வட அத்திலாந்திக் ஒப்பந்த ஸ்தாபனம், வார்சோ உடன்படிக்கை என்பன முக்கிய இடம் வகித்தன.

1939 ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் செய்து கொண்ட வட அத்திலாந்திக் உடன்படிக்கையின்படி போர் ஆயுதங்களை பெருமளவில் உற்பத்தி செய்தன. இதன் பயனாக வட அத்திலாந்திக் ஸ்தாபனம் (நேட்டோ) என்ற அமைப்பை நிறுவின. இதன் தலைவர் அமெரிக்கத் தளபதி: முதன் முதல் இப் பதவியை வகித்தவர் ஜெனரல் ஐசன் ஹோவர். இந்த ஸ்தாபனத்தில் இராணுவத் தலைமையகம் பாரிஸ் நகரில் அமைந்திருந்தது. இந்த ஸ்தாப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத்தின் நோக்கம் யாதெனில் இந்த அமைப்பினுள்ள நாடுகளை ருஷியாவின் படையெடுப்பிலிருந்து பாதுகாப்பதாகும்; இதில் அங்கம் வகித்த நாடுகள் அனைத்தும் ருஷியாவிற்குப் பயந்து பாதுகாப்பை நாடியே இவ்வமைப்பில் சேர்ந்தன; பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி, போர்த்துக்கல், பெல்ஜியம், நோர்வே, ஜெர்மனி, சமஷ்டிக் குடியரசு என்பன முதலில் இதில் அங்கம் வகித்தன. பல நாடுகளின் வீரர்கள் ஒன்றிணைந்து செயல்படக் கூடிய முறையில் இந்த ஸ்தாபனம் அமைக்கப்பட்டிருந்தது: ஒரு நாட்டின் மீது வேறொரு நாடு போர் தொடுத்தால் ஏனைய நாடுகள் தம்மீது ஏற்படுத்தப்பட்ட போராகக் கொண்டு அந் நாட்டுக்கு உதவ வேண்டும்; அங்கத்துவ நாடுகளின் சுதந்திரம், பாதுகாப்பு, அமைதி என்பனவற்றை எல்லா அங்கத்துவ நாடுகளும் பாதுகாக்க வேண்டுமென்பது இதன் முக்கியமான கொள்கையாகும்.

வார்சோ ஒப்பந்தம் வட அத்தலாந்திக் ஒப்பந்த ஸ்தாபனத்திற்கு எதிராக உருவாக்கப்பட்டது. இதனை ருஷியா ஐரோப்பிய கம்யூனிஸ நாடுகளைச் சேர்த்து இதனை உருவாக்கியது. ருஷியா, கிழக்கு ஜெர்மனி, போலாந்து, ருமேனியா ஹங்கேரி, செக்கோசிலவாக்கியா ஆகிய நாடுகள் இதில் அங்கம் வகித்தன. இந் நாடுகள் தமது இராணுவப் படைகளைப் பெருக்குவதற்கு ருஷியா ஆதரவளித்தது: அங்கத்துவ நாடுகளதும் ருஷியாவின் சேனைகளையும் வார்சோ ஒப்பந்தம் ஒன்று சேர்த்து ருஷியாவின் தலைமையின் கீழ் இயங்கும் மிகப்பெரிய இராணுவ அமைப்பாக இயங்கக் கூடிய முறையில் ஒன்று சேர்த்தது. யூகோசிலாவியா இதில் சேர மறுத்துவிட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி இதன் அங்கத்துவ நாடுகளின் சுதந்திரம் பாதுகாப்பு அமைதி என்பனவற்றை எல்லா அங்கத்துவ நாடுகளும் சேர்ந்து பேணுவதுடன் ஒரு நாடு தாக்கப்படுமாகில் ஏனைய நாடுகள் உதவிசெய்து அந்நாட்டைக் காப்பது ஆகும்;

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட இரு ஒப்பந்தங்களாலும் திரும்பவும் ஐரோப்பா, போர் செய்ய ஆயத்தமாகும் நிலையில் இரு அணியாகப் பிரிந்து நின்றது.

## அரபு நாடுகளின் சம்மேளனம்:

சோவியத் ஐக்கிய நாட்டிற்கு அருகில் இருந்த துருக்கி, ஈராக், ஈரான், பாக்கிஸ்தான் ஆகிய நாடுகள், சோவியத் நாடுகளின படையெடுப்பு ஏற்படலாமெனப் பயந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்தோடு பாக்டாட் உடன்படிக்கையை பிரித்தானியாவுடன் செய்து கொண்டன;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### (ஆ) போர்க் கருவிகளை வரையறுக்கும் திட்டங்கள்

முதலாம் உலகப்போர் தொடங்கும் முன்பே போர்க் கருவிகளை வரையறுக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டது. முதலாம் உலகப் போரின் பின்னர் 1919 ஆம் ஆண்டு வேர்செயில்ஸ் உடன்படிக்கை ஜேர்மனியுடன் செய்யப்பட்டது. அடுத்து ஆஸ்திரியா, பல்கேரியா, துருக்கி என்பனவற்றுடனும் தனித்தனி உடன்படிக்கை செய்யப்பட்டது. இவ்வுடன்படிக்கையின் நோக்கம் மீண்டும் போர் ஏற்படாது தடுப்பது. இதற்காக இந்த நாடுகளின் படைக் கருவிகளை விருத்தி செய்யாது தடுக்குமாறு பணிக்கப்பட்டது. 1927 ஆம் ஆண்டு ஜெனிவாவில் போர்க் கருவிகளின் தணிக்கை பற்றிய மகாநாடு நடைபெற்றது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பட்டயத்தில் போர்க் கருவிகளை வரையறுக்கும் திட்டம் இடம்பெற வேண்டுமென ஆலோசிக்கப்பட்டுள்ளது. அணுச்சக்தி ஆணைக்குழு (1947-ல்) போர்க் கருவிகளை வரையறுப்பதன் அத்தியாவசியத்தை விளக்கி வலியுறுத்தியுள்ளது. அமெரிக்கா, ருஷியா என்னும் இரு நாடுகளிலும் விஞ்ஞானம் தீவிர வளர்ச்சியடைந்ததன் பயனாக அணுகுண்டுகள், ஜலவாயுக் குண்டுகள் என்பனவற்றை உற்பத்தி செய்து பரீட்சித்துப் பார்த்து வந்தது. ஜெனிவாவில் 1958 ஆம் ஆண்டு கூட்டப்பட்ட மகாநாட்டில் போர்க் கருவிகளையும், அணுகுண்டுகளையும், ஜலவாயுக்குண்டுகளையும் உற்பத்தி செய்வதை வரையறுப்பதால் உலக நாடுகளின் சமாதானமும், ஒற்றுமையும், பாதுகாப்பும் பேணப்படுமெனச் வலியுறுத்தப் பட்டது. அபாயம் விளைவிக்கும் குண்டுகளைப் பரீட்சிப்பதற்கும் தடைவிதிக்கப்பட்டது. ஆயினும் நாடுகளில் ஏற்பட்டுவரும் விஞ்ஞான வளர்ச்சியால் ஆயுதங்கள் பெருகுவதை தடுப்பது பெரும் பிரச்சனையான விடயமாக இன்றுவரை இருந்து வருகிறது.

## 16 போர்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக நாடுகள் தோற்றுவித்துள்ள தாபனங்கள்

### நேட்டோ (வட அத்திலாந்திக் ஒப்பந்தத்தாபனம்)

ருஷியாவினதும் அதனைச் சார்ந்த நாடுகளினதும் படையெடுப்புக்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க ஐக்கிய நாடுகளும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் இத்தாபனத்தை நிறுவினர். இத்தாபனத்தில் அங்கம் வகித்த நாடுகளின் வீரர்கள் ஒன்று சேர்ந்து இயங்கும் முறை இத்தாபனத்தால் உருவாக்கப்பட்டது. ஒரு நாட்டின்மீது எதிரிகள் போர் தொடுக்க நேர்ந்தால் ஏனைய நாடுகள் தம்மீது தொடுக்கப்பட்ட போராகக் கருதி அந்நாட்டைக் காப்பர். அங்கத்துவ நாடுகளின் சுதந்திரப், பாதுகாப்பு, அமைதி என்பவற்றைப் பாதுகாப்பதே இத்தாபனத்தின் முக்கிய நோக்கம். எனவே தனித்து ஒரு நாடு தனது எதிரியை எதிர்ப்பதிலும் பார்க்க உறவு நாடுகள் ஒன்று சேர்ந்து போர்களிலிருந்து தம்மைப் பாதுகாப்பதே சிறந்த செயல் என்பதற்காக நேட்டோ தாபனம் தோற்றுவிக்கப்பட்டது.

அடுத்ததாக அமெரிக்க வல்லரசுக்கு எதிரணியில் இருந்த ருஷியா, ஐரோப்பிய கொம்யூனிஸ நாடுகளை தன்னுடன் சேர்த்து வார்சோ ஒப்பந்தம் என்ற பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டது. இவ்வொப்பந்தம் ருஷியாவின் சேனைகளையும் அங்கத்துவ நாடுகளின் சேனைகளையும் ஒன்றுசேர்த்து ருஷியாவின் தலைமையின் கீழ் இயங்கும் மிகப் பெரிய இராணுவ அமைப்பாக இயங்கியது. இந்த ஒப்பந்தம் நேட்டோ ஒப்பந்தத்திற்கு எதிராக அமைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் படி இதில் அங்கம் வகிக்கும் நாடுகளின் அமைதி, சுதந்திரம் பாதுகாப்பு என்பனவற்றை எல்லா அங்கத்துவ நாடுகளும் சேர்ந்து பேணுவதுடன், ஒரு நாடு வெளிநாட்டுப் படையெடுப்பால் தாக்கப்படும் போது ஏனைய அங்கத்துவ நாடுகளும் அப்போரில் ஈடுபட்டு அந் நாட்டைப் பாதுகாப்பதென்பதாகும்.

எனவே இவ்விரு ஸ்தாபனங்களினால் அமெரிக்காவும், ருஷியாவும் இரு வல்லரசாக வளர்ந்தபோது (இரண்டாம் உலகப் போரின் பின் நிலவிய சீதளப் போர் நிலைமை), தம்மைப் பாதுகாத்துக்கொள்ள உலக நாடுகள் இரு அணிகளாகப் பிரிந்து நின்றன. சில நாடுகள் அமெரிக்காவுடனும், சில நாடுகள் ருஷியாவுடனும் சேர்ந்து நின்றன. இவ்வாறு சேர்ந்து நின்றமைக்கான முக்கிய காரணம் ருஷியாவிற்கெதிரான நாடுகள், ருஷியா தம்மீது போர் தொடுக்குமென அஞ்சி அமெரிக்காவுடன் போர்ப் பாதுகாப்பிற்காகச் சேர்ந்து நின்றன. அதேபோல அமெரிக்காவுக்கெதிரான நாடுகள் அமெரிக்கா தம்மீது போர் தொடுக்கும் என அஞ்சி அப்போரை எதிர்த்து நிற்கக்கூடிய வல்லமை பெற்ற ருஷியாவுடன் சேர்ந்து நின்றன. போர்களிலிருந்து தம்மைப் பாதுகாப்பதே இவ்விரு ஸ்தாபன அங்கத்துவ நாடுகளின் நோக்கம். அதே வேளை அமெரிக்காவும் ருஷியாவும் இவ் விரு ஸ்தாபனத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவித்த நோக்கம் தாம் ஒருவர் மீது ஒருவர் (அமெரிக்காவும், ரூஷியாவும்) போர் செய்ய நேர்ந்தால், தமக்கு இவ் வங்கத்துவ நாடுகள் உதவி செய்வார்கள் என்பதாகும்.

ஐரோப்பிய நாடுகள் தமது பாதுகாப்பிற்காக ஸ்தாபனங்களை அமைத்துத் தமது பாதுகாப்பைப் பெற்றதுபோல ஆசிய நாடுகளும் பாதுகாப்பிற்காக சில உடன்படிக்கைகளைச் செய்துள்ளன. சோவியத் ஐக்கிய நாட்டிற்கு அருகிலிருந்த துருக்கி, ஈராக், ஈரான், பாகிஸ்தான் ஆகியன சோவியத் வல்லரசிற்கு அஞ்சி (ரூஷியா) பிரித்தானியாவிடம் தமக்குப் பாதுகாப்புக் கோரி பாக்டாட் உடன்படிக்கையைச் செய்து கொண்டன. கொம்யூனிஸ்ட் தேசங்கள் தம்மைத் தாக்கும் என அஞ்சி அவுஸ்திரேலியாவும், நியூசிலாந்தும், பசுபிக் கிழக்குத் தெற்கு எல்லைகளிலுள்ள சில தேசங்களும் பரஸ்பர உதவி அளிக்கும் நோக்குடன் ("தென்கிழக்காசிய உடன்படிக்கை ஸ்தாபனம்") சியட்டோ என்னும் ஸ்தாபனத்தை நிறுவினர். எஞ்சிய ஆசிய நாடுகள் நடுநிலைமை வகித்தன. இவை நேரு வழிகாட்டிய "பஞ்சசீலக்" கொள்கையைப் பின்பற்றின. இவ்வாறு ஆசிய நாடுகளும் போர்களிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்காக ஸ்தாபனங்களைத் தோற்றுவித்து தமக்கு வேண்டிய பாதுகாப்பை ஏற்படுத்தியிருந்தன. இத் தாபனங்கள் எதிரியைக் கூட்டாக எதிர்ப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்ததுடன் பொருளாதாரத் தேவைகளுக்கும் ஒத்துழைத்தன.

## பொருளாதார ஒத்துழைப்பு

இரண்டாம் உலகப்போரின் போது பல ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் சீரழிக்கப் பட்டிருந்தது. இந்நாடுகளின் சீரமைப்பிற்காக வேறு வல்லரசு நாடுகள் ஒத்துழைப்பளித்து இந் நாடுகளைச் சீரமைத்தன. இவ்வாறு பொருளாதார வளமிக்க நாடுகள் பொருளாதாரத்தில் சீரழிந்திருந்த நாடுகளுக்கு ஒத்துழைப்பு அளிப்பதற்கெனப் பல திட்டங்களை உருவாக்கின. அவ்வாறான திட்டங்களின் நோக்கம், பயன் என்பனபற்றிக் கற்போம்.

### (1) மார்ஷல் திட்டம்:-

இரண்டாவது உலகப் போர் முடிந்ததும் இப் போரினால் சீரழிந்த நாடுகளின் முன்னேற்றத்திற்கு உதவுவதற்கு அமெரிக்கா முன்னின்றது. அமெரிக்க இராச்சியச் செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Secretary of state) ஜோர்ஜ் காட்லெட் மார்ஷல் ஐரோப்பிய மீட்சித் திட்டம் ஒன்றைத் தயாரித்தார். இத் திட்டத்தை இவர் தயாரித்தமையால் இவரது பெயரால் மார்ஷல் திட்டம் எனப்படுகிறது. இத் திட்டமூலம் சுதந்திர ஸ்தாபனங்களை வளர்க்க எண்ணி 1947ஆம் ஆண்டு ஐரோப்பியப் பொருளாதார அமைப்பு ஒன்றை ஏற்படுத்தினர். இப் பொருளாதார அமைப்பைப் பாரீஸில் கூடிய 16 நாடுகளின் பிரதிநிதிகளும் ஏற்றுக் கொண்டார்கள். இத் திட்டத்தின் பெரும் பகுதியை நிறைவேற்றும் பொறுப்பை அமெரிக்கா ஏற்றுக் கொண்டது. இத் திட்டத்தின் நிதி பல்வேறு சிறந்த திட்டங்களை நிறைவேற்றப் பயன்படுத்தப்பட்டது. இத் திட்டத்தில் சேர்ந்து கொண்ட 16 நாடுகளுக்கும் அளிக்கப்பட்ட நிவாரணங்களுக்காகச் செலவிட்ட தொகையில் 80% இறைமாகக் கொடுத்து மிகுதியைக் கடனாகக் கொடுத்து உதவியது.

(2) சிவ்கொன் திட்டம் (நான்கு அம்சத்திட்டம்)

1948ஆம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்ற நூமன் என்பவர் மார்ஷல் திட்டம் உலகின் தேவைகள் முழுவதையும் பூர்த்தி செய்யக்கூடிய திட்டமல்ல வென அபிப்பிராயம் கொண்டு சிவ்கொன் திட்டத்தை வெளியிட்டார். குறிப்பிட்ட 16 நாடுகளுக்கு மட்டுமன்றி பொருளாதாரத்தில் பின்தங்கி உலகிலிருக்கும் நாடுகள் அனைத்திற்கும் அமெரிக்க அரசாங்கமும், தனியார் நிறுவனங்களும், நிதி உதவியையும், தொழில் நுட்பம் போன்ற பல்வேறு உதவிகளையும் வழங்குவதுடன் அந் நாடுகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஊக்கமும் அளிக்க வேண்டுமென இத் திட்டத்தை வகுத்தார். இத் திட்டம் உலக நாடுகளிடையே ஏற்பட்டுள்ள பஞ்சத்தைப் போக்கவும் உதவுமென இவர் அபிப்பிராயப்பட்டார். மார்ஷலுடைய திட்டத்திலும் பார்க்க இத்திட்டம் பரந்தளவு உதவும் நோக்குடன் வரையறுக்கப்பட்டது. இத் திட்டத்தை அமெரிக்க அரசாங்கமும், ஐக்கிய நாடுகள் சபையும் வரவேற்றது. இவற்றைத் தவிர அமெரிக்கா பல முன்னேற்றமடையாத நாடுகளின் இராணுவ உதவிக்காகவும் பல கோடி ரூபாவைச் செலவு செய்துள்ளன.

அமெரிக்கா இத்திட்டத்தின் பின்னர் ஐக்கிய நாடுகளின் கிளை ஸ்தாபனங்கள் மூலம் உலக நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கும், உலக நாடுகளின் அமைதிக்காகவும் பல உதவிகளைச் செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### (3) கொழும்புத் திட்டம்:

இத் திட்டத்தை பிரித்தானிய பொதுநலவமைப்பு நாடுகளின் ஆலோசனைக் குழுவினர் 1950 ஆம் ஆண்டு சிட்னி, கொழும்பு, லண்டன் ஆகிய இடங்களில் கூடித் தெற்கு, தென் கிழக்கு ஆசியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்காக வகுத்தனர்; ஆசிய நாடுகளின் அபிவிருத்திக்கு உதவுவதுடன் இதன் அங்கத்துவ நாடுகளின் தொழில் நுட்பத் துறையை இந்நாடுகள் ஒன்று சேர்ந்து வளர்ச்சியடையச் செய்வதும் இதன் நோக்கமாகும்.

தொழில் நுட்ப உதவியளித்த நாடுகளில் கூடியளவு உதவியளித்த நாடு அமெரிக்காவாகும். தொழில் துறையில் பின் தங்கியிருந்த அங்கத்துவ நாடுகளுக்கு இத் தொழில் நுட்ப உதவியால் பெரும் பயன் விளைந்துள்ளது. 1964 — 65 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் பெருமளவு தொகையினர் தொழில் வல்லுனர்களிடம் பயிற்சி பெற்றதுடன் 4920 இடங்களில் தொழில் நுட்பப் பயிற்சிக்கான வசதிகள் செய்யப்பட்டு உறுப்பு நாடுகளுக்குப் பலகோடி பவுண் பெறுமதியான தொழில் நுட்பக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தினுல் மருத்துவம், சுகாதாரக்கல்வி, தொழில், வாணிகம், போக்குவரத்து, நீர்ப்பாசனம், தபால் தந்தி, உணவு உற்பத்தி, விவசாயம் என்பனபோன்ற துறைகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டதுடன் தொழில் நுட்ப உதவிகளும் அளிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி பெருகவும், பொருளாதாரம் வளர்ச்சியடையவும் கொழும்புத்திட்டம், அங்கத்துவ நாடுகளுக்குப் பெரிதும் உதவியுள்ளது. தெற்கு, தென்கிழக்காசிய நாட்டு மக்கள் வறுமையிலும், தாழ்ந்த வாழ்க்கைத் தரத்திலும் இன்றும் இருக்கிறுர்கள். இத்திட்டத்தின் நோக்கம் முழுமையாக வெற்றியடையவில்லை; ஆயினும் பல நாடுகள் இத்திட்டத்தால் தொழில் நுட்பக் கல்வி பொருளாதாரம் என்பனவற்றில் பெருமளவு வளர்ச்சியடைந்துள்ளன.

தெற்காசியா, தென்கிழக்காசிய நாடுகளின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன் 1951 ஆம் ஆண்டு ஏழு பொதுநல நாடுகள் சேர்ந்து ஏற்படுத்திய கொழும்புத் திட்டத்தில் இன்று ஈரான், கொரியா, பிஜி, மாலைதீவு ஆகிய நாடுகளுட்பட மற்றும் பல நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

### (4) ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகம்

ஐரோப்பிய நாடுகள் பல நூற்றுண்டுகளாகப் போரிட்டு வந்தமையால் இப் பொருளாதாரச் சமூகத்தையமைக்க முடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யவில்லை; பல அறிஞர்கள் ஐக்கிய ஐரோப்பாவை உருவாக்க முயன்று தோல்வி கண்டார்கள். இரண்டாம் உலகப் போரின் பின் உலக நாடுகளிடையே அமெரிக்காவும், ருஷியாவும், வல்லரசாக வளர்ந்து நின்ற அதேவேளை ஐரோப்பிய நாடுகள் சீரழிந்த நிலைமையில் இருந்தன. அரசியல், பொருளாதாரத் துறையில் தம்மிடையே ஒற்றுமையேற்பட்டால் தான் மீண்டும் தாம் சிறந்த நிலையையடையலாமென உணர்ந்தன; இவ்வுணர்ச்சியே ஓர் இயக்கமாக உருவானது;

இவ்வாறான ஒரு பொருளாதாரச் சமூகம் உருவாவதற்கு முன்னோடியாக பிரான்ஸ் நின்றது; 1950ஆம் ஆண்டு இரண்டு முக்கிய தொழில்களான நிலக்கரி, எஃகு உற்பத்தித் துறைகளில் பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, பெல்ஜியம், லக்செம்பர்க்கு, நெதர்லாந்து, இத்தாலி ஆகிய ஆறு ஐரோப்பிய நாடுகளும் பாரீஸில் கூடி தாம் ஒன்றிணைந்து இத் துறைகளில் செயல்படுவதென ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். இது ஷுமான் (Schuman) திட்டம் எனப்படும். இத்திட்டத்தில் ஓரளவு வெற்றிபெற்றதால் இத் திட்டத்தின் பயனாக 1958ஆம் ஆண்டு ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகம் என்ற நிறுவனம் உருவாக்கப்பட்டது;

ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகத்தின் நோக்கம் பொருளாதார ஒருமைப்பாட்டின் மூலம் அரசியல் ஒருமைப்பாட்டை உருவாக்குவதுமாகும்; இந் நிறுவனத்தின் நிர்வாகத்தில் உறுப்பு நாடுகளின் அமைச்சர்களைக் கொண்ட குழு, நிர்வாகக் கொமிஷன், உறுப்பு நாடுகளின் பாராளுமன்றங்களினால் நியமிக்கப்பட்ட 182 அங்கத்தவர் கொண்ட சபை, நீதிமன்றம் என்பன இடம் பெற்றன. இந்நிறுவனத்தைப் போல் ஐரோப்பியப் பொதுச்சந்தையும் ஐரோப்பியப் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்தியது;

இப் பொருளாதாரச் சமூகத்தின் உறுப்பு நாடுகள் ஆறும் ஒருவர் மீது ஒருவர் விதித்துவந்த சுங்க வரிகளை நீக்கித் தடையற்ற வர்த்தகச் சட்டத்தை ஏற்படுத்தியதுடன் இச் சமூகத்தில் அங்கம் வகிக்காத ஏனைய நாடுகள் மீது இந்த ஆறு நாடுகளும் ஒரே விதமான சுங்கவரி விதிக்கும் வர்த்தகக் கொள்கையைக் கைக்கொண்டன. அத்தோடு இந்த 6 நாட்டுத் தொழிலாளர்களும் இந்த ஆறு நாடுகளுக்குள்ளும் தடையின்றிச் சென்று வேலை வாய்ப்புப் பெறலாமென்றும், தொழிலதிபர்கள் உறுப்பு நாடுகளுள் விரும்பிய நாட்டில் முதலீடு செய்யவும் உரிமை அளிக்கப்பட்டது; நாணயச் செலாவணி, வங்கி நடைமுறை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்துத் துறை; வரி விதிப்பு முறை என்பனவற்றில் உறுப்பு நாடுகள் யாவற்றிலும் ஒரே முறை கைக் கொள்ளப்பட்டது. விவசாயத் துறையிலும் ஒரே வகையான விலைக் கொள்கை கைக்கொள்ளப்பட்டன.

பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட ஐக்கியம் அரசியல் பிரச்சனைகளைத் தோற்றுவிக்க ஏதுவாக அமைந்தது. அமெரிக்கா, ருஷியா போல் இந் நிறுவனமும் மூன்றும் அரசியல் சக்தியாக இடம்பெற உறுப்பு நாடுகள் விரும்பின. பிரித்தானிய இதில் முதலில் சேர மறுத்தும் இப்பொழுது சேர்ந்துள்ளது. ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகம் 6 நாடுகளின் அமைப்பாக இருந்தாலும் இந்த உறுப்பு நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் முன்பிருந்த ஆபிரிக்க நாடுகளுக்கு இணைப்பு உறுப்பு நாடுகள் என்ற தகுதி வழங்கி அவற்றுடனும் பல பொருளாதார ஒப்பந்தங்கள் செய்திருக்கின்றன. இந்நாடுகளுக்கெல்லாம் பல பொருளாதார உதவிகள் வழங்கியது. துருக்கி, கிறீஸ், ஈரான், இஸ்ரவேல் என்பன இவ்வாறான உதவிகள் பெற்றுப் பயனடைந்த நாடுகளில் குறிப்பிடத்தக்கனவாகும்.

சுங்க வரிகளை நீக்கித் தடையற்ற வர்த்தகத்தைத் தமக்குள் வளர்த்துக் கொண்டதால் இப்பொழுது ஆறு நாடுகளதும் பொருளாதாரம் சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளது. மொழி, இனம், பண்பாடு என்பன ஒற்றுமைக்குத் தடையல்ல என்பதை ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் என்னும் நிறுவன ஒருமைப்பாடு உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளது.

## (5) உங்டாட் நிறுவனம்:

### (ஐக்கிய நாடுகளின் வர்த்தகம், அபிவிருத்தி ஆகியவற்றிற்குரிய ஆணைக்குழு)

உலக நாடுகளில் பின்தங்கிய நிலைமையிலிருக்கும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியை விரைவில் நிறைவேற்றுவதற்கு வர்த்தகத்தை ஊக்குவித்தல் அவசியம் என்பதனால் உங்டாட நிறுவனம் நிறுவப்பட்டது. இது ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர உறுப்பாகத் திகழ்கிறது. ஜெனிவாவில் 1964 ஆம் ஆண்டு இந் நிறுவனம் கூட்டப்பட்டது. இந் நிறுவனத்தின் செயல் யாதெனில் வெவ்வேறு பொருளாதார அமைப்பினையுடைய நாடுகளுக்கிடையே பேச்சுவார்த்தைகளினால் வர்த்தக ஒருமைப்பாடு, வர்த்தகக் கொள்கை என்பவற்றை ஏற்படுத்துகிறது. இந் நிறுவனத்தின் தீர்மானங்களை வர்த்தக அபிவிருத்திச் சபை நடைமுறைப் படுத்துகிறது. அபிவிருத்தி குறைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கென ஒரு காரியாலயம் நிறுவப்பட்டு செயல்படுகிறது. இந் நிறுவனமூலம் ஆசியாவும் ஆபிரிக்காவும் வேறுசில நாடுகளும் பயனடைகின்றன.

மேலே கூறப்பட்ட திட்டங்கள், நிறுவனங்கள் மூலம் இரண்டாம் உலகப் போரினுல் பொருளாதாரத்தில் சீர் குலைந்திருந்த நாடுகள் பொருளாதாரத்தில் அதிவளர்ச்சி பெற்றிருந்த நாடுகளின் ஒத்துழைப்பினுலும் நாடுகளிடையே செய்துகொண்ட பொருளாதார உடன்படிக்கைகளினுலும் உலக நாடுகள் பலவும் வளர்ச்சியடைந்துள்ளன.

## (6) வர்த்தக உடன்படிக்கைகள்:

நாடுகளிடையே தத்தம் பொருட்களை நியாயமான விலையில் விற்கும் நோக்கத்துடன் வர்த்தக உடன்படிக்கைகள் செய்யப்படுகிறது. கூட்டாகவும், தனிப்படவும் இந்த உடன்படிக்கைகள் செய்யப்படுகிறது. தேயிலை, றப்பர், எண்ணெய் போன்ற பொருட்களை உற்பத்தி செய்யும் நாடுகள் உடன்படிக்கைகளைச் செய்கின்றன.

அபிவிருத்தியடையாத நாடுகளும் அபிவிருத்தியடைந்த நாடுகளும் வர்த்தகப் பொருட்களுக்கு தீர்வை விதிப்பதில் ஒப்பந்தங்களைச் செய்து கொள்கின்றன. நாட்டிற்கு நாடு நாணய முறை வேறுபட்டிருப்பதாலும், நாணயத்தின் மாற்று அளவு வித்தியாசப்படுவதாலும் நாடுகளிடையே வர்த்தகம் நடைபெறும் போது எற்படும் சிக்கல்களை இந்த ஒப்பந்தங்கள் தீர்த்து வைக்கின்றன. நாடுகள் தமது நாட்டில் கிடைக்காத பொருட்களை வேறு நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்யும்போதும், தனது தேவைக்கு மிஞ்சிய பொருட்களைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்போதும் ஒப்பந்தங்களைச் செய்கின்றன. இலங்கை சீனுவுடன் செய்துள்ள வர்த்தக உடன்படிக்கையை இருபக்க வர்த்தகம் என அழைக்கப்படும். பலபக்க வர்த்தகமும் நடைபெறுகிறது.

# 17 சர்வதேச நிறுவனங்களின் அவசியமும், அவற்றின் வெற்றியும்

உலகநாடுகளுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக பல ஒத்துழைப்பு நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றில் விசேட துறைகளுக்கென செஞ்சிலுவைச் சங்கம், சர்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேச தொலைத்தொடர்புச் சேவை, சர்வதேச அஞ்சல்சேவை என்பன போன்ற ஒத்துழைப்பு நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் நோக்கம், செயல் என்பன பற்றி ஆராய்வோம்.

(1) செஞ்சிலுவைச் சங்கம்:

1859 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதி 'சால் பெரினு' என்ற ஊருக்கருகில் மூன்றும் நெப்போலியனுக்கும் (பிரான்ஸ் மன்னன்) பிரான்சிஸ் ஜோசப்பிற்கும் (ஆஸ்த்திரியா மன்னன்) இடையில் நடந்த போரில், காயம் பட்டுக் குற்றுயிராக போர்க்களத்தில் அன்றிரவு கிடந்து அல்லல்பட்ட போர் வீரர்களை ஹென்றி டுனன்ட் (*Henry Dunant*) என்னும் சுவிட்சலாந்து பாங்க் முதலாளி கண்டு மனமிரங்கி தன் ஊருக்குச் சென்று சிலரை அழைத்துவந்து போர் வீரர்களுக்குச் வேண்டிய முதலுதவிகளைச் செய்தார். பின்னர் 1862 ஆம் ஆண்டு 'சால் பெரினு நினைவுகள்' என்னும் நூலை எழுதினர். இந்நூலில் தான் போர்க்களத்தில் கண்ட காட்சியை மட்டுமன்றி இனி வரும் காலத்தில் போர்க்களத்தில் காயமுறுவோர்க்கும் நோயாளிகளுக்கும் உதவி புரிவோர்க்கு நாட்டில் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும் இச் சங்கங்கள் ஒன்றிணைந்து செயல்பட ஒரு திட்டம் வகுக்க வேண்டுமெனவும் எழுதினர். இந்நூலே செஞ்சிலுவைச் சங்கம் தோன்றுவதற்கு அடிகோலியது.

கஸ்ட்டாவ் மாய்னியர் (*Gustave Maynier*), ஜெனரல் டியூபூர் (*General Dufoeur*) டாக்டர் ஆப்பியா (*Dr-Appia*), டாக்டர் மோனுவர் (*Dr-Maunoir*) என்னும் நால்வரை அங்கத்தவராகவும், ஹென்றிடுனன்டைச் செயலாளராகவும் கொண்ட ஒரு குழு ஜெனீவாவில் நிறுவப்பட்டது. ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் அரசரை நேரில் கண்டு டுனன்ட் இக் குழுவின் நோக்கங்களை விளக்கியதன் பயனாக 1863 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26ஆம் திகதி 16 நாடுகளின் 30 பிரதிநிதிகள் மகாநாடு கூட்டப்பட்டது. இவர்கள் ஐவர் குழுவின் கொள்கையை ஏற்றுத் தமது நாட்டில் தேசிய உதவிச் சங்கங்களை நிறுவினர். 1864ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி சுவிட்சர்லாந்து அரசாங்கம் கூட்டியது; இதில் அமெரிக்காவும், 13 ஐரோப்பிய நாடுகளும் கலந்து கொண்டன. இம் மகாநாட்டின் விளைவே முதல் ஜெனிவா உடன்படிக்கையாகும்: இதன்படி காயமுற்ற வீரர்கள் தம்மவர், வேற்றுநாட்டவர், எதிர்நாட்டவர் என்ற பாகுபாடின்றி சிகிச்சையளிக்கவேண்டும்: இராணுவ மருத்துவ நிலையம், மருத்துவர்கள் ஆகியோர் மீது தாக்குதல் நடத்தக் கூடாது. நோயுற்றோர் அனைவருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகிச்சையளிக்க வேண்டும். வெள்ளைத் துணியில் செஞ்சிலுவை பதிக்கப்பட்ட சின்னம் இப்பணியின் சின்னமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. துருக்கி, எகிப்து, ஈராக், ஜோர்தான், சிரியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் செஞ்சிலுவைக்குப் பதிலாக செவ்விளம்பிறைச் சின்னத்தையும், ஈரான் செஞ்சிங்கமும் சூரியனும்உள்ள சின்னத்தையும் கொண்டுள்ளன.

உலக நாடுகளிடையே இதன் கொள்கை பரவியதன் பயனாக 74 நாடுகளில் தேசிய செஞ்சிலுவைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1899ஆம் ஆண்டு தரைப்படைச் சண்டைக்கு மட்டுமன்றி கடற்படைச் சண்டையிலும் உதவியளிக்கலாமென ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1929ஆம் ஆண்டில் போரில் சிறைப்பட்ட கைதிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதும், 1949-ல் போர்க் காலத்தில் காயமுற்ற வீரர்களுக்கு மட்டுமன்றி ஏனையோருக்கும் பாதுகாப்பளிக்கலாமெனவும் சங்கம் தனது வேலைகளை விரிவுபடுத்திக்கொண்டது. 1-ம், 2-ம் உலக மகாயுத்தங்களின் பின்னர் இச் சங்கம் அமைதிக் காலப் பணியாக அந்தந்த நாட்டு மக்களின் சுகாதாரம் பேணுதல், நோயைத் தடுத்தல், எதிர்பாராத விபத்துக்களால் துன்புறுவோரின் துயர் நீக்குதல் ஆகிய மூன்று துறைகளிலும் பணியாற்றி வருகிறது.

உலக நாடுகளிடையே செஞ்சிலுவைச் சங்கங்களின் அமைப்பு முறையை ஆராய்வோம். செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுதான் முதலில் செஞ்சிலுவைச் சங்கத்தைத் தோற்றுவித்ததுடன் இதன் கோட்பாடுகளையும் கவனித்து வருகிறது. இது ஒரு நடு நிலைக் குழுவாகும். இதன் அலுவலகம் ஜெனிவாவில் உள்ளது. இது ஜெனிவா உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த உழைக்கிறது.

**செஞ்சிலுவைச் சங்கங்களின் கூட்டுக் கழகம்:** இது அந்தந்த நாடுகளிலுள்ள தேசியச் சங்கங்களின் வளர்ச்சிக்காகப் பாடுபடுகிறது. அங்கங்களாயுள்ள சங்கங்களின் உரிமைபெற்ற பிரதிநிதியாக இயங்குகிறது. எல்லாத் தேசியச் சங்கங்களுக்கும் காப்பாக இருந்து நலன்களை வளர்க்கிறது.

**தேசிய செவ்விளம் பிறை, செஞ்சிங்க சூரிய சங்கங்கள்:** இவை அந்தந்த நாட்டுத் தேசிய சங்கங்கள். இவற்றின் தொண்டர்கள் பொதுச் சுகாதார அதிகாரிகளுக்கு, இராணுவ மருத்துவர்களுக்கு அங்கீகாரம் பெற்ற உதவியாளர்களாக இருப்பர். போராலும், இயற்கையாலும் ஏற்படும் கஷ்டங்களின்போது மக்களுக்கு உதவி புரிகிறது.

**சர்வதேச செஞ்சிலுவை மகாநாடு:** இது நாலு ஆண்டுக்கொருமுறை கூடுகிறது. இது சர்வதேச செஞ்சிலுவைச் சங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தின் பேரவையாகும்; தேசிய செஞ்சிலுவைச் சங்கங்களின தும், செஞ்சிலுவை சர்வதேச குழுவினுடையதும், செஞ்சிலுவை சங்கங்களின் கூட்டுக் கழகத்தினுடையதும் பிரதிநிதிகளைக் கொண்டதாக மகாநாட்டைக் கூட்டுகிறது.

**சர்வதேசச் செஞ்சிலுவையின் நிலையான குழு:** இக்குழு செஞ் சிலுவையின் சர்வதேசக் குழுவினுலும், செஞ்சிலுவைச் சங்கங் களின் கூட்டுக் கழகத்தினுலும், சர்வதேச செஞ்சிலுவை மகாநாட்டினுலும் தேர்ந்தெடுக்கப்பெற்ற அங்கத்தினர்களைக் கொண்ட அமைப்பாகும். சர்வதேசத் தேசியச் சங்கங்களுடைய முயற்சிகளை இணைத்து ஒருமைப் படுத்துகிறது;

## (2) சர்வதேச தொலைத்தொடர்புச் சேவை

ஜெனிவாவில் இதன் தலைமைக் காரியாலயம் அமைந்துள் ளது; இச்சேவை 1865 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது; 1949 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய நாடுகள் சபை ஆதரவு அளித்து வருகிறது. உலகநாடுகள் அனைத்திற்கு மிடையே தொலைத் தொடர்புச் சேவைகளைப் பெற்றுக்கொடுப்பது இதன் முக்கிய நோக்கம். இது நாடுகளிடையே தொலைத் தொடர்புச் சேவையை விஸ்தரித்தும் வருகிறது. இது பல தொழில் நுட்ப ஆய்வுகளை நடாத்தி அவற்றை உலக நாடுகளிடையே செயல் முறையில் நடைபெற வழிவகுக்கிறது. தந்தி, தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி என்பனவற்றை தொழில் நுட்பத்தினுல் மேலும் மேலும் உலக நாடுகளிடையே விஸ்தரித்து செயல்படுத்துகி றது. இதன் தலைமைக் காரியாலயத்தில் ஐந்து வருடத்திற் கொருமுறை கூட்டம் நடைபெறுகிறது.

## (3) சர்வதேச அஞ்சல் சேவை

சுவிற்சலாந்தில் அஞ்சல் சேவை அதிகாரிகளின் கீழ் சர்வ தேச அஞ்சல் சேவையின் இயக்குநர்கள் இயங்கி வருகிறார்கள்; இச்சேவை 1875 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையுடன் 1948 ஆம் ஆண்டு ஓர் உடன்பாடு ஏற்ப டுத்தப்பட்டு இது இயங்கி வருகிறது. உலகிலுள்ள சகல நாடு களுக்கிடையே அஞ்சல் சேவையை ஏற்படுத்துவதும், அதை விஸ் தரிப்பதும், சேவையில் உடன்பாட்டை ஏற்படுத்துவதும் இதன் செயல்களாகும்.

# 18 சர்வதேச சங்கம்

இச் சங்கம் ஜெனிவாவில் அமைந்திருந்தது; அமெரிக்க ஜனதிபதி உட்ரோ உவில்சனுல் வேர்சேல்ஸ் மகா நாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பித்த 14 அம்சத் திட்டத்தில் 14-வதாக அவர் குறிப்பிட்ட திட்டமாக இது இடம்பெற்றது. அரசியற் சுதந்திரத்தையும், நாடுகளின் எல்லைகளையும் ஒற்றுமையாகப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தேசிய சாதியினரின் பொதுச் சங்கமொன்று ஏற்படுத்தவேண்டுமென விடுத்த வேண்டுகோளின்படி சர்வதேச சங்கமும், சர்வதேச நீதிச் சபையும், சர்வதேச தொழிலாளர் சங்கமும் அமைக்கப்பட்டு செயல்பட்டன; வேர்சேல்ஸ் மகாநாட்டில் பங்குபற்றிய பிரதிநிதிகள் ஜெர்மனியைப் பழிவாங்கும் எண்ணமுடையவராக இருந்தமையால் வில்சனின் 13 திட்டங்களையும் புறக்கணித்து 14வது திட்டத்தை மட்டும் ஏற்றுக் கொண்டனர். வில்சன் உலக நாடுகளிடையே ஏற்படும் சச்சரவுகளை சமாதான முறையில் தீர்த்து, நாடுகளிடையே சமூக, பொருளாதார முன்னேற்றத்துக்கான வழிகளை மேற்கொள்ள இச் சங்கம் உதவுமென நம்பினர்.

வேர்சேல்ஸ் மகாநாட்டுக்கு வந்திருந்தவர்களில் பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளே இச் சங்கத்தை ஸ்தாபித்தவர்களாவர். பிரித்தானியாவைச் சேர்ந்த லோர்ட் றெபர்ட்சிசிலும், ஜெனரல் ஸ்மட்சும் பெரும் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

## சர்வதேச சங்கத்தின் நோக்கங்கள்:-

உலக நாடுகளிடையே சமாதானத்தை நிலைநாட்டுதல், வெவ்வேறு நாடுகளுக்கிடையில் ஏற்படும் சச்சரவுகளை மகாநாடுகளில் ஒன்றுகூடி அவற்றைத் தீர்த்து வைத்தல். அங்கத்துவ நாடுகள் தம்முள் போர் தொடுப்பதில்லையென உறுதி செய்து கொள்வது. யுத்தம் ஏற்படக்கூடிய நிலைமை தோன்றினால் அவற்றைத் தடுத்தல். சர்வதேசங்களுக்கிடையே தோன்றும் பிரச்சனைகளைக் கூட்டு முயற்சியால் தீர்த்துக் கொள்ளுதல்.

இச் சங்கம் தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பிரதிநிதிகளது ஆலோசனைச் சபை, மகாநாடு, நிரந்தர அலுவலகம் என மூன்று பிரிவுகளைக் கொண்டு செயல்பட்டது.

இச் சங்கத்தின் அங்கத்துவ நாடுகளிடையே பிரச்சனை ஏற்பட்டால் அவை சங்கத்திற்கு அல்லது சர்வதேச நீதி மன்றத்திற்குத் தமது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். இவை பிரசசனைகளைத் தீர்த்துவைத்து நாடுகளிடையே அமைதியையும், நல்லுறவையும் நிலைநாட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாயினும் ஒரு அங்கத்துவ நாடு இச் சங்கத்தின் கட்டுப் பாடுகளை மீறிப் போர் செய்தால் ஏனைய அங்கத்துவ நாடுகள் போர் தொடுக்கப்பட்ட நாட்டிற்கு உதவியளிக்கும்.

I-ம் உலகப் போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பொரு ளாதாரம், சமூக முன்னேற்றம் ஆகியனவற்றை மேன்மைப் படுத்த இச் சங்கம் உதவிபுரியும். இப் போரில் தோல்வியடைந்த நாடுகளிடமிருந்து பெற்ற குடியேற்றங்களில் பொறுப்பாட்சி நடைபெற வழிவகுப்பதுடன் அந்நாட்டிற்கு அவ்வப்போது ஆலோசனைகளை வழங்கிப் பரிபாலனத்திற்கு ஒத்துழைப்பு நல்கு வது.

அங்கத்துவ நாடுகள் தமக்குள் ஒப்பந்தங்கள் மூலம், படை களைக் குறைத்தல் அதே வேளை பாதுகாப்பிற்கு அத்தியாவசிய மான அளவு படைகளை ஒவ்வொரு நாடும் வைத்திருக்க வேண்டு மென்ற நியதி, படைகளை ஒவ்வொரு நாடும் ஏனைய நாட்டின் உதவியுடன் விருத்தி செய்துகொள்வது.

ஒல்லாந்து தேசத்தில் ஹேக் என்ற நாட்டில் கூடிய சர்வ தேச நீதிமன்றத்திற்கு வெவ்வேறு தேசங்களிலிருந்து திறமை மிக்க நீதிபதிகள் சர்வதேச சங்கத்தால் நியமிக்கப்பட்டு நாடு களுக்கிடையே ஏற்படும் சண்டைகள் தீர்த்து வைக்கப்பட்டன.

சர்வதேச தொழிலாளர் சங்கம் நிறுவப்பட்டது: இதில் சர்வதேச சங்கத்து அங்கத்தவர்களே அங்கத்தவர்களாக இருந் தார்கள். இச் சங்கத்தில் நிர்வாகசபை, பொதுச்சபை, நிரந்தர அலுவலகம் என்பன இடம் பெற்றன. உலக நாடுகளிலுள்ள முதலாளிகளதும், தொழிலாளர்களதும் பிரச்சனைகளை விசாரித்து இரு சாராரிடையேயும் சமரசத்தை ஏற்படுத்துவதுடன் தொழி லாளர் நலன் பேணுவதும் இதன் நோக்கம்.

இச்சங்கம் உலகப் பெரும் போரை ஒரு முடிவிற்குக் கொண்டு வருவதும் திரும்பவும் இவ்வாறான போர் ஏற்படாது தடுப்பதும், மக்களிடையே உலக சமாதானம் ஏற்பட ஊக்குவித்தலும், நாடுகளிடையே அமைதியை ஏற்படுத்தி மக்களின் அமைதியான வாழ்க்கைக்கு வழிவகுப்பதும் இதன் நோக்கமாகும்.

## அமைப்பு

சர்வ தேச சங்கத்தில் 14 நாடுகள் அங்கம் வகித்தன: இச் சங்கத்தின் அமைப்பு மூன்று பிரிவாக அமைக்கப்பட்டிருந்தது: ஆலோசனைச் சபை: இச் சபையில் 14 நாடுகளின் பிரதிநிதிகள் அங்கம் வகித்தனர்கள்; நிர்வாக சபை: இதில் பிரித்தானியா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ், அமெரிக்கா, இத்தாலி ஆகியவற்றின் பிரதிநிதிகள் நிரந்தர உறுப்பினர்களாகவும், ஆலோசனைச் சபையால் தெரிவு செய்யப்பட்ட நான்கு உறுப்பினர்களையும் கொண்டதாக இச் சபை இருந்தது. அவசர அலுவல்கள் பற்றிய நடவடிக்கைகளை உடனுக்குடன் தீர்மானித்து செயல்பட அதிகாரம் உடையதாக இச் சபை இருந்தது. நிரந்தரக் காரியாலயம்: இது நாடுகளுக்கு சேவை செய்வதற்காக நிரந்தரமாக அமைக்கப்பட்டு செயலாற்றியது. சர்வதேச நீதிமன்றம்: இது ஹேக்கில் அமைக்கப்பட்டிருந்தது. வெவ்வேறு நாடுகளிலிருந்து திறமைமிக்க நீதவான்களை சர்வதேச சங்கம் நியமித்திருந்தது. நாடுகளிடையே ஏற்படும் பிரச்சனைகளை ஆலோசனைச் சபையால் தீர்க்க முடியாத பட்சத்தில் இந் நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும். இம் மன்றம் இவற்றை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும். சர்வதேச தொழிலாளர் சங்கம்: சர்வதேச சங்க அங்கத்தவர்களை அங்கத்தினராகக் கொண்டது. இச் சங்கம் தொழிலாளர்களிடையேயும் முதலாளிகளிடையேயும் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதுடன் இரு சாரார்களுக்கு மிடையே நல்லுறவை ஏற்படுத்தி தொழிலாளர்களின் சுகாதாரம், வேலை வசதி, ஊதியம் என்பனவற்றை நியாயமான முறையில் வழங்க ஏற்பாடுகள் செய்து வந்தது. 1939ஆம் ஆண்டு 2-ம் உலக மகா யுத்தம் ஆரம்பித்த பின்னரே இச் சங்கம் சீர்குலைந்தது.

**அங்கத்துவ நாடுகள்**

முதன் முதலில் இச்சங்கத்தில் 14 நாடுகள் அங்கத்துவம் வகித்தன. ஜெர்மனி, ஆஸ்திரியா, துருக்கி, ரூசியா ஆகிய நாடுகளுக்குச் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டு அதற்குக் கட்டுப்படாததால் இந்நாடுகள் அங்கத்துவம் பெறமுடியாதென ஆரம்பத்தில் தீர்மானிக்கப் பட்டது. பிரித்தானியா, இத்தாலி, யப்பான், பிரான்ஸ், ஆகிய நாடுகள் நிரந்தர அங்கத்துவம் வகித்தது. சுதந்திர ஆட்சி செய்யும் நாடுகள் இதில் விரும்பினுல் அங்கத்துவம் பெறக்கூடியதாகவிருந்தது. அமெரிக்காவிற்கு இச்சங்கத்தில் நிரந்தர அங்கத்துவம் அளிக்கப்பட்டது. ஆனுல் அமெரிக்கா சேரமறுத்துவிட்டது. ஜெர்மனி 1926 ஆம் ஆண்டு இச் சங்கத்தில் சேர்ந்து கொண்டது. 1934 ஆம் ஆண்டு ரூசியாவும் சேர்ந்தது. உலகத்திலுள்ள நாடுகள் பல சேர்ந்து கொண்டன. ஆயினும் பிரேசில், துருக்கி, மெக்சிக்கோ ஆகிய நாடுகள் சேரவில்லை. 1920 ஆம் ஆண்டு 24 நாடுகள் அங்கம் வகித்தது. 1934 ஆம் ஆண்டு 60 நாடுகள் வரை அங்கத்துவம் வகித்தன. ரூஷியா நீண்ட காலம் சேர மறுத்த போதிலும் முடிவில் சேர்ந்து கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆற்றியுள்ள சேவைகள்:

முதலாம் உலகப் போரினால் நாடுகளின் அரசியல் பொருளாதாரம் சீர்குலைந்த நிலையிலிருந்தது. முதல் பத்து ஆண்டுகளும் நாடுகளின் சமூக, பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கேற்ற முறையில் பல கருமங்களைச் செயல்படுத்தியது. உதாரணமாக சுகாதாரம், மருத்துவம் ஆகிய துறைகளை நாடுகளிடையே விருத்தியுறச் செய்தது. தொற்று நோய்கள் பரவுவதை தடுப்பதற்கான மருந்து வகைகளை வளர்ச்சி பெற்ற நாடுகளிடமிருந்து பெற்று ஏனைய நாடுகளுக்கு உதவுவதற்கென பல சுகாதார ஸ்தாபனங்களை நிறுவிச் செயல்படச் செய்தது. அடிமை முறையை ஓரளவு ஒழித்ததுடன் குழந்தைகளை தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தி வருத்தி வேலை வாங்கும் முறையை ஒழித்தது. அகதிகளுக்குப் புனர் வாழ்வு அமைக்கவென பல ஸ்தாபனங்களை நிறுவியது. உலக நாடுகளில் முன்னேற்றமடையாத நாடுகளுக்கு நிதி உதவியளிப்பதற்கென சில நிதி ஒதுக்கீடுகளை ஏற்படுத்தி அதன் மூலம் பல நாடுகளுக்கு உதவியது. இவ்வாறாக சமூகப் பொருளாதார முன்னேற்றங்களுக்குச் சேவை செய்ததுடன் நாடுகளிடையே ஏற்பட்ட சிறுசிறு பிரச்சனைகளை சிறந்த முறையில் தீர்த்து வந்தது. ஹேக்கில் சர்வதேச நீதிமன்றம் அமைத்து நாடுகளிடையே ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாதபோது இம்மன்றம் மூலம் தீர்த்து வைத்தது. தொழிலாளர் சங்கம் தொழிலாளர்களதும் முதலாளிகளதும் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தது.

## வெற்றியடையாமைக்கான காரணங்கள்:-

இச் சங்கத்தின் ஆரம்ப காலங்களில் அங்கத்துவ நாடுகள் சங்கத்தின் கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டுச் சங்கத்தின் தீர்மானங்களை ஏற்றுக்கொண்டன. ஆனால் பிற்காலத்தில் ஜேர்மனி, இத்தாலி, ரூஷியா, யப்பான் ஆகிய நாடுகள் தமக்கு சங்கத்தால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை மீறி அண்டை நாடுகள் மீது போர் தொடுத்தன. இவற்றைத் தடுக்க சங்கத்தினால் முடியவில்லை. சங்கத்திற்கு இந்நாடுகள் கட்டுப்படவில்லை. சங்கத்திடம் படைபலம் இல்லாதிருந்தமையும் ஒரு குறைபாடாகும். சங்கம் நிறைவேற்றும் தீர்மானங்களைச் செயல்படுத்த அல்லது தாக்கப்படும் அங்கத்துவ நாட்டிற்குப் பாதுகாப்பளிக்க தேவைப்படும் படைபலம் சங்கத்திடம் இல்லாமையால் சங்கம் நாடுகளுக்குத் தகுந்த பாதுகாப்பளிக்க முடியவில்லை. இத்தாலியில் முசோலினி சமாதானத்தில் நம்பிக்கையில்லையெனக் கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனியுடன் சேர்ந்து போரில் ஈடுபட்டமையும் ஜேர்மனியில் ஹிட்லரின் சர்வாதிகாரப் போக்கும் நாடுகளைக் கைப்பற்றும் ஆவேசமும் இச் சங்கம் தோல்வியடையக் காரணமாக அமைந்தது.

சர்வதேச சங்கத்தில் அங்கம் வகித்த வல்லரசு நாடுகளான பிரான்சும், பிரித்தானியாவும் ஏனைய நாடுகளைக் கட்டுப்படுத்தாமலும் சங்கத்தைப் பாதுகாக்காமலும் விடுத்து தத்தம் நாட்டின் பாதுகாப்பையும், நலன்களையும் பேணுவதை நோக்காகக் கொண்டிருந்தன. இதனால் தமது நலன்களைப் பாதுகாப்பதற்காகவே இதில் அங்கம் வகித்தார்கள். இச் சங்கத்தின் தீர்மானப்படி போர்த் தணிக்கைக்குப் பதிலாக படைபலத்தைப் பெருக்கி நாட்டைப் பாதுகாக்கும் நோக்குடன் போருக்கு ஆயத்தமானார்கள்.

1927ஆம் ஆண்டு ஜெனிவாவில் கூடிய போர்க்கருவித் தணிக்கை மகாநாடு வெற்றியடையாமையும் இச் சங்கம் தோல்வியடையக் காரணமாய் அமைந்தது. தேசிய வெறி கொண்ட தலைவர்களால் உலகம் திரும்பவும் போர் தொடங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இதனால் சர்வதேச சங்கம் பயனில்லாமல் போயிற்று; இந் நிலையில் 1933ஆம் ஆண்டு ஜேர்மனியும், யப்பானும் இச் சங்கத்திலிருந்து விலகியது. அடுத்து இத்தாலி 1939ஆம் ஆண்டு விலகியது. இவ்வாறு நாடுகள் விலகி அண்டை நாடுகளுடன் போர் செய்தன. 1939-ல் இரண்டாம் உலகயுத்தம் ஆரம்பமான போது பிரித்தானியாவும், பிரான்சும் மட்டுமே அங்கத்துவம் வகித்தன. 1945ஆம் ஆண்டு இச் சங்கம் ஒழிக்கப்பட்டது. இச் சங்கம் ஒழிக்கப்பட்டமைக்கு முக்கிய காரணம் இதன் அங்கத்துவ நாடுகளின் தன்னிச்சைப் போக்காகும்.

# 19 ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்

இரண்டாம் உலக யுத்தம் முடிவடைவதைக் கண்ட உலக மக்கள் நிரந்தரமான அமைதி நாடுகளில் நிலவச் செய்ய வேண்டுமென்பதற்காக சர்வதேச சங்கம் போன்ற ஒரு ஸ்தாபனத்தை நிறுவ வேண்டுமென 1944ஆம் 1945ஆம் ஆண்டுகளிலேயே நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 'பெரு மூவர்' எனப் பெயர்பெற்ற ஜனாதிபதி பிராங்லின் றூஸ்வெல்ற், மாஷல் ஸ்டாலின், பிரதமர் வின்ஸ்ரன் சேர்ச்சில் ஆகியோர் இந்த ஸ்தாபனத்தை நிறுவ அயராது உழைத்தவர்களாவர். இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்கள் எழாது தடுக்கவும், தேசங்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்க்கவும் ஏற்றதாக இத் தாபனத்தை அமைக்கும் அதே வேளை எல்லா நாடுகளையும் இதில் அங்கத்துவ நாடுகளாக்க முற்பட்டார்கள். தூர கிழக்கில் போர் முடிவடையுமுன்னரே ஐக்கிய நாட்டுச் சாசன நிபந்தனைச் சாசனம் எழுதப்பட்டு 51 அங்கத்துவ தேசங்களின் கையொப்பத்தையும் பெற்றுவிட்டனர். 51 அங்கத்துவ நாடுகளுடன் 1945ஆம் ஆண்டு ஒக்ரோபர் 24ஆம் திகதியில் ஸ்தாபனம் அமைக்கப் பட்டது. இதன் தலைமை அலுவலகம் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது.

நோக்கங்கள்:

சர்வதேச சங்கத்தின் நோக்கங்களிலும் பார்க்கக் கூடியளவு பரந்த நோக்கம் கொண்ட புதிய சர்வதேச அமைப்பாகும். இது வெற்றியடைந்த நாடுகளின் ஆதரவுடன் நிறுவப்பட்டது; சமாதானத்தை உலக நாடுகளிடையே பாதுகாப்பது மட்டுமன்றி வறுமையை உலகிலிருந்து அகற்றுவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டது. போர்கள் நாடுகளிடையே எழுவதைத் தடுக்கும் அதே வேளை போரினால் ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து மக்களைக் காப்பதும், சமாதானமும், பாதுகாப்பும் உலக நாடுகளிடையே நிலையாக இடம்பெற வழி வகுப்பதும், இதன் அரசியல் சம்பந்தப்பட்ட கொள்கைகளாகும்.

பொருளாதார முன்னேற்றம் காண்பதும் இதன் மற்றொரு நோக்கமாகும். உலக நாடுகளின் சமூக முன்னேற்றத்திற்கும், உலக மக்களது வாழ்க்கைத்தரம் உயர்வதற்கும் வேண்டிய உதவிகளைப் பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகள் மூலம் ஆவன செய்தல். இதற்கென சர்வதேச நிறுவனங்களை நிறுவித் தனது நோக்கங்களை நிறைவேற்றுதல்.

அடுத்ததாக மனித அடிப்படை உரிமைகளை வரையறுத்து அவற்றைப் பிரகடனப்படுத்தி உலக நாடுகளைக் கடைப்பிடிக்கச் செய்து ஒவ்வொரு பிரஜையினதும் உரிமைகளைச் சுதந்திரமாக அனுபவிக்க வேண்டுமென்பதும், உலக நாடுகளிடையே நீதியை நிலைநாட்டுவதும் இதன் நோக்கமாகும்.

சகல நாடுகளினதும் சம்பிரதாயங்களையும், சர்வதேச சட்டக் கோவையையும் அடிப்படையாகக் கொண்டு இத் தாபனத்தின் அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது; இதனை ஐக்கிய நாடுகள் சாசனம் என வழங்கப்படும். இதன் அங்கத்துவ நாடுகள் இச் சாசனத்தையே கடைப்பிடிக்க வேண்டுமென்பதும் இதன் நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமைப்பு:-** 51 அங்கத்துவ நாடுகளுடன் ஆரம்பிக்கப் பட்ட இச்சபையில் இன்று 135 அங்கத்துவ நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இது பொதுச்சபை, பாதுகாப்புச் சபை, பொருளாதார சமூக நலக் கழகம், தர்மகர்த்தா சபை, சர்வதேச நீதி மன்றம் என்ற பிரிவுகளைக் கொண்ட அமைப்பாகும்.

**பொதுச்சபை:-** இச்சபை அங்கத்துவ நாடுகளைக் கொண்டது. இச்சபை வருடத்திற்கு ஒரு முறை கூட்டப்படவேண்டும். ஒரு அங்கத்துவ நாடு பொதுச்சபைக் கூட்டத்திற்கு ஐந்து பிரதிநிதிகளை அனுப்பி வைக்கலாம். பாதுகாப்புச் சபையின் தேவைகளுக்காக விசேட கூட்டங்களையும் இச்சபை கூட்டலாம். சமாதானத்தைப் பாதுகாத்தல், சர்வதேசப் பொருளாதாரம், கலாச்சாரம், சமூகம், கல்வி ஆகியவற்றின் வளர்ச்சிக்கான ஆலோசனைகளைச் சமர்ப்பித்தல் இதன் முக்கிய கடமையாகும். பாதுகாப்புச் சபை, பொதுச் செயலகம், பொருளாதார சமுதாய சபை, சர்வதேச நீதிமன்றம், நம்பிக்கைப் பொறுப்புச் சபை ஆகியவற்றிற்குச் சில நியமனங்களைச் செய்தலும் இதன் நடவடிக்கைகளில் ஒன்றாகும். இச்சபை தனது தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு ⅔ அங்கத்தவரின் சம்மதத்தைப் பெறவேண்டும். இதற்கென வாக்கெடுப்பு நடைபெறும் போது அங்கத்துவ நாடுகள் தமக்குரிய ஒரு வாக்கைப் பயன்படுத்துவர். இச்சபையின் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக அங்கத்துவ நாடுகள் 7 நிர்வாகக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு செயலாற்றுகின்றன.

**பாதுகாப்புச் சபை:-** நிரந்தர அங்கத்துவ நாடுகளான பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரான்ஸ், மக்கள்சீன ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் நிரந்தர அங்கத்துவமில்லாத 10 பிரதிநிதிகளையும் இச் சபை கொண்டது. இந் நிரந்தர அங்கத்துவமற்ற நாடுகளைப் பொதுச்சபை தெரிவு செய்யும். இவர்கள் இருவருடத்திற்கொருமுறை தெரிவு செய்யப்படுவர்.

உலக நாடுகளின் சமாதானத்தைப் பேணும் முக்கிய பொறுப்பு இச்சபைக்குரியது. நிரந்தர அங்கத்துவ நாடுகளும் ஏனைய 9 நாடுகளும் சாதகமாக வாக்களித்தால் தான் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படும்.

**பொருளாதார சமூக நலக் கழகம்:-** உலக மக்களுக்கு ஏற்படக்கூடிய பொருளாதார, சமூக, அரசியற் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது இதன் முக்கிய நோக்கம். இதற்கென 15 விஷேச நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சர்வதேசங்களும் இதன் திட்டங்களைச் செயல்படுத்த இந் நிறுவனம் ஊக்குவிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக சுகாதார ஸ்தாபனம், உணவு விவசாய ஸ்தாபனம், சர்வதேச தொழில் ஸ்தாபனம், கல்வி விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனம் என்பனவும், உலகவங்கி, சர்வதேச நாணய நிதி என்பனவும் பொருளாதார நடவடிக்கைகளில் செயல்படும் நிறுவனங்களாகும்.

**சர்வதேச நீதி மன்றம்:-** ஹேக் நகரில் இம்மன்றம் அமைக்கப் பட்டுள்ளது. 15 நீதிபதிகளைக் கொண்டுள்ளது. இந் நீதி மன்றத் தையும் இதன் கொள்கைகளையும் சில அங்கத்துவ நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. நாடுகளுக்கிடையே ஏற்படும் பிரச்சனை களை இம் மன்றம் தீர்த்து வைக்கும். ஆனல் சட்டத்தை மீறிய வர்களை விசாரணைக்கு அழைப்பதற்கு இம்மன்றத்துக்கு அதி காரம் இல்லை. இரு தரப்பினரும் விரும்பித் தமது பிரச்சனை களை சமர்ப்பித்தால் மட்டுமே இம்மன்றம் விசாரித்துத் தீர்ப்பு வழங்கமுடியும்.

**தர்மகர்த்தா சபை:-** சுய உரிமையற்ற நாடுகளை ஆட்சி செய்யும் நாடுகளின் அறிக்கைகளைப் பார்வையிடுவதுடன் அவை சுதந்திரம் பெறவும், மனிதாபிமானத்துடன் நடாத்தப்படவும் வழிவகைகளைக் கைக்கொள்வது இதன் நோக்கம்.

**காரியாலயம்:-** ஐக்கிய அமெரிக்காவில் நியூயோர்க் நகரத் தில் அமைந்துள்ளது. கட்டிடமும் நிறுவப்பட்டிருக்கும் இடமும் எல்லா அங்கத்துவ நாடுகளுக்கும் உரிய பொது இடம். இத் தாபனத்தை செயல்படுத்துவதற்கு சகல அங்கத்துவ நாடுகளும் நிதியுதவியளிக்க வேண்டும். ஒவ்வொரு அங்கத்துவ நாட்டின் பிரதிநிதியும் இத் தலைமைக் காரியாலயத்தில் கடமையாற்ற நிரந்தரமாக நியமிக்கப்படுவர். பொதுச் செயலாளரே பிரதான உத்தியோகஸ்தர். ஏனைய நிறுவனங்களுக்கு அதன் நடவடிக் கைகளைச் செயல்படுத்த இக் காரியாலயம் அவ்வப்போது கட் டளைகளைப் பிறப்பிக்கும்.

சமாதானத்தைப் பேணுவதற்காக இத்தாபனம் நிறை வேற்றும் தீர்மானங்களை செயல்படுத்துவதற்கெனப் பாதுகாப் புப் படையொன்று அமைக்கப்பட்டுள்ளது. அங்கத்துவ நாடு களால் அனுப்பப்படும் படைகள் இத் தாபனத்தின் ஆணைப்படி சமாதானத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும்.

இத் தாபனத்தினலும் இதனேடு தொடர்புடைய நிறுவனங் களாலும் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை செயல்படுத்து வதற்கு ஒரு நிர்வாக சேவை உருவாக்கப்பட்டுள்ளது. இதில் அங்கத்துவ நாடுகளின் பிரசைகள் இடம் பெறுவர். இதைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற சிறப்பறிஞர் களும் இத் தாபனத்திலும் இதன் இணைப்பு நிறுவனங்களின் கிளைகளிலும் கடமையாற்றுகிறார்கள்.

## உலகப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண நாடுகள் தந்துதவிய ஒத்துழைப்பு

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பெரும்பாலான அபிவிருத்தி யடைந்த நாடுகள், இரண்டாம் உலகப் போரினால் பொருளா தாரத்தில் மிகவும் பின் தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டன. பொருளாதார வளர்ச்சியடைந்த ஐக்கிய அமெரிக்கா இந் நாடு களுக்கு உதவுவதற்கென 'மார்ஷல் திட்டம்' என்ற திட்டத்தை ஏற்படுத்தியது. இத் திட்டத்தில் ஐக்கிய அமெரிக்காவின் உதவி யினால் மேற்கு ஐரோப்பிய நாடுகள் மீண்டும் வளர்ச்சியடைந் தன. இதன்பின் அபிவிருத்தியடையாத நாடுகளுக்கு உதவு வதற்கென அபிவிருத்தியடைந்த நாடுகள் வேலைத் திட்ட மொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் வெளிநாட்டு உதவித் திட்டங்களும் வகுக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இவற்றினால் நன்கொடையாக உபகரணங்கள், மூலதனம், பண் டங்கள் என்பன வழங்கப்படுகின்றன. கைத்தொழில் விருத்திக் கென பயிற்றுவிக்கும் வசதிகளும், சிறப்பறிஞரைத் தந்துதவுதல் என்பனவும் வழங்கப்படுகின்றன. கடன் என்ற முறையில் வட்டி யுடைய கடன், வட்டியில்லாக் கடன் என்பனவும் அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறாக அபிவிருத்தியடைந்த நாடுகள் அபி விருத்தியடையாத நாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்குகின்றன.

## நாடுகளின் நலன் கருதி அளிக்கப்படும் ஒத்துழைப்புக்கள்

அபிவிருத்தி யடைந்துவரும் உலக நாடுகளுக்கு உதவி செய் வதற்காக நிறுவப்பட்டுள்ள சர்வதேச நிறுவனங்கள், நாடுக ளுக்கு அளித்துவரும் ஒத்துழைப்புக்கள் பற்றி ஆராய்வோம்.

**புனரமைப்பிற்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி:-** இவ் வங்கி 1945 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அபிவிருத்தி நாடுகளிடமிருந்து (அரசாங்கம், தனியார்) பெற்ற நிதியை இவ் வங்கி கடனாக வழங்குகிறது. இது ஐக்கிய நாடுகள் சபையின் இணைப்பு நிறுவனங்களில் ஒன்றாகும். இவ்வங்கியிலிருந்து தென் அமெரிக்காவும், ஆசியாவும் பெரும்பாலான கடன்பெற்ற நாடு களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச நாணய நிதி:- இந்நிறுவனம் 1946 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. வட அத்திலாந்திக் பிரதேச நாடுகளில் இலாபம் கருதி இந்நாடுகளின் சர்வதேச வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்காக நிறுவப்பட்டது. கடன் அளிப்பதற்கு வேண்டிய நிதி இந் நிறுவனத்தின் அங்கத்துவ நாடுகளிடமிருந்து பெறப்படுகிறது. தென் அமெரிக்காவும், ஆசிய நாடுகளும் அபிவிருத்தியடையாத வேறு நாடுகளும் குறுகிய காலக் கடனை இந்நிறுவனத்திடமிருந்து பெறலாம். இது நாடுகளின் இறக்குமதிக்கு வேண்டிய வெளிநாட்டு நாணயமாற்றைப் பெறுவதற்கே இக்கடன் வழங்கப்படுகிறது.

சர்வதேச அமெரிக்க அபிவிருத்தி வங்கி:- இது 1954 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது தென் அமெரிக்காவிற்குச் சொந்தமான கரிபியன் கடலில் அமைந்திருக்கும் நாடுகளுக்கு கடன் வழங்க ஐக்கிய அமெரிக்காவினுல் நிறுவப்பட்டது.

சர்வதேச அபிவிருத்திச் சங்கம்:- இது 1961 ஆம் ஆண்டு, நிறுவப்பட்டது. அமெரிக்காவிற்குச் சொந்தமானது தென் அமெரிக்காவிற்கு மட்டுமன்றி ஏனைய நாடுகளுக்கும் இது கடன் வசதி அளிக்கிறது.

சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையம்:- இது உலக வங்கியின் ஓர் இணைப்பு நிறுவனம்; 1966 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நியாயமான வட்டிக்கு அல்லது மிகக் குறைந்த வட்டிக்கு நாடுகளுக்கு நிவாரணம் அளிப்பதற்காக இந்நிறுவனம் கடன் வழங்குகிறது. நீண்டகாலக் கடன்களையும், வட்டியில்லாக் கடன்களை இந்நிறுவனம் மூலம் பெறமுடியும். உலக வங்கியிடமிருந்தும், அங்கத்துவ நாடுகளிடமிருந்தும் நிதியைப் பெறுகிறது.

ஐரோப்பிய அபிவிருத்தி நிதி:- இந்நிதி 1959 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. ஐரோப்பிய நாடுகளுக்குச் சொந்தமான குடியேற்ற நாடுகளுக்கு கடன் வழங்குவதற்கு நிறுவப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்ட அமைப்பு:- இது 1966 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. உலக வங்கியிடமிருந்தும் அங்கத்துவ நாடுகளிடமிருந்தும் நிதியைப் பெறுகிறது. நியாயமான அல்லது குறைந்த வட்டிக்குக் கடன் வழங்குவதுடன் நீண்டகாலக் கடனையும், வட்டியில்லாக் கடனையும் வழங்குகிறது. அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு வேண்டிய தொழினுட்ப அறிவைப் பெற்றுக் கொடுப்பதையும், ஆய்வுகளைச் செய்து முன்னேற்றமடைந்த நாடுகள், நிதியை முதலீடு செய்வதற்கு ஆலோசனைகளைக் கூறுவதையும் நோக்கமாகக் கொண்டு ஸ்தாபிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது: இந் நிறுவனத்தின் பெரும்பகுதி விசேட பயிற்சி பெற்ற சிறப்பறிஞரின் சேவையை, அச் சேவை தேவைப்படுகின்ற நாடுகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக செலவிடப் படுகின்றது.

மேலே கூறப்பட்ட ஸ்தாபனங்கள் மட்டுமன்றி சர்வதேச அணுசக்தி ஸ்தாபனம், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், சர்வதேச குடிசார் (சிவில்) விமானச்சேவை நிறுவனம், அகில உலக அஞ்சல் ஒன்றியம், சர்வதேச தந்தி ஒன்றியம், உலக வளி மண்டலவியல் நிறுவனம். கடல் சார்ந்த நாடுகளின் சர்வதேச மகாநாட்டுத் தாபனம், வர்த்தகம் தீர்வை சம்பந்தமான பொது உடன்படிக்கை என்பன போன்ற நிறுவனங்களும் நாடுகளின் நலன் கருதி தமது ஒத்துழைப்பை நல்கி வருகின்றன.

## ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் முன்னேற்ற நடை

சமாதானத்தைப் பாதுகாப்பதும் வறுமையைப் போக்குவதும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டது இந் நிறுவனம். 1945ம் ஆண்டு இது நிறுவப்பட்டு 33 ஆண்டுகள் பூர்த்தியாகப் போகின்றது. உலக நாடுகள் பல்வேறு நோக்கங்கள் கொள்கைகள் உடையவைகளாகப் பிளவுபட்டிருந்தாலும் அந் நாடுகளனைத்தும் இத்தாபனத்தின் கீழ் சமாதான முறையில் கருமமாற்றுகின்றன. நாடுகளிடையே தோன்றிய பல பிரச்சனைகளைத் தீர்த்து வைத்து சமாதானத்தைப் பாதுகாத்ததில் குறிப்பிடத் தக்க வெற்றியடைந்துள்ளன. சில பிரச்சனைகளைத் தீர்க்க முடியாத போது சபை கூடி போர் நிறுத்தம் செய்து உலக அமைதியைப் பாதுகாத்துள்ளது. நாடுகளுக்கிடை முன்னைய காலங்களில் இருந்ததைவிட நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது. இத்தாபனத்தின் இணைப்பு நிறுவனங்கள் மூலம் உலக நாடுகளின் வறுமையை நீக்குவதற்குப் பெருமளவு சேவை செய்துள்ளது.

அணுசக்தி உற்பத்தியைக் குறைப்பதற்கென 1946-ஆம் ஆண்டு அணுசக்தி ஆணைக்குழு அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. 1947-ல் அணுசக்தியைக் குறைக்கும் வேறொரு ஆணைக்குழுவும் அமைக்கப்பட்டது. ஆயினும் அமெரிக்கா, ருஷியா ஆகிய இரு நாடுகளிடையே நிலவிய வேற்றுமையால் இக்குழு சிறந்த முறையில் செயல்பட முடியாது போக, 1952-ல் படைக் குறைப்பு ஆணைக்குழு என்ற பெயரில் ஒரு குழு அமைக்கப்பட்டது. ஆனால் ருஷியா தன்னுடை படைகலங்களை ஏனைய நாடுகள் அறிந்து கொள்வதை விரும்பாது இக் குழுவிலிருந்து வெளியேறி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் 1958-ஆம் ஆண்டு அணுசக்திப் பரிசோதனையைத் தடுக்க ஜெனிவாவில் மகாநாடு கூடி, 10 நாடுகளின் குழு அமைக்கப்பட்டது. ஆயினும் அணுசக்திப் பரிசோதனையையும், அணு ஆயுத உற்பத்தியையும் தடுக்க முடியவில்லை.

மத்திய கிழக்கில் சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு ஐ. நா. படையை ஈடுபடுத்தி, யுத்தங்களைத் தடைசெய்துள்ளது. அரபு யூத யுத்தங்கள் இவ்வாறு தடுக்கப்பட்டன. இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீரில் யுத்தம் செய்வதைத் தடுத்துள்ளது. கொரியாவில் நடைபெற்ற சண்டையை நிறுத்தியதுடன் லெபனன், சிரியா, ஈரான் ஆகிய நாடுகளுக்குச் சுதந்திரம் கொடுத்தது. லெபனன் பகுதிகளிலிருந்து இஸ்ரவேலின் படைகளை வெளியேற்ற ஐ. நா. படைகளை அனுப்பி உதவியது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உலகில் சமாதானத்தை ஏற்படுத்துவதுடன் உலக நாடுகளின் வறுமையைப் போக்கிப் பொருளாதார, சமூக, கல்வி, கலாச்சார வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டுள்ளது. இலங்கை இத்தாபனத்திஞல் அடைந்து வரும் நன்மைகளை ஆராய்வோம். இத் தாபனத்தின் தேசிய மத்திய நிலையம் இலங்கையிலுள்ளது. இம் மத்திய நிலையத்தினூடாகவே எமக்குதவிகள் கிடைக்கின்றது. யுனெஸ்கோ, உலக சுகாதாரநிறுவனம் போன்ற இணைப்பு நிறுவனங்களின் உத்தியோகத்தர்களும், நிபுணர்களும் இங்கு கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளின் முன்னேற்றத்திற்கு உதவிகள் பல செய்து வருகிறுர்கள்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இணைப்பு நிறுவனங்கள் சகல அங்கத்துவ நாடுகளிலும் இருக்கின்றன. இவை அந்தந்த நாடுகளின் பொருளாதார, சமூகப் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கின்றன. இந் நிறுவனங்கள் சாதி, மத, வேற்றுமையின்றி நாட்டு மக்களின் பிரச்சனைகளை மனிதாபிமான முறையில் தீர்த்து வைப்பதுடன் உலகநாடுகளில் செல்வம் நிறைந்தநாடு, வறுமை மிக்க நாடு என்ற பேதத்தை நீக்குவதையும் தமது குறிக்கோளாகக் கொண்டுள்ளன. அபிவிருத்தியடைந்த நாடுகளிடமிருந்து உதவிகளைப் பெற்று அபிவிருத்தியடையாத நாடுகளுக்கு உதவுவதன்மூலம் பல நாடுகளை முன்னேற்றமடைய வைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டும் வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி: மூன்று

# இலங்கை மக்கள்

இலங்கையில் பண்டைய காலத்தில் குடியேறி வாழ்ந்த மக்கள் நாகர், இயக்கர் என புராண நூல்கள் கூறுகின்றன. நாக தீபம் என இலங்கை, நாகர் வாழ்ந்தமையால் தான் அழைக்கப்பட்டதெனவும் கூறுவர், இலங்கையின் பண்டைய வரலாற்றைக் கூறும் நூல் மகாவம்சம். இது பாளி மொழியில் எழுதப்பட்டது. இந் நூலிலும் நாகர், இயக்கர் பற்றிய வரலாறு கூறப்பட்டுள்ளது. இராமாயணம் என்னும் இலக்கிய நூலில் இராக்கதர் என்ற இனமக்கள் இங்கு இருந்ததாகவும் அவர்களின் அரசன் இராவணன் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆரியர் என்ற மக்கள் கூட்டத்தினர் வட இந்தியாவிலிருந்து கி. மு. 500 அளவில் இலங்கைக்கு வந்தனர். இலங்கையில் குடியேறிய ஆரிய மக்களது தலைவன் விஜயன் ஆவான். இந்த ஆரியமக்களது வழித்தோன்றல்களே சிங்களவர் ஆவர். இந்த ஆரியர் வட இந்தியாவில் கி. மு. 1500 ல் குடியேறிய இனமாகும். இலங்கைக்கு சிறு கூட்டங்களாக காலத்திற்குக் காலம் வந்துசேர்ந்த ஆரியர், இலங்கையின் வடபாகத்திலுள்ள ஆற்றுச் சமவெளிகளிலும், வளவை கங்கை, கிரிண்டி ஓயா, மாணிக்க கங்கை ஆகிய நதிகளின் கரைகளிலும் குடியேறினர்.

ஆரியரின் வருகையால் நமது நாடு பல முன்னேற்றங்களை அடைந்தது. இவர்களது வருகையால் சிங்கள இனமும் மொழியும் இலங்கையில் இடம் பெற்றது. விவசாயம் இலங்கையில் புகுத்தப்பட்டது. இரும்பினாலான ஆயுதங்களை முதன்முதல் நமது நாட்டில் உபயோகிக்க மக்கள் அறிந்து கொண்டனர். கிராம வாழ்க்கை முறை ஏற்படுத்தப்பட்டது, பல கிராமங்கள் தோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றியதாலும், மக்கள் கூட்டம் பெருகியதாலும் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட கிராம ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டது. கன்சபா என்று இக்கிராம சபைகள் அழைக்கப்பட்டன. இவ்வாறு பல கிராமங்கள் ஒன்று சேர்ந்ததன் விளைவாகவே அநுராதபுரம், மாகம என்னும் இடங்களில் அரசுகள் தோற்றம் பெற்றன.

ஆரியரின் வருகையின் பின்னரும் காலத்திற்குக்காலம் தென்னிந்திய அரசுகள் இலங்கை மீது பல படையெடுப்புகளை நடாத்தியுள்ளன. இதனால் இலங்கையில் தென்னிந்திய மக்கள் பெருமளவு குடியேறினர். அநுராதபுரத்தில் எல்லாளன் என்ற தமிழ் மன்னன் ஆண்டதாகவும் அவனை துட்டகாமினி வென்று அரசைக் கைப்பற்றியதாகவும் சரித்திரம் கூறுகிறது. இலங்கையைச் சோழர் கைப்பற்றி பொலன்னறுவையை இராசதானியாக்கி ஆட்சிசெய்துள்ளார்கள். இலங்கைமக்களுக்கும் இந்திய மக்களுக்கும் அரசியல் தொடர்பு மட்டுமன்றி திருமணத்தொடர்புகளும் இருந்துள்ளன. இந்தியாவிலிருந்து வியாபார நோக்கத்திற்காக வந்த முஸ்லீம்களும் இங்கு குடியேறியுள்ளார்கள். 15 ஆம் நூற்றுண்டில் இலங்கையில் ஆதிக்கம் செலுத்திய போர்த்துக்கேயர் அதன் பின் வந்த ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் சந்ததியினரான பறங்கியரும் இங்கு குடியேறியுள்ளனர். இன்று இலங்கையில் 1,40,00000 மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் சிங்களவர், தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர் ஆகியோர் அடங்குவர். சிங்களவர் ஏறக்குறைய 71%மும் தமிழர் 27%மும் வாழ்கிறார்கள்.

## சிங்களவர்

இலங்கையில் வாழும் மக்கட் கூட்டங்களில் பெரும்பான்மையினர் சிங்களவராவர். இவர்களின் மூதாதையர் வட இந்தியாவிலிருந்து வந்தவர்களாவர். இவர்கள் இன்று இலங்கையில் வட மாகாணம், கீழ் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் பெருமளவு வாழ்கிறார்கள். சிங்களவரின் தோற்றம் பற்றிய கர்ண பரம்பரைக் கதைபற்றி ஆரம்ப வகுப்புகளில் கற்றிருப்பீர்கள். இங்கு நாம் சிறிது நினைவுபடுத்திக் கொள்வோம். வங்க நாட்டு இளவரசிக்கும் சிங்கத்திற்கும் பிறந்த பிள்ளைகள் சிங்கபாகு, சிங்கசிவலி ஆவர். இவர்களில் சிங்கபாகு தன் தந்தையைக் கொன்று லாலா நாட்டிற்கு அரசனுனன். இவன் தனது மக்களில் மூத்தவனுன விஜயனின் துஷ்டத் தனத்தைச் சகிக்கமாட்டாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயனையும் நண்பர்களையும் ஒரு கப்பலில் நாடு கடத்தியதாக வும், அக்கப்பல் தம்பபண்ணை (புத்தளம்) என்ற இடத்தில் கரை சேர்ந்ததாகவும், அங்கு விஜயன், குவேனி என்ற இயக்கியை மணந்ததாகவும், பின் பாண்டியநாட்டு இளவரசியை மணந்த தாகவும், இவனது நண்பர்களும் பாண்டிய நாட்டுப் பெண்கள் பலரை மணந்தார்கள் என்றும், இதன் விளைவாக புதியதொரு மக்கள் இனம் உருவாகியது என்றும் கூறப்படுகிறது. இவ் வினமே சிங்கள இனம் எனப்படுகிறது. சிங்கபாகுவின் கதை வாதத்திற்குரியது. ஆனால் விஜயனின் பின் சிங்கள இனம் இலங்கையில் உருவாகியது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியது.

சிங்களவரின் குடியேற்றத்தின் பின் பயிர்ச் செய்கை, நிர் வாகம், பண்பாடு, சமயம் முதலான துறைகளில் பல மாற் றங்கள் இலங்கையில் ஏற்பட்டது. தேவநம்பியதீசன், துட்டகைமுனு, மகாசேனன், விஜயபாகு, மகா பராக்கிரமபாகு முதலிய மன்னர்கள் சிங்கள மக்களது சமூக பொருளாதார அரசியல் வளர்ச்சிக்குப் பெரும் துணைசெய்துள்ளார்கள். இந்தி யாவில் தோன்றிய பௌத்தமதம் அங்கு எழுச்சியடை யாது இலங்கையில் பெருமளவு வளர்ச்சியடைந்துள்ளது. சிங் களவரில் பெரும்பான்மையோர் பௌத்த சமயத்தவர். ஐரோப் பியரின் செல்வாக்கினால் சிறுபான்மையினர் கிறிஸ்தவர்களாக வாழ்கிறார்கள்.

சிங்கள மக்களிடையே கண்டிச் சிங்களவர், கரை நாட்டுச் சிங்களவர் என இரு பிரிவுகள் காணப்படுகின்றன. மத்திய மாகாணம், சப்பிரகமுவா மாகாணம், மேல் மாகாணம், ஊவா மாகாணம் முதலிய மலைநாட்டுப் பகுதிகளில் வாழ்பவர்கள் கண்டிச் சிங்களவர் எனப்படுவர். இலங்கையின் கரையோரப் பகுதிகளில் வாழ்கின்ற சிங்கள மக்கள் கரைநாட்டுச் சிங்கள வர் என்பர்.

சிங்கள மக்களது மொழி சிங்களமாகும். இது வட இந்திய மொழிகளின் கலப்பினையுடையது. பாளி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளின் செல்வாக்கு இம் மொழியில் பெருமளவு உள்ளன. வட இந்தியா, தென்னிந்தியா ஆகியன இலங்கையுடன் கொண் டிருந்த அரசியல், பொருளாதாரத் தொடர்பினால் இலங்கையில் பெருமளவு கட்டிடம், சிற்பம், ஓவியம் என்பன சிங்கள மன்னர் களாலும், மக்களாலும் வளர்க்கப்பட்டுள்ளது.

## தமிழர்

மிகப் புராதன காலத்திலிருந்து இலங்கையில் தமிழர் வாழ்ந்து வந்துள்ளார்கள். விஜயன் இலங்கைக்கு வருமுன்னரே இலங்கையில் நாகர் என்னும் மக்கள் வாழ்ந்தார்கள் எனப் புராணங்கள் கூறுகிறது. வட இலங்கை இதனாலேயே நாகதீப மென அழைக்கப்பட்டது. வட பகுதியில் வாழ்ந்த நாகர்கள் தென்னிந்தியாவோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் கள்; அதனால் தமிழர்கள் காலத்துக்குக் காலம் நாகமக்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்ததுடன் வட இலங்கையில் வந்து குடியேறவும் தொடங்கினர். அதனால் காலப் போக்கில் வட இலங்கை தமிழ்க் குடியிருப்பாக மாறியது. வர்த்தக நோக்கத்திற்காகவும் தமிழர்கள் நமது நாட்டில் குடியேறி நிலைபெற்றனர். தென்னிந்தியத் தமிழர் திராவிட இனத்தவர். நமது நாட்டின் பண்டைய வரலாற்றை நோக்கில், தென்னிந்திய மன்னர்கள் இலங்கை மீது பல தடவைகள் படையெடுத்து வந்துள்ளனர். அவ்வாறு படையெடுத்து வந்த தமிழர்களில் ஒரு பகுதியினர் இலங்கையில் குடியேறினர். பாண்டிய மன்னர்களும் சோழ மன்னர்களும் இலங்கைமீது அடிக்கடி படையெடுத்தனர். ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன், சடாவர்மன் வீரபாண்டியன் முதலிய பாண்டிய மன்னர்களும் இலங்கை மீது படையெடுத்துள்ளனர். 13 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் வட பாகத்தில் தனித் தமிழ் இராச்சியம் விளங்கியது.

இலங்கையில் சிங்கள மக்களுக்கு அடுத்ததாக தொகையில் கூடிய தமிழ் மக்கள் இலங்கையின் வட மாகாணம், கிழக்கு மாகாணம் என்பவற்றில் பண்டைநாள் தொட்டு வாழ்ந்து வருகின்றார்கள். ஆங்கிலேயரின் ஆட்சியின் போது தேயிலை, றப்பர் பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையைத் தொடங்கினர்; இத் தோட்டங்களில் தொழிலாளர்களாக வேலை செய்வதற்காக தென்னிந்தியாவிலிருந்து ஏராளமானோரை இங்கு வருவித்தனர். 1837 ஆம் ஆண்டின் பின் ஏராளமான இந்தியத் தமிழர் இங்கு குடியேறினர். இவர்களது வம்சாவளியினரே இன்று கண்டி, நுவரெலியா, வதுளை, மாத்தளை, கேகாலை ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது மொழி தமிழ், சமயம் சைவ சமயம். எனவே மொழியும், சமயமும், கலைகளும் இலங்கையில் பெருமளவு பரவியது.

## முஸ்லீம்கள்

இலங்கையின் சனத்தொகையில் ஏறத்தாழ 6 சத வீதத்தினர் முஸ்லீம் மக்களாவர். சோனகர் எனவும் அழைக்கப்படுவர். 0 ஆம் நூற்றாண்டளவில் இலங்கையில் குடியேறினர். இலங்கையில் வாழும் முஸ்லீம்களின் முன்னோர் அரேபியாவிலிருந்து வர்த்தக நோக்கிற்காக இங்கு வந்தவர்களாவர். 10 ஆம் நூற்றாண்டளவில் கீழைத்தேச வர்த்தகத்தில் அராபிய வணிகர்கள் முக்கியம் பெற்றிருந்தனர். அவர்கள் இலங்கையில் இரத்தினக் கற்கள், முத்துக்கள், வைரங்கள், யானைத் தந்தம், மிளகு, கறுவா, சங்கு முதலான பொருட்களை வாங்கி ஏனைய நாடுகளுக்கு விற்றனர். அதனால் இலங்கையின் கரையோரத் துறைமுகங்களை அடுத்து இவர்கள் குடியேறினார்கள். மன்னார், புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, களுத்துறை, வேருவலை, காலி முதலிய பகுதிகளில் முஸ்லீம் மக்கள் குடியேறினர். மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது தாய் மொழி தமிழ்; ஆனால் அரபு மொழியிலேயே இவர்களது சமயக் கிரியைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும். இவர்களது மதம் இஸ்லாம். இம்மதம் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பனவற்றை முக்கிய குறிக்கோளாகக்கொண்டது.

## பறங்கியர்

போர்த்துக்கேயரதும், ஒல்லாந்தரதும் பிற்சந்ததியராவர். கணிசமானவளவு தொகையினர் வாழ்கின்றனர். இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இங்கு அவர்களுக்குச் சாதகமான அரசியல் நிலைமைகள் தோன்றுமையால் பெருமளவினர் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று திரும்பவும் குடிபேறியுள்ளார்கள். இவர்களது மதம் கிறிஸ்தவம். இவர்களது மொழி ஆங்கிலம்.

## வேடர்

இலங்கையின் வடமத்திய மாகாணத்திலும், ஊவா மகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் சிறு சிறு கிராமங்களில் வேடர் என்ற மக்கட்கூட்டத்தினர் வாழ்ந்து வருகின்றனர். சிறு குடிசைகளில் வாழும் இவர்கள் வேட்டையாடுவதையே தொழிலாகக் கொண்டுள்ளனர். ஆயினும் இப்போது பலர் விவசாயமும் செய்கிறார்கள்.

## கலாச்சாரத் தொடர்புகளும் இன்று நிலவும் கலாச்சாரமும்

இலங்கையில் வாழும் இனங்கள் இந்தியாவைத் தாயகமாகக் கொண்டிருப்பதாலும், இந்தியா இலங்கைக்கு அண்மையில் இருந்தமையால், இலங்கைமீது ஆதிக்கம் செலுத்தியமையாலும் இலங்கையின் கலாச்சாரம், பண்பாடு என்பனவற்றில் இந்தியக் கலாச்சாரம், பண்பாடு பெருமளவு ஆதிக்கம் பெற்றுள்ளது. இலங்கையில் பேசப்படும் இருமொழிகளான சிங்களமும், தமிழும் இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவை; சிங்களம் ஆரிய மொழியையும் தமிழ் திராவிட மொழியையும் அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த மொழியாகும். இந்தியாவில் நிலவும் சமஸ்கிருத மொழியும் இவ்விரு மொழிகளிலும் இடம் பெற்றுள்ளது. எனவே இந்தியாவுடன் நம் நாட்டினர் தாயகமாகக் கொண்டிருந்தமையாலும், பின்னர் இந்தியாவுடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்புகளாலும் மொழியில் இந்தியச் செல்வாக்குப் பரவியது.

முற்காலத்தில் இந்திய மன்னர்கள் இலங்கையைக் கைப்பற்றி அரசாட்சி செலுத்தியது மட்டுமன்றி, நட்புறவும் நிலவியது. தென்னிந்திய அரச குடும்பங்களுக்கும் எம்நாட்டு அரச குடும்பங்களுக்குமிடையே பல திருமணத் தொடர்புகள் நடைபெற்றுள்ளன. இவ்வாறான தொடர்புகளால் இந்திய ஆட்சிமுறை இலங்கையின் ஆட்சிமுறையில் இடம் பெற்றது. இந்திய மன்னர்கள் இலங்கையில் ஆட்சிசெய்தபோது இந்தியக் கட்டிடக் கலையை இலங்கையில் புகுத்தினர். இன்றும் இலங்கையின் கட்டிடம், சிற்பம், என்பனவற்றில் இந்தியச் செல்வாக்கு இடம் பெறுகிறது.

எம்நாட்டு மக்கள் இந்தியாவில் தோன்றிய இந்து மதம் பௌத்தம் ஆகிய இரு மதங்களையும் பின்பற்றுகின்றனர். இந்

தியாவில் இந்துமதத்தின் பின் பௌத்தம் தோன்றியதால் இந்து மதச் செல்வாக்கு பௌத்தத்தில் பெருமளவு காணப்படுகிறது. அதேபோல இலங்கையிலும் இவ்விரு மதத்தவரும் இணைந்து வாழ்வதால் இரு மதமும் ஒன்றுடன் ஒன்று கலப்புற்று மிகத் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. இந்துக்களின் கோயில் அமைப்பு முறை, கட்டிடக்கலை என்பன இந்தியக் கட்டிடக் கலையைத் தழுவியது. அதேவேளை பௌத்த விகாரைகளில் இந்துக் கோயில்களின் சாயல்கள் காணப்படுகின்றன. வழிபாட்டு முறை சமய ஒழுக்கங்களில் வெகு தொடர்பு காணப்படுவது போல விக்கிரக வணக்கங்களிலும் வழிபாட்டுத் தலங்களிலும் தொடர்புகள் பல காணப்படுகிறது. கணபதி, முருகன், பத்தினி, கிருஷ்ணன் ஆகிய தெய்வங்களை பௌத்தர்களும் வணங்குகிறார்கள். அத்தோடு கதிர்காமம் இருமதங்களுக்கும் பொதுவான வழிபாட்டுத் தலமாக விளங்குகிறது. அதிலிருந்து இவ்விரு இனமும் முற்காலத்தில் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். அத்துடன் சிங்களவர் வாழும் இடங்களில் இந்துக் கோயில்கள் பல அழிந்த நிலையில் இன்றும் காணப்படுகின்றன.

இன்று இலங்கையில் நிலவும் கிறிஸ்தவ மதம் அந்நியராட்சியால் ஏற்பட்ட விளைவாகும். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆங்கிலேயர் ஆகியோரின் செல்வாக்கினுல் கிறிஸ்தவம், கத்தோலிக்கம் ஆகியன இங்கு புகுத்தப் பட்டதுடன் இன்றும் நிலைபெற்றுள்ளது ஐரோப்பியரின் ஆதிக்கத்தினுல் அவர்களின் நடையுடை பாவனைகள், உணவு, கட்டிடம் என்பவை இங்கு பெருமளவு செல்வாக்குப் பெற்றுள்ளது. ஆங்கில மொழி புகுத்தப்பட்டதுடன் கல்வி, அரசியல், பொருளாதாரம் என்பவற்றிலும் ஆங்கிலேயமுறைகள் பின்பற்றப்பட்டன. இன்றும் பின்பற்றப்படுகின்றன. விவசாயத்திலும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது, பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையை மக்களுக்கு அறிமுகப் படுத்தியவர்கள் இவர்களே.

எமது நாட்டில் இன்று வாழும் மக்கள் மிகவும் நெருங்கிய தொடர்புடைய கலாச்சாரம், பழக்க வழக்கம், பண்பாடு கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள், திருமணச் சடங்கு விழாக்கள், சமயக் கிரியைகள், வழிபாட்டு முறைகள், விசேட தினங்கள், கொண்டாட்டங்கள் என்பனவற்றில் கடைப்பிடிக்கும் முறைகளில் பெருமளவு தொடர்புகள் காணப்படுகிறது. சாதிமுறை எல்லா மக்களிடமும் காணப்படுகிறது. உடை அணியும் முறைகளில் பெருமளவு தொடர்புகள் காணப்படுகிறது.

எனவே பண்டைய காலத்தில் இலங்கையில் நிலவிய ஒற்றுமை இங்கு ஏற்பட்டால்தான் இலங்கை அரசியல், பொருளாதாரம் என்பனவற்றில் முன்னேற்றம் காணமுடியும். இன்றும் நாம் இனப்பிரச்சனையை தீர்வுகாணுத ஒன்றுகக் கொண்டிருப்போமாகில் உலக நாடுகளின் துரித வளர்ச்சிக்கு ஈடாக முன்னேற முடியாதவர்களாகப் பின்நோக்கிச் செல்லவேண்டிய நிலைக்கு ஆளாக நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக்கல்வி

## பகுதி: 4

## உலக நாடுகள்

உலகம் இன்று சுருங்கி விட்டது; ஏனெனில், போக்குவரத்து வசதிகளும் போக்குவரத்துச் சாதனங்களும் பெரு விருத்தியுற்றமையால், உலகநாடுகளுக்கு இடையிலான சமூக, அரசியல், பொருளாதாரத் தொடர்புகள், எவ்வளவோ துரிதப்படுத்தப்பட்டுள்ளன. மாட்டு வண்டியில் இடங்களைக் கடந்த காலத்திற்கும் ஜெட்விமானங்களில் நாடுகளைக் கடக்கின்ற இன்றைய காலத்திற்கும் இடையிலான துரித முன்னேற்றம் உலகத்தினைச் சுருங்க வைத்துள்ளது.

புவிக்கோளத்தில் அருகருகே அமைந்துள்ள நாடுகள், ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு பல்வேறு இயல்புகளில் வேற்றுமைப்படுகின்றன. தரைத்தோற்றம், காலநிலை, இயற்கைத் தாவரம் முதலான பௌதிகவியல்புகளும், இனம், மதம், மொழி, வாழ்க்கைமுறை, பண்பாடு முதலான பண்பாட்டு இயல்புகளும் உலக நாடுகளை ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடவைக்கின்றன. அவ்வாறு வேறுபடுகின்றவிடத்தும் சிலவியல்புகள் நாடுகளிடையே ஒற்றுமையைக் கொண்டுள்ளன. இவ்வாறான ஒரே வகைச் சூழலைக்கொண்டுள்ள பிரதேசங்களை ஒரு பிரிவிற்குள் அடக்கி ஒரு இயற்கைப் பிரதேசம் (Natural Region) என்பர். அரசியல் அடிப்படையில் நாடுகளை அரசுகளாகப்பிரிப்பது போன்ற தெளிவான எல்லையை இயற்கைப் பிரதேசங்களுக்குக் கூறமுடியாது. ஒரு இயற்கைப் பிரதேசம் முடியும் இடத்தில் மற்றைய இயற்கைப்பிரதேசம் ஆரம்பமாகும் எனக்கொள்ளமுடியாது. மேலும், ஒரே இயற்கைப் பிரதேசம் பல்வேறு வேறுபாடுகளைத் தன்னகத்தே கொண்டதாகவும் காணப்படும். எனினும், அப்பிரதேசத்தில் அதிக ஆதிக்கம் செலுத்தும் காரணியால் அப்பிரதேசம் அழைக்கப்படும்.

ஒரு இயற்கைப்பிரதேசம் பௌதிகச் சூழலிற்கு இணங்க அமையும். அவ்வாறு அமையும் சூழல் அப்பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் பண்பாட்டியல்புகளைப் பாதிக்கிறது.

பிரதேசங்களிடையே காணப்படும் பௌதிக வேறுபாடுகள் வருமாறு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) தரைத்தோற்ற வேறுபாடுகள்:

ஒரு பிரதேசம் மலைப்பிரதேசமாகவும், இன்னொன்று தாழ்நில மாகவோ மேட்டுநிலமாகவோ அமைகின்றது; தாழ்நிலம் எனும் போது நதிவடிநிலமா, கடற்கரைச் சமவெளியா என்ற பாகுபாடு காணப்படும்.

(ஆ) காலநிலை வேறுபாடுகள்:

ஈரலிப்பான பிரதேசங்கள், வறண்ட பிரதேசங்கள் என மழை வீழ்ச்சியும், வெப்பநிலையும் பொறுத்து உலகப் பிரதேசங்கள் வேறு படுகின்றன. அமேசன், கொங்கோ போன்று வருடம் முழுவதும் அதிக மழைபெறும் பிரதேசமாக, தென்கிழக்காசியா போன்று பருவ மழை பெறும் பிரதேசமாக இருக்கலாம் இலங்கையின் வடபகுதி போன்று ஓரளவு வரண்ட பிரதேசமாக அல்லது சகாரா போன்று பாலைநிலமாக இருக்கலாம். காலநிலை வேறுபாடுதான் பிர தேச வேறுபாடுகளுக்கு முக்கியமானதாகிறது.

(இ இயற்கைத் தாவர வேறுபாடுகள்:

மத்தியகோட்டுப் பகுதியில் என்றும் பசுமையான மத்திய கோட்டுக்காடுகளும், இடைவெப்ப வலயத்தில் இலையுதிர் காடு களும் ஊசியிலைக் காடுகளும் காணப்படுகின்றன. சவன்னு, தெப்பு பிறேயறீஸ் போன்ற புல்வெளிகளும் காணப்படுகின்றன.

பிரதேசங்களுக்கிடையிலுள்ள பண்பாட்டு வேறுபாடுகள் வரு மாறு

(அ) இன வேறுபாடுகள்:

உலகமக்கள் முக்கியமாக மூன்றினங்களாக நிறத்தைக்கொண்டு வகுக்கப்படுகின்றனர். வெள்ளைநிற மக்கள், மஞ்சள்நிற மக்கள், கருநிறமக்கள் என்போரே அப்பிரிவுகள். ஐரோப்பிய, அமெரிக்க மக்கள் வெள்ளைநிறத்தவர்; மொங்கோலிய மக்கள் (சீனர், யப்பா னியர்) மஞ்சள் நிறத்தவர்; ஆபிரிக்க மக்கள் கருநிறத்தவர்.

(ஆ) மத வேறுபாடுகள்:

பௌத்தர், கிறீஸ்த்தவர், கத்தோலிக்கர், இந்துக்கள் எனப் பல்வேறு மத வேறுபாடுகள் உலகிலுள்ளன.

(இ) மொழி வேறுபாடுகள்:

ஆங்கிலம், யப்பானிய மொழி, சீனமொழி, சிங்களம், தமிழ், ஹிந்தி, அராபிய மொழி எனப் பல்வேறு மொழிகள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) தொழில் வேறுபாடுகள்:

வேட்டையாடுவோர், மந்தை மேய்ப்போர், மீன்பிடிப்போர், பயிர் செய்வோர், கைத்தொழில் செய்வோர் எனப் பலவேறுபாடுகள் மக்களின் தொழில்களிலுள்ளன.

(உ) அரசியல் வேறுபாடுகள்:

முதலாளித்துவ நாடுகள், சமதர்ம நாடுகள் என இன்று இரு பெரும் அரசியல் வேறுபாடுகளுள்ளன.

(ஊ) பொருளாதார வேறுபாடுகள்:

உலகநாடுகள் அனைத்தும் அபிவிருத்தியடைந்த நாடுகள் எனவும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எனவும் வேறுபாடுடையன. செல்வங்கொழிக்கும் நாடுகளும் வறிய நாடுகளும் காணப்படுகின்றன

இவ்வாறு உலகின் பல்வேறு நாடுகளுக்கிடையே பௌதிக பண்பாட்டு வேறுபாடுகள் காணப்பட்டபோதிலும், சில பொதுத் தன்மைகளில் ஒருமைப்பாடுகள் காணப்படுகின்றன. அவை:

(அ) யாவரும் உலக மக்கள் என்ற பொதுநோக்கு.

(ஆ) மனிதன் ஒவ்வொருவனுக்கும் சுதந்திரமும் சமத்துவமும் இருக்கவேண்டும் என்ற எண்ணம்.


(இ) உணவு, உடை, இல்லம் எனும் அடிப்படைத்தேவைகள் யாவருக்கும் இருத்தல்.

உலகநாடுகள் யாவும் பல்வேறு பிரதேசங்களாக வகுக்கப்படுகின்றன. அவை ஒவ்வொன்றையும் சுருக்கமாக ஆராய்வோம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. தென் ஆசியா

தென்ஆசிய நாடுகள் என்று கூறும்போது, இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், நேபாளம், பூட்டான், இலங்கை ஆகிய நாடுகள் அதனுள் அடங்குகின்றன. இந்நாடுகளை இந்தியத் துணைக் கண்டம் என்றும் குறிப்பிடலாம். வடக்கே இமயமலைத் தொகுதியினால் பிரிக்கப்பட்டிருப்பதனாலும், பருவக்காற்றுக் காலநிலையினைச் சிறப்பாக அனுபவிப்பதனாலும் தென் ஆசியாவை ஒரே புவியியற் பிரதேசமாக வகுத்து நோக்க முடிகின்றது




படம் 1    ஆசியாவின் அரசியற்பிரிவுகள்


## இந்தியா

கண்டங்களுள் மிகப்பெரியது ஆசியா. உலகின் நிலப்பரப்பில் மூன்றிலொருபங்கினை ஆசியா அடக்கியுள்ளது. 1 கோடியே 69 இலட்சம் சதுர மைல்களாகும். இதில் இந்தியாவின் நிலப்பரப்பு 12,20,099 சதுர மைல்களாகும்; பாகிஸ்தானின் பரப்பளவு 3,06,860

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுரமைல்கள், வங்காள தேசத்தின் பரப்பளவு 52,920 சதுர மைல்களாகும். இலங்கையின் பரப்பளவு 25,332 சதுரமைல்களாகும்.

ஆசிய நாடுகளில் குடித்தொகை, பருமன் என்பனவற்றை ஆதாரமாகக் கொண்டு நோக்கும்போது இந்தியா இரண்டாவது இடத்தைப் பெறுகின்றது. இந்தியாவில் 54 கோடியே 80 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இலங்கைக்கு மிக அண்மையிலுள்ள நாடு இந்தியாவாகும். இலங்கையையும் இந்தியாவையும் பாக்குத் தொடுகடல் பிரிக்கின்றது. இந்தியத் துணைக்கண்டம் 8° வட அகலக்





படம் 2 இந்தியத் துணைக்கண்டத்தின் நிலையம்
(கிழக்குப் பாகிஸ்தானின் புதியபெயர் வங்காளதேசம் என்பதைக் குறித்துக்கொள்க.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டிற்கும் 37° வட அகலக்கோட்டிற்கு 62° கிழக்கு நெடுங்கோட்டிற்கும், 97° கிழக்கு நெடுங்கோட்டிற்கும் இடையில் அமைந்துள்ளது. கடகக்கோடு இக்கண்டத்தை இரு சமகூறுகளாகப் பிரிக்கின்றது.

**தரைத்தோற்றம்:**

இந்தியாவின் தரைத்தோற்றத்தை மூன்று பெரும்பிரிவுகளாக வகுத்து ஆராயலாம். அவையாவன: (1) வடக்கேயுள்ள உயர் மலைகள் (2) மத்தியிலுள்ள சமவெளிப் பிரதேசம் (3) தெற்கேயுள்ள தக்கண மேட்டுநிலம்.




படம் 3

இந்தியத் துணைக்கண்டப் பிரதான மலைத்தொடர்கள்-நதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கேயுள்ள உயர்மலைகள், இந்தியாவை ஆசியாவின் ஏனைய பகுதிகளிலிருந்து பிரிக்கின்றன. வடக்கிலுள்ள உயர்மலைகள் பமீர் முடிச்சிலிருந்து கிழக்காகவும் தென்மேற்காகவும் பிரிந்து செல்கின்றன. பமீரிலிருந்து கிழக்காகச் செல்வது இமயமலையாகும். இம்மலையிலேயே உலகின் மிகவுயர்ந்த சிகரமான எவெரெஸ்ட் (29,141 அடி) உள்ளது; அரக்கன்யோமாமலை கிழக்கேயுள்ளது. இந்துக்குஸ், சுலைமான், கீர்த்தார் எனும் மலைத்தொடர்கள், வடமேற்கே அமைந்துள்ளன. இவை இமயமலைபோன்று உயர்ந்தவையல்ல.

இந்தியாவின் தென்பகுதியிலுள்ள ஓர் தாழ்ந்த பீடபூமியாகத் தக்கண மேட்டு நிலம் விளங்குகின்றது. இம்மேட்டுநிலம் மேற்கே உயர்ந்து, கிழக்குநோக்கிச் சாய்ந்து அமைந்துள்ளது. தக்கண மேட்டு நிலத்தின் மேற்கு எல்லையாக மேற்குக் கரையோர மலையுள்ளது. கிழக்கே கிழக்குக்கரை மலைத்தொடரும், அஜாந்தா, சற்புரா, விந்தியம், நீலகிரி முதலான சிறு மலைத்தொடர்களும் தக்கன மேட்டு நிலத்தில் அமைந்துள்ளது. இம் மேட்டுநிலத்தில், நர்மதா, தப்தி, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணு, காவேரி முதலிய நதிகள் உற்பத்தியாகிப் பாய்கின்றன.

வடக்கிலுள்ள உயர்மலைகளுக்கும் தெற்கேயுள்ள தக்கணமேட்டு நிலத்திற்கும் இடைபில் அமைந்திருப்பது இந்து கங்கைச் சமவெளி ஆகும். இச்சமவெளியில் இந்து நதியும், கங்கைநதியும் பாய்கின்றன இவை இமயமலைப் பகுதியில் உற்பத்தியாகின்றன. கங்கை நதி யமுனை, கோமதி, கோகரு எனும் கிளை நதிகளையும், கழிமுகத்தில் பிரமபுத்திரா நதியையும் கொண்டுள்ளது. இந்துநதி சீலம், செனுப், ரவி, பயஸ், சட்லெச் எனும் ஐந்து கிளைநதிகளையுடையது. இந்த நதிகள் பாய்கின்ற மத்தியசமவெளி அராபிக் கடலிலிருந்து வங்காளவிரிகுடாவரை 2000 மைல்கள் நீளத்திற்கும் 150—200 மைல்கள் அகலத்திற்கும் பரந்துள்ளது. இச்சமவெளியில் செழிப்பான வண்டல் மண்படிந்துள்ளது.


காலநிலை:

இந்தியா பருவக்காற்றுக்களினுலேயே அதிக மழைவீழ்ச்சியைப் பெறுகின்றது. அதனுல் தான் இந்தியாவை பருவக்காற்றுநாடு என வழங்குகின்றனர். இந்தியாவில் இரு பருவக்காற்றுகள் வீசுகின்றன. அவையாவன: (1) வடகீழ் பருவக்காற்று (2) தென்மேல் பருவக்காற்று.

வடகீழ்ப்பருவக்காற்று டிசம்பர் மாதம் தொடக்கம் பெப்ரவரி மாதம்வரை வீசுகின்றது. இக்காற்றினுல் இந்தியாவிற்கு அதிகமழை கிடையாது; இது தரைக்காற்று. அதனுல் ஈரலிப்பு அற்றது. தென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் பருவக்காற்று மேமாதம் தொடக்கம் செப்டம்பர் மாதம் வரை வீசுகின்றது: இக்காற்று பரந்த சமுத்திரத்தின் மேலாக வீசுவதால் அதிக ஈரலிப்புடையது. அதனால், இக்காற்றால் இந்தியா அதிக மழைவீழ்ச்சியைப் பெறுகின்றது. இக்காற்றினை மேற்குக்கரை மலைத்தொடர் தடுப்பதனால், இந்தியாவின் மேற்குக் கரையோரம் அதிக மழைவீழ்ச்சியைப் பெறுகின்றது. தக்சணத்தின் கிழக்குப் பாகம் காற்றொதுக்கில் அமைவதால் அதிக மழையைப் பெறாது போகின்றது: வங்காளவிரிகுடாவின் ஊடாகவரும் தென்மேல் பருவக்காற்றினை, இமயமலையின் தென்பகுதி தடுப்பதனால் கங்கைக் கழிமுகம் அதிக மழைவீழ்ச்சியைப் பெற்றுக்கொள்கின்றது. உலகிலேயே அதிக மழையைப்பெறும் சிராபுஞ்சி கங்கைக் கழிமுகப் பாகத்திலேயே உள்ளது. மேற்காவுகை நிலைமைகளினாலும், சூறாவளிகளினாலும் இந்தியா மழையைப் பெறுகின்றது. மார்ச்,





படம் 4

இந்தியாவின் வெப்பநிலைப் பரம்பலும் மழைவீழ்ச்சிப் பரம்பலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்பிரல், ஒக்டோபர், நவம்பர் ஆகிய மாதங்களில் மேற்காவுகை அதிகம் நிகழ்கின்றது. மே, ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் சூருவளிகள் உருவாகின்றன.

மாரிகாலத்தில் (ஜனவரி) இந்தியாவின் தென்பகுதியில் சராசரி 80° ப வெப்பநிலை நிலவுகின்றது; வடக்கே செல்லச்செல்ல படிப் படியாகக் குறைந்து 40° ப. வரையில் காணப்படுகின்றது. கோடை காலத்தில் (யூலை) வெப்பநிலைப்பரம்பல் தென்மேற்கிலிருந்து வட கிழக்குப் புறமாகக் குறைந்து செல்கின்றது. எனினும், இப்பருவத் தில் வெப்பநிலைப் பரம்பல் சீராகவில்லை. வடஇந்தியாவில் தார் பாலை நிலத்தில் வெப்பநிலை 90° ப. மேல் காணப்படுகின்றது.




படம் 5 இந்தியாவின் நீர்ப்பாசன வசதிகள்


2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர்ச்செய்கை:

இந்தியா ஒரு பயிர்ச்செய்கை நாடாகும். பயிர்ச்செய்கைக்குப் போதிய மழைவீழ்ச்சியுள்ள பகுதிகளில் பயிர்ச்செய்கை செறிவாக நடைபெறுகின்றது மழைவீழ்ச்சி குறைந்த பகுதிகளில் நீர்ப்பாசனம் முக்கியம் பெற்றுள்ளது. கங்கைநதியின் மேற்பாகமும், பஞ்சாப்ப குதியும், தக்கணமேட்டுநிலமும் நீர்ப்பாசன வசதிகளைக் கொண்டிருக்கின்றன. குளங்கள், கிணறுகள், கால்வாய்கள் என்பன மூலம் நீர்ப்பாய்ச்சல் நடைபெறுகின்றது பல பெரிய அணைத்திட்டங்கள் மூலமும் நீர்ப்பாய்ச்சல் நடைபெற்று வருகின்றது. சுக்கூர் அணைத் திட்டம், பெரியாற்றுத்திட்டம் என்பன குறிப்பிடத்தக்க நீர்ப்பாய்ச் சல் திட்டங்களாகும்.

இந்தியாவில் பயிரிடக்கூடிய விளைநிலத்தில் 80 சதவீதம் உண வுப்பயிர்களே பயிரிடப்படுகின்றது, இந்தியாவில் நெல், கோதுமை, கரும்பு, பருத்தி, சணல், தேயிலை, கோப்பி, சாமை முதலிய பயிர் கள் செய்கை பண்ணப்படுகின்றன. வண்டல் செறிந்த தாழ் நிலங்




படம் 6 இந்தியாவின் பயிர்களின் பரம்பல் - காலநிலையால் கட் டுப்படுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில், 40 அங்குலத்துக்கு அதிகமாக மழைபெறும் பகுதிகளில் நெல் செய்கைபண்ணப்பட்டு வருகின்றது. மத்திய கங்கைப்பகுதி, மேற்கு, கிழக்குக் கரையோரப்பகுதிகள் என்பனவற்றில் நெல் அதிகளவில் செய்கைபண்ணப்படுகின்றது. 40 அங்குலத்திற்குக் குறைவாக மழை பெறும் பகுதிகளில் கோதுமை செய்கைபண்ணப்படுகின்றது. மேற்குப்பாகிஸ்தான், மேற்கு உத்தரப்பிரதேசம், கிழக்கு பஞ்சாப் என்பன கோதுமை விளைவிக்கப்படும் முக்கிய பகுதிகளாகவுள்ளன. உலகில் கரும்பு விளைவிக்கும் முக்கியமான நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். நீர்ப்பாய்ச்சப்படும் கங்கையின் மேற்பகுதியிலும் தக்கணப் பகுதியிலும் கரும்பு செய்கை பண்ணப்படுகின்றது. பருத்தி, பஞ்சாப்பிலும் சிந்துவிலும் நீர்ப்பாய்ச்சல் மூலம் செய்கைபண்ணப்படுகின்றது. வடமேற்குத் தக்கணத்தின் கருமண் பிரதேசம் பருத்திச் செய்கைக்கு மிகவும் ஏற்றதாக இருப்பதால் அதிகளவில் விளைவிக்கப்படுகின்றது. சணல் அதிகளவில் கங்கைக்கழிமுகத்தில் செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. அசாம், நீலகிரி மலைப்பிரதேசங்களில் தேயிலைத்தோட்டங்களுள்ளன.


கைத்தொழில்கள்:

இந்தியாவில் அண்மைக்காலங்களில் கைத்தொழில்களும் விருத்தியுற்றுள்ளன. இரும்புருக்குக் கைத்தொழில் யாம்செட்பூரில் நன்கு நடைபெற்று வருகின்றது, நிலக்கரி இரும்புத்தாது, சுண்ணக்கல் என்னும் இரும்புருக்குத் தேவையான மூலப்பொருட்கள் யாம்செட்பூருக்கு அண்மையில் கிடைப்பதால் இக்கைத்தொழில் இங்கு விருத்தியுற்றுள்ளது. பத்திராவதியிலும் இரும்புருக்கு ஆலை ஒன்றுள்ளது. நெசவுத்தொழில் இந்தியாவின் மிகப்பழைமையான ஒரு தொழிலாகும். பம்பாய், சென்னை, அகமதுபாத், கோயம்புத்தூர் முதலான நகரங்களைச் சுற்றி நெசவுக்கைத்தொழில் நன்கு நடைபெற்று வருகின்றது. கல்கத்தாவில் சணல் ஆலைகள் உள்ளன. அத்துடன் சீமேந்து, சீனி, கண்ணாடி, பேப்பர் என்பனவற்றை உற்பத்தி செய்யும் ஆலைகளும் இந்தியாவிலுள்ளன.

குடித்தொகை:

உலகப்பரப்பில் நாற்பதில் ஒரு பங்கைக்கொண்டுள்ள இந்தியாவில் உலகமக்களில் ஆறிலொரு பங்கினர் வாழ்கின்றனர். உலகத்தில் ஏழாவது பெரிய நாடாக விளங்கும் இந்தியா, மக்கள் தொகையைப் பொறுத்தளவில் உலகில் இரண்டாவது நாடாக விளங்குகின்றது. உலகில் இன்று வாழ்கின்ற ஏறத்தாழ 370 கோடி மக்களில் இந்தியாவில் இன்று ஏறத்தாழ 55 கோடி மக்கள் வாழ்கின்றனர். குடித்தொகையில் முதலிடம் பெறுவது சீனாவாகும். உலக நிலப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





படம் 7 இந்தியாவின் கைத்தொழில்கள்

ரப்பில் 2·4% நிலப்பரப்பினைக் கொண்டிருக்கும் இந்தியாவில், உலக மக்களில் 15% வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய நாட்டின் மொத்த நிலப்பரப்பு 12 இலட்சத்து 60 ஆயிரம் சதுரமைலாகும். எனவே ஒரு சதுர மைலிற்கு ஏறக்குறைய 390 மக்கள் வாழ்கின்றனர். உலகச் சராசரியைப்போல இக்குடியடர்த்தி ஐந்து மடங்காகும். எனினும் சராசரிக் குடியடர்த்தி தார் பாலைநிலத்தில் 6 பேருக்குக் குறைவாகவும், வங்காளம் போன்ற இடங்களில் 1000 பேருக்கு அதிகமாகவும் காணப்படுகின்றது.

**நகரங்கள்:** டெல்கி இந்தியாவின் தலைநகரமாகும். கங்கைநதியின் கிளைநதியான யமுனைநதியின் வலது கரையில் அமைந்துள்ளது. கல்கத்தா வங்காளவிரிகுடாவிலுள்ள முக்கிய துறைமுகப் பட்டின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 8 இந்தியாவின் குடித்தொகைப் பரம்பல்


மாகும். பம்பாய் இந்தியாவின் மேற்குக் கரையில் அமைந்துள்ள முக்கிய நகராகும். சென்னை தமிழ்நாட்டு மாநிலத்தின் தலைநகராகும். கிழக்குக் கரையிலுள்ள துறைமுகப்பட்டினமாகும். சிறிநகர், பத்னு, பெனாரிஸ், புனு, அக்ரா, திருவனந்தபுரம், விசாகப்பட்டினம் என்பன ஏனைய சில முக்கிய நகரங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான்

இந்துநதி பாய்கின்ற பிரதேசத்தினைப் பாகிஸ்தான் அடக்கியுள்ளது. 3,09,239 சதுரமைல் பரப்பினைக் கொண்டிருக்கும் பாகிஸ்தான் மேற்கெல்லைகளாக ஈரான். அப்கானிஸ்தான் நாடுகளையும் வடகிழக் கெல்லையாக காஷ்மீரையும், கிழக்கே இந்தியாவையும், தெற்கே அரபிக்கடலையும் எல்லைகளாகக் கொண்டிருக்கின்றது.

பாகிஸ்தானின் மேற்குப்பாகம் ஆப்கானிஸ்தான் மேட்டுநிலத்தோடும், கிழக்குப்பாகம் சிந்துநதி வடிநிலத்தோடும் தொடர்புபட்டிருக்கின்றது. சிந்துநதிச் சமவெளி, தொடரலைச்சமவெளியாகும். அப்கானிஸ்தானை அடுத்து பாகிஸ்தானின் தரை உயரம் 3000 அடிகளுக்கு மேலுள்ளது. கீர்த்தார், சுலைமான் மலைத்தொடர்கள் பாகிஸ்தானின் மேற்கே அமைந்துள்ளன.





படம்: 9 பாகிஸ்தானின் தரைத்தோற்றம் - மேற்கே உயர்மலைப் பிரதேசம் கிழக்கே சிந்துநதி வடிநிலம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானின் காலநிலை பொதுவாக வறண்டது. இப்பிரதேசத்தின் மழைவீழ்ச்சி 40'' க்குக் குறைவு. சிந்துப் பிரதேசம் 5''க்குக் குறைவாக மழையைப் பெறுகின்றது. வெப்பநிலையைப் பொறுத்தளவில் மாரியில் தெற்கே 60° ப ஆகவும், வடக்கே குறைவாகவும் உள்ளது. கோடையில் கிழக்கே 90°ப ஆகவும், மேற்கே 85° ப ஆகவும்முள்ளது.

பாகிஸ்தான் ஒரு பயிர்ச்செய்கை நாடாகும்: இப்பிரதேசத்தின் உலர் ஈரப் பகுதிகளில் கோதுமை முக்கியமாகப் பயிரிடப்பட்டு வருகின்றது. 60% விளைநிலம் கோதுமைச் செய்கைக்குட் பட்டுள்ளது பஜ்ரா, சோளம், என்பனவும் செய்கைபண்ணப் படுகின்றன. பருத்தியும் கரும்பும் பாகிஸ்தானின் வேறிரு வர்த்தகப் பயிர்களாகும். பஞ்சாப்பிரதேசத்தில் நீர்ப்பாசன வசதிகளுடன் பயிர்ச்செய்கை சிறப்பாக நடைபெற்று வருகின்றது.




படம்: 10 பாகிஸ்தானின் மழைவீழ்ச்சி, வெப்பநிலை-பயிர்ச் செய்கைப் பரம்பல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானில் கைத்தொழில்கள் அவ்வளவு தூரம் விருத்தியுறவில்லை; நெசவுத்தொழில், இரசாயனத்தொழில், உணவுபதனிடுந் தொழில், தோல் தொழில், கண்ணாடித்தொழில் என்பன விருத்தியுற்று வருகின்றன. போதிய மூலப் பொருளின்மை கைத்தொழிலாக்கங்களுக்குத் தடைவிதிக்கின்றன. லாகூர், கராச்சி, சியால்கோட் முதலிய நகரங்களில் இத்தொழில்கள் இயங்கிவருகின்றன. பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத் ஆகும்.

பாகிஸ்தானில் ஏறக்குறைய மூன்றரைக்கோடி மக்கள் வாழ்கின்றனர்; இந்நாட்டில் பலுஸ்சிஸ்தான் பகுதியில் ஒரு சதுர மைலிற்கு 6 மக்களும், சிந்துப்பகுதியில் 91 மக்களும், மேற்குப்பஞ்சாப்பில் 300 மக்களும் வாழ்ந்து வருகின்றனர். பாகிஸ்தான் மக்களில் 90% முஸ்லீம்களாவார்கள். உருதுமொழி பேசும் முஸ்லீம்கள் இவர்கள்.

## வங்காளதேசம்

கங்கைக் கழிமுகத்தில் அமைந்திருக்கும் வங்காளதேசம் 55,134 சதுரமைல் பரப்பினையுடையது. இந்நாடு தெற்கே வங்காளவிரிகுடாவையும், தென்கிழக்கே பர்மாவையும், ஏனைய எல்லாப்புறங்களிலும் இந்திய மாநிலங்களையும் கொண்டிருக்கின்றது. இது முன்பு கிழக்குப் பாகிஸ்தான் என்றழைக்கப்பட்டது.




படம்: 11 வங்காள தேசத்தின் தரையமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்காளதேசம் கழிமுக இடவிளக்க வியலிற்குரிய மாறும் நதிப் போக்குகளையும், நதிமுகத்தில் பல்வேறு சிறு தீவுகளையும் கொண் டுள்ள அடையல் செறிந்த தாழ்நிலமாகும். இது அடிக்கடி வெள்ளப் பெருக்கிற்கு உட்படுகின்றது. கடலிலிருந்து 100 மைல்களுக்கு அப் பாற்கூட இத்தாழ்நிலத்தின் உயரம் 35 அடிகளாகும்.

வங்காளதேசம் மிக ஈரலிப்பான பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் ஆண்டிற்கு 80" மேல் மழை பொழிகின்றது. அத்துடன் உலகிலேயே அதிக மழைபெறும் பிரதேசமாக இந்நாடு விளங்கிவருகிறது. சில விடயங்களில் குறிப்பாக கிழக்கிலும் தெற்கிலும் 200" மேல் மழை வீழ்ச்சி காணப்படுகின்றது. தென்மேல் பருவக்காற்றின் செல்வாக் கினுள் இக்கழிமுகப் பிரதேசம் அமைவதால் ஆண்டிற்குரிய மழை வீழ்ச்சி மிக அதிகமாக இருக்கின்றது. அத்தோடு வங்காளவிரிகுடா வில் உருவாகும் சூறாவளிகளும் கணிசமானவளவு மழையை வங்காள தேசத்திற்குக் கொடுக்கின்றன அதிகமழை காரணமாகவும், பனி படர்ந்த மலைப்பகுதிகளில் இருந்து உற்பத்தியாகி வரும் கங்கை பிர மபுத்திரா நதிகள் அதிக நீரை இப்பகுதியில் சேர்ப்பதாலும் இத் தாழ்நிலம் அடிக்கடி வெள்ளப் பெருக்கிற்கு உட்படுகின்றது. இப் பிரதேசத்தின் வெப்பநிலை ஆண்டு முழுவதும் ஒரே சீராகப் பரந்தி ருக்கின்றது. மாரியிற்கூட இங்கு வெப்பநிலை 60° ப. ஆகவுள்ளது. சிலவேளைகளில் 75° ப. வரை வேறுபடுகின்றது கோடையில் 80°ப.- 85° ப. வரை வெப்பநிலை காணப்படுகின்றது.

வங்காளதேசத்தின் மொத்த நிலப்பரப்பில் மூன்றிலிரு பாகத் தில் பயிர்ச்செய்கை நடைபெறுகின்றது; நெல், சணல் இரண்டும்



படம்: 12 வங்காள தேசத்தின் பயிர்ச்செய்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக முக்கியமான பயிர்கள். வண்டல் செறிந்த நிலமும் அதிக மழையும் நெற்செய்கைக்குச் சாதகமாக அமைந்திருக்கின்றன. உலகிலேயே சணல் உற்பத்திக்கு முதலிடம் பெறும் நாடு வங்காள தேசமாகும். வெள்ளப்பெருக்கால் அடிக்கடி புதிப்பிக்கப்படும் கழி முகமண்ணும். போதிய தொழிலாளரும் இங்கு சணல் உற்பத்திக் குப் பேருதவியாக இருக்கின்றன. வங்காளதேசத்தில் கிழக்குப் பாகத் தில் தேயிலைச் செய்கை விருத்தியுற்றிருக்கின்றது.

கனிப்பொருளைப் பொறுத்தளவில் வங்காளதேசம் மிகக் குறைந்த செல்வத்தையுடையது. தரத்தில் குறைந்த நிலக்கரி குறைந்த அள வில் காணப்படுகின்றது. ஆனல் பயிர் மூலப்பொருட்களை ஆதார மாகக்கொண்ட தொழில்கள் இந்நாட்டில் விருத்தியுற்று வருகின்றன. காகித உற்பத்தி, பருத்தி நெசவு, சீனிஉற்பத்தி, சணல் தொழில் என்பன இந்நாட்டில் இயங்கி வருகின்ற கைத்தொழில்களாகும்.

இப்பிரதேசத்தில் ஏறத்தாழ 6 கோடி மக்கள் வாழ்கின்றனர். ஒரு சதுர மைலிற்குரிய சராசரி குடியடர்த்தி 600 மக்களாவர். வங் காளதேசத்தின் சில பாகங்களில் ஒரு சதுர மைலிற்கு 10000 மக்க ளுக்கு மேலும் இருக்கின்றனர். மொத்தக்குடிசனத்தில் 75% மக்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இங்கு வாழும் மக்களில் 80% முஸ்லீங்களாவர்.


## நேபாளம்

இமயமலைச்சாரலில் அமைந்துள்ள நாடு நேபாளமாகும், இந்நாட் டிற்கு வடக்கே திபெத் அமைந்துள்ளது. நேபாளம் 54,000 சதுர மைல் பரப்புடையது. ஏறத்தாழ 85 இலட்சம் மக்கள் இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். நேபாளத்தில் தான் எவறெஸ்ட் சிகரம் உள் ளது. இந்நாட்டின் தலைநகரம் காட்மாண்டு ஆகும். பருத்தி, நெல், கோதுமை, கரும்பு, புகையிலை, அபினி, காய்கறிகள் இந்நாட்டில் விளைவிக்கப்படுகின்றன.

## பூட்டான்

கிழக்கு இமயமலையில் பூட்டான் நாடு அமைந்துள்ளது. இதன் பரப்பு 18,000 சதுரமைல்கள்; இங்கு ஏறத்தாழ 6 இலட்சம் மக் களுள்ளனர். பூட்டானின் மத்திய பாகத்தில் மக்கள் வாழ்கின்றனர். யாக் எனும் மாடு, ஆடு, பன்றி, குதிரை முதலிய விலங்குகளை வளர்க்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்: 13 நேபாளம், பூட்டான், திபெத்.



படம்: 14 யாக் எருது.

## இலங்கை

குறிப்பு: (நமது நாடான இலங்கைபற்றி இந்நூலின் இறுதியில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. தூரகிழக்காசியா

தூரகிழக்காசியா நாடுகள் என சீனமக்கட்குடியரசு, யப்பான், கொரியா, வியட்னும், லாவோஸ், கம்போடியா ஆகிய நாடுகளைக் குறிப்பர்; வியட்னும், லாவோஸ், கம்போடியா ஆகிய நாடுகளை தென்கிழக்கு ஆகிய நாடுகள் என்ற பிரிவுக்குள் அடக்கி ஆராய்வது சிறப்பானது.

## சீனமக்கட்குடியரசு

உலகிலேயே அதிக மக்கள் தொகையைக் கொண்டுள்ள நாடு சீனவாகும். ஆசியாவில் வாழும் 175 கோடி மக்களில் 65 கோடி மக்கள் சீனவில் வாழ்கின்றனர். உலகக் குடித்தொகையில் இது $\frac{1}{5}$ பங்காகும். ஆனல் சீனவின் நிலப்பரப்பு உலக நிலப்பரப்பின் $\frac{1}{12}$ பங்குக்கும் குறைவாகவே காணப்படுகின்றது. ஏறத்தாழ 30 இலட்சம் சதுரமைல் பரப்பைக் கொண்டுள்ளது.


ஆசியாவின் கிழக்கு நாடாக விளங்கும் சீன ஆசியாவில் மிகப் பெரிய ஒரு நாடாகும். சீனவில் மக்கள் சீன, தேசிய சீன எனப் படும் இரு நாடுகளுள்ளன மக்கள் சீனவைச் சீனக்குடியரசு என்பர் தேசிய சீன தைவான் எனும் தீவாகும்; இதனைப் போர்மோசா எனவும் வழங்குவர். மங்கோலியா, திபெத், மஞ்சூரியா போன்ற சீனவுக்கு வெளியே அமைந்துள்ள நாடுகளும் சீனவுக்கு உரிமையானவையே. மக்கள் சீனவின் தலைநகரம் பீக்கிங் ஆகும். கண்டன், சாங்காய் என்பன சீனவிலுள்ள சிறந்த நகர்களாகும்.

சீனவின் மேற்குப் பகுதி மலைப்பிரதேசமாகும்; தென்பகுதியும் மலைகளையே கொண்டுள்ளது. நதிப் பள்ளத்தாக்குகளையும் கடற்கரையோரங்களையும் அடுத்துத் தாழ்நிலங்கள் காணப்படுகின்றன.

சீன மிகக் குடியடர்த்தி உடைய நாடு; எனினும் சீனவின் எல்லாப் பகுதிகளிலும் குடியடர்த்தி சமனக இல்லை. சீனவின் மேற்குப் பகுதி மலைப்பிரதேசமாகக் காணப்படுவதனல் இங்கு குடியடர்த்தி இல்லை. இம்மேற்குப் பகுதி நிலம் மாரியில் பனியால் மூடப்படுவதால் பயிர்ச் செய்கைக்கு ஏற்றதாக இல்லை. அதனலும் மக்கள் இங்கு அதிகமாக வாழவில்லை.

சீனவின் ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலேயே மக்கள் செறிவாகக் காணப்படுகின்றனர். சிக்கியாங், யாங்கிசிக்கியாங், குவாங்கோ என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





படம்: 15 சீனுவின் தரைத்தோற்றம்

1. வடிநிலங்களைக் கொண்ட சமவெளி
2. தென்சீன மலைப்பிரதேசம்
3. தூர மேற்த மலைப்பிரதேசம்

பன சீனுவின் பிரதான ஆறுகளாகும். இவை மேற்கு மலைகளில் உற்பத்தியாகிக் கிழக்கு நோக்கிப் பாய்ந்து கடலை அடைகின்றன; சிக்கியாங் தென்சீனுவிலும், யாங்கிசிக்கியாங் மத்திய சீனுவிலும், குவாங்கோ வடசீனுவிலும் உள்ளன. நல்ல வண்டல்மண் நிறைந்த இப்பள்ளத்தாக்குகள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு ஏற்றனவாக இருப்பதினுல் மக்கள் இப் பகுதிகளில் அதிகமாக வாழ்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவாங்கோ நதியின் இருமருங்கும் பாலைநிலப் பகுதியிலிருந்து காற்றினால் கொண்டுவரப்படும் நுண்மண் படிவுகள் படிகின்றன.




படம்: 16 சீனாவின் காலநிலை

இவை மஞ்சள் நிறமானவை. அதனால், குவாங்கோ நதி 'மஞ்சள் ஆறு' எனவும் அழைக்கப்படுகின்றது. நுண்மண் இந்நதியின் அடித்தளத்திலும் படிவதால் அடிக்கடி வெள்ளப்பெருக்கும் ஏற்படுகின்றது. இதனால் குவாங்கோ நதிக்கு சீனாவின் துயர் என்று இன்னொரு பெயரும் உண்டு.

காலநிலை

மத்தியகோட்டை அடுத்து தென்சீனா உள்ளது. கடகக்கோடு சிக்கியாங் பள்ளத்தாக்குக்கு ஊடாகச் செல்கின்றது. அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்சீனாவிற்கும், வடசீனாவிற்கும் இடையே காலநிலையில் வேறு பாடுகள் இருப்பதை உணரலாம். பொதுவாக தென்சீனா மத்திய கோட்டிற்கு அருகே அமைந்திருப்பதால் அதிக வெப்பமானது. வட சீனாவில் வெப்பநிலை குறைவு தென்சீனாவில் அதிக மழையுண்டு. வடசீனாவில் மழை குறைவு. இங்கு மாரிகாலத்தில் பனி பெய்கின்றது.

சீனாவின் தென்பகுதி கோடையில் அதிக மழையைப்பெற பருவக்காற்றே காரணமாகும். 'தைபூன்' எனப்படும் சூறுவளிக் காற்றுகள் மாரியில் வேகமாக வீசுவதால், தென்சீனா மாரியிலும் மழையைப் பெறுகின்றது. பொதுவாக தென்பகுதியிலிருந்து வடக்கே செல்லச் செல்ல வெப்பநிலையும் மழைவீழ்ச்சியும் படிப்படியாக குறைவடைகின்றன.

பயிர்ச்செய்கை

மழைவீழ்ச்சியும் வெப்பநிலையும் சீனாவின் பயிர்ச்செய்கையைப் பெருமளவில் பாதிக்கின்றன. ஏனைய ஆசிய நாடுகளைப் போன்று சீனாவும் பயிர்ச் செய்கையில் சிறப்பு வாய்ந்ததாகும். செறிவான பயிர்ச் செய்கையும், சுழல்முறைப் பயிர்ச்செய்கையும் இங்கு நன்கு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சீனாவின் பயிர்ச் செய்கையில் நெல், கோதுமை, தினைவகைகள் என்பன முக்கியம் பெறுகின்றன.


சீனாவின் மத்தியில் கிழக்கு மேற்காக ஒரு கோடு வரைந்தால், அக்கோட்டின் தென்பாகத்தில் நெல் அதிகமாயும் வடபாகத்தில் கோதுமை அதிகமாயும் செய்கைபண்ணப்படுவதைக் காணலாம்.

சிக்கியாங், யாங்கிசிக்கியாங் பள்ளத்தாக்குகளும் கழிமுகங்களும் நெற் செய்கைக்கு ஏற்றனவாக உள்ளன. செழித்த வண்டல்மண், வெப்பம், மழைவீழ்ச்சித் தன்மைகள் என்பன நெற்செய்கைக்கு ஏற்றனவாக உள்ளன. யாங்கிசிக்கியாங் ஆற்றிலுள்ள 'செவ்வடி நிலம்' நெற் பயிர்ச்செய்கைக்கு மிகவும் சிறந்ததாக உள்ளது. சீனா உலக நெல்லுற்பத்தியில் 30 சதவீதத்தை உற்பத்தி செய்கின்றது. அயரா உழைப்பும் புதுமுறைகளைக் கையாளுதலும் அதிக விளைச்சலைத் தருகின்றன.

சிக்கியாங் நதிமுகத்தில் அமைந்துள்ள சிறந்த நகரம் கன்ரன் ஆகும். கன்ரனுக்கு அண்மையிலுள்ள கொங்கொங் தலைசிறந்த துறைமுகமாக இருக்கின்றது. யாங்கிசிக்கியாங் நதிமுகத்தில் ஹான்கவ் எனும் நகர் அமைந்துள்ளது.

சீனாவின் வடபகுதிக் காலநிலை குளிர்ந்ததாக இருப்பதனால், இங்கு கோதுமை முக்கியமான பயிராக விளங்குகிறது. குவாங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம்: 17 சீனாவில் விவசாயம்—விளக்கம்: நெ=நெல்; கோ=கோது…
சா=சாமை; அ=அவரை; மு=முசுக்கொட்டைச் செடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுப்பள்ளத்தாக்கில் கோதுமைச் செய்கை சிறப்பாக நடை பெற்று வருகின்றது. மாரியில் இங்கு நிலம் பனியால் மூடப்படு வதால் கோடையிலேயே கோதுமை பயிராகின்றது. இங்கு அவரை, சாமை என்பனவும் பயிராகின்றன. அவரையிலிருந்து கிடைக்கும் மா, எண்ணெய், விதை என்பன உணவுக்குப் பயன்படுகின்றன. குவாங்கோ நதியின் அண்மையில் சீனுவின் தலைநகரமான பீக்கிங் அமைந்துள்ளது.

உலகத் தேயிலை உற்பத்தியில் சீனு 35 சதவீதத்தை உற்பத்தி செய்கின்றது. தெற்கிலும், மேற்கிலும் சீனுவின் தேயிலைத் தோட்டங்களுள்ளன. சீனு உற்பத்தி செய்வது பச்சைத் தேயிலையாகும். தேயிலை மலைப் பிரதேசங்களிலேயே செய்கை பண்ணப்படுகின்றது.

சீனுவில் முசுக்கொட்டைச் செடி, பருத்தி என்பன வேறிரு பயிர்களாகும். முசுக்கொட்டைச் செடி பட்டுப் பூச்சிகளுக்கு உண வாகிறது. பட்டுப் பூச்சிகளிலிருந்து உருவாக்கப்படும் நூலைக்கொண்டு பண்டைக் காலத்தில் இருந்தே சீனு பட்டு உற்பத்தி செய்து வரு கின்றது. யாங்கிசிக்கியாங் பள்ளத்தாக்கு பட்டு உற்பத்திக்குப் புகழ்பெற்றதாகும் இந்நதியின் கழிமுகத்தில் பருத்தி விளைவிக்கப் படுகின்றது. பருத்தி நெசவுத் தொழில் சங்காயில் சிறப்பாக நடை பெறுகின்றது.

இரும்புருக்குத் தொழில், கப்பல் கட்டுந்தொழில், புகைவண்டிப் பொறித் தொழில் என்பன சீனுவில் விருத்தி அடைந்து வருகின்றன.

## சீனுவின் அயல்நாடுகள்

சீனுவின் அயல்நாடுகளாக மங்கோலியா, திபெத், கொரியா, தைவான் என்பன விளங்குகின்றன. இவற்றில் மங்கோலியா, திபெத் என்பன மலைப்பிரதேசங்களாகவுள்ளன. திபெத்தின் தாழ்நிலப்பகு தியில் கோடையில் கோதுமை, சாமை என்பன சிறிதளவு பயிரி டப்படுகின்றன. திபெத்தின் தலைநகர் லாசாவாகும். யாக் என்பது திபெத்தின் சிறந்த விலங்காகும். தைவான் ஒரு தீவு. இங்கு கரும்பு, உருளைக்கிழங்கு, தேயிலை என்பன செய்கைபண்ணப்படுகின்றன. கொரியா ஒரு குடாநாடு ஆகும். இங்கு கோடையில் நெல்லும் மாரியில் கோதுமையும் பயிரிடப்படுகின்றன. கொரியா வடகொரியா, தென்கொரியா என இரு நாடுகள். வடகொரியாவின் தலைநகர் புயங்யாங்; தென்கொரியாவின் தலைநகர் சவுல் ஆகும். தைவானின் தலைநகரம் தைப்பி ஆகும்.

4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. தென்கிழக்கு ஆசியா

தென்கிழக்கு ஆசியா, பெருநிலத்துடன் இணைந்துள்ள பல நாடுகளையும் தீவுகளையும் கொண்டுள்ளது. பர்மா, தாய்லாந்து, மலேசியா, லாவோஸ், கம்போடியா, வியட்னும், எனும் ஆசியக்கண்டப் பெருநிலத்துடன் இணைந்துள்ள நாடுகளையும், ஆசியாக்கண்டத்தினின்றும் பிரிந்து நியூகினிவரை அமைந்துள்ள சுமாத்திரா, யாவா, போர்ணியோ, செலிபஸ், பிலிப்பைன்ஸ் முதலான தீவுகளையும் கொண்டுள்ளது. இந்நாடுகள் வெவ்வேறு அரசுகளாக இருப்பினும் புவியியல் அடிப்படையில் ஓரலகாகவே அமைந்துள்ளன.




படம்: 18 தென்கிழக்கு ஆசியாவின்
தரைத்தோற்றம்

தரைத்தோற்றம்:


தென்கிழக்கு ஆசியாவின் தரைத்தோற்றம் மலைப்பிரதேசங்களையும் தாழ்நிலங்களையும் கொண்டிருக்கின்றது. ஆசியாக்கண்டத்தோடு இணைந்த பகுதிகளில் மலைத்தொடர்கள் வடக்குத்தெற்காகக் காணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றன. தீவுகள் மலைப்பிரதேசங்கள் மத்தியில் காணப்படுகின்றன. கரையோரங்களையும் நதிவடிநிலங்களையும் அடுத்துத் தாழ்நிலங்கள் காணப்படுகின்றன.

காலநிலை:

தென்கிழக்கு ஆசியா மத்திய கோட்டுக்கு இருமருங்கும் அமைந்திருப்பதால் இந் நாடுகளின் வெப்பநிலை உயர்வாகக் காணப்படுகின்றது. சராசரி 80°ப. வெப்பநிலை நிலவுகின்றது. கோடைகாலத்தில் தென்மேல் பருவக்காற்று, தென்கீழ் ஆசியாவுக்கு அதிக மழையைக் கொடுக்கின்றது. மாரிகாலத்தில் தீவுகள் அதிக மழையையும், கண்டப்பகுதி குறைவான மழையையும் பெறுகின்றன. பொதுவாக வருடம் முழுவதும் அதிகமழையைப் பெறுவன தீவுகளே.




படம்: 19 காலநிலை விபரம்

குடிப்பரம்பல்:

தென்கிழக்கு ஆசியாவில் ஏறத்குறைய 20 கோடிமக்கள் வாழ்கின்றனர். ஒரு சதுரமைலிற்குச் சராசரி 110 மக்கள் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிப்பரம்பல் சமனற்றுப் பரம்பியுள்ளது. நதிப்பள்ளத்தாக்குப் பகுதிகளில் அதிக குடிச்செறிவு காணப்படுகின்றது. தென்கீழ் ஆசியாவில் ஐராவதி, சல்வின், மீனம், மீக்கொங் முதலிய ஆறுகள் பாய்கின்றன. இவற்றின் வண்டல் செறிந்த கழிமுகப்பாகங்களில் நன்கு பயிர் செய்யமுடிவதால், மக்கள் அதிக செறிவாக இப்பாகங்களில் வாழ்கின்றனர்.

பயிர்ச்செய்கை:

இந்நாடுகளில் நெற்செய்கையே தலைசிறந்த தொழிலாகவுள்ளது. கழிமுகப்பகுதிகளில் நெற்செய்கை அதிகஅளவில் நடைபெற்றுவருகின்றது பர்மா, தாய்லாந்து போன்ற நாடுகள் ஏற்றுமதி செய்யக்கூடியளவிற்கு நெல்லை உற்பத்தி செய்கின்றன மழைகுறைந்த ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் பயிர்ச் செய்கை குறைவு வரண்ட ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் தினை, பருத்தி வேர்க்கடலை என்பன விளைவிக்கப் படுகின்றன. மிக வரண்ட மலைப்பகுதிகளில் சேனைப்பயிர்ச்செய்கை நடைபெறுகின்றது றப்பர்ச்செய்கை மலாயாவில் ஏற்றுமதிக்காக நன்கு நடைபெறுகின்றது.

கைத்தொழில்:

பர்மாவின் மலைப்பகுதிகளிலுள்ள காடுகளில் மரம் வெட்டுந் தொழில் நடைபெற்று வருகின்றது பர்மாவில் தங்கம், வெள்ளி, இரத்தினம், தகரம், பெற்றோலியம் எனும் கனிப்பொருட்களும் காணப்படுகின்றன மலாயாவில் தகரம் அதிக அளவில் உள்ளது. சுரங்கக் கைத்தொழில்களே இந் நாடுகளின் முக்கியமான கைத்தொழில்களாகும்.


## தென்கிழக்கு ஆசியத் தீவுகள்

தென்கிழக்காசியத்தீவுகளில் முதுகெலும்பு போன்று அமைந்திருக்கும் மலைகளைப் பார்க்குமிடத்து இத்தீவுகள் முன்பொரு காலத்தில் பெருநிலப்பரப்போடு இணைந்து ஒரே பரப்பாக இருந்திருக்க வேண்டும் என நம்பலாம். அதிக வெப்பநிலை, அதிக மழைவீழ்ச்சி என்பன இத்தீவுகளில் என்றும் பசுமையான அடர் காடுகளை உருவாக்கியுள்ளன.

தென்கீழ் ஆசியாவிலுள்ள தீவுகளில் அதிக மக்களைக் கொண்டது யாவா ஆகும். யாவா நாடு நமது இலங்கையைப் போன்று இரு மடங்கு பெரியது. 6½ கோடி மக்களைக் கொண்டது. யாவாவில் எரிமலை மண் படர்ந்திருப்பதனால் வரண்டகாலங்களில் கரும்பு விளைவிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படுகின்றது. மழைகாலத்தில் நெல் விளைவிக்கப்படுகிறது. யாவா வின் மலைப்பாங்கான பகுதிகளில் தேயிலை, கோப்பி என்பன செய்கை பண்ணப்படுகின்றன. யாவாவின் தலைநகர் யகார்த்தா ஆகும்.




படம்: 20 பொருளாதார நடவடிக்கைகளும் குடிப்பரம்பலும்

யாவாவிற்கு வடக்கே அமைந்துள்ள பெருந்தீவான போர்னியோ வின் பெரும்பகுதியும், செலிபஸ் போன்ற தீவுகளும் காடுகள் அடர்ந்தனவாகவுள்ளன. அதனால் இவற்றில் மக்கள் அடர்த்தி குறைவு. சுமாத்திராத்தீவில் பெருமளவில் பெற்றோலியம் உற் பத்தியாகின்றது,

பிலிப்பைன் தீவுகள் கிழக்கே அமைந்துள்ளன. மிண்டாநோ லூசொன் போன்றதீவுகள் இதனுள் அடங்குகின்றன. லூசொன் சிறந்த தீவாகும்; இத் தீவுகள் மத்திய கோட்டுக் காலநிலையைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தன. கோடையில் இவை பருவமழையைப் பெறுகின்றன. இத் தீவுகளின் மத்திய பகுதிகளில் காடுகள் அடர்ந்த மலைகள் உள்ளன. இங்கு சிறப்பாக நெல், தினை, தென்னை, சணல், கரும்பு, புகையிலை என்பன விளைவிக்கப்படுகின்றன. அல்பாக்கா என்ற சணலுக்கு உலகிலேயே பிலிப்பைனே புகழ் பெற்றது. இதனை மணிலாச்சணல் என்றும் கூறுவர்.

லூசொன் தீவிலுள்ள மணிலாவே பிலிப்பைன் தீவுகளின் தலை நகராகும்; இது சிறந்த ஒரு துறைமுகம்.

## மத்தியகிழக்கு நாடுகள்

உலகத்தின் மேற்கு நாடுகளுக்கும் கிழக்கு நாடுகளுக்கும் இடையேயுள்ள நாடுகள் மத்திய கிழக்கு நாடுகள் என வழங்கப்படுகின்றன. இலங்கைக்கு இந் நாடுகள் மேற்கேயே உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கே இவை மத்திய கிழக்கிலுள்ளன மத்திய கிழக்கு நாடுகளில் சவுதி அரேபியா, இஸ்ரேல், யோர்டான், லெபனன், துருக்கி, ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான் எனும் நாடுகள் அடங்குகின்றன. இந்நாடுகள் ஐந்து கடல்களால் சூழப்பட்டன. அராபிக்கடல், செங்கடல், மத்தியதரைக்கடல், கருங்கடல், கஸ்பியன்கடல் என்பன இந் நாடுகளின் எல்லைகளாகவுள்ளன. அதனுல் மத்தியகிழக்கை ஐந்து சமுத்திரநாடு என அழைப்பர். செங்கடலையும் மத்தியதரைக்கடலையும் சுயஸ் கால்வாய் இணைக்கின்றது,

மத்தியகிழக்கை அராபியநாடுகள் என்றும் கூறுவர். இங்கு வாழும் மக்களிற் பெரும்பாலானோர் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்கள். அதனுல் இந்நாடுகள் இஸ்லாமிய நாடுகள் எனவும் வழங்கப்படும். இஸ்லாமிய புனிதநகரான மெக்காவும், கிறிஸ்தவப்புனித நகரான ஜெருசலமும் இங்கேயே அமைந்துள்ளன,

உலகம் முழுவதிலும் பெற்றோலியத்துக்குப் பெயர் பெற்றவை இந்நாடுகளாகும். இங்குள்ள பாலைவனப்பசுந்தரைகளில் பேரீந்து செய்கைபண்ணப்படுகின்றது. பாலைநிலக்கப்பலான ஒட்டகம் இங்குள்ள முக்கியமான விலங்காகும். இந்நாடுகளில் அதிகம் வாழும் அராபியர்கள் சிறந்த வர்த்தகர்களாக முன்பு விளங்கியுள்ளனர்.

### தரைத்தோற்றமும் காலநிலையும்

மத்திய கிழக்கின் பெரும்பாகம் மேட்டு நிலமாக இருப்பதைக் காணலாம்; இங்குள்ள அரேபியா, ஈரான், அனற்றோலியா என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 23 ஒட்டகம் - அராபியர்

இத்தகைய மேட்டுநிலங்களே. இம் மேட்டுநிலங்கள்; ஆசியாவின் மத்திய மேட்டுநிலங்களிலும் உயரத்தில் குறைந்தன. மத்திய கிழக்கில் மிகவும் குறைவாகவே சமவெளியுள்ளது. இங்கு ஒரேயொரு ஆற்றுத் தொகுதியே உள்ளது. அது யூபிரட்டீஸ்–ரைகிறீஸ் ஆற்றுத் தொகுதி எனப்படும். இந்த ஆறுகளையும், பாரசீகக்குடாவையும், மத்தியதரைக்கடலையும் சூழ்ந்து தாழ்நிலங்களுள்ளன.

மேட்டுநிலங்கள் அனைத்தும் மழைகுறைந்த வரண்டபிரதேசங்களாகும். பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்குப் பயனற்றன. மத்தியதரைக்கடலைச் சூழ்ந்த பகுதி மாரிகாலத்தில் சிறிதளவு மழையைப் பெறுகின்றது. அதனால் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. யூபிரட்டீஸ் - ரைகிறீஸ் வடிநிலம் நீர் வசதியுடையது. இங்கு மக்கள் செறிவாகவுள்ளனர்; பண்டைய பபிலோனிய நாகரீகம் இந்நதி வடிநிலத்திலேயே உருவானது.

## மக்கள் தொழில்கள்

உலகில் மத்தியகிழக்கு நாடுகள் இன்று பெற்றுள்ள முக்கியத்துவத்திற்கு இங்கு அதிக அளவில் கிடைக்கும் பெற்ரோலியமே காரணமாகும்; வெகுகாலத்திற்குமுன் பூமியின் சில பகுதிகளில் இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவரங்கள் நிலத்தினுள் புதையுண்டு போயின். புதையுற்ற இத் தாவரப் பொருட்களில் ஒருவகை நுண்கிருமி தோன்றி இத்தாவரப் பொருட்களை பெற்றோலியமாக மாற்றிவிடுகின்றன. பெற்றோலியம் பெரும் அடையற்படைகளில் காணப்படுகின்றது. வில்வடிவிலமைந்த நுண்துளைகளைக் கொண்ட மணற்படைகளிலேயே பெற்றோலியம் சேர்ந்துள்ளது. நிலத்தினுள் துளையிட்டு குழாய்கள்மூலம் பெற்றோலியம் பெறப்படுகின்றது. இந்நிலநெய் ஏனைய நாடுகளுக்குக் குழாய்கள் மூலமும் கப்பல்கள் மூலமும் அனுப்பப்படுகின்றன.



படம். 24 பாலைவனமும் ஒட்டகங்களும்

மத்தியகிழக்கில் பாரசீகக்குடாவைச் சுற்றியுள்ள நாடுகளிலேயே அதிக பெற்றோலியம் காணப்படுகின்றது. பாகிறொன், குவைத், சவுதிஅரேபியா, ஈராக், ஈரான் என்பன முக்கியமான பெற்றோலியப் பகுதிகளாகும்.

உலர்ந்த கோடையும், ஈரலிப்பான மாரியும் உடைய காலநிலை பழச்செய்கைக்கு ஏற்றது. இத்தகைய காலநிலை மத்தியதரைக்கடலைச் சூழ்ந்து உள்ளது. அதனால், இப்பகுதிகளில் தோடை, ஒலிவ், திராட்சை முதலிய பழவகைகள் செய்கைபண்ணப்படுகின்றன. அத்துடன் மத்திய தரைக்கடல்பகுதியில் சோளம், கோதுமை, புகையிலை என்பனவும் செய்கைபண்ணப்படுகின்றன.


மத்திய கிழக்கிலுள்ள வரண்ட மேட்டு நிலங்களில் மந்தை வளர்த்தல் நடைபெறுகின்றது. வெள்ளாடும், செம்மறியும் அதிக அளவில் வளர்க்கப்பட்டு வருகின்றன. பாலைநிலப்பசுஞ்சோலைகளில் பேரீந்து முக்கியமான பயிர்; அத்துடன் கோதுமையும், வாற்கோதுமையும் பயிராகின்றன. யூபிரட்டீஸ்-ரைகிறீஸ் பள்ளத்தாக்கில் மிகக் குறைந்த அளவில் நெல் செய்கைபண்ணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மத்திய கிழக்கு நாடுகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




மத்திய கிழக்கு நாடுகளின் பொருளாதார வளங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடிச் செறிவு

ஆசியாக்கண்டத்தில் குடிச்செறிவு குறைந்த பகுதிகளில் மத்திய கிழக்கு ஒன்றாகும். மத்தியகிழக்கில் மிகுந்த வெப்பம் காரணமாக மக்கள் அதிகமில்லை. மக்கள் பொதுவாக ஐதாகவே வாழ்கின்றனர். சில குறித்த இடங்களில் குழுமி வாழ்கின்றனர். பாரசீகக்குடாவைச் சூழ்ந்தும், மத்தியதரைக்கடலையடுத்தும் மக்கள் ஒப்பளவில் அதிகமாகவுள்ளனர். பாலைநிலங்களாக இந்நாடுகள் விளங்குவதே குறைவான குடித்தொகைக்குக் காரணமாகும்.

# 4. ஆபிரிக்க நாடுகள்

ஆசியாவிற்கு அடுத்ததாக பரப்பளவில் மிகப்பெரிய கண்டமாக ஆபிரிக்கா விளங்குகின்றது. ஆபிரிக்காக் கண்டத்தின் பரப்பு 1 கோடியே 15 இலட்சம் சதுரமைல்களாகும். ஆபிரிக்காவின் மத்திய பகுதி ஊடாக மத்திய கோடு அமைந்துள்ளது. வடக்கே கடகக் கோடும், தெற்கே மகரக்கோடும் இக்கண்டத்தை ஊடறுத்துச் செல்கின்றன.

ஆபிரிக்கா பரப்பளவில் பெரியது; தக்க போக்குவரத்துப் பாதைகளை உள்நாட்டில் கொண்டதாகவுமில்லை. அடர்ந்த காடுகளையும், கொடிய விலங்குகள் வாழும் புல்வெளிகளையும், வரண்ட பாலை நிலங்களையும் உடையதாக ஆபிரிக்கா விளங்கி வருகின்றது. மேலும் மிக அண்மைக் காலம் வரை நன்கு விருத்திபெறாத கண்டமாகக் காணப்பட்டது. வெளி உலகத்தவர்கள் இக்கண்டம் பற்றிய விபரங்களை அதிகம் அறிந்திருக்கவில்லை. அதனால் இக்கண்டம் இருண்ட கண்டம்மென வழங்கப்பட்டது. எனினும் ஆபிரிக்கா பழம் பெருமைகள் வாய்ந்தது. நைல்நதிக்கரை நாகரிகம் இங்கேயே உருவாகியது. உரோமப் பேரரசுக் காலத்தில் வர்த்தகத்தில் பெரிதும் விருத்திபெற்றிருந்த ஒரு நகரமாக கார்த்தேசு விளங்கியது. அந்நகரம் ஆபிரிக்காவிலேயே இருந்தது.


ஆபிரிக்காக் கண்டத்தில் அதிக அளவில் தங்கம் காணப்படுவதாக ஐரோப்பிய நாடுகள் சில முன்பு கருதின. அதனால் பிரித்தானியா, பிரான்ஸ், பெல்ஜியம், போர்த்துக்கல், ஸ்பெயின் முதலிய நாடுகள் ஆபிரிக்காவைத் தமது ஆதிக்கத்தின் கீழ் பல நூற்றாண்டுகளாக வைத்திருந்தன. இன்று அந்த அடிமை நாடுகள் விரைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேறியுள்ளன. இன்று அவை சுதந்திர நாடுகளாகவும் மாறி விட்டன. எனினும், இன்னும் பல ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் பெறவேண்டியே இருக்கின்றன.

படம் 27 இல் இருந்து ஆபிரிக்க நாடுகளையும், அவற்றின் தலைநகர்களையும் தெரிந்து கொள்க. எகிப்து, சூடான், எதியோப்பியா, ஐக்கிய தென்ஆபிரிக்கக் குடியரசு என்பன ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள சில நாடுகளாகும். சாம்பியா, கானு, நைஜீரியா, தங்கனிக்கா, லெசேத்தோ என்பன அண்மையில் சுதந்திரம் பெற்ற




படம் 27 ஆபிரிக்காவின் நிலையமும், நாடுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளாகும். ஆபிரிக்காவின் கிழக்குக் கரைக்கு அப்பால் காணப் படும் மடகாஸ்கர்தீவு இக்கண்டத்தினைச் சேர்ந்ததாகும். மொசாம் பிக்குத் தொடுகடல் இத்தீவையும் ஆபிரிக்காவையும் பிரிக்கின்றது.

ஆபிரிக்காவில் நீக்கிரோவர், வெள்ளையர், அராபியர், பிக்மீஸ் முதலிய இன மக்கள் வாழ்கின்றனர். இங்கு வாழும் மக்களில் பெரும் பான்மையினர் நீக்கிரோவராவர். வடஆபிரிக்காவில் அராபியர் வசிக்கின்றனர். மத்திய ஆபிரிக்காவில் பிக்மீஸ் எனும் இன மக்கள் உள்ளனர். தென்னாபிரிக்காவில் வந்தேறுகுடிகளான வெள்ளையர் வாழ்கின்றனர்.

**தரைத்தோற்றம்:**

ஆபிரிக்கா முழுவதையும் பெரியதோர் மேட்டுநிலம் எனப் பொதுவாக வழங்கலாம். ஓர் ஒடுங்கிய கடற்கரைச் சமவெளி மட்




படம் 28 ஆபிரிக்காவின் தரைத்தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் தாழ் நிலமாக அமைந்து காணப்படுகின்றது. ஆபிரிக்காவின் நிலப்பரப்பில் 99 சத வீதமான பகுதி மேட்டுநிலமாகக் காட்சி தருகின்றது.

ஆபிரிக்காவின் தரைத்தோற்றத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

(1). உயர்மேட்டு நிலங்கள்
(2) தாழ்மேட்டு நிலங்கள்
(3) தாழ்நிலங்கள்

ஆபிரிக்காவின் உயர் மேட்டு நிலங்கள், 3000 அடிகளுக்கு மேல் உயரமான பிரதேசங்கள் எனக் கொள்ளலாம். உயர்மேட்டு நிலங்கள் தென்னுபிரிக்காவில் பெரும் பகுதியையும், செங்கடல்வரை வடகிழக்காக ஒரு பகுதியையும், கொண்டுள்ளன. இம் மேட்டுநிலத்தில் அபிசீனிய மலைகள் டிறக்கன்பேக் மலைகள் என்பன அமைந்துள்ளன.

ஆபிரிக்காவின் தாழ்மேட்டு நிலங்கள் 1000 அடிகளுக்குமேல் 3000 அடிகள் வரை உயரமுடைய பிரதேசங்களாகும். தாழ்மேட்டு நிலங்கள் ஆபிரிக்காவின் வடபாகத்தைப் பெரிதும் அடக்கியுள்ளன. தாழ்மேட்டு நிலத்தின் வடக்கே அற்லஸ் மலைத்தொடர் காணப்படுகின்றது.

தாழ்நிலங்கள் என்பது ஒடுங்கிய கடற்கரைச் சமவெளிகளையே குறிக்கின்றன. இவை 1000 அடிகளுக்கு உட்பட்ட உயரமுடையன.

ஆபிரிக்காவில் நைல், நைகர், கொங்கோ, சாம்பசி என நான்கு முக்கிய ஆறுகளுள்ளன. உலகிலேயே மிக நீண்ட நதி நைலாகும். இது 4037 மைல்கள்வரை நீளமானது. கொங்கோ நதி 3000 மைல்கள் வரை நீளமானது.

## காலநிலை

ஆபிரிக்காக் கண்டத்தை மத்தியகோடு மத்தியில் ஊடறுத்துச் செல்கின்றது; மேலும் கடகக்கோடும், மகரக்கோடும் இக்கண்டத்தின் ஊடே செல்கின்றன. வடக்குத் தெற்காக இக்கண்டம் பரந்து இருப்பதனல், காலநிலையும் பல இயல்புகளைக் கொண்டதாக இருக்கின்றது. அவை வருமாறு:

(அ) மத்தியகோட்டை அடுத்துள்ள பகுதிகள் வருடம் முழுவதும் மழையைப் பெறுவனவாக இருக்கின்றன. ஆபிரிக்காவில் அதிக மழையைப் பெறுகின்ற பகுதிகள் மத்திய கோட்டை அடுத்தே காணப்படுகின்றன. கொங்கோ வடிநிலம், மடகாஸ்கரின் கிழக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரை, தென் ஆபிரிக்காவில் கிழக்குக்கரை என்பன ஆண்டு முழுவதும் எல்லாப் பருவங்களிலும் மழையைப் பெறுகின்றன. ஆண்டு மொத்த மழைவீழ்ச்சி சராசரி 60 அங்குலங்களுக்கு மேல் காணப்படுகின்றது. வெப்பநிலையும் இப்பகுதியில் உயர்வாகக் காணப்படுகின்றது. வருடம் முழுவதும் மழைபெறும் இப்பகுதிகளை 'மத்திய கோட்டுக் காலநிலை' என்பர்.

(ஆ) ஆபிரிக்காவின் எல்லாப் பருவங்களிலும் மழையைப் பெறுகின்ற பகுதிக்கு வடக்கேயும் தெற்கேயும் கோடை மழை பெறும் பகுதிகளுள்ளன. இவை கடகக் கோட்டிற்கும், மகரக் கோட்டிற்கும் இடையே அமைந்துள்ளன. இங்கு மழைவீழ்ச்சி 20 அங்குலங்களுக்கும் 40 அங்குலங்களுக்கு மிடையே காணப்படும். கோடைப் பருவத்தில் மட்டுமே இங்கு மழைபெய்யும். வெப்பநிலை இப்பகுதிகளில் 60° ப. — 80° ப. இடையில் காணப்படும். இப்பகுதிகளை கோடை மழைபெறும் 'புல்வெளிக் காலநிலை' என்பர்

(இ) ஆபிரிக்காவில் மாரி மழை பெறுகின்ற பகுதிகள் அதிவடக்கேயும் தெற்கேயும் காணப்படுகின்றன. இப்பகுதிகளில் கோடை வரண்டதாகும். 10 அங்குலந்தொட்டு 20 அங்குலம் வரை இப்பகுதிகளில் மழைவீழ்ச்சி காணப்படும்; 60 அங்குலங்கள் வரையிலும் மழை நிகழ்வதுண்டு. மாரி மழைபெறும் இப்பகுதிகளை ''மத்திய தரைக் கடற் காலநிலை'' என்பர்.


(ஈ) ஆபிரிக்காக் கண்டத்தில் வருடம் முழுவதும் வரட்சியாக விளங்குகின்ற பகுதிகள் சகாராப்பாலைநிலமும், கலகாரிப் பாலைநிலமுமாகும். இவை 10 அங்குலங்களுக்குக் குறைவாகவே மழையைப் பெறுகின்றன. இப்பகுதிகளை ''வெப்பப் பாலைநிலக் காலநிலை'' என்பர்.

## இயற்கைத் தாவரம்

ஆபிரிக்காவின் இயற்கைத் தாவரம் காலநிலைக்கு இணங்கக் காணப்படுகின்றது.


எல்லாப் பருவங்களிலும் மழையைப் பெறுகின்ற பகுதிகளில் மத்தியகோட்டுக் காடுகள் காணப்படுகின்றன. இக்காட்டு மரங்கள் செழித்து வளர்வன; சராசரி 180 அடி உயரம் வரை வளரக்கூடியன. இம்மரங்கள் மிக அடர்த்தியானவை; என்றும் பசுமையானவை; இக்காடுகளில் மரங்களில் வாழும் மிருகங்கள் அதிகளவிலுள; குரங்குகள், யானை எனும் விலங்குகளுள;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம். 29 ஆபிரிக்காவின் மழைவீழ்ச்சிப் பரம்பலும்

ஆபிரிக்காவின் கோடை மழை பெறும் பகுதிகளில் புல்வெளிகள் காணப்படுகின்றன. 12 அடி உயரம் வரை இப்புற்கள் வளர்ந்திருக்கும்; இடையிடையே மரங்கள் காணப்படும். இப்புல்வெளிகளைச் 'சவன்னு' என்று அழைப்பர். தென் ஆபிரிக்காவில் குறுகிய




படம் 29 ஆபிரிக்காவின் இயற்கைத் தாவரமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்களுள்ளன. அவற்றை 'வெல்ட் புல்நிலம்' என்பர். சிங்கம், புலி, வரிக்குதிரை முதலான மிருகங்கள் இப்புல்வெளிகளில் வசிக்கின்றன.

ஆபிரிக்காவின் மாரி மழை பெறும் பகுதிகளில் மத்திய தரைக் கடற்காடுகளுள்ளன. இக்காடுகள் அடர்த்தி குறைவானவை; இலைகளை உதிர்ப்பன.

வருடம் முழுவதும் வரட்சி நிலவும் ஆபிரிக்கப் பகுதிகளில் பாலைநிலத்தாவரங்களுள்ளன; வறள் நில வளரிகள் இவை. இப் பாலைநிலங்களில், பாலைநிலச் சோலைகள் சிறிதளவு. தாவரத்தைக் கொண்டுள்ளன. பொதுவில் இப்பாலை நிலங்கள் தாவரமற்ற மணல் வெளிகளாகவுள்ளன.

## பொருளாதாரம்

### உயர்மேட்டுநில நாடுகள்:

ஆபிரிக்காவின் உயர்மேட்டு நில நாட்டு மக்களின் முக்கிய தொழில் பயிர்ச்செய்கையாகும். சோளம், கோதுமை, தினைவகை எனும் தானியங்கள் செய்கை பண்ணப்படுகின்றன. பழவகைகள், நிலக்கடலை என்பனவும் பயிராகின்றன. கென்யா, உகண்டா எனும் நாடுகளில் கோப்பியும் தேயிலையும் இன்று செய்கைபண்ணப்பட்டு வருகின்றன. இங்குள்ள புல்நிலங்களில் மந்தை வளர்த்தல் (செம்மறி) நடைபெற்று வருகின்றது.

ஆபிரிக்காவின் உயர்மேட்டுநில நாடுகளில் சுரங்கத்தொழிலும் முக்கியம் பெற்றுள்ளது. றொடீசியாவிலும், யோகானஸ்பேர்க்கிலும் தங்கச் சுரங்கங்கள் உள்ளன. கிம்பாலி எனும் பகுதியில் உலகின் சிறந்த வைரச்சுரங்கங்களுள்ளன. நிலக்கரி நேட்டால், டிரான்ஸ்வால் எனும் பகுதிகளிலும் வெள்ளி, ஈயம், தகரம் என்பன சாம்பியாவிலும், றொடீசியாவிலும் காணப்படுகின்றன.


### கொங்கோ வடிநிலமும் கினியா விரிகுடாப்பகுதிகளும்.

கொங்கோவடிநிலமும் கினியா விரிகுடாப் பகுதிகளும் ஆபிரிக்காவின் மேற்குப் பகுதிகளையும் மத்திய பகுதிகளையும் கொண்டிருக்கின்றன. நைசீரியா, கானு, சியராலியோன், டகோமி, ரோகோ, லைபீரியா, ஐவரிக்கரை, செனிகல், கினியா, கமரூன், ஐக்கிய கொங்கோ நாடுகள் என்பன இப்பிரதேசத்தினுள் அடங்கும் நாடுகளாகும். ஐரோப்பியர்கள் இந்நாடுகளுக்கு தங்கம், யானைத்தந்தம், அடிமைகள், தானியங்கள் என்பன பெறுவதற்காகவே வந்தனர். இந்நாடுகளில் பிரான்சியரின் ஆதிக்கமும் பெல்சியத்தினரின் ஆதிக்கமும் அதிகளவில் பரவியுள.

இப்பிரதேச மக்களின் பிரதான தொழிலாக பயிர்ச்செய்கையே உள்ளது. சோளமும் தினைவகைகளும் இப்பகுதிகளில் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகின்றன. ஈரலிப்பான பகுதிகளில் தென்னையும், வரண்ட பகுதிகளில் நிலக்கடலை, பருத்தி என்பனவும் செய்கைபண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணப்படுகின்றன; புல் நிலங்களில் மந்தை வளர்த்தல் நடைபெறுகின்றது. நைஜீரியாவில் தகரமும், கட்டங்கா எனுமிடத்தில் பித்தளையும் அகழ்ந்தெடுக்கப்படுகின்றன.




படம்: 30 ஆபிரிக்காவின் பயிர்ச்செய்கை


## வட ஆபிரிக்கா

சகாராப் பாலைநிலத்தின் பெரும் பகுதியையும் மத்தியதரைக் கடலை அடுத்துள்ள தாழ்நிலத்தையும் வட ஆபிரிக்காப் பிரதேசம் கொண்டுள்ளது. லிபியா, ரியூனிசியா, அல்யீரியா, மொறோக்கோ, மவுரிரானியா, மாலி முதலான நாடுகளை இது உள்ளடக்கியுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடஆபிரிக்கா பொதுவாக தாழ்மேட்டு நிலத்தில் அமைந்துள்ளது. அற்லஸ் மலைகள் வடஆபிரிக்காவின் வடமேற்கு ஓரத்தில் அமைந்திருக்கின்றன. ரஸ்ஸிலி மேட்டுநிலம், ரிபஸ்ரி மலை என்பன வடஆபிரிக்காவின் மத்தியில் காணப்படுகின்றன:

உலகிலேயே மிகப்பெரிய பாலைநிலம் சகாராவாகும். இப்பாலை நிலம் 3000 மைல்கள் நீளத்தையும் 800 மைல்கள் அகலத்தையும் கொண்டுள்ளது. அத்திலாந்திக் சமுத்திரத்திலிருந்து செங்கடலுக்கு அப்பாலும் இது பரந்துள்ளது. இப்பாலை நிலத்தில் ரஸ்ஸிலி. அக்கார் போன்ற உயரம் குறைந்த மேட்டுநிலங்கள் காணப்படுகின்றன. மணற்குன்றுகள், கற்குவியல்கள் என்பனவும் இப்பாலை நிலத்தில் ஆங்காங்கு காணப்படுகின்றன.




படம்: 31 ஆபிரிக்காவின் கனிப்பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகாராப் பாலைநிலத்தில் 10 அங்குலங்களுக்குக் குறைவாகவே மழைபெய்கின்றது. இப்பாலை நிலத்தில் முகில் இல்லாமையினால் பகல் மிக வெப்பமானதாயும் இரவு கடுங்குளிரானதாயும் காணப் படுகின்றன. இங்கு காற்றுக்கள் மிக வேகமாக வீசுகின்றன. கள்ளி, நாகதாளி போன்ற வறள் நிலவளரித் தாவரங்களே இங்குள்ளன. இத்தாவரங்கள் குறுகிய கால மழையைப் பெற்று, நீண்ட வறட்சி யைத் தாங்கக்கூடியன.

சகாராப் பாலைநிலத்திற்கு வடக்கே மத்தியதரைக் காலநிலைப் பிரதேசம் காணப்படுகின்றது. இது மாரிமழையைப் பெறும் பகுதி யாகும். அற்லஸ் மலைப்பகுதியே இங்கு உயர்ந்த பகுதியாகும்.

வட ஆபிரிக்காவில் மத்தியதரைப் பிரதேசத்திலேயே மக்களது தொழில்கள் நன்குள்ளன. பழச்செய்கை, மந்தை வளர்த்தல், கோதுமைச் செய்கை என்பன இங்கு நடைபெற்று வருகின்றன.

சகாராப்பாலை நிலத்தில் பயிர்ச்செய்கை, பாலைநிலச்சோலைகளி லேயே நடைபெறுகின்றது. இப்பாலை நிலச்சோலைகளில் பேரீந்து, காய்கறி, கோதுமை, திராட்சை, பார்லி என்பன சிறிதளவு பயி ராகின்றன.

சகாராப் பாலைநிலத்தில் அராபியர்கள் வாழ்கின்றனர். இவர் கள் இடம்விட்டு இடம்பெயர்ந்து நாடோடிகளாக வாழ்கின்றனர். நிரந்தரமாக வாழ்பவர்கள் பாலைநிலச்சோலைகளில் வாழ்கின்றனர். மத்தியதரைப் பிரதேசத்தில் பொதுவாக மக்கள் செறிவாகவுளர்; சிறப்பாக மேற்குப்பகுதியில் மக்கள் அதிக கூடுதலாகவுள்ளனர். ஜிப்ரோல்ரர், அல்யியஸ், ரியுனிஸ், கசாபிளாங்கா என்பன பிரதான வட ஆபிரிக்க நகரங்களாகவுள்ளன.

## நைல்நதி வடிநிலம்

உலகிலேயே மிகநீளமான நதி நைலாகும்; இது 4037 மைல்கள் நீளமானது. நைல்நதி வடிநிலம் எகிப்து, சூடான், உகண்டா, எனும் நாடுகளின் முழுப்பகுதிகளையும், எதியோப்பியாவின் மேற்குப் பகுதி யையும் அடக்கியுள்ளது.

நைல் நதி அல்பேட் ஏரியிலும், விக்டோரியா ஏரியிலுமிருந்து உற்பத்தியாகின்றது. இவ்விரண்டு ஏரிகளும் நைலிற்கு 80 சதவீத நீரை அளிக்கின்றன. மத்திய கோட்டு மழையை நைலின் உற்பத் திப் பிரதேசம் பெறுவதால், நைலிற்கு அதிக நீர் கிடைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்: 32 நைல் வடிநிலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைல் நதி அதிக நீரைப் பெறுவதால் ஒருபோதும் வறட்சி அடைவதில்லை. ஆனால் காலத்திற்குக்காலம் வெள்ளப்பெருக்குக் குட்படுகின்றது. இதன் காரணமாக நைல்பள்ளத்தாக்கில் வண்டல்மண் படிகின்றது.

நைல் நதி நீரைப்பாய்ச்சுவதனாலேயே சகாராப் பாலைநிலத்தில் அமைந்த எகிப்தும் சூடானும் பாலைநிலமாக மாறவில்லை, அதனாலேயே நைல்நதியின் கொடை எகிப்து என்பர். நைல்நதியில் அணைகள் கட்டி நீரை விளைநிலங்களுக்குப் பாய்ச்சுகின்றார்கள். எகிப்தில் 'அஸ்வான் அணை' அண்மையில் அமைக்கப்பட்ட பெரிய அணையாகும். இங்கு அதிக நீர் தேக்கப்படுகின்றது.

நைல் வடிநிலத்தில் கோதுமை, சோளம், நெல் முதலிய தானியப் பயிர்களும், கரும்பும் பருத்தியும் முக்கியமானவை. உலகிலேயே தரம் கூடிய பருத்தியை அதிக அளவில் உற்பத்தி செய்யும் நாடுகள் எகிப்தும், சூடானுமாகும். சூடானில் தினை வகைகளும், எகிப்தில் கோதுமை, நெல், கரும்பு என்பனவும் பயிரிடப்படுகின்றன. அண்மைக் காலத்தில் எகிப்தில் கைத்தொழில்கள் விருத்தியடைந்து வருகின்றன.


சூடானின் தலைநகர் காற்றூம் ஆகும். எகிப்தின் தலைநகர் கெய்ரோ ஆகும். காற்றூமும் கெய்ரோவும் சிறந்த விமானத் தளங்களாகவுமுள்ளன. போர்ட்செயிட், அலக்சாந்திரியா என்பன எகிப்தின் முக்கிய துறைமுகங்களாக இருக்கின்றன. நைல் நதி வடிநிலத்தில் அராபியர்களே பெருந்தொகையாக வாழ்கின்றனர்.

# 5. ஐரோப்பிய நாடுகள்

ஐரோப்பாக் கண்டம் 39,00,000 சதுரமைல் பரப்பினையுடையது. அவுஸ்திரேலியாக் கண்டத்திலும் பார்க்க இது 6,00,000 சதுரமைல் பெரியது. ஐரோப்பா, ஆசியாக் கண்டத்தோடு இணைந்து இருக்கின்றது. எனினும், ஆசியாக் கண்டத்தினின்றும் ஐரோப்பாவை கருங்கடல், காக்கசஸ் மலைத்தொடர், கஸ்பியன் கடல், யூரல் மலைத்தொடர் என்பன பிரிக்கின்றன. மத்தியதரைக்கடல் ஐரோப்பாவை ஆபிரிக்காவினின்றும் பிரிக்கின்றது.

ஐரோப்பா முற்றாக கடகக் கோட்டிற்கு வடக்கே அமைந்துள்ளது. 10° மேற்கு — 60° கிழக்கு நெடுங்கோடுகளுக்கும், 36° வடக்கு — 58° வடக்கு அகலக்கோடுகளுக்கும் இடையில் இக்கண்டம் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம்: 33 ஐரோப்பாக் கண்டம் — நாடுகள்

## தரைத்தோற்றம்

ஐரோப்பாவின் தரைத்தோற்றத்தை மூன்று பிரிவுகளாக வகுக்கலாம். அவையாவன:

1. வடமேற்கு உயர்நிலங்கள்
2. ஐரோப்பிய பெரிய சமவெளி
3. அல்பைன் மலைத்தொகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமேற்கு உயர்நிலங்கள்

ஐரோப்பாவில் வடமேற்கே காணப்படும் உயர் நிலங்களை ஸ்கண்டிநேவிய உயர்நிலம் என்றும் கூறலாம். இந்த உயர்நிலங்கள் ஏறத்தாழ 4000 அடிவரை உயர்ந்துள்ளன. இவை அதிகம் பனிக் கட்டி ஆற்றினால் அரிப்புண்ட எஞ்சிய பாறைகளைக் கொண்டிருக் கின்றன. இந்த உயர்நிலங்கள் மூன்று பகுதிகளில் காணப்படுகின் றன.

(அ) பெனேஸ்கண்டிய உயர்நிலம்: இது நோர்வே, சுவீடன், பின்லாந்து எனும் நாடுகளில் பரந்துள்ளது. இது ஏரிகளையும், குடாக்களையும் நுழைகழிகளையும் கொண்டுள்ளது; அதிக ஏரிகள் காணப்படுவதனாலேயே பின்லாந்து 'ஏரிகளாலான நாடு' என வழங்கப்படுகிறது. நோர்வே கடற்கரை நுழைகழிக் கடற்கரை யாகும். நுழைகழி என்பது ஒடுங்கிய நீண்ட குடாவாகும்.

(ஆ) பிரித்தனிய தீவுகளிலுள்ள உயர்நிலங்கள்: பிரித்தானிய தீவுகளின் வடபாகத்தில் இவை உள்ளன.

(இ) ஐஸ்லாந்து உயர்நிலம்: இவ்வுயர் நிலமும் முற்கூறிய உயர் நிலங்களைப் போன்றதே.

## ஐரோப்பிய பெரிய சமவெளி

ஐரோப்பிய பெரிய சமவெளி, வடமேற்கேயுள்ள உயர் நிலங் களுக்கும், தெற்கேயுள்ள அல்பைன் மலைத்தொகுதிக்கும் மத்தியி லமைந்துள்ளது இச்சமவெளி சைபீரியச் சமவெளியின் தொடர்ச்சி யாகக் காணப்படுகின்றது: இப்பெரிய சமவெளியின், கிழக்குப் பக் கச் சமவெளி மிகப்பரந்தது; இதனை 'ருஷிய மேடை' என்றும் கூறுவர்; இது முக்கோண வடிவிலமைந்துள்ளது. மேற்குப் பக்கச் சமவெளி 500 அடிகளுக்குட்பட்டது. இது அயர்லாந்துவரை பரந் துள்ளது.


## அல்பைன் மலைத்தொகுதி

ஐரோப்பாவின் தெற்குப் பகுதியில் அல்பைன் மலைத்தொகுதி காணப்படுகின்றது. அல்பைன் என்ற காலத்தில் இங்குள்ள மலை கள் தோன்றின. அதனால் இவை அல்பைன் மலைத்தொகுதி என்று பெயர் பெற்றன.

அல்பைன் மலைத்தொகுதியில் கன்ரபிறியன், பிறனீஸ், அல்ப்ஸ், காப்பேதியன், டயனறிக் அல்ப்ஸ், பால்கன், காக்கஸஸ், அப் பினைன், சியாராநெவாடா என்பன குறிப்பிடத்தக்க மலைத் தொடர்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலைத்தொடர்களுக்கு இடையில் மேட்டுநிலங்களும் சம வெளிகளும் காணப்படுகின்றன. மெசெற்ரு மேட்டுநிலம், மத்திய மேட்டுநிலம், பொசீமியா மேட்டுநிலம் என்பன இங்குள்ள மேட்டு நிலங்களாகும்? கங்கேரிச் சமவெளி லொம்பாடிச் சமவெளி (போ சமவெளி) என்பன இங்குள்ள சமவெளிகளாகும்.




படம் 34 ஐரோப்பாவின் தரைத்தோற்றம்

## ஐரோப்பாவின் நதிகள்

ஐரோப்பிய நதிகள் ஏனைய கண்ட நதிகளிலும் நீளத்தில் சிறி யன. கரோன், லோயர், செயின் றைன், எல்ப், ஓடர், விஸ்ரியூலா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கு டுவைனு, வட டுவைனு, வொல்கா, டினீப்பர், டினீஸ்ரர் போ, ரேன் என்பன ஐரோப்பாவில் குறிப்பிடத்தக்க நதிகளாம். இவற்றில் செயின், றைன், எல்ப், ஓடர், விஸ்ரியூலா, டுவைனு ஆகிய நதிகள் வடதிசையாகப் பாய்ந்து செல்கின்றன. கரேன், லோயர் என்பன மேற்குத் திசையாகப் பாய்ந்து பிஸ்கே குடாவில் விழுகின்றன. ரேன், போ எனும் நதிகள் தெற்காகப் பாய்ந்து மத்தித்தரைக் கடலில் சலக்கின்றன. டினீஸ்ரர், டினீப்பர் எனும் நதிகள் கருங்கடலிலும், வொல்காநதி கஸ்பியன் கடலிலும் கலக்கின்றன. ஐரோப்பாவின் மிகநீண்டநதி வொல்காவாகும்; இது ஏறத்தாழ 2200 மைல்கள் நீளமானது.


## காலநிலை

ஐரோப்பா கடகக்கோட்டிற்கு வடக்கே அமைந்திருப்பதால், இடைவெப்பக் காலநிலையை (மிதமான காலநிலை) அனுபவிக்கின்றது. இக்கண்டம் முழுவதும் மேலைக் காற்றுக்களின் செல்வாக்கினுள் அடங்குகின்றது.

மாரிகாலத்தில் ஐரோப்பாக் கண்டத்தின் வெப்பநிலை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லச் செல்லப் படிப்படியாகக் குறைவடைகின்றது. அதாவது அத்திலாந்திக் கரையில் சராசரி மாரி வெப்பநிலை 45° ப ஆகக் காணப்பட, கிழக்குப்புறமாக உள்நாடு நோக்கி வெப்பநிலை குறைவடைந்து காணப்படுகின்றது. பிரான்சிலுள்ள பாரீசில் சராசரி வெப்பநிலை 50° ப ஆகக் காணப்பட, மொஸ்கோவில் சராசரி வெப்பநிலை 39° ப. ஆகக் காணப்படுகின்றது. கோடையில் ஐரோப்பாவின் வெப்பநிலை தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் படிப்படியாகக் குறைவடைகின்றது. மத்தியதரைக் கடலை அடுத்து சராசரி வெப்பநிலை 70° ப. ஆகவும், பின்லாந்தில் 33° ப. ஆகவும் காணப்படுகின்றது. பொதுவாக ஐரோப்பாவின் அத்திலாந்திக் கரையோரம் அதிக வெப்பமாக இருப்பதற்குக் காரணம், இப் பகுதியில் ஓடுகின்ற அத்திலாந்திக் வெப்ப நீரோட்டம் (குடா நீரோட்டம்) ஆகும்.

ஐரோப்பாவின் மழைவீழ்ச்சி பொதுவாக மேற்கிலிருந்து கிழக்காகக் குறைவடைகின்றது. மேலைக் காற்றினால் ஐரோப்பா அதிக மழையைப் பெறுகின்றது. பொதுவாக 20 அங்குலந்தொட்டு 40 அங்குலம் வரையிலான மழைவீழ்ச்சியை, அல்பைன் மலைத்தொகுதியும் மேற்கு ஐரோப்பியச் சமவெளியும் பெறுகின்றன. கிழக்கு ஐரோப்பிய சமவெளி 10 அங்குலந்தொட்டு 20 அங்குலம் வரையிலான மழைவீழ்ச்சியைப் பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலநிலைப் பிரிவுகள்

ஐரோப்பாவை ஐந்து காலநிலைப் பிரிவுகளாக வகுக்கலாம். அவை:

(அ) மத்தியதரைக்கடற் காலநிலை: மத்தியதரைக்கடலை அடுத்து இக்காலநிலைப் பிரதேசம் அமைந்துள்ளது. இங்கு மாரியில் அதிக மழையும் கோடையில் வறட்சியும் நிலவுகின்றது. மேலைக் காற்றுக்களே இங்கு அதிக மழையைத் தருகின்றன. மாரிகாலச் சராசரி வெப்பநிலை 45° ப. ஆகவும், கோடை வெப்பநிலை 70° ப ஆகவும் இருக்கின்றது: வருடச் சராசரி மழைவீச்சி 40 அங்குலங்களாகும்.

கோடை வறட்சியைத் தாங்கக்கூடிய தாவரங்கள் இங்கு வளர்கின்றன. இவை நீண்ட வேர்களையும், மெழுகுத் தன்மைவாய்ந்த இலைகளையும், தடித்த பட்டைகளையும் கொண்டுள்ளன. இம்மரங்கள் என்றும் பசுமையானவை. ஒலிவ், ஒக், சாரக், பீச் என்பன இங்குள்ள மரங்களாம்.

(ஆ) குளிரான இடைவெப்பக் காலநிலை: வடமேற்கு ஐரோப்பாவை இக்காலநிலைப் பிரதேசம் அடக்கியுள்ளது. இக் காலநிலை சமுத்திரச் செல்வாக்கைப் பெறுவதால் குளிர்ச்சியானதாகவுள்ளது. கடற்கரைப் பகுதிகள் ஆண்டு முழுவதும் மழையைப் பெறுகின்றன. இப்பகுதிகளில் சூடான கோடை நிலவும். இக் காலநிலைப் பிரதேசத்தின் உட்பகுதிகளில் மழைவீழ்ச்சி படிப்படியாகக் குறைகிறது. கோடை மழையும் குளிர்மாரியும் உட்பகுதிகளில் காணப்படுகின்றன.

இலையுதிர் காடுகளே இக்காலநிலைப் பிரதேசத்தின் இயற்கைத் தாவரமாகும்; இங்குள்ள மரங்கள் குளிர் காலத்தில், இலைகளை உதிர்த்து விடுகின்றன இவை அகன்ற இலைகளையுடையவை; ஓரளவு வைரமானவை. ஒக், எலும், மாபிள், பீச், பேர்ச் என்பன இங்குள்ள மரங்களாகும்.

(இ) இடைவெப்பப் புல்வெளிக் காலநிலை: இக்காலநிலைப் பிரதேசம் ஐரோப்பிய கிழக்குச் சமவெளியின் பெரும்பகுதியை உள்ளடக்கியுள்ளது. இது வரண்ட கோடையையும் குளிர்ச்சியான மாரியையுமுடையது. கோடைகாலத் தொடக்கத்தில் மழை பொழியும். 10" முதல் 30" வரை இங்கு மழை கிடைக்கிறது. சமுத்திரத்திலிருந்து விலகி அமைந்திருப்பதால் இங்கு கண்டக்காலநிலை நிலவுகிறது.

இங்குள்ள தாவரம் புற்களாகும். அதனாலேயே இது புல்வெளிக் காலநிலை எனப் பெயர்பெற்றது. இப்புல்வெளிகள் தெப்புவெளிகள் (ஸ்ரெப்ஸ் வெளிகள்) என வழங்கப்படுகின்றன.


7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) குளிர்க் காலநிலை: ஐரோப்பாவின் வடபகுதியில் இக்கால நிலை நிலவுகின்றது. இங்கு குறுகிய கோடையும் நீண்ட மாரியும் நிலவுகிறது. குளிர் அதிகம்; அதனால் இங்கு மழைப்பனியும் விழும். நிலத்தில் பனி படர்ந்திருக்கும்.

இக்காலநிலையின் இயற்கைத் தாவரம் ஊசியிலைக் காடுகளாகும்: மழைப் பனியிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள இம்மரங்கள் கூம்பு வடிவினவாயும் இலைகள் ஊசி வடிவினவாயும் உள்ளன. தேவதாரு, பைன், ஸ்புறூச், லார்ச், பேர்ச் என்பன இங்குள்ள மரங்களாம்.

(உ) தண்டருக் காலநிலை: நிலம் முழுவதும் பனியினால் மூடப்பட்டிருக்கும் அதிவட ஐரோப்பா இதனுள் அடங்கும். மிகநீண்ட குளிர்மாரி இங்கு நிலவும். காளான், பாசியினங்கள், 'லைக்கன்' எனும் தாவரம் என்பன இங்கு வளர்கின்றன.



படம் 35 ஐரோப்பாவின் கோடை, மாரி வெப்பநிலை; ஆண்டு மழைவீழ்ச்சிப் பரப்பல்; காலநிலைப் பிரிவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானிய தீவுகள்

## நிலையம்

ஐரோப்பாக் கண்டத்தின் வடமேற்கு ஓரத்தில், அத்திலாந்திக் சமுத்திரத்தில் பிரித்தானிய தீவுகள் அமைந்துள்ளன. இத்தீவுகள் இலங்கையைப்போல ஐந்து மடங்கு பரப்பில் பெரியன. பிரித்தானிய தீவுகளின் பரப்பு ஏறத்தாழ 1,21,000 சதுர மைல்களாகும்.

SPECIMEN COPY




படம்: 36 பிரித்தானிய தீவுகளின் நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய தீவுகள், ஆங்கிலக் கால்வாய், டோவர் தொடுகடல், வடகடல் என்பனவற்றினால் ஐரோப்பிய நாடுகளிலிருந்து பிரிக்கப்படுகின்றன.

பிரித்தானிய தீவுகளில் பெரிய பிரித்தானியா, அயர்லாந்து எனும் இரு பெரிய தீவுகளுள்ளன. இவற்றைவிட சட்லண்ட், ஓர்கனி, கேப்ரடிஸ் முதலிய அநேக சிறுதீவுகளுமுள்ளன.

ஸ்கொட்லாந்து, இங்கிலாந்து, வேல்ஸ், ஐரிஸ் குடியரசு, வட அயர்லாந்து எனப் பிரித்தானிய தீவுகளின் நிர்வாகப் பிரிவுகளுள்ளன. இவற்றுள் அயர்லாந்தின பெரும்பகுதியை அடக்கியுள்ள ஐரிஸ் குடியரசு தனி அரசாகவுள்ளது. ஏனைய பகுதிகள் பெரிய பிரித்தானியா எனவும், ஐக்கிய இராச்சியம் எனவும் வழங்கப்படுகின்றன.

## தரைத்தோற்றம்

பிரித்தானிய தீவுகள் பொதுவாக 2000 அடிகள் வரை உயரமான மலைப் பகுதிகளையும் கடல் மட்டச் சமவெளிகளையும் கொண்டிருக்கின்றன. பெரிய பிரித்தானியாவின் தென்கிழக்குப் பாகம் சமவெளியாகும். இப்பாகத்தை இங்கிலாந்தின் பெரும் சமவெளி என்பர். பெரிய பிரித்தானியாவின் ஏனைய பகுதிகள் மலைகளையும் மேட்டு நிலங்களையும் கொண்ட உயர்நிலமாகவுள்ளன. இங்கிலாந்தின் முதுகெலும்பு எனப்படும். பெனின் மலைத்தொடர், ஸ்கொட்லாந்திலுள்ள கிராம்பியன் மலைதொடர், வேல்சிலுள்ள கேம்பிரியன் மலைத்தொடர் என்பன குறிப்பிடத்தக்கன.

அயர்லாந்தின் மத்திய பகுதி சமவெளியாகவும், கரையோரங்கள் உயர் நிலமாகவுமுள்ளன. அதனாலேயே அயர்லாந்து ஒரு கோப்பை வடிவிலுளது என்பர்.

பிரித்தானியா தீவுகளின் கரையோரங்கள் அதிகம் முறிவுபட்டிருப்பதால், பிரித்தானியா தீவுகள் நீண்ட கடற்கரையோரத்தினைக் கொண்டுள்ளன. குடாக்கள், விரிகுடாக்கள், தொடுகடல்கள் என்பன அதிகம் அதனாலேயே காணப்படுகின்றன.

தேம்ஸ், செவன், எவன், டஸ்க்லேட், ரீபல், மன்சி, செனன், மேர்சி, கிளேட் என்பன பிரித்தானிய தீவுகளிலுள்ள பிரதான நதிகளாகும். இவை கடலோடு கலக்கும்போது, பொங்கு முகங்களை ஏற்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





படம்: 37 பிரித்தானியதீவுகளின் தரைத்தோற்றம்

## காலநிலை

பிரித்தானிய தீவுகள், சைபீரியச் சமவெளி அமைந்துள்ள அதே அகலக் கோடுகளில் இருந்தும், சைபீரியா போன்று பனிப் பாலைநிலமாக இருக்காது, இடைவெப்பக் காலநிலையைக் கொண்டிருப்பதற்கு வட அத்திலாந்திக் நகர்வு எனும் வெப்ப நீரோட்டமே காரணமாகும். இந்த வெப்பநீரோட்டத்தின் மீதாக வீசும் தென் மேலைக் காற்றுக்கள் பிரித்தானிய தீவுகளின் காலநிலையை மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ உவப்பானதாக்கியுள்ளன. பிரித்தானிய தீவுகளில் கடற்செல் வாக்கு எக்காலத்துமுளது.




படம்: 38 பிரித்தானிய தீவுகளின் வெப்பநிலை
மாரி; (யனவரி) கோடை (ஜூலை)

கோடைகாலத்தில் (ஜூலை) பிரித்தானிய தீவுகளின் வெப்பநிலை தெற்கேயிருந்து வடக்கே போகப்போகப் படிப்படியாகக் குறைவடை கிறது. பொதுவாகச் சராசரி வெப்பநிலை 65° ப ஆகவுளளது. மாரி காலத்தில் (ஜனவரி) இத்தீவுகளின் வெப்பநிலை மேற்கிலிருந்து கிழக்கே போகப்போகப் படிப்படியாகக் குறைவடைகிறது. இக் குளிர்காலச் சராசரி வெப்பநிலை 45°ப. ஆகும்.


பிரித்தானிய தீவுகள் வருடம் முழுவதும் மழையைப் பெறு கின்றன. பிரித்தானிய தீவுகளின் மழைவீழ்ச்சிக்கு தென்மேலைக் காற்றுக்களே காரணியாகும். நீராவி குறைந்த இக்காற்றுக்களை பிரித்தானியாவின் முதுகெலும்பான பெனைன் மலைத்தொடர் தடுப் பதால், மேற்குப் பாகங்கள் 30 அங்குலங்களுக்கு மேல் மழையைப் பெறுகின்றன. 60 அங்குலங்களுக்கு மேல் மழையைப் பெறுகின்ற பகுதிகளும் பிரித்தானிய தீவுகளின் மேற்குப் பாகங்களிலுள்ளன. இத்தீவுகளின் கிழக்குப்பாகம் குறைவாக மழையைப்பெற, தென் மேலைக் காற்றுக்களைப் பெனைன் மலைத்தொடர் தடுத்துவிடுவதே காரணமாகும்.

## பயிர்ச்செய்கை

பிரித்தானிய தீவுகளில் மந்தை வளர்த்தல், தானியச் செய்கை, காய்கறிச் செய்கை என்பன முக்கிய பயிர்ச்செய்கை நடவடிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகவுள்ளன. பிரித்தானிய தீவுகளில் 50 சதவீதமான நிலம் புற்றரையாகக் காணப்படுவதால் ஆடு, மாடு, செம்மறி என்பன அதிகளவில் வளர்க்கப்படுகின்றன. செஸ்சயர், லங்காசயர், டேபி சயர், எஸ்செக் என்பனவும், மத்திய அயர்லாந்தும் பிரதான மாட்டுப்பண்ணைப் பகுதிகளாகும். பிரித்தானிய உயர்நிலங்களில் கம்பளிக்காக ஏராளமாகச் செம்மறி ஆடுகள் வளர்க்கப்படுகின்றன.




படம்: 39 பிரித்தானியா தீவுகளின்
மழைவீழ்ச்சிப் பரம்பல்

கோதுமை, பார்லி, ஓட்ஸ், உருளைக்கிழங்கு, பீற்கிழங்கு, பழவகை, காய்கறி என்பன பிரதான பயிர்களாகும்; கோதுமை பிரதான தானியப் பயிராகும். இது பிரித்தானியாவின் தென்கீழ் பகுதியில் அதிகளவில் செய்கைபண்ணப்படுகின்றது. பார்லி கிழக்கு இங்கிலாந்திலும், ஓட்ஸ், உருளைக்கிழங்கு என்பன பரவலாக எங்ஙனும் பயிரிடப்பட்டு வருகின்றன. நோபொக், சபோக், லிங்கன் சயர் எனும் நாடுகளில் பீற்கிழங்கு அதிகம் பயிரிடப்படுகின்றது. பழவகைகள், கென்ற், எஸ்செக், செஷ்சயர், யோக்சயர் எனும் பகுதிகளிலும் காய்கறி பிரதான நகர்ப்புறங்களிலும் செய்கைபண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணப்படுகின்றன. கோன்வோல், டேவன் என்பன பூக்களுக்குப் புகழ்பெற்றன. அயர்லர்ந்தின் மத்திய பகுதியில் சணல் பயிரா கின்றது.

பிரித்தானிய தீவுகளில், மாற்றுப் பயிர்ச் செய்கை, பயிர்ச் செய்கையிலுள்ள முக்கிய பண்பாகும். யந்திர உபயோகமும் இத் தீவுகளின் பயிர்ச்செய்கையிலதிகமாகும்.

## கைத்தொழில்கள்

பிரித்தானிய தீவுகளின் பிரதான கைத்தொழில் பகுதிகள் நிலக்கரி, இரும்புத்தாது வயல்களைச் சூழ்ந்தே காணப்படுகின்றன. அதனுலேயே இரும்புருக்குத் தொழில் நன்கு நடைபெற முடிகின்றது. லாஞர்க், அயசயர், கம்பர்லாண்ட், நொதாம்பர்லாண்ட், டேகாம், செபீல்ட, லங்காசயர், வடவேல்ஸ், தென்வேல்ஸ்,




படம்; 40 பிரித்தானிய தீவுகளின் கைத்தொழில்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐரோப்பாவின் தரைத்தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு வென்றி எனும் பகுதிகளில் நிலக்கரி காணப்படுகின்றது. கிளீவ்லாண்ட், லங்காசயர், லிங்கன்சயர், ஒக்ஸ்போட்சயர், நொதம்ரன்சயர், எனும் பகுதிகளில் இரும்புத்தாதுளது. கோன்வால் பகுதியில் செம்பு, தகரம், வெள்ளி என்பன காணப்படுகின்றன.

இரும்புருக்குக் கைத்தொழில் பிரித்தானிய தீவுகளின் பிரதான தொழிலாகும். யோக்சயர், நோதம்பர்லாண்ட், டேகாம், லண்டன், கிளாஸ்கோ, எடின்பரோ, பேமிங்காம், கட்புவான்சி ஆகிய பகுதிகளில் இரும்புருக்குத்தொழில் நடைபெறுகின்றது.

நெசவுக் கைத்தொழிலில் லங்காசயர், யோக்சயர், பெல்பாஸ்ற் எனும் பகுதிகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. யோக்சயர் கம்பளி நெசவிற்கும், ஏனையன பருத்தி நெசவிற்கும் பெயர்பெற்றவை.

கப்பல்கட்டுந் தொழில், லங்காசயர், யோக்சயர், நோதம்பலாண்ட்-டேகாம், கிளாஸ்கோ-எடின்பரோ, பெல்பாஸ்ற்-டப்ளின் ஆகிய பகுதிகளில் முக்கியத்துவம் வகிக்கின்றது.

லங்காசயர், செபீல்ட், எனும் பகுதிகளில் யந்திரங்களும், செஷயர், லண்டன் ஆகிய பகுதிகளில் இரசாயனப் பொருட்களும், லண்டனில், கடிகாரம், சப்பாத்து போன்ற பல்வகைத் தொழில்களும், பெல்பாஸ்ற்றில் குடிவகைகளும் உற்பத்தியாகின்றன. வடகடலில் மீன்பிடித்தல் நடைபெறுகிறது.; டொகர்பாங் பிரதான மீன்பிடித் தளமாகும்.

## மக்கள் தொகை

பெரிய பிரித்தானிய குடிநெருக்கமுள்ள நாடாகும். இங்கு 5 கோடி மக்களுக்குமேல் வாழ்கின்றனர். ஐரிஸ் குடியரசில் 30 இலட்சம் மக்களுள்ளனர். கைத்தொழிற் பிரதேசங்களிலேயே மக்கள் செறிவாக வாழ்கின்றனர். ஸ்கொட்லாந்திலுள்ள மலைப்பகுதிகளில் மக்கள் குறைவு.

பெரியபிரித்தானியாவின் தலைநகரம் லண்டனாகும். இது உலகின் சிறந்த துறைமுகமாகவும், விமானத் தளமாகவும், வர்த்தக மையமாகவும் உள்ளது: மஞ்செஸ்ரர், லிவப்பூல், பிறிஸ்ரல், கிளாஸ்கோ, பெல்பாஸ்ற், டப்ளின், நியூகாசில், ஹல், சவுதாம்ரன், என்பன பிரதான துறைமுகங்களும் நகரங்களுமாகும்.

8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியதரைக்கடல் நாடுகள்

ஐபீரியக் குடாநாடு, இத்தாலியக் குடாநாடு, பால்கன் குடாநாடு என்பனவற்றை மத்திய தரைக்கடல் நாடுகள் கொண்டுள்ளன. ஸ்பெயின் (இசுப்பானியா) போத்துக்கல், தென்பிரான்ஸ். இத்தாலி யூகோசிலாவியா, அல்பேர்னி, கிறீஸ், (கிரேக்கநாடு) ஆகிய நாடுகள் மத்திய தரைக்கடல் நாடுகளாகும். கோசிக்கா, சாடினியா, சிசிலி, மால்ரா, சைபிரஸ் எனும் தீவுகளும் மத்திய தரைக்கடலிலுள்ள தீவுகளாகும். ஆசியா. ஐரோப்பா, ஆபிரிக்கா எனும் கண்டங்களின் மத்திய பகுதியில் அமைந்திருப்பதாலேயே இவை 'மத்தியதரை' என வழங்கப்படுகின்றன. மத்திய தரைக்கடலின் நுழைவாயில்களாக மேற்குப் புறத்தே ஜிப்ரோல்ரர் தொடுகடலும் கிழக்குப் புறத்தே சுயெஸ்கால்வாயும் அமைந்துள்ளன. இந் நாடுகளில் அமைந்திருக்கும் மலைத்தொடர்கள், இம் மத்திய தரைக்கடல் நாடுகளை ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் பிரிக்கின்றன.

மத்தியதரைக்கடல் காலநிலையே இந்நாடுகளை ஒரு பிரதேசமாகக் கருதவைக்கின்றது. இந்நாடுகளில் சூடான வரண்ட கோடை காலமும், உவப்பான மாரிமழைக் காலமும் நிலவுகின்றன. இக்கால நிலை மிகச் சிறந்த காலநிலையாக இருக்கின்றது.

இந்நாடுகளில் பயிர்ச்செய்கை சிறப்பாக நடைபெறுகின்றது. கோதுமை, பார்லி முதலிய தானியச் செய்கையும், முந்திரி, ஒலிவ், அத்தி, தோடை முதலிய பழச்செய்கையும் இந்நாடுகளில் நடைபெறுகின்றன. மத்திய தரைக்கடல் நாடுகள் பழச் செய்கைக்கு உலகிலேயே புகழ்பெற்றவையாகும். வைன் எனும் குடிவகை திராட்சையிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

## ஐபீரியக்குடாநாடு

ஐபீரியக்குடா நாட்டைப் பீறனீஸ் மலைத்தொடர், ஐரோப்பாவின் ஏனைய நாடுகளில் இருந்து பிரிகின்றது. ஸ்பெயின், போத்துக்கல் எனும் நாடுகள் இக்குடாநாட்டில் உள்ளன. 15-ம், 16-ம் நூற்றாண்டுகளில் இந்நாடுகள் ஐரோப்பாவில் பலம்மிக்க வல்லரசுகளாக இருந்துள்ளன.

1,94,000 சதுரமைல் பரப்பினையுடைய ஸ்பெயின் 3 கோடி மக்களையும், 34,000 சதுரமைல் பரப்பினையுடைய போத்துக்கல் 1 கோடி மக்களையும் கொண்டுள்ளன. பொதுவாக ஐபீரியன் குடாநாடு ஒரு மேட்டு நிலமாகும். இதன் மத்தியபகுதி மெசற்றா மேட்டு நிலம் என்றும், தென்பகுதி அண்டலூசியா மேட்டுநிலம் என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுகின்றன. கரையோரங்களில் ஒடுங்கிய சமவெளிகளுள்ளன.

ஐபீரியக் குடாநாட்டில் பயிர்ச்செய்கை, பொருளாதார நடவடிக்கைகளில் முக்கியமானது. இங்கு நவீன பயிர்ச்செய்கை முறைகளும், அதேவேளை புராதன முறைகளும், கைக்கொள்ளப்படுகின்றன. கடற்கரைச் சமவெளிகள், அண்டலூசியா மேட்டுநிலம் என்பன பயிர்ச் செய்கைக்குப் பெயர்பெற்றவை. முந்திரிகை, தோடை போன்ற பழவகைகளும், காய்கறிகளும், எஸ்பராடோ எனும் பேப்பர் செய்ய உதவும் புல்லும் செய்கைபண்ணப்படுகின்றன. மெரினு எனும் கம்பளி ஆடுகளின் பிறப்பிடம் ஐபீரியக் குடாநாடு ஆகும். இங்கு நவீன கைத்தொழில்கள் விருத்தியடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஷ்பெயினின் தலைநகரம் மாட்ரிட் ஆகும். போத்துக்கல்லின் தலைநகரம் லிஸ்பன் ஆகும். லிஸ்பன், ஒபோடா என்பன போத்துக்கல்லின் துறைமுகங்களாகும்.




படம்: 41 மத்தியதரைக்கடல் நாடுகள்

## இத்தாலியக் குடாநாடு

இத்தாலியக் குடாநாட்டில் இத்தாலி எனும் ஒரு நாடேயுளது. இக்குடாநாடு 1,31,000 சதுர மைல்கள் பரப்பினையுடையது. ஏறத்தாழ 5 கோடி மக்கள் இங்கு வாழ்கின்றனர். இக்குடாநாட்டின் வடக்கே அல்ப்ஸ் மலைத்தொடருளது; இக்குடாநாட்டின் மத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியில் 810 மைல்கள் நீளத்திற்கு அப்பினைன் மலைத்தொடர் அமைந்திருக்கின்றது. இத்தாலியின் வடபகுதியில் லொம்பாடிச் சமவெளி அமைந்துள்ளது. இச்சமவெளியில் போநதி பாய்கின்றது.

இத்தாலியக் குடாநாட்டில் 55 சதவீதமான நிலம் பயிர்ச்செய்கைக்கு ஏற்றதாகவுளது. நெல், கோதுமை, சோளம், மாடுகளுக்குத் தேவையான உணவுவகை, பழங்கள், முசுக்கொட்டைச்செடி என்பன இங்குள்ள பயிர்ச்செய்கைக்குரிய பயிர்களாகும். இக் குடாநாட்டில் கைத்தொழில்களும் விருத்தியுற்றுள்ளது. இரசாயனத் தொழில், உலோகவேலை, நெசவு, இரும்புருக்கு என்பன இங்கு நடைபெறுகின்றன. போநதியிலிருந்து கைத்தொழில்களுக்குத் தேவையான நீர்மின்வலு பெறப்படுகின்றது.

ரோம் இத்தாலியின் தலைநகரமாகும்; இது சர்வதேச விமானத்தளமுமாகும். நேப்பிள்ஸ், ஜெனோவா என்பன சிறந்த துறைமுகங்கள். மிலான் எனும் நகரம் நெசவுத்தொழிலுக்கும், வெனிஸ் எனும் நகரம் சிறந்த வர்த்தக மையத்திற்கும் புகழ் பெற்றவை.

## பால்கன் குடாநாடு

பால்கன் குடாநாட்டில் யூகோசிலாவியா, அல்பேனியா, கிறீஸ், பல்கேரியா எனும் நாடுகள் அடங்குகின்றன. இக்குடாநாடு பெரிதும் மலைப்பாங்கானது. கிரீசின் பெரும்பகுதி மலைகளையுடையது. பிண்டஸ் மலைத்தொடர் இங்குளது.

பால்கன் குடாநாட்டின் ஒடுங்கிய கடற்கரைச் சமவெளிகளில் ஒலீவ், முந்திரிகை, அத்தி முதலிய பழங்கள் செய்கைபண்ணப்படுகின்றன. கோதுமை, சோளம், புகையிலை என்பன டான்யூப் நதியின் தென்பாகத்தில் பயிராகின்றன. கிரீஸ், முந்திரிகை வற்றலை ஏற்றுமதி செய்கின்றது.

அதென்ஸ், கிரீசின் தலைநகர் ஆகும்; பெல்கிரேட் யூகோசிலாவியாவினதும், டிரினு அல்பேனியாவினதும், சோபியா, பல்கேரியாவினதும் தலைநகர்களாக விளங்குகின்றன.

## பிரான்ஸ்

பிரான்ஸ் 2, 13, 000 சதுரமைல்கள் பரப்பினையுடையது; ஐரோப்பிய நாடுகளில் இரண்டாவது பெரிய நாடு பிரான்ஸ்சாகும். (முதலாவது பெரிய நாடு சோவியத்ருஷியாவாகும்) இந் நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமேற்சே ஆங்கிலக் கால்வாயையும், மேற்கே அத்திலாந்திக் சமுத்திரத்தையும், தெற்கே மத்திய தரைக்கடலையும் கொண்டிருக்கின்றது.




படம் 42 பிரான்சு.

பிரான்சின் பெரும்பகுதி ஐரோப்பிய பெரும் சமவெளியைச் சேர்ந்ததாகும். பாரீஸ், அக்வீட், சிரோம், பிரித்தனி, மத்திய தரைப் பகுதி என்பன குறிப்பிடத்தக்க சமவெளிகளாகவுள்ளன. பிரான்சின் மத்தியபகுதி மேட்டு நிலமாகும்; கிழக்குப் பகுதி உயர் நிலப் பகுதியாகும். அல்ப்ஸ் யூராமலைத் தொடர்கள் இப்பகுதியிலேயே அமைந்திருக்கின்றன. தெற்கே, பிரான்சிலிருந்து ஐபீரியக் குடாநாட்டைப் பிரித்து பிரனீஸ் மலைத்தொடர் அமைந்துள்ளது. சீன், லோயர், கரோன், ரோன் என்பன பிரான்சின் பிரதான நதிகளாம்.

பிரான்சில் அரைப்பங்கு நிலம் வளமானது; அதனால் பயிர்ச் செய்கை இங்கு முக்கியமான மக்கள் தொழிலாகவுளது. கோதுமை பிரான்ஸ் எங்ஙனும் பரவலாகவும் சிறப்பாகப் பாரீஸ் வடிநிலத்திலும் பயிரிடப்படுகின்றது. மத்திய மேட்டுநிலத்தில் றைதானியமும், தென்கிழக்குப் பகுதியில் சோளமும் பயிரிடப்படுகின்றன. பாரிஸ் வடிநிலப்பகுதியில் உருளைக்கிழங்கு, பீற்கிழங்கு, என்பனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக அளவில் செய்கைபண்ணப்படுகின்றன. மத்தியதரைக்கடலைச் சேர்ந்த பகுதிகளில் பழச்செய்கை முக்கியம் பெறுகின்றது. நோமண்டி, பிரித்தனிப் பகுதிகள், அப்பிள், பியர்ஸ், பாற்பண்ணை என்பவற்றிற்குப் புகழ்பெற்றன. வடபகுதியில் மீன்பிடித்தல் நடைபெறுகின்றது.

பிரான்சில் பெல்சிய நிலக்கரி வயலின் ஒரு பகுதி அமைந்துள்ளது. அதனால் நிலக்கரி கிடைக்கின்றது. பிரான்சில் லோறேன் எனும் பகுதி இரும்புத்தாது வயல்களை அதிக அளவிற் கொண்டிருக்கின்றது. நீர்மின் வலுவும் பிரான்சில் அதிகளவிலுளது. ஆதலால், கைத்தொழில்கள் இங்கு விருத்தியுற்றுள்ளன. இரும்புருக்கு, யந்திரங்கள், நெசவுப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், வாசனைத் தைலங்கள், கண்ணுடிப் பொருட்கள் என்பன பிரான்சில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

பிரான்சில் ஏறக்குறைய 4 கோடி மக்கள் வாழ்கின்றனர். பிரான்சின் தலைநகரம் பாரிஸ் ஆகும். இது போக்குவரத்துப் பாதைகளின் பிரதான சந்தியாகவுளது. நவீன உடையலங்காரம், கலை, கல்வி என்பனவற்றிற்குப் பாரிஸ் புகழ்பெற்றது. மார்சேல்ஸ் பிரான்சின் சிறந்ததோர் துறைமுகமாகும். பிறெஸ்ற், லையோன், ஓலியன்ஸ் என்பன பிரதான பிரான்சிய நகர்களாகும்.


## பெநெலக்ஸ் நாடுகள்

ஐரோப்பாவிலுள்ள பெல்ஜியம், நெதர்லாந்து லக்சம்பேக் எனும் நாடுகளையே பெநெலக்ஸ் நாடுகள் என்பர் (பெ+நெ+லக்ஸ்) நெதர்லாந்தை ஒல்லாந்து எனவும் கூறுவர். இந்நாட்டு மக்கள் இலங்கையையும் ஒரு காலத்தில் ஆண்டுள்ளனர்.

பெநெலக்ஸ் நாடுகள் ஏறக்குறைய 25,000 சதுரமைல்கள் பரப்பினையுடையன. இதில் நெதர்லாந்து 12600 சதுரமைல்களையும், பெல்ஜியம் 11700 சதுரமைல்களையும் அடக்கியுள்ளது. நெதர்லாந்தில் ஏறத்தாழ 1 கோடி மக்களும், பெல்ஜியத்தில் 1 கோடி மக்களும் வாழ்கின்றனர்.

நெதர்லாந்து, ரைன், மியுஸ் எனும் நதிகளின் கழிமுகப் பகுதிகளையும் வடக்கிலுள்ள தாழ்வான கடற்கரையையும் கொண்டுள்ளது. நெதர்லாந்தின் வடபகுதி கடல் மட்டத்திலும் தாழ்வான சமவெளியாகும். நெதர்லாந்து என்பதன் கருத்தே 'தாழ்பூமி' என்பதே, 'டைக்' எனும் அணைகள் மூலமும், நீரை வெளியேற்ற உதவும் யந்திரங்கள் மூலமும் இந்நாடு பாதுகாக்கப்படுகின்றது. நெதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வட்டம்: 43 பெநெலக்ஸ் நாடுகள்

லாந்தின் வடபகுதி கடலிலிருந்து மீட்கப்பட்ட பகுதியாகும்: இதனை 'போல்டர் நிலம்' என்பர். பெல்ஜியத்தின் தென்பகுதி மேட்டுநிலத்தையும், வடபகுதி தாழ்குன்றுகளையும் கொண்டுள்ளது. சுருங்கக் கூறில் பெநெலக்ஸ் நாடுகள், ஐரோப்பிய பெரிய சமவெளியின் பகுதிகளாகவுள்ளன.

இந்நாடுகளிலுள்ள மக்களின் பிரதான தொழில் பயிர்ச்செய்கையாகும். சோளம், பார்லி, பீற்கிழங்கு, சணல், காய்கறி, பழவகை என்பன பயிர்செய்யப்படுகின்றன. பாற்பண்ணைத் தொழிலும் குறிப்பிடத்தக்கது. நெதர்லாந்தின் ஹலம் எனும் நகர் பூக்களுக்குப் புகழ் பெற்றது.

நெதர்லாந்தில் புற்கள் செழித்து வளர்கின்றன. அதனல், நெதர்லாந்தில் பாற்பண்ணைப் பொருட்கள் (வெண்ணெய், பால்கட்டி) உற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியாகின்றன. பெல்ஜியத்தில் நிலக்கரி அதிகளவிலுளது. இரும்புருக்கு, கப்பல் கட்டுதல், நெசவு என்பன பெல்ஜியத்தில் நடைபெறும் கைத்தொழில்களாகும்: நெதர்லாந்து மக்கள் வடகடலில் மீன் பிடித்தலிலும் ஈடுபட்டுள்ளனர்.

நெதர்லாந்தின் தலைநகரமாக அம்ஸ்ரடாமும், பெல்ஜியத்தின் தலைநகரமாக பிரெசல்சும், லக்சம்பேக்கின் தலைநகரமாக லக்சம்பேக்கும் விளங்கிவருகின்றன.

## ஜேர்மனி

ஜேர்மனி 1,36.000 சதுரமைல்கள் பரப்பினையுடையது. ஏறக்குறைய 7 கோடி மக்களையுடைய நாடாக விளங்குகின்றது. ஜேர்மனி பலம் வாய்ந்த ஐரோப்பிய நாடாக முன்பு விளங்கியது. 2-ம் உலக மகா யுத்தத்தின்பின் இந்நாடு வீழ்ச்சியுற்றது.




படம்: 44 ஜேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனியில் இரு பெரும் பகுதிகளுள்ளன. அவை: (அ) கிழக்கு ஜேர்மனி,' (ஆ) மேற்கு ஜேர்மனி என்பனவாம். கிழக்கு ஜேர்மனி, ஜேர்மனியக் குடியரசு எனப்படும். மேற்கு ஜேர்மனி, ஜேர்மனியச் சனநாயகக் குடியரசு எனப்படும்.

ஜேர்மனியின் வடபகுதி ஐரோப்பிய பெரும் சமவெளியைச் சேர்ந்த தாழ்நிலமாகும். ஜேர்மனியின் தென்பகுதி உயர்நிலப் பகுதியாகும். இப்பகுதியிலேயே பவேரிய மேட்டுநிலம், அல்ப்ஸ் மலைத்தொடர் என்பன அமைந்துள்ளன.

ஓடர், எல்ப், வேசர், ரைன் என்பன ஜேர்மனியின் பிரதான நதிகளாகும். இந்நதிகள் சிறந்த நீர்ப்பாதைகளாக விளங்குகின்றன.

ஜேர்மனி கைத்தொழிலில் நன்கு முன்னேறியுள்ள நாடாகும். இங்கு நிலக்கரி, இரும்புத்தாது என்பன அதிகளவில் காணப்பட்டமையே இதற்குக் காரணமாகும். ஜேர்மனியின் நிலக்கரி வயல்கள் றூர், சாக்சனி, சைலீசியா எனும் பகுதிகளில் அமைந்துள்ளன. இரும்புத்தாது லோறேன் நதிப்படுக்கையிலுளது; தற்போது இப் பகுதி ஜேர்மனிக்கு உரியதன்று. ரைன் பகுதியில் செம்புத்தாது காணப்படுகின்றது.

ஜேர்மனியின் கைத்தொழில்களென இரும்புருக்கு, கப்பல் கட்டுதல், நெசவு, இரசாயனத் தொழில் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இரும்புருக்குத் தொழில் றூர், சார் எனும் பகுதிகளில் அதிகம் நடைபெறுகின்றது. பவேரியா, கனோவர், சாக்சனி எனும் பகுதிகளில் இரும்புருக்குத் தொழில் கணிசமானவளவு நடைபெறுகின்றது. கம்பேக், கீல், எனும் பகுதிகளில் கப்பல் கட்டுந் தொழிலுளது. நெசவுத் தொழில் ஜேர்மனி எங்கும் பரவலாக நடைபெற்று வருகின்றது. செமினிற்ஸ், லூபெக், வூப்பெற்றல், பிறேமன் எனும் பகுதிகள் நெசவுத் தொழிலில் குறிப்பிடத்தக்கன. சீனி உற்பத்தி, குடிவகை உற்பத்தி என்பனவும் ஜேர்மனியின் கைத்தொழில்களாகும்.

ஜேர்மனியின் நிலப்பரப்பில் 45 சதவீதமான பகுதி பயிர்ச் செய்கைக்குட்பட்டிருக்கிறது. போர்ட் எனும் பகுதி மிகச்செழிப்பான பாகமாகும். ஜேர்மனியின் பயிர்செய்கையில் றை முக்கியமான தானியமாகும். ஓட்ஸ், உருளைக்கிழங்கு, பீற்கிழங்கு, பார்லி என்பன ஜேர்மனியின் ஏனைய பயிர்களாகும். நதி வடிநிலங்களில் பழச்செய்கை நடைபெறுகின்றது. வட கடலில் ஜேர்மனியமக்கள் மீன்பிடித்தலிலீடுபட்டுள்ளனர்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனியின் தலைநகரம் பேர்லினாகும். இந் நகரம் கிழக்குப் பேர்லின், மேற்குப் பேர்லின் என்ற இரு பிரிவுகளையுடையது. கம்பேக் மேற்கு ஜேர்மனியினதும், ரொஸ்டோக் கிழக்கு ஜேர்மனியினதும் துறைமுகங்களாகும்.

## அல்பைன் நாடுகள்

சுவிற்சலாந்தும் ஆஸ்திரியாவும் அல்பைன் நாடுகள் எனப்படுகின்றன. இந்நாடுகள் இரண்டும் அல்ப்ஸ் மலையில் அமைந்திருப்பதனால் இப் பெயரைப் பெற்றன. சுவிற்சலாந்து ஏறக்குறைய 16,000 சதுரமைல் பரப்பினையும் 47 இலட்சம் மக்களையுமுடையது. ஆஸ்திரியா ஏறத்தாழ 32,000 சதுர மைல் பரப்பினையும், 70 இலட்சம் மக்களையுமுடையது. இவ்விரு நாடுகளும் சிறந்த இயற்கைக் காட்சிகளையும், பொழுதுபோக்குச் சாதனங்களையும் உடையன. அதனால் ஊர்காண் மக்கள் சுகத்திற்காகவும் பொழுது போக்கிற்காகவும் இந் நாடுகளுக்கு வருகின்றனர். இத்துறையில் ஆஸ்திரியாவிலும் பார்க்கச் சுவிற்சலாந்து முன்னேற்றமானது. அதனாலேயே சுவிற்சலாந்தை "உலகின் விளையாட்டு மைதானம்" என்பர்.




படம்: 45 அல்பைன் நாடுகள்

அல்பைன் நாடுகளின் பெரும்பகுதி உயர்நிலமாக இருக்கின்றது. தெற்குப் பகுதியும் மத்திய பகுதியும் அல்ப்ஸ் மலைப்பிரதேசமாக இருக்கின்றன. சராசரி 10,000 அடிகள் உயரத்திற்கு மேற்பட்டதாக இருக்கின்றது. 15,800 அடி உயரமான மவுன்ற் பிளாங் எனும் அல்ப்சின் உயர்ந்த சிகரம் சுவிற்சலாந்தில் இருக்கின்றது. அல்ப்பைன் நாடுகளின் வடமேற்கே யூரா மலைத்தொடர் உள்ளது. அல்ப்ஸ் மலைப் பிரதேசத்திற்கு வடக்கே, யூரா மலையிலிருந்து டான்யூப் வரையிலான பகுதியே ஓரளவு சமவெளிப் பிரதேசமாக இருக்கின்றது. றைன், றோன், போ, இன் ஆகிய நதிகள் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைன் நாடுகளின் உயர் நிலத்திலேயே உற்பத்தியாகின்றன. அல்பைன் நாடுகளின் உயர்பகுதிகளில் பனி படர்ந்திருக்கும். உயரம் காரணமாகக் காலநிலை குளிர்ச்சியானதாக இருக்கும்.

அல்பைன் நாடுகளிலுள்ள மக்களின் பிரதான தொழில் மந்தை வளர்த்தலாகும். பாற்பண்ணைத் தொழில் அந்நாடுகளில் நன்கு முன்னேறியுளது. கோடைகாலத்தில் இந்நாட்டுமக்கள் தமது மந்தைகளை (மாடுகள்) மலைசரிவுகளிலுள்ள புல் வெளிகளில் வளர்ப்பர். குளிர்காலங்களில் மலைச்சரிவுகளில் பனியுறைந்து விடுவதால் தமது மந்தைகளை நதிவடிநிலங்களில் வளர்ப்பர். 'மேய்ச்சல் நிலமாற்றம்' இந்நாடுகளில் முக்கியமான ஒரு பண்பாகும்.

மேட்டுநிலப் பகுதிகளில் தானியச்செய்கை நடைபெறுகின்றது. கோதுமை, ஓட்ஸ், பார்லி, றை, என்பன பிரதான தானியங்களாகும். சமவெளிகளில் பழவகைகளும், உருளைக்கிழங்கு, பீற்கிழங்கு என்பனவும் பயிரிடப்படுகின்றன ஆஸ்திரியாவிலுள்ள வியன்னா வடிநிலத்தில் பீற்கிழங்கு முக்கிய பயிராகும்.

அல்பைன் நாடுகளில் சிறிதளவிலான கைத்தொழில்களே விருத்தியுற்றுள்ளன. சுவிற்சலாந்து கைக்கடிகாரம், முரசுவாத்தியங்கள் என்பனவற்றின் உற்பத்தியில் பேர்பெற்றது. இங்கு ஜெனீவா கைக்கடிகார உற்பத்தியிலும், சூரிச் நகரம் பட்டு உற்பத்தியிலும் செண்கெலன் நகரம் பருத்தி உற்பத்தியிலும் அதிகமீடுபட்டுள்ளன.

ஆஸ்திரியாவில் பாற்பண்ணைத் தொழிலும் மரம்வெட்டுந் தொழிலும் விருத்தியுற்றுள்ளன. காகிதக்கூழ் தயாரிப்பு ஆஸ்திரியாவில் அதிகமாகவுளது.

அல்பைன் நாடுகளில் நிலக்கரி இல்லை. ஆனால், நீர்மின் உற்பத்தி இந்நாடுகளில் அதிகம். நீர்மின்வலு இந்நாடுகளின் கைத்தொழில்களுக்குப் பெரிதும் உதவுகின்றது.


சுவிற்சலாந்தின் தலைநகரம் பேர்ன் ஆகும்; ஆஸ்திரியாவின் தலைநகரம் வியன்னா ஆகும்; ஜெனீவா, லூசன், சூரிச் என்பன சுவிற்சலாந்தின் பிரதான நகர்களாகவுள்ளன.

## வடஐரோப்பிய நாடுகள்

டென்மார்க், நோர்வே, சுவீடன், பின்லாந்து, ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் வடஐரோப்பிய நாடுகளாகும். நோர்வேயும் சுவீடனும் சேர்ந்து, ஸ்கண்டிநேவிய நாடுகள் எனவும், நோர்வே, சுவீடன், பின்லாந்து, எனும் மூன்று நாடுகளும் சேர்ந்து பெனேஸ்கண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள் எனவும் வழங்கப்படுகின்றன. பெனோஸ்கண்டிய நாடுகள் மலைப்பாங்கானவை. ஸ்கண்டிநேவியன்மலை இங்குளது. ஏனைய பகுதிகள் தாழ் நிலங்களாகவுள்ளன. பொதுவாக வட ஐரோப்பிய நாடுகள் பனிக்கட்டியாற்றினால் அரிக்கப்பட்டுள்ளன. அதனாலேயே




படம்: 46 வடஐரோப்பிய நாடுகள்

ஏராளமான நுழைகழிகளும் ஏரிகளும் இந்நாடுகளில் காணப்படுகின்றன. இந்நாடுகளில் குறுகிய கோடையும் நீண்ட மாரியும் நிலவுகின்றன.

## நோர்வே

நோர்வே பால்டிக் கடலுக்கு வடக்கே அமைந்துள்ளது. 1,25,000 சதுரமைல் பரப்பையும், 32 இலட்சம் மக்களையும் கொண்டுள்ளது. இந்நாட்டின் $\frac{3}{4}$ பகுதி மலைப்பிரதேசமாகும். $\frac{1}{4}$ பங்கு ஊசியிலைக் காடுகளாகவுளது. அதனாலேயே நோர்வேயில் மரம் வெட்டுந் தொழில் முக்கியம் பெற்றுள்ளது. வெட்டுமரம், கடுதாசிக்கூழ் என்பன ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நோர்வே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட கடற்கரையைக் கொண்டிருப்பதால் மீன்பிடித்தலும் முக்கிய தொழிலாகும். ஐரோப்பாவின் மீனுற்பத்தியில் ½ பங்குநோர்வேயிலேயே உற்பத்தியாகின்றது. நோர்வேயின் முக்கிய ஏற்றுமதி மீன் பொருட்களாகும். நோர்வே நீர் மின்வலுவினை அதிகமுடைய நாடாகும். இந்நாட்டில் ஓட்ஸ், பார்லி, உருளைக்கிழங்கு என்பன சிறிதளவு பயிராகின்றன. இதன் தலைநகரம் ஒஸ்லோவாகும்.

## சுவீடன்

சுவீடன் நாடு 17,300 சதுரமைல் பரப்பினையும் 70 இலட்சம் மக்களையும் கொண்டுள்ளது. இந்நாட்டில் 60 சதவீதமான நிலம் காடுகளாகும். சுவீடனில் பெரும்பகுதி தாழ் நிலமாகும். பீற்கிழங்கு, கோதுமை, ஓட்ஸ் உருளைக்கிழங்கு என்பன குறுகிய கோடை காலத்தில் பயிராகின்றன. இங்கும் மரம்வெட்டுந் தொழிலே முக்கியம் பெறுகிறது. மரக்கூழ், வெட்டுமரம், தீப்பெட்டி என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன வெட்டுமரங்கள் நதிகள்மூலம் தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. சுவீடனில் இரும்புத்தாது கணிசமானவளவுண்டு; கெலிவயர், கிருணு என்பன பிரதான இரும்புத்தாது வயல்களாகும். சுவீடனில் நீர்மின்வலு விருத்தியும் அதிகமாகும். சுவீடனின் தலைநகரம் ஸ்ரொக்கோம் ஆகும்.

## பின்லாந்து

பின்லாந்து 1,20,000 சதுரமைல் பரப்பினையும், 40 இலட்சம் மக்களையுமுடையது. இந்நாட்டின் பெரும் பகுதி ஏரிகளாலும், நதிகளாலும் சதுப்புநிலங்களாலும் மூடப்பட்டுள்ளது. இந்நாட்டில் விளைநிலம் மிகக்குறைவு. ஓட்ஸ் முக்கியமான பயிராகும்; புற்கள் இருப்பதனால் மந்தை வளர்ப்பும், காடுகள் இருப்பதனால் மரம்வெட்டுதலும் நடைபெற்று வருகின்றன. பின்லாந்தின் தலைநகரம் கெல்சிங்கியாகும்.

## டென்மார்க்

டென்மார்க் 16,600 சதுரமைல் பரப்பினையும், 41 இலட்சம் மக்களையும் கொண்ட நாடாகும். பலசிறிய தீவுகள், சட்லண்ட்குடாநாடு ஆகியவையே டென்மார்க் எனப்படுகின்றன. டென்மார்க் வளம் குறைந்த மணலைக் கொண்ட சமநிலமாகும். எனினும், பயிர்ச்செய்கை இங்கு முக்கியமானது. கோதுமை, றை, பார்லி, என்பன பிரதான பயிர்களாகும். டென்மார்க் பாற்பண்ணைத் தொழிலுக்காகவே உலகில் பேர் பெற்றுள்ளது. வெண்ணெய் பாற்கட்டி, இறைச்சி என்பன டென்மார்க்கின் முக்கிய உற்பத்திப் பொருட்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டென்மார்க்கின் ஏற்றுமதியில் 50 சதவீதம் பாற்பண்ணைப் பொருட்களாகும். டென்மார்க்கின் தலைநகரம் கோபன்கேயனுகும்.

ஐஸ்லாந்து பனிபடர்ந்த ஒரு சமநிலத்தீவாகும். இதன் தலைநகர் ரெயின்சாவித் ஆகும்.

# கிழக்கு ஐரோப்பிய நாடுகள்

பால்டிக் கடலிலிருந்து கருங்கடல்வரை பரந்துள்ள போலாந்து கங்கேரி, செக்கோசிலாவிக்கியா, ருமேனியா ஆகிய நாடுகளைக் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் எனலாம். இந்நாடுகள் கண்டக்கால நிலையை அனுபவிக்கின்றன. இந்நாடுகள் கோடைமழையைப் பெறுகின்றன.

## போலாந்து

போலாந்து 1,21,000 சதுரமைல் பரப்பினையும் 2½ கோடி மக்களையுமுடையதாக விளங்குகின்றது. போலாந்தின் தென்பகுதியில் காப்பேதியன் மலையுளது. ஏனைய பகுதிகள் தட்டையானவை. ஓடர், விஸ்ரியூலா எனும் நதிகள் இதனூடாகப் பாய்கின்றன. போலாந்து நாட்டு மக்களின் பிரதான தொழில் பயிர்ச் செய்கையாகும். றை, பார்லி, ஓட்ஸ், உருளைக்கிழங்கு, பீற்கிழங்கு என்பன இங்கு பயிராகின்றன. மந்தை வளர்ப்பும் சிறிதளவுளது. ஐரோப்பாவின் பெரிய நிலக்கரி வயலான சைலீசியா போலாந்திலேயே இருக்கின்றது. வெட்டுமரத்தொழில், பருத்தி, நெசவு, சீனித்தொழில் என்பன போலாந்தின் கைத்தொழில்களாகும். போலாந்தின் தலைநகரம் வார்சோவாகும்.

## கங்கேரி

கங்கேரி நாடு பரந்ததோர் சமவெளியாகும். டான்யூப்நதி இந்நாட்டினூடாகப் பாய்கின்றது. கங்கேரிச்சமவெளி கோதுமைச் செய்கைக்கு உலகிலேயே பேர்பெற்றதாகும். றை, பார்லி, உருளைக் கிழங்கு, பீற்கிழங்கு, சணல் என்பன கங்கேரியின் ஏனைய பிரதான பயிர்களாகும். பெரியபஸ்த்தன் எனும் ஏரியில் அதிகளவில் மீன் வளர்க்கப்படுகின்றது. சீனி, குடிவகை என்பன இங்குள்ள உற்பத்திப் பொருட்களாம். கங்கேரியின் தலைநகர் புடாபெஸ்ற் ஆகும்.

## செக்கோசிலாவிக்கியா

செக்கோசிலாவிக்கியா ஒரு மலைப்பிரதேச நாடாகும். கிழக்கே காப்பேதிய மலைத்தொடரின் தென் சரிவும் ஏனைய பகுதிகளில் பொகிமியா மேட்டு நிலமும் அமைந்துள்ளன. எல்ப் நதி இந்நாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டினூடாகப் பாய்கின்றது. செக்கோசிலாவிக்கியா 59,300 சதுரமைல் பரப்பையும் 1½ கோடி மக்களையும் கொண்டுள்ளது. பொகீமியா மேட்டுநிலம் கோதுமைச் செய்கையில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது றை, உருளைக்கிழங்கு என்பன இந்நாட்டின் ஏனைய பயிர்களாம். பருத்தி, நெசவு, யந்திரத்தொழில், கண்ணாடித்தொழில், சீனித்தொழில் என்பன இந்நாட்டின் கைத்தொழில்களாகும். செக்கோசிலாவிக்கியாவின் தலைநகரம் பிரேக் ஆகும்.

## ரூமேனியா

ரூமேனியா 94,000 சதுரமைல் பரப்பையும் 1½ கோடி மக்களையுமுடைய ஒரு நாடாகும். ரூமேனியாவின் மத்தியபகுதி காப்பேதியன் மலையின் பகுதியாகும். டான்யூப்நதிப்பள்ளத்தாக்கே இங்குள்ள சமவெளியாகும். இப்பகுதியில் கோதுமை பிரதான பயிராகவுள்ளது. பார்லி, சோளம், என்பன பிறபயிர்களாகும் குடிவகை, சீனி என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன. ரூமேனியா நிலநெய்யிற்குப் பேர்பெற்றது தங்கம், செம்பு, ஈயம், நிலக்கரி எனும் கனிப்பொருட்களும் இந்நாட்டிலுள்ளன. ரூமேனியாவின் தலைநகரம் பூக்காறெற் ஆகும்.

# சோவியத் ருஷியா

## ஐரோப்பிய ருஷியா

ஐக்கிய சோவியத் சமவுடைமைக் குடியரசு (ருஷியா) இரு பெரும் பகுதிகளை உடையது. அவை; ஆசிய ருஷியா; ஐரோப்பிய ருஷியா என்பனவாம். ஐரோப்பிய ருஷியா யூறல் மலைத்தொடருக்கு மேற்கே ஐரோப்பாக் கண்டத்திலமைந்துள்ளது.

ஐரோப்பிய ருஷியா 10 இலட்சம் சதுரமைல் பரப்பினையுடையது. உலகிலேயே பெரியநாடு இதுவாகும். இந்நாடு ருஷியா மேடை எனும் கிழக்கு ஐரோப்பிய சமவெளியில் அமைந்துள்ளது; ருஷிய மேடை வன்பாறைகளால் ஆனது. தெற்கே காக்கஸஸ் மலைத்தொடருளது. வொல்கா, நிஸ்டர், டசினு, செகோரா, யூறல் முதலிய நதிகள் ஐரோப்பிய ருஷியாவில் பாய்கின்றன.

ஐரோப்பிய ருஷியா காக்கஸஸ் மலைத்தொடரில் இருந்து ஆக்டிக்சமுத்திரம் வரை தெற்கு வடக்காகப் பரந்துள்ளது. அதனால் இந்நாட்டின் காலநிலையும் பல்வகைப்பட்டதாகவுளது. காக்கஸஸ் மலைப்பகுதியை அடுத்து இடை வெப்பப்பாலைநிலக்காலநிலை நிலவுகின்றது. அதனை அடுத்து தெப்புவெளிகளையுடைய இடைவெப்பக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டக் காலநிலையும், அதற்கு வடக்கே ஊசியிலைக் காடுகளையுடைய இடைவெப்ப நனி குளிர்க் காலநிலையும் நிலவுகின்றன; அதிவடக்கே தண்டராக் காலநிலை காணப்படுகின்றது.

பல்வகைக் காலநிலைப் பண்புகளுக்கு இணங்க. ஐரோப்பிய ருஷியாவின் மக்கள் தொழில்களும் வேறுபடுகின்றன. தண்டராப் பகுதியில் வாழும் லாப்பியரும் எஸ்கிமோவரும் மீன்பிடித்தலிலும் துருவமான் வளர்த்தலிலும் ஈடுபட்டுள்ளனர். தைக்கா எனப்படும் ஊசியிலைக்காட்டுப் பகுதிகளிலுள்ள மக்கள் மரம்வெட்டுந் தொழிலைச் செய்கின்றனர். தெப்புவெளிப் பகுதி வளமான மண்ணைக் கொண்டிருப்பதால் இப்பகுதியில் கோதுமைச்செய்கை முக்கியம் பெற்றிருக்கிறது. ஐரோப்பிய ருஷியாவின் மேற்குப் பகுதிகளில றை, ஓட்ஸ், பார்லி, பீற்கிழங்கு, புகையிலை என்பன பயிரிடப்பட்டு வருகின்றன.

ஐரோப்பிய ருஷியா நிலக்கரி, இரும்புத்தாது. பொன், நிக்கல், செம்பு, அலுமினியம் முதலான கனிப்பொருட்களை அதிகளவிற் கொண்டுள்ளது. பெக்கோரா, தென் யூறல், டொனெற்ஸ் எனும் பகுதிகள் பிரதான நிலக்கரிச் சுரங்கங்களைக் கொண்டிருக்கின்றன. உக்கிறேனிலுள்ள கிறிவோய்றெக், மொஸ்கோவிலுள்ள ரியூலா, காக்கஸஸ் பகுதி, மக்னிற்றொக் என்பன ஐரோப்பிய ருஷியாவின் பிரதான இரும்புத்தாது வயல்களை உடையனவாக விளங்குகின்றன.

ஐரோப்பிய ருஷியாவில் கைத்தொழில்கள் நன்கு முன்னேறியுள்ளன. மொஸ்கோ, யூறல், லெனின்கிராட் எனும் பகுதிகளில் இரும்புருக்கு, யந்திரத் தொழில்கள் நடைபெறுகின்றன. கப்பல் கட்டுந் தொழில் லெனின் கிராட்டில் முக்கியம் பெற்றுள்ளது. நெசவுத்தொழில், இரசாயனத்தொழில் என்பனவும் ஐரோப்பிய ருஷியாவின் பிரதான கைத்தொழில்களாகும்.

மொஸ்கோ இந்நாட்டின் தலைநகராகும். அர்கேன்சல், மர்மன்ஸ் என்பன ஆக்டிக்சமுத்திரத்திலுள்ள ருஷியத் துறைமுகங்களாகும். ஒதெஸ்லா எனும் துறைமுகம் கருங்கடலிலுளது.


## ஆசியருஷியா

உலகிலேயே மிகப்பெரிய சமவெளி, ஆசியருஷியாவாகும். ஆசியாவின் வடக்கே மேற்குக் கிழக்காக பரந்துள்ள இச் சமவெளி சைபீரியச்சமவெளி எனப்படும்: யூரல் மலையிலிருந்து பசுபிக்சமுத்திரம் வரை சைபீரியச்சமவெளி பரந்துள்ளது. இச் சமவெளியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப், யெனசி, லீனு எனும் நதிகள் பாய்கின்றன. பெயிக்கல், பால்காஸ் முதலிய ஏரிகளும் இச்சமவெளியில் காணப்படுகின்றன.

ஆசியாவின் வடசமவெளி குடியடர்த்தி மிகக் குறைந்த பகுதியாகும். சைபீரியச் சமவெளியின் தென்புறமாகவே குடியடர்த்தி கூடிச் செல்கின்றது. சைபீரியாவில் காலநிலையே குடியடர்த்தியை நிர்ணயித்துள்ளது. ருஷிய சைபீரியாவின் வடபகுதி ஆண்டில் 9 மாதங்கள் பனிப்படலத்தில் மூடப்பட்டு மிகுந்த குளிரையுடையது. இந்தப் பனிபடர்ந்த குளிர்ப்பாலை நிலத்தைச் 'தண்டராப் பிரதேசம்' என்பர். இப்பிரதேசத்தில் எஸ்கிமோ சாதியினரைப் போன்று சமோர்யிட்ஸ், ஒஸ்டியாக் எனும் மக்கள் ஐதாக வாழ்கின்றனர். தண்டராப் பிரதேசத்திற்குத் தெற்கே ஊசியிலைக்காட்டு வலயம் காணப்படுகின்றது. இங்கும் பயிர்த்தொழில் செய்ய முடியாமையினுல் மக்கள் குறைவாகவே வாழ்கின்றனர். ஊசியிலைக் காட்டிற்குத் தெற்கே 'தெப்பு வெளிகள்' என வழங்கப்படும் இடை வெப்ப வலயப்புல்வெளிகள் உள்ளன. அதனுல் மந்தை மேய்த்தலில் ஈடுபட்டுள்ள 'கோர்க்கிஸ்' எனும் மக்கள் இப்பகுதிகளில் அதிகம் வாழ்கின்றனர். மேலும், கண்டக்குறுக்குத் தண்டவாளப் பாதை எனப்




படம்: 47 ருஷிய சைபீரியா—பிரதான நகர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் திருன்ஸ் சைபீரியன் புகைவண்டிப்பாதை இப்பிரதேசத்திற்கு ஊடாக அமைக்கப்பட்டுள்ளது. அதனுலும் இப்பகுதி அதிக மக்களைக் கொண்டுள்ளது.

சைபீரியாவின் தென்மேல் பகுதியில் மிகவும் மழை குறைவு. இப் பகுதியில் அமுதாரியா, சிர்தாரியா எனும் இரு நதிகள் ஏரல் கடலினுள் கலக்கின்றன. இவற்றை அடுத்து காரகும், இசில்-கும் எனும் இரு பாலைநிலங்கள் காணப்படுகின்றன. அதனுல் இப்பகுதியில் மக்கள் அதிகம் வாழவில்லை.

விளாடிவிஸ்ரொக், இர்க்குஸ்க், தொம்ஸ்க், ஓம்ஸ்க் முதலிய பட்டினங்களைச் சூழ்ந்து மக்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர்.

## மக்களின் தொழில்கள்

வேட்டையாடல், மரம் வெட்டுதல், பயிர்ச்செய்கை, கைத் தொழில்கள் என்பன ருஷிய சைபீரிய மக்களின் தொழில்களாகும்.

**வேட்டையாடல்:** ருஷியசைபீரியாவின் தண்டராப்பிரதேசம் காலநிலையின கடினதன்மை காரணமாகப் பயிர்ச்செய்கைக்கு ஏற்றதாக வில்லை. அதனுல் இங்குள்ள மக்கள் வேட்டையாடுதல்மூலம் தமது வாழ்க்கையை நடாத்துகின்றனர். நரி, ஓநாய், மாட்டின், வறுசி மான், கோரோசனை எருது, துருவக்கரடி, சீல் எனபன இறைச்சி, தோல், உரோமம் எனபனவற்றிற்காக வேட்டையாடப்படுகின்றன. மீன்பிடித்தலும் இங்குள்ள மக்களின் பிரதான தொழிலாகும்.



படம்: 48 சைபீரிய விலங்குகள்

வேட்டையாடுவதற்குச் செல்வதற்குப் பனிக்கட்டிச் சறுக்கு வண்டியைப் பயன்படுத்துகின்றனர். இவற்றைத் துருவமான்களும் நாய்களும் இழுத்துச் செல்கின்றன. இங்குள்ள மக்கள் மாரியில் பனிக்கட்டியினுல் ஆக்கப்பட்ட 'இக்ளூ' என்று அழைக்கப்படும் வீடுகளில் வாழ்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம்: 49 இக்ளூ

**மரம்வெட்டுதல்:** ஊசியிலைக் காட்டுப் பகுதியைத் தைக்கா என்றழைப்பர். இத்தைக்காவில் மரம்வெட்டும் தொழில் சிறந்து விளங்குகின்றது. தீப்பெட்டிக்குச்சு, கடதாசி, மரப்பலகை என்பன வற்றை இவற்றிலிருந்து மக்கள் செய்துவருகின்றனர். மாரிகாலத்தில் மரங்கள் வெட்டப்படுகின்றன; அவை பனிக்கட்டிகளின்மீது சுலபமாக இழுத்துச் செல்லப்பட்டு ஆறுகளில் தள்ளப்படுகின்றன. கோடை காலத்தில் ஆறுகள் உருகிப் பாயும்போது இம்மரங்கள் அவற்றில் மிதந்து, ஆற்றங்கரைகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இங்கு இகார்கா என்ற இடம் மரத்தொழிலிற்குப் பெயர் பெற்றது. இது யெனசி நதியின் மருங்கே அமைந்துள்ளது.

**பயிர்ச்செய்கை:** ருஷியாவின் தெப்புவெளிகளில் மந்தைமேய்த்தலோடு, பயிர்ச்செய்கையும் ஓரளவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கோதுமை, றை, பார்லி என்பன இப்பகுதிகளில் விளைவிக்கப்பட்டு வருகின்றன. தென்மேல் சைபீரியாவில் தஸ்கென் எனும் பகுதியில் நீர்ப்பாய்ச்சல் உதவியுடன் பருத்தி செய்கைபண்ணப் பட்டு வருகின்றது.

**கைத்தொழில்கள்:** யெனசி, லீனு எனும் இரு நதிகளின் இரு மருங்கிலுமுள்ள மேட்டு நிலங்களில் நிக்கல், செம்பு, ஈயம், தங்கம், கரி எனும் கனிப் பொருட்கள் காணப்படுகின்றன. சைபீரிய கண்டக்குறுக்குத் தண்டவாளப் பாதையை அடுத்து கரி, இரும்புத்தாது, செம்பு என்பன காணப்படுகின்றன. ஓம்ஸ்க், தொம்ஸ்க், இர்க்குஸ், பர்னுவுல், குஸ்நெற்ஸ், மக்னிரோகொஸ்க் என்பன சிறந்த கைத்தொழில் நகரங்களாகவுள்ளன. மரம் அரியும் தொழில், கடதாசித் தொழில் என்பன இந்நகரங்களில் நடைபெறுகின்றன. தஸ்கென் பருத்தி நெசவிற்குப் புகழ்பெற்ற நகரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லத்தீன் அமெரிக்கா

## தரைத்தோற்றம்

தென் அமெரிக்காவின் தரைத்தோற்றம் பெரிதும் வட அமெரிக்காவின் தரைத்தோற்றத்தினை ஒத்துள்ளது. தென்அமெரிக்காவின்





படம்: 50 தென் அமெரிக்காவின் தரைத்தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குப் பகுதியில் அந்தீஸ் மலைத்தொடர் அமைந்திருக்கிறது: இது ஏறக்குறைய 4500 மைல் நீளமும், 400 மைல் அகலமும் உடையது. இம் மலைத்தொடரின் மத்திய பகுதியில் பொலிவியா மேட்டுநிலம் அமைந்துள்ளது. இம் மேட்டுநிலத்தில் தித்திக்காகா எனும் ஏரி அமைந்திருக்கிறது. அந்தீஸ் மலைத்தொடரின் மிகவுயர்ந்த சிகரமான அக்கன்கக்குவா ஆர்ஜென்ரீனாப் பகுதியில் அமைந்திருக்கின்றது. இது 22,835 அடி உயரமுடையது.

தென் அமெரிக்காவின் கிழக்குப்பகுதியில் மூன்று உயர்நிலங்கள் உள்ளன. அவை கயானா உயர்நிலம், பிறேசிலியன் உயர்நிலம், பற்றகோனியா உயர்நிலம் என்பனவாம். மூன்று நதி வடிநிலங்கள் தென்அமெரிக்காவிலுள்ளன. அவை ஒறினேக்கோநதி, அமேசன்நதி, பரானாபராகுவே நதி என்பனவாம். ஒறினேக்கோ நதி அந்தீஸ் மலைத்தொடரிலிருந்து கயானா உயர்நிலத்தைப் பிரிக்கின்றது. அமேசன்நதி பாய்கின்ற பிரதேசம் பரந்ததோர் சமவெளியாகும்; நூற்றுக்கணக்கான கிளைநதிகளை அமேசன் கொண்டிருக்கின்றது. பரானாபராகுவே நதி வடிநிலத்தில் சதுப்பு நிலங்கள் உள்ளன.




படம்: 51 காலநிலையும் தாவரமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை

தென் அமெரிக்காவை மத்தியகோடும், மகரக்கோடும் ஊட றுக்கின்றன. அதனால் இக்கண்டத்தின் பெரும்பகுதி அயனமண்ட லத்தினுள் அமைகின்றது. இப்பகுதியில் உயர் வெப்பநிலையும், ஆண்டு முழுவதும் அதிக மழைவீழ்ச்சியும் நிகழ்கின்றன. தென் அமெரிக்காவின் ஒடுங்கிய தென்பாகத்தின் காலநிலை இடைவெப்ப வலயத்திற்குரியது.

தென் அமெரிக்காவின் சராசரி வெப்பநிலை 70° ப - உக்கு மேலானதாகும். தென் அமெரிக்காவின் கிழக்குப்பகுதி அதிக மழை யைப் பெறுகின்றது. (சராசரி 60" - மேல்) தென் அமெரிக்காவின மேற்குக் கரையோரமும், தென்பகுதியும் வரண்ட பகுதிகளாக வுள்ளன.

மத்தியகோட்டை அடுத்தபகுதிகள் உயர்வெப்ப நிலையையும், அதிகமழையையும் பெறுவதால் என்றும் பசுமையான, அடர்த்தி யான உயர்காடுகள் இப்பகுதிகளில் வளர்ந்துள்ளன; அமேசன் நதி வடிநிலம் முழுவதும் இக்காடுகளே நிறைந்துள்ளன. இக்காடுகளை மத்தியகோட்டுக் காடுகள் அல்லது செல்வாஸ் என அழைப் பார்கள்.

செல்வாஸ் காடுகளுக்கு வடக்கே லானேஸ் புல்வெளியும், தெற்கே கம்பஸ் புல்வெளியும் உள்ளன. இப்புல்வெளிகள் கயானா, பிறேசிலியன் உயர்நிலங்களில் அமைந்துள்ளன; இவை வெப்ப வலயப் புல்வெளிகளாகும்.

பரானாபராகுவே நதி வடிநிலத்தின் வடபகுதியில் இடை வெப்பவலயக் காடுகள் காணப்படுகின்றன. இக்காடுகளுக்குத் தெற்கே இடைவெப்ப வலயப் புல்வெளியான பம்பாஸ் பரந்துள் ளது; ஆர்யென்ரீனா, உருகுவேப்பகுதிகளில் இப்புல்வெளி பரந்தி ருக்கின்றது.

அந்தீஸ் மலைத்தொடரில் மலைக் காலநிலை நிலவுகின்றது. பேரு, வடசில்லிப் பகுதிகள் வரண்டனவாகவுள்ளன; இப்பகுதிகளில் வெப் பப் பாலைநிலத் தாவரங்களுள்ளன. மத்தியசில்லி மத்தியதரைக் கடற் காலநிலையை யுடையது. பற்றக்கோனியாப் பகுதியிலும் பாலைநிலத் தாவரங்களே உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னமெரிக்க நாடுகள்

தென்னமெரிக்காவில் பிறேசில், ஆர்ஜென்ரீனா, கயானா, பரா குவே, உருகுவே எனும் நாடுகளைத் தென் அமெரிக்காவின் கிழக்கு




படம்: 52 தென் அமெரிக்காவின் நாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள் எனலாம். வெனேசுலா, கொலம்பியா, ஈக்குவடோர், பேரு, பொலீவியா, சில்லி எனும் நாடுகளை அந்தீஸ் குடியரசுகள் அல்லது தென் அமெரிக்காவின் மேற்குநாடுகள் எனலாம்.

## பிறேசில்

தென் அமெரிக்க நாடுகளில் மிகப் பெரியது பிறேசிலாகும். இது 30 இலட்சம் சதுரமைல்களுக்கு மேல் பரப்பினை உடையது. பிறேசிலின் பெரும்பகுதியில் அமேசன் வடிநிலம் உள்ளது; மிகுதி பிறேசிலியன் உயர்நிலத்தைக் கொண்டுள்ளது. உலகிலேயே மிக நீளமான நதியான அமேசன் நதி பிறேசிலின் ஊடாகவே பாய்கின்றது.

பிறேசில் நன்கு விருத்தியடைந்த நாடாக இல்லை; பெரும்பகுதி இன்னும் காடு அடர்ந்தே காணப்படுகின்றது. தக்க போக்குவரத்து வசதிகள் இங்கு இல்லை. ஏறத்தாழ 5½ கோடி மக்கள் இந்நாட்டிலுள்ளனர். போத்துக்கேயர், ஸ்பானியர், இந்தியர், நீக்கிரோவர் எனப் பல்லின மக்கள் இந்நாட்டில் வாழ்கின்றனர். பிறேசிலின் பெரும்பகுதியில் ஒரு சதுர மைலுக்கு ஒருவர்தானும் வாழவில்லை. அத்திலாந்திக் கரையோரத்தை அடுத்தே மக்கள் ஓரளவு செறிவாக வாழ்கின்றனர்.

வேட்டையாடல், மீன்பிடித்தல், பயிர்செய்தல் என்பன பிறேசில் நாட்டு மக்களின் பிரதான தொழில்களாகும். கோப்பிச் செய்கையில் பிறேசில் உலகிலேயே முதன்மையானது. சாயோபோலோ எனும் பகுதியில் கோப்பித்தோட்டங்கள் நன்கு அமைந்துள்ளன. சான்ரோஸ் எனும் துறைமுகத்தின் ஊடாக கோப்பி ஏற்றுமதியாகின்றது. கொக்கோ, பருத்தி, கரும்பு என்பன பிறேசிலில் செய்கை பண்ணப்படும் ஏனைய பயிர்களாகும். கோதுமை பெருமளவில் இறக்குமதி செய்யப்படுகின்றது.

வைரம், பொன், இரும்புத்தாது. எனும் கனிப் பொருட்களும் சிறிதளவு அகழப்படுகின்றன. றியோடியெனீரோ பிறேசிலின் தலைநகராக விளங்குகின்றது.

## ஆர்யென்ரீனு

ஆர்யென்ரீனுவின் சனத்தொகை ஏறத்தாழ இலங்கையின் சனத்தொகையை ஒத்தது. இந்நாடு இடைவெப்ப வலயத்தில் அமைந்திருக்கின்றது. ஆர்யென்ரீனுவின் மேற்குப்பகுதி அந்தீஸ் மலைச்சாரலைக் கொண்டுள்ளது; தென்பகுதி பற்றகோனியா மேட்டு நிலத்தையும், மத்தியபகுதி பம்பாஸ் புல்நிலத்தையும், வடபகுதி கிறன்சாகோ எனும் தாழ்நிலத்தையும் கொண்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்திசை அடுத்தள்ள பிரதேசங்களில் கரும்புச் செய்கையும் பழச்செய்கையும் நீர்ப்பாசன உதவியுடன் நடைபெறுகின்றன. பம்பாஸ் பகுதி ஆர்யென்ரீனுவிலேயே முக்கியமான உற்பத்திப் பிரதேசமாகும். இங்கு மந்தை வளர்ப்பும் கோதுமைச் செய்கையும் பிரதானமானவை. பாற்பண்ணைத் தொழில், இறைச்சி பதனிடுதல் என்பன இப்பகுதியில் நடைபெறுகின்றன உலகின் கோதுமைச் செய்கையில் ஆர்யென்ரீனு வகிக்கின்ற முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கது.

பற்றகோனியா மேட்டுநிலப்பாகத்தில் செம்மறி ஆடுகள் வளர்க்கப்படுகின்றன; இப்பகுதியில் சிறிதளவு பெற்ரோலியமும் பெறப்படுகின்றது. ஆர்யென்ரீனுவின் வடபகுதியில் சிறிதளவு தேயிலைச் செய்கை நடைபெறுகின்றது.

ஆர்யென்ரீனுவின் தலைநகர் புவனஸ்அயர்ஸ் ஆகும். இதுவே இந்நாட்டின் பிரதான துறைமுகமாகவுள்ளது. லாபிளாற்ரு, பாகியாபிளாங்கா என்பனவும் முக்கிய துறைமுகங்களாகும்,

ஆர்யென்ரீனு கோதுமை, கம்பளி. தோல், இறைச்சி என்பனவற்றை உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, நெசவுப் பொருட்கள், பெற்ரோலியம், இரும்புருக்கு என்பனவற்றை இறக்குமதி செய்து வருகின்றது.

## கயானு

தென் அமெரிக்காவின் வடபகுதியில் அமைந்திருக்கும் கயானு, மூன்று அரசியற் பிரிவுகளை உடையது; பிரித்தானிய கயானு, சூரினும், பிரான்சிய கயானு என்பனவே அவை. சூரினும் முன்பு டச் கயானு என வழங்கப்பட்டது.

கயானுக்களின் வடபகுதி தாழ் நிலமாகும்; தென்பகுதி கயானு மேட்டு நிலத்தின் பகுதியாகும். தென்பகுதியில் மந்தைவளர்ப்பு பிரதான தொழிலாகும்; கோப்பிச் செய்கையும் இப்பகுதியில் நடைபெறுகின்றது. கயானுக்களின் வடதாழ் நிலங்களில் றப்பர், கரும்பு. சோளம் என்பன செய்கைபண்ணப்படுகின்றன.

பிரித்தானிய கயானுவின் தலைநகரம் ஜோர்ஜ்ரவுன் ஆகும். சூரினுமின் தலைநகரம் பாறமாறிபோ ஆகும். பிரான்சிய கயானுவின் தலைநகரம் கயன்னே ஆகும்.

## பராகுவே

பராகுவே நதிவடிநிலத்தில் இந்நாடு உள்ளது; இந்நாட்டின் பெரும் பகுதி காடுகளையும், புல்வெளிகளையும் உடையது. பம்பஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்வெளியின் தொடர்ச்சி பராகுவேயில் காணப்படுகின்றது. மந்தை வளர்ப்பு இந்நாட்டின் முக்கிய தொழிலாகும்; இறைச்சி பதனிடல் இங்கு நடைபெறுகின்றது கோதுமை, சோளம், கரும்பு, தோடை, பருத்தி முதலிய பல்வகைப் பயிர்களும் இந்நாட்டில் சிறியளவில செய்கைபண்ணப்பட்டு வருகின்றன.

அசென்சியன் பராகுவேயின் தலைநகராக விளங்குகின்றது.

## உருகுவே

தென் அமெரிக்காவிலுள்ள மிகச் சிறிய நாடு உருகுவேயாகும். இந்நாடும் பம்பாஸ் புல்வெளியின் தொடர்ச்சியாகவே காணப்படுகின்றது; மரமற்ற புல்நிலங்கள் உருகுவேயின் பெரும்பகுதியை அடக்கியுள்ளன. உருகுவேயின் மக்கள் தொழிலில் மந்தைவளர்த்தல் முக்கியமானது மாடு. செம்மறி, குதிரை என்பன அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. கம்பளி, இறைச்சி, தோல் என்பன ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உருகுவேயில் சோளம், கோதுமை, ஓட்ஸ், பட்டுச்சணல் முதலியனவும் பயிரிடப்பட்டு வருகின்றன.

மொன்ரேவிடியோ உருகுவேயின் தலைநகராகும்.

## சில்லி

தென் அமெரிக்காவில் அந்தீஸ் மலைத்தொடருக்கு மேற்கே, பசுபிக்கரையோரத்தில் சில்லி நாடு நீண்டமைந்துள்ளது. இந்நாடு 2800 மைல்கள் நீளமான ஒழுங்கற்ற கடற்கரையைக் கொண்டிருக்கின்றது.

தென்சில்லியில் மரம் வெட்டுதலும், மீன் பிடித்தலும் பிரதான தொழில்களாகவுள்ளன; இங்கு செம்மறி வளர்ப்பும் கனிசமானவளவு காணப்படுகின்றது.

மத்திய சில்லியின் காலநிலை மத்தியதரைக் கடற் காலநிலையாகும். அதனுல் கோதுமை. ஓட்ஸ், சோளம், திராட்சை, அப்பிள், பீச், தோடை முதலியன பயிரிடப்பட்டு வருகின்றன.

வடசில்லி வரண்டதாகும்; இங்கேயே அற்றகாமாப் பாலைநிலம் உள்ளது! இங்கு செப்பு, நைற்றேற்ஸ் என்பன அதிக அளவில் கிடைக்கின்றன. அந்தோ பகஸ்தா எனுமிடத்தில் செம்பு அதிகவளவில் உள்ளது.

சில்லியின் தலைநகர் சந்தியாகோ ஆகும்; வல்பறைசோ பிரதான துறைமுகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேருவும் பொலீவியாவும்

பேருவுக்கும் பொலீவியாவிற்கும் மத்திய பாகத்தில் அந்தீஸ் மலைத்தொடர் அமைந்துள்ளது; மேற்குப் பாகத்தில் ஒடுங்கிய கரையோரச் சமவெளியும், கிழக்குப்பாகத்தில் அமேசன்வடிநிலத்தின் பகுதியும் காணப்படுகின்றன. ஒடுங்கிய கரையோரச் சமவெளி மழைவீழ்ச்சி மிகமிக அரிதாகப் பெறும் பகுதியாகும். எனினும், நதிகளின் துணையுடன் நீர்ப்பாசன வசதிகொண்டு பருத்தி, கரும்பு, என்பன செய்கைபண்ணப்படுகின்றன. பேரு, உலகில் பருத்திச்செய்கையில் குறிப்பிடத்தக்க நாடாகும்.

இந்நாடுகளின் அந்தீஸ் உயர்நிலப்பகுதிகளில் சோளம், கோப்பி பார்லி, உருளைக்கிழங்கு, என்பன பயிரிடப்பட்டு வருகின்றன; மலைகளின் தாழ்சாய்வுகளில் செம்மறி ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. அமேசன் வடிநிலப்பகுதியில் காட்டுறப்பர், கொக்கோ, கோப்பி முதலிய பயிர்களுள்ளன.

பேருவின் தலைநகரம் லீமாவாகும். பொலீவியாவின் தலைநகர் லாபாஸ் ஆகும். லாபாஸ், தித்திக்காகா ஏரிக்கு அண்மையில் உள்ளது.

## கொலம்பியா, ஈக்குவடோர், வெனெசுலா

கொலம்பியா, ஈக்குவடோர், வெனெசுலா எனும் மூன்று நாடுகளும் பொதுவாக உயர்நில நாடுகளாகும்.

கொலம்பியாவில் வாழை பிரதான பயிராகும்; கரும்பு, கொக்கோ, கோப்பி என்பனவும் செய்கைபண்ணப்படுகின்றன. தங்கம், வெள்ளி, செம்பு, எனும் கனிப்பொருட்களும் கொலம்பியாவில் சிறியளவில் பெறப்படுகின்றன. பொகோட்டா கொலம்பியாவின் தலைநகராகும்.

ஈக்குவடோரில் கொக்கோ, பிரதான ஏற்றுமதிப் பயிராகும். வாழை, பருத்தி, கரும்பு, கோப்பி முதலிய பயிர்களும் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன. செம்மறி ஆடுகளும் இங்கு வளர்க்கப்படுகின்றன. குயற்றோ ஈக்குவடோரின் தலைநகராகும்.

வெனெசுலா உலகின் பெற்றோலிய உற்பத்தியில் பிரதான நாடாக விளங்கிவருகின்றது. வெனெசுலாவில் மாறகைபோ எனும் பகுதியில் பெற்றோலிய வயல்கள் அதிகம் காணப்படுகின்றன. பொலீவார் எனும் பகுதியில் இரும்புத் தாது அகழ்ந்தெடுக்கப்பட்டு வருகின்கின்றது. லானேஸ் புல்வெளியில் மாடு, செம்மறி ஆடுகள் என்பன வளர்க்கப்பட்டு வருகின்றன. வெனெசுலாவின் தலைநகர் காரக்காஸ் ஆகும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட அமெரிக்கா

பசுபிக்சமுத்திரத்தையும் அத்திலாந்திக் சமுத்திரத்தையும் பிரிக்கும் நிலப்பரப்பாக வடஅமெரிக்காவும் தென்னமெரிக்காவும் அமைந்துள்ளன. வட, தென் அமெரிக்காக்களைப் புதிய உலகம் என்பர். ஏனெனில் ஏனைய கண்டங்கள் கண்டுபிடிக்கப் பட்டதன் பிலபே இக்கண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டன அமெரிக்கா 1492 ஆம் ஆண்டு கிறிஸ்தோபர் கொலம்பஸ் என்ற கடலோடியால் கண்டுபிடிக்கப் பட்டது அதன்பின். அமெரிக்க வெஸ்புசி என்பார். இக்கண்டங்களைக்கண்டு. பிரதேசவாராய்ச்சி செய்தார். அவரின் பெயரால் இக்கண்டங்கள் அழைக்கப்படுகின்றன.

வடஅமெரிக்கா 87,00,000 சதுரமைல் பரப்பினையும், தென்னமெரிக்கா 75,00,000 சதுரமைல் பரப்பினையு முடையன. வடஅமெரிக்கா மூன்ருவது பெரிய கண்டமாகும். இக்கண்டங்கள் முக்கோண வடிவின;

அமெரிக்காவில் முதன் முதல் குடியேறியவர்கள் ஆங்கிலேயராவர். இவர்கள் வடஅமெரிக்காவின் கிழக்குக் கரையோரத்தில் குடியேறினர். அதன்பின் பிராஸ்சியர் சென்லோறன்ஸ் நதிப்பகுதியில் குடியேறினர். ஸ்பானியரும் போர்த்துக்கேயரும் தென், மத்தியபகுதிகளில் குடியேறினர். அமெரிக்காக்களில் ஐரோப்பியர் குடியேறுவதற்முன் வாழ்ந்த மக்கள் செவ்விந்தியராவர்;

## தரைத்தோற்றம்

வட அமெரிக்காவின் தரைத்தோற்றத்தை நான்கு பெரும் பிரிவுகளாக வகுக்கலாம். அவை;

### 1. மேற்கு மலைத்தொகுதி

வடஅமெரிக்காவின் மேற்குப்பகுதி உயர்ந்த மலைப்பிரதேசமாகும். இம்மலைத்தொகுதி அலாஸ்காவிலிருந்து மத்திய அமெரிக்காவரை பரந்திருக்கின்றது. ஏறக்குறைய 4300 மைல்கள் நீளமான றொக்கி மலைத்தொடர் இப்பகுதியில் அமைந்துள்ளது. இதனைவிட அலாஸ்கா மலைத்தொடர், சியராநெவாடா, சியராமட்ரே முதலிய மலைத்தொடர்களும் இப்பகுதியில் காணப்படுகின்றன. இம்மலைத்தொடர்களுக்கு இடையே யூக்கொன், கொலம்பியா, கொலருடோ, மெக்சிக்கோ எனும் மேட்டுநிலங்கள் அமைந்துள்ளன.

### 2. மத்திய சமவெளிகளும் கரையோரச் சமவெளிகளும்


வடஅமெரிக்காவில் $\frac{3}{5}$ பாகத்தை மத்திய சமவெளிகளும் கரையோரச் சமவெளிகளும் கொண்டிருக்கின்றன. இவை சராசரி 1000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளுக்கு உட்பட்டனவாக உள்ளன. மத்திய சம்வெளி மிகப்பரந்தது; கட்சன் விரிகுடாவையும் அத்திலாந்திக் சமுத்திரத்தை அடுத்தும். கரையோரச் சமவெளிகள் அமைந்து இருக்கின்றன.

## 3. கனடாவின் பரிசைநிலம்

வடஅமெரிக்காவின் வடபகுதி பனிக்கட்டியாற்றால் அரிக்கப்பட்டு பரிசையாக விளங்குகின்றது. இதனைச் கனேடிய பரிசை, லொறேயினசன் பரிசை, கனடாவின் இரும்புக் கவசம் எனப் பல பெயரால்




படம்: 57 தரைத்தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பர். இப்பரிசை நிலத்தின் உயர்பகுதிகள் றொக்கிமலைகளை அடுத்துள்ளன; கிழக்குப்புறமும் உயர்வானது.

## 4. கிழக்கு உயர்நிலங்கள்

வடஅமெரிக்காவின் கிழக்கு உயர்நிலங்களாக அப்பலாச்சியன் மலைத்தொடரும், லபிறடோர் உயர்நிலமுமுள்ளன. இவை 3000 அடிக்கு மேற்பட்ட உயரத்தினையுடையன.

## நதிகளும் ஏரிகளும்

மிசூரிமிசிசிப்பி நதி (2,500 மைல்) வடஅமெரிக்காவில் மிக நீளமான நதியாகும். இது மத்தியசமவெளியில் பாய்ந்து மெச்சிக்கோக் குடாவில் கலக்கின்றது. யூக்கொன்நதி, கொலம்பியாநதி, கொலறுடோநதி, சினேக்நதி, என்பன மேற்கு மலைத்தொகுதியில் உற்பத்தியாகிப் பசுபிக்கில் விழுகின்றன. கொலறுடோநதி மிக ஆழமான பள்ளத்தாக்கினூடாகப் பாய்ந்து கலிபோணிய விரிகுடாவில் கலக்கின்றது மக்கன்சிநதி ஆக்டிக் கடலிலும், சென்லோறன்ஸ்நதி அத்திலாந்திக்கிலும் விழுகின்றன.

## காலநிலை

வடஅமெரிக்கா வடக்குத் தெற்காகப் பரந்ததொரு கண்டமாகும். கடகக்கோட்டிலிருந்து ஆக்டிக் கடல் வரை இது பரந்திருப்பதால் வடபகுதிக்கும் தென்பகுதிக்கும் இடையில் வெப்பநிலை வேறுபடுகின்றது. வடஅமெரிக்கா மேற்குப்பகுதியில் றொக்கிமலைகளையும் கிழக்குப்பகுதியில் அப்பலாச்சியன் மலைகளையும் கொண்டிருப்பதால், மழைவீழ்ச்சிப் பரம்பலிலும். வேறுபாடுகளுள்ளன.

## வெப்பநிலை

வடஅமெரிக்காவின். வெப்பநிலை பொதுவாகத் தெற்கிலிருந்து வடக்கே போகப்போகக் குறைவடைகின்றது. மாரிகாலத்தில் 32° ப. சமவெப்பக்கோடு வடஅமெரிக்காவை மேற்குக் கிழக்காக இரு சம கூறுகளாகக்குகிறது. மாரிகாலத்தில் அதிதெற்குவரை குளிர்காணப்படக் காரணம், குளிரான ஆக்டிக் காற்றுக்கள் தென்புறம் நோக்கி உள்நுழைவதேயாகும்.


கோடைகாலத்தில் வடஅமெரிக்காவில் வெப்பநிலை உயர்வாகவுளது. அதிவடக்கே 50° ப. சமவெப்பக்கோடு அமைகின்றது. அரிசோனுப் பகுதியில் 90° ப. வரை வெப்பநிலை நிலவுகின்றது. இக்காலத்தில் அதிவடக்குவரை வெப்பநிலை உயர்வாக இருக்கக் காரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்பமான தென்புறக்காற்றுகள் வடக்குநோக்கி உள்நுழைவதே யாகும்.

### மழைவீழ்ச்சி

மேலைக்காற்று வலயத்துள் வடஅமெரிக்கா அமைகின்றது. மாரி காலத்தில் மேலைக்காற்றுக்களை நெருக்கி மலைத்தொடர் தடுப்பதால், மேற்குக்கரையோரம் அதிக மழையைப் பெறுகின்றது. மத்தியசம




படம்: 58 காலநிலை-மழைவீழ்ச்சி, வெப்பநிலை

வெளி வரண்டதாக விளங்குகின்றது. மாரிகாலத்தில் கிழக்குகரை யோரத்திலும். கணிசமானவளவு மழை கிடைக்கின்றது. கோடை காலத்தில் கிழக்குப்பகுதிகள் அதிக மழையைப் பெறுகின்றன. இக் காலத்தில் மழைவீழ்ச்சி மேற்குநோக்கிக் குறைந்து செல்கிறது.

## இயற்கைத்தாவரம்

மத்திய அமெரிக்காவிலும் மேற்கு இந்தியத் தீவுகளிலும் வெப் பமான காலநிலை நிலவுவதால். இப்பகுதிகளில் வெப்பவலயக் காடு கள் காாணப்படுகின்றன. மெக்சிக்கோ, அரிசோனுப் பகுதியில் வறட்சி நிலவுவதால், பாலைநிலத் தாவரங்கள் அமைந்துள்ளன. கிழக்கு ஐக்கிய அமெரிக்காவில இடை வெப்பக் காலநிலை நிலவுவ தால் இலையுதிர் காடுகள் காணப்படுகின்றன. வடஅமெரிக்காவின் மத்தியபகுதியில் கண்டக்காலநிலை நிலவுவதால், இங்கு புல்வெளி களேயுள்ளன. இப்புல்வெளிகளைப் பிறேயறிஸ் என்பர். கலிபோணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாப்புகுதியில் மத்தியதரைக்கடற் காலநிலை நிலவுவதால் இங்கு மத்தியதரைக்கடற்காடுகள் உள்ளன. வடஅமெரிக்காவின் வடபகுதிமிகக் குளிரானது. அதனால் இங்கு தண்டராத் தாவரம் காணப்படுகின்றது.

# ஐக்கிய அமெரிக்கா

வடஅமெரிக்காகக் கண்டத்தின் மத்தியபாகத்தில் ஐக்கிய அமெரிக்கா அமைந்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் வடக்கே கனடாவும், தெற்கே மெக்சிக்கோவும், கிழக்கே அந்திலாந்திக் சமுத்திரமும், மேற்கே பசுபிக்சமுத்திரமும் காணப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்கா அரசியல் பலமும், பொருளாதார விருத்தியும் நிறைந்த நாடு, அதனாலேயே, வடஅமெரிக்காவில் மட்டுமன்றி, உலகிலேயே முதன்மைவாய்ந்த நாடாக விளங்கி வருகின்றது. சந்திரனில் முதன்முதல் மனிதனை இறக்கிய நாடு இதுவே. விஞ்ஞானத்துறையில் இந்நாடு பெருமுன்னேற்றம் கண்டிருக்கின்றது.

50 மாகாணங்கள் இணைந்ததே ஐக்கிய அமெரிக்க அரசாகும். அலாஸ்கா, ஹவாய் எனுமிரு மாகாணங்களும் ஐக்கிய அமெரிக்காவின் பகுதிகள்; ஆயினும் அவை தனித்தனி அமைந்து விளங்குகின்றன. ஹவாய் பசுபிக்சமுத்திரத்திலும், அலாஸ்கா வடஅமெரிக்காவின் வடமேற்கு அந்தத்திலும் உள்ளன,

ஐக்கிய அமெரிக்காவில் ஏறத்தாழ 16 கோடி மக்கள் இன்று வாழ்கின்றனர். இதில் ஏறக்குறைய 4 இலட்சம் மக்கள் அமெரிக்கா இந்தியர்கள்; 1½ கோடி மக்கள் நீக்கிரோவராவர். ஐக்கிய அமெரிக்காவின் 16 கோடி மக்களும் எங்கும் சமனாகப் பரந்து வாழவில்லை. ஐக்கிய அமெரிக்காவின் கிழக்குப்பகுதி உலகிலேயே குடிசனம் கூடிய பகுதிகளில் ஒன்றாகும். இப்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகள் நன்கு முன்னேறியிருப்பதால் அதிக மக்கள் இப்பகுதியில் செறிவாக வாழ்கின்றனர். ஐக்கிய அமெரிக்காவில் றொக்கி மலைப்பகுதிகளிலும் அதன் கிழக்குப்புறச் சமவெளிகளிலும் குடிசன அடர்த்தி மிக மிகக் குறைவாகும்; ஆனால், றொக்கிமலைத் தொடருக்கு மேற்கே, கரையோரமாக மக்கள் அதிக செறிவாக வாழ்கின்றனர்.

ஐக்கிய அமெரிக்கா இயற்கை வளம் நிறைந்த நாடாகும். உலகிலேயே அதிக கனிப்பொருள் வளத்தை இந்நாடு கொண்டிருக்கின்றது. உலகின் மொத்த நிலக்கரி உற்பத்தியில் 30 சதவீதமும், பெற்றோலியத்தில் 60 சதவீதமும் ஐக்கிய அமெரிக்காவிலேயே உற்பத்தியாகின்றன. அத்துடன் உலகக் கோதுமை உற்பத்தியில் 50 சதவீதமும், பருத்தி உற்பத்தியில் 35 சதவீதமும் இங்கேயே விளைகின்றன. வியாபாரத்தை அடிப்படையாகக் கொண்டே ஐக்கிய அமெரிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



SPECIMEN COPY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவில் பயிர்ச்செய்கை, கைத்தொழில்கள் என்பன நடைபெறுகின்றன.

ஐக்கிய அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டன் ஆகும். நியூயோக், பொஸ்தன், பிலடெல்பியா, சிக்காக்கோ, சான்பிரான்சிஸ்கோ, நியூ ஒலியன்ஸ் என்பன சிறந்த நகர்களாகும்.

## கைத்தொழில்கள்

ஐக்கிய அமெரிக்கா ஒரு கைத்தொழில் நாடாகும். ஏனெனில் இங்கு கைத்தொழில்கள் நன்கு விருத்தியுற்றுள்ளன. கைத்தொழில்கள் இங்கு விருத்தியுற்றமைக்கு இந்நாட்டில் ஏராளமான மூலப்பொருட்கள் கிடைக்கின்றமையே முதற்காரணமாகும். இரும்புருக்குக்கைத்தொழிலிற்குத் தேவையான நிலக்கரியும் இரும்புத்தாதும் இங்கு அதிக அளவிலுள்ளன. அப்பலாச்சியன், இலினோய், கான்சாஸ்-ஒக்கிளகோமா எனும் பகுதிகளில் நிலக்கரி வயல்கள் காணப்படுகின்றன. சுப்பீரியர் ஏரியின் மேற்கு, தெற்குப் பிரதேசங்களில் போதியளவு இருப்புத்தாது காணப்படுகின்றது; அப்பலாச்சியன், கலிபோனியா, ரெக்சாஸ் எனும் பகுதிகளில் பெற்றோலிய வயல்கள் அமைந்திருக்கின்றன. நயாகரா போன்ற நீர்வீழ்ச்சிகளிலிருந்து நீர்மின் சக்தியும் பெறப்படுகின்றது.

ஐக்கிய அமெரிக்காவில் இரும்புருக்குத் தொழில், யந்திரஉற்பத்தித்தொழில், நெசவுத் தொழில், உணவுற்பத்தித் தொழில் என்பன பிரதான கைத்தொழில் வகைகளாகும். இரும்புருக்குத் தொழில் பிற்ஸ்பேக், சிக்காக்கோ, டுலுத் முதலிய பகுதிகளில் நன்கு நடைபெறுகின்றது. *கைத்தொழில்களுக்கும் பயிர்ச்செய்கைக்கும் தேவையான யந்திரங்கள் மேற்குறித்த பகுதிகளிலும், யங்ஸ்ரவுன், பேமிங்காம் முதலான பகுதிகளிலும் உற்பத்திசெய்யப்படுகின்றன. மோட்டார்கார் உற்பத்தியில் டெற்றொயிற் எனும் நகரம் பிரதானமானது; கப்பல் கட்டுதல் பொஸ்தன், பிலடெல்பியா எனும் துறைமுகங்களில் நடைபெறுகின்றது. அத்திலாந்திக் கரையோர நகரங்களில் நெசவுக் கைத்தொழில் விருத்தியடைந்துள்ளது; குறிப்பாக நியூஇங்கிலாந்துப் பிரதேசம் நெசவுத் தொழிலில் முக்கியமானது; பருத்தி, கம்பளி, லினன், றையோன் முதலான பல்வகை நெசவும் பொருட்களும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. சென் லூயி, சின்சினட்டி, சிக்காக்கோ பகுதிகளில் இறைச்சி பதனிடுதல் நடைபெறுகின்றது. விஸ்கொன்சின் பகுதி பாற்பண்ணைத் தொழிலிற்குப் புகழ்பெற்றதாகும். பபுலோநகரம் கோதுமைமா அரைத்தல் தொழிலில் பிரதான இடத்தை வகிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிர்ச்செய்கை

கைத்தொழில்களைப் போன்று, பயிர்ச்செய்கையிலும் ஐக்கிய அமெரிக்கா, பிரதானமான நாடாக விளங்குகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் பயிர்ச்செய்கை, பரந்த வேளாண்மையாகும்; மிக




படம்: 59 வடஅமெரிக்க நாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் முற்போக்கான பயிர்ச்செய்கை முறைகள் யாவும் இங்கு கைக் கொள்ளப்படுகின்றன. உழுதல், விதைத்தல், அறுவடைசெய்தல், ஏற்றல், இறக்கல் எனும் செய்முறைகள் யாவும் யந்திரங்களினாலேயே நிகழ்த்தப்படுகின்றது.

ஐக்கிய அமெரிக்காவின் மொத்த நிலப்பரப்பில் 40 சதவீதம் விளைநிலமாகும். பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் பெரிதும் வியாபார நோக்கமாகவே நடைபெறுகின்றன.

கோதுமை, சோளம், நெல், முதலிய தானியப் பயிர்களும்; திராட்சை, அப்பிள், பியர்ஸ் முதலிய பழவகைகளும்; பருத்தியும்; மாடு, பன்றி முதலிய விலங்கு வேளாண்மையும் ஐக்கிய அமெரிக்காவின் பயிர்ச்செய்கையில் அடங்குகின்றன.

இரண்டு வகையான கோதுமைகள் ஐக்கிய அமெரிக்காவில் செய்கை பண்ணப்படுகின்றன. அவை வசந்தகாலக் கோதுமை, மாரி காலக்கோதுமை என்பனவாம். வசந்தகாலக் கோதுமைச் செய்கை வடடகோற்று, தெண்டகோற்று, மொந்தானா, மின்னசொற்று எனும் மாகாணங்களில நடைபெறுகின்றது. மாரிகாலக் கோதுமை கன் சாஸ், ஒக்கிளகோமா, எனும் மாகாணங்களில் செய்கைபண்ணப்ப டுகின்றது. சோளச்செய்கை ஐக்கிய அமெரிக்காவில் கன்சாஸ், மிசூரி, இலினோய், கெண்டகி, இண்டியானா, மேற்கு வேஜீனியா முதலிய மாகாணங்களில் நடைபெறுகின்றது. சோளம் பெரிதும் மிருக உண வாகவே பயன்படுத்தப்படுகின்றது. சோள விளைநிலங்களுக்குத் தெற்கே பருத்திச்செய்கை பரந்தளவில் நடைபெறுகின்றது. மிசூரி மிசிசிப்பி நதியின் கழிமுகப் பகுதியில் நெற்செய்கை காணப்படுகின் றது கலிபோர்னியா, புளோரிடா, நியூஇங்கிலாந்து எனும் மாகா ணங்களில் பழச்செய்கை நடைபெற்று வருகின்றது. அத்திலாந்திக் கரையோர மாகாணங்களில தோட்டச் செய்கை (மரக்கறிச்செய்கை) குறிப்பிடத்தக்கது. றொக்கி மலைத்தொடரை அடுத்துள்ள பகுதிகளி லும், பேரேரிகளைச் சூழ்ந்தமைந்த பகுதிகளிலும் விலங்குவளர்ப்பு நடைபெறுகின்றது. பேரேரிகளை அடுத்தே பாற்பண்ணைத் தொழி லும் பெரு விருத்தியுற்றுள்ளது.

யந்திர உபயோகம், சிறந்த செய்கை முறைகள், தென்சிநதித் திட்டம் போன்ற சிறந்த நீர்ப்பாசன முறைகள் என்பன ஐக்கிய அமெரிக்காவின் பயிர்ச்செய்கையை விருத்தியுற வைத்துள்ளன.

ஐக்கிய அமெரிக்கா இரும்புருக்கு, யந்திரங்கள், பருத்தி கோதுமை, புகையிலை, இறைச்சி, நிலக்கரி, பெற்றோலியம் முதலிய பொருட்களை ஏற்றுமதி செய்கின்றது; சீனி, பட்டு, கோப்பி, றப்பர், கம்பளி, சணல் முதலிய பொருட்களை இறக்குமதி செய்துகொள் கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா

வட அமெரிக்காவின் வடபகுதியைக் கனடா அடக்கியுள்ளது; கனடாவின் தென்னெல்லைப் புறத்தில் ஐக்கிய அமெரிக்கா அமைந்திருக்கின்றது. வட அமெரிக்க நாடுகளுள் பரப்பளவில் பெரியது கனடாவாகும். இங்கு ஏறத்தாழ 2 கோடி மக்கள் வாழ்கின்றனர். கனடாவின் தென்கிழக்குப் பகுதியிலும், ஐக்கிய அமெரிக்காவின் எல்லைப்புறத்தை அடுத்தும் மக்கள் அடர்த்தியாகவுள்ளனர்.

கனடாவின் பரப்பில் $\frac{1}{5}$ பங்கு மலைப்பிரதேசமாகும். மேற்குப் பாகத்தில் றொக்கி மலைத்தொடரின் வடபகுதி காணப்படுகின்றது. வடகிழக்குப் பாகத்தில் லபிறடோர் மேட்டுநிலம் காணப்படுகின்றது; லபிறடோரிலிருந்து கட்சன் குடாவைச் சுற்றிப் பழைய பாறைப்பரிசை ஒன்றுளது. இதனைக் கனடாவின் இருப்புக்கவசம் என்பர். கனடாவின் மத்திய பகுதியில் பனிக்கட்டியாற்றரிப்பால் உருவான பல ஏரிகளுள்ளன; கிறேற்பியர் ஏரி, கிறேற்சிலேவ் ஏரி, வின்னிப்பெக் ஏரி என்பன இத்தகையன. கனடாவின் கிழக்குப் பகுதியில் சென்லோறன்ஸ் நதி வடிநிலம் காணப்படுகின்றது.

கனடாவின் வடபெரும் பகுதியில், ஊசியிலைக்காடுகள் கிழக்கு மேற்கான ஒரு பெரிய வலயத்தில் வளர்ந்துள்ளன; ஊசியிலைக்காடுகளுக்கு வடக்கே தண்டரா வெளியும் பனிபடர்ந்த நிலமும் காணப்படுகின்றன. கனடாவின் மத்திய பகுதி பிறேயறீஸ் (பிரேரி) புல்வெளிகளைக் கொண்டிருக்கின்றது.

## மக்களின் தொழில்கள்

கனேடிய மக்களின் பிரதான தொழில்கள் என மரம்வெட்டுதல், மீன்பிடித்தல், பயிர்செய்தல், சுரங்கம் அகழ்தல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். பரந்த ஊசியிலைக் காடுகள் மரம்வெட்டுந் தொழிலிற்குத் தூண்டுதலாகவுள்ளன. மரத்தொழிலில் காகிதக்கூழ் தயாரித்தல் முக்கியம் பெறுகின்றது; அதனால் காகிதக் கைத்தொழில் கனடாவில் விருத்தியுற்றிருக்கின்றது. உலகிற்குத் தேவையான பேப்பரில் $\frac{1}{2}$ பங்கு கனடாவில் உற்பத்தியாகின்றது.

கனடாவின் அத்திலாந்திக் கரையோரமும், பசுபிக் கரையோரமும் உலகிலேயே சிறந்த இரு மீன்பிடித்தலங்களாகும்; இப்பகுதிகளில் ஏராளமாகப் பிடிக்கப்படும் மீன்கள் தகரத்தில் அடைக்கப்பட்டு உலகின் பல நாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன. கொட், கலிபட், சாடின் எனும் மீன் வகைகள் கனடாவில் அதிகம் பிடிக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவின் தானியக் களஞ்சியமாகப் பிறேயறீஸ் பகுதி விளங்கிவருகின்றது. பிறேயறீசின் ஈரலிப்பான பகுதிகளில் கோதுமைச் செய்கை முக்கியத்துவம் பெறுகின்றது. அல்பேட்டா, சாஸ்கச்சிவான், மனிடோபா என்பன கோதுமைச்செய்கையில் குறிப்பிடத்தக்க பகுதிகளாகும். கொலம்பியாப் பகுதியிலும் சென்லோறன்ஸ் நதிப்பகுதியிலும் அப்பிள், பியர்ஸ், செரி, திராட்சை முதலிய பழவகைகள் பயிரிடப்பட்டு வருகின்றன; மேலும் சென்லோறன்ஸ் பகுதியில் கலப்பு வேளாண்மையும் நடைபெறுகின்றது. கோதுமை, ஓட்ஸ், பார்லி, உருளைக்கிழங்கு என்பன இப்பகுதியில் செய்கை பண்ணப்படுகின்றன.

மந்தைவளர்ப்பு கனடாவின் இரு பகுதிகளில் முக்கியத்துவம் பெற்றுள்ளது; பிறேயறீசின் வரண்ட பகுதிகளும் சென்லோறன்ஸ் வடிநிலப் பகுதிகளும் அவையாகும். குதிரை, மாடு, செம்மறி, பன்றி, கோழி எனும் விலங்குகள் கனடாவின் மந்தை வளர்ப்பில் இடம்பெறுகின்றன. சென்லோறன்ஸ் வடிநிலத்தில் பாற்பண்ணைத் தொழில் குறிப்பிடத்தக்கது.

கனடாவில் கனிப்பொருள் அகழ்தல் அதிக முக்கியம் பெறவில்லை எனினும், கொலம்பியாவில் செம்பும், பேரேரிப் பகுதியில் இரும்புத்தாதும், பரவலாக நிக்கல், பொன் என்பனவும் பெறப்படுகின்றன.

கனடாவின் பிரதான நகர்களென வன்கூவர், குவிபெக், ஒற்ருவா, மொன்ரியல் என்பனவற்றைக் குறிக்கலாம். ஒற்ருவா கனடாவின் தலைநகராகும். வன்கூவர், மொன்ரியல் என்பன கனடாவின் துறைமுகங்களாகவுள்ளன. குவிபெக், மொன்ரியல் பகுதிகளில் கைத்தொழில்கள் விருத்தியுற்றுள்ளன. மோட்டார்வாகனம், றப்பர்ப் பொருட்கள், நெசவுப் பொருட்கள், காகிதம் என்பன இப்பகுதியில் உற்பத்தியாகின்றன.

கனடாவின் கிழக்குக் கரையோரமும் மேற்குக் கரையோரமும் கண்டக்குறுக்குத் தண்டவாளப் பாதைகளினால் இணைக்கப்பட்டுள்ளன. சென்லோறன்ஸ் நதி கப்பல் செல்லக் கூடிய கடல்வழியாகும். விமானப் போக்குவரத்தும் கனடாவில் நன்கு விருத்தியுற்றுள்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய அமெரிக்காவும் மேற்கிந்திய தீவுகளும்

## மத்திய அமெரிக்கா

மத்திய அமெரிக்காவில் மெக்சிக்கோ, குவாட்டமாலா, கொண்டூரஸ், எல்சல்வடோர், நிக்காரகுவா, கோஸ்ராரிக்கா, பனுமாக் குடியரசு, பிரித்தானிய கொண்டூரஸ் எனும் நாடுகள் உள்ளன. இவற்றுள் மிகப்பெரிய நாடு மெக்சிக்கோவாகும். மெக்சிக்கோ ஏறத்தாழ 7,67,000 சதுரமைல் பரப்பினையுடையது.

மத்திய அமெரிக்க நாடுகளூடாக ஒழுக்கு மலைத்தொடர் பரந்துள்ளது. மெக்சிக்கோப் பகுதியில் சியராமட்ரே மலைத்தொடர் அமைந்திருக்கின்றது. மத்திய அமெரிக்காவின் கிழக்குக்கரை தாழ்ந்த பிரதேசமாகும். யுகாற்றன் குடாநாடு இப்பகுதியிலேயே அமைந்துள்ளது.

மத்திய அமெரிக்கா பெரிதும் அயன மண்டலத்தைச் சேர்ந்தது; அதனுல் வெப்பமான காலநிலையே இங்கு நிலவுகின்றது. மலைத்தொடரின் தடுப்புக் காரணமாக கிழக்குப் பிரதேசம் அதிக மழையைப் பெறுகின்றது; வடகீழ் வியாபாரக் காற்று அதிக மழையைத் தருகிறது. புவிநடுக்கம், எரிமலைத்தாக்கம் என்பன மத்திய அமெரிக்கப் பகுதிகளிலுள்ளன.

மத்திய அமெரிக்காவில் பயிர்ச்செய்கை, பிரதான தொழிலாகவுள்ளது; சோளம், வாழை, கோப்பி, புகையிலை, கரும்பு, என்பன செய்கை பண்ணப்பட்டு வருகின்றன. மெக்சிக்கோவின் வடபகுதியில் மலைவேம்பு, வாழை, கரும்பு, பருத்தி என்பன பயிரிடப்படுகின்றன; மெக்சிக்கோவின் உயர்பகுதிகளில் கோப்பியும் தாழ்பகுதிகளில் புகையிலை, சோளம் என்பனவும் பயிரிடப்பட்டு வருகின்றன. குவாட்டமாலா, கோஸ்ராரிக்கா என்பன கோப்பிச்செய்கையில் முக்கியத்துவம் வகிக்கின்றன. மத்திய அமெரிக்காவின் கிழக்குப் பகுதிகளில் வாழை பிரதான பயிராகும்; உலகின் வாழைப்பழ உற்பத்தியில் மத்திய அமெரிக்கா அரைப்பங்கினை உற்பத்தி செய்துவருகின்றது. உயர்வெப்ப நிலையும் அதிக மழைவீழ்ச்சியும், ஆழமான வண்டல் மண்ணும் வாழைச் செய்கைக்குத் தூண்டுதலாகவுள்ளன.

மெக்சிக்கோவிலேயே கனிப்பொருட்கள் அகழப்படுகின்றன; மெக்சிக்கோ உலகிலுள்ள வெள்ளி உற்பத்தி நாடுகளில் முதன்மையானது. தங்கம், பெற்றோலியம், செம்பு என்பனவும் மெக்சிக்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் பெறப்படுகின்றன; தெம்பிக்கோ துறைமுகத்தினூடாக இக் கனிப்பொருட்கள் ஏற்றுமதியாகின்றன.

மத்திய அமெரிக்காவில், அத்திலாந்திக் சமுத்திரத்தையும் பசுபிக் சமுத்திரத்தையும் இணைத்து ஒரு கால்வாய்வெட்டியுள்ளனர்; இது பனமாக் கால்வாய் எனப்படும். இக்கால்வாய் 50 மைல்கள் நீள மானது; சராசரி 600 அடி அகலமும் 40 அடி ஆழமும் உடையது. இக்கால்வாய் வெட்டப்பட்டதனல், கப்பல் பிரயாணத் தூரம் குறைந்தது; 6000 மைல்கள் தென்னமெரிக்காவைச் சுற்றி நடந்து வந்த கப்பல் பிரயாணம் இதனல் 50 மைல்களாகக் குறுகியது.

## மேற்கிந்திய தீவுகள்

கரீபியன் கடலில், புளோரிடாவிலிருந்து திரினிடாட் வரையுள்ள தீவுகள் மேற்கிந்திய தீவுகள் எனப்படுகின்றன. கியுபா, யமேக்கா, கிஸ்பானியோலா, போட்டோரிக்கோ, பகாமா, திரினிடாட் முத லான தீவுகள் மேற்கிந்திய தீவுகள் எனப்படுகின்றன. கியுபா, யமேக்கா, கிஸ்பானியோலா, போட்டோரிக்கோ எனும் நான்கு தீவுகளும் பெரிய அண்டிலேஸ் எனப்படுகின்றன. போட்டோரிக் கோவிலிருந்து திரினிடாட் வரையுள்ள தீவுகள் சிறிய அண்டிலேஸ் எனப்படுகின்றன.

மேற்கிந்திய தீவுகள் அயனமண்டலக் காலநிலையைச் சேர்ந்தன; சராசரி வருட வெப்பநிலை 75° ப. ஆகும்; ஆண்டுமுழுவதும் மழை வீழ்ச்சியும் நிகழ்கிறது.


மேற்கிந்திய தீவுகளின் பிரதான பயிர் கரும்பாகும்: கியுபா, கிஸ்பானியோலா, போட்டோரிக்கோ என்பன கருப்பஞ்செய்கையில் முக்கியமானவை. கியுபாவில் புகையிலை, கோப்பி என்பனவும் கிஸ் பானியோலாவில் கோப்பி, கொக்கோ, பருத்தி என்பனவும் பயிரி டப்படுகின்றன. பகாமாத்தீவுகளில் தக்காளியும், யமேக்காவில் கரும்பு, வாழை என்பனவும் செய்கை பண்ணப்படுகின்றன. மேற் கிந்திய தீவுகளின் பயிர்ச்செய்கைப் பொருட்களில் கணிசமானவளவு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. திரினிடாட் தீவில் பெற்றோலியக் கிணறுகளுள்ளன.

கியுபாவின் தலைநகர் ஹவன்ன வாகும்; கிஸ்பானியோலா இரு குடியரசுகளாகப் பிரிந்துள்ளது; மேற்குப்பகுதி கயிற்றி என்றும், கிழக்குப்பகுதி டொமினிக்கா என்றும் வழங்கப்படுகின்றன. யமேக்கா வின் தலைநகர் கிங்ஸ்ரன் ஆகும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியா

கண்டங்களுள் மிகச்சிறியது அவுஸ்திரேலியாவாகும். இக்கண்டத்தைக் தனியானதொரு இடத்தில் அமைந்திருக்கும், பெரியதொரு தீவு எனலாம். இக்கண்டம் முழுவதும் மத்தியு கோட்டிற்குத் தெற்கே அமைந்துள்ளது. இக்கண்டம் ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்குமுன்பு 'குக்' என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. அவுஸ்திரேலியா தனித்த தென்கண்டமாக இருப்பதால் அதற்கெனவுரிய விலங்குகளையும் (கங்காரு, எமு, கங்கஸ், கோலாக்கரடி), தாவரங்களையும் (பொற்றில்மரம், பிளாக்போய், வாற்றில்மரம்) கொண்டுள்ளது.



படம்: 62 அவுஸ்திரேலிய மரங்கள்
பொற்றில்மரம் - பிளாக்போய் - வாற்றில்மரம்

அவுஸ்திரேலியா ஏறத்தாழ 30,00,000 சதுரமைல் பரப்பினையுடையது; ஆசியாவின் பருமனில் ஆறிலொரு பங்கு; நமது இலங்கையைப் போல 125 மடங்கு பெரிது. ஆனால், குடித்தொகை, இலங்கை கொண்டிருக்கும் 1 கோடி 20 இலட்சமாகவுள்ளது. இக் கண்டத்தில் ஐரோப்பாவிலிருந்து குடியேறிய மக்களும், இங்கு காலம் காலமாக வாழ்ந்த சுதேசிகளும் வாழ்கின்றனர். ஆசிய மக்கள் சிறிதளவுள்ளனர். ஐரோப்பிய குடியேற்றத்தின்பின் சுதேச மக்கள் 'ஆர் கெல்லாந்து' என்ற அவுஸ்திரேலிய வடபகுதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளனர்; இவர்களை 'மாயாஸ்' என்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வட அமெரிக்காவின் தரைத்தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்; 63 அவுஸ்திரேலிய நிர்வாகப் பிரிவுகள்
நகர்கள் — குடாக்கள் — தொடுகடல்கள்

## தரைத்தோற்றம்

அவுஸ்திரேலியாவின் தரைத்தோற்றத்தை மூன்று பிரிவுகளாக வகுக்கலாம். அவையாவன;

1. பெரியபிரிப்பு மலைத்தொடர்
2. சமவெளிகள்
3. மேற்கு மேட்டுநிலம்

**பெரிய பிரிப்பு மலைத்தொடர்;** அவுஸ்திரேலியாவின் கிழக்குப் பாகத்தில் வடக்குத் தெற்காக பெரிய பிரிப்பு மலைத்தொடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது; இதுவே அவுஸ்திரேலியாவின் மிக நீண்ட மலைத் தொடராகும். இம்மலைத்தொடரின் வடபகுதி உயரம் குறைந்தது; தென்பகுதி உயரமானது. இத் தென்பகுதியிலேயே அவுஸ்திரேலிய அல்ப்ஸ், நீலமலை என்பன அமைந்துள்ளன. மிகவுயர்ந்த சிகரமான கொஸ்கின்ஸ்கோ (7360′) இங்கேயே அமைந்துள்ளது.

சமவெளிகள்: அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கரை, மேற்குக்கரை, மத்தியபகுதி என்பன சமவெளிகளாகக் காணப்படுகின்றன. மறேடாலிங் வடிநிலம், அயர்ஏரி வடிநிலம், காப்பென்ரேறியாத் தாழ்நிலம், நுல்லாபோ சமவெளி என்பன இச்சமவெளிகளாம்.




படம்: 64 அவுஸ்திரேலியாவின் தரைத்தோற்றம்
(1) மேற்கு மேட்டுநிலம் (2) சமவெளிகள்
(3) பெரிய பிரிப்பு மலைத்தொடர்

அவுஸ்திரேலியாவின் மிக முக்கியமான நதி மறேடாலிங் ஆகும். இந்நதி பெரியபிரிப்பு மலைத்தொடரில் உற்பத்தியாகி என்கவுன்ரர் குடாவில் கடலோடு கலக்கின்றது. டாலிங், மறே என்ற இரு பிரதான கிளையாறுகளின் இணைப்பே மறேடாலிங் நதி ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம்: 65 சமவெளிகள்


**மேற்கு மேட்டுநிலம்:** அவுஸ்திரேலியாவின் மேற்குப்பாகத்தில் இம்மேட்டுநிலம் அமைந்துள்ளது இது 600 அடிகளுக்கும் 1500 அடிகளுக்கும் இடைப்பட்ட உயரத்தினைக் கொண்டிருக்கின்றது. இம் மேட்டுநிலத்தை பெரிய அவுஸ்திரேலியப் பாலைநிலம் எனவும் அழைப்பர். அவுஸ்திரேலியாவின் நிலப்பரப்பில் ஏறத்தாழ ½ பாகத்திற்குமேல் இம் மேட்டுநிலம் கொண்டுள்ளது.

## காலநிலை


அவுஸ்திரேலியாவை ஊடறுத்து மகரக்கோடு செல்கின்றது. மகரக்கோட்டிற்கு வடபுறமாகச் செல்லச்செல்ல வெப்பநிலை கூடுகிறது. மகரக்கோட்டிற்குத் தென்புறமாகச் செல்லச்செல்ல வெப்பநிலை குறைகிறது.

அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கரையோரப்பகுதிகள் அதிக மழைவீழ்ச்சியைப் பெறுகின்றன. 40 அங்குலங்களுக்கு மேல் மழையைப் பெறுகின்றன. பெரிய பிரிப்பு மலைத்தொடர், தென்கிழ் வியாபாரக் காற்றைத் தடுப்பதனால், இப்பகுதி அதிக மழையைப் பெறுகின்றது. அவுஸ்திரேலியாவின் நடுச்சமவெளி காற்றொதுக்கில் இருப்பதனால் குறைந்தளவு மழையையே பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்; 66 வெப்பநிலை




படம்; 67 மழைவீழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தென் அவுஸ்திரேலியாவின் தென்கீழ்ப்பகுதியும் தென்மேல் பகுதியும் மத்தியதரைக்கடல் காலநிலையை அனுபவிக்கின்றன. கோடை வறட்சியும், மாரிமழையும் காணப்படுகின்றன; மே மாதம் தொட்டு ஒக்டோபர் மாதம் வரை இப்பகுதிகளில் மழைவீழ்ச்சி நிலவுகின்றது.

மேற்கு அவுஸ்திரேலியப் பாலைநிலம் வரண்டது; இங்கு 10 அங்குலங்களுக்குக் குறைவாகவே மழை கிடைக்கின்றது. மகரக்கோட்டில் சூரியன் உச்சம் கொடுக்கும் காலத்தில் இப்பகுதி மிகுந்த வெப்பத்தினைப் பெறுகின்றது. நவம்பர் தொட்டு ஏப்பிரல் மாதம் வரை இப்பகுதிகளில் மிகுந்த வெப்பம் காணப்படுகின்றது.

அவுஸ்திரேலியாவின் வடபகுதி நவம்பர் தொட்டு ஏப்பிரல் மாதம் வரை மழையைப் பெறுகின்றது. தஸ்மேனியாத்தீவு தெற்கே அமைந்திருப்பதனால் வருடம் முழுவதும் மழையைப் பெறுகின்றது.

## குடிப்பரம்பல்

அவுஸ்திரேலியாவின் குடித்தொகை மிகவும் குறைவு; ஏறத்தாழ 1 கோடியே 20 இலட்சம் மக்கள் வரையிலேயே இக்கண்டத்தில்




படம்: 68 குடிப்பரம்பல்
(ஒரு புள்ளி இலட்சம் மக்களைக் குறிக்கிறது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றனர். அவுஸ்திரேலியாவின் மக்கள் சமச்சீரற்றுப் பரம்பியுள்ளனர். அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்தின் தென் கீழ்பாகம் நியூசவுத்வேல்சின் கிழக்குப்பாகம், விக்டோரியா மாகாணம், தென் அவுஸ்திரேலியாவின் அடிமெலயிட் பாகம், தென்மேல் அவுஸ்திரேலியமூலை என்பன செறிவாக மக்களைக் கொண்டுள்ளன. இப்பகுதிகளே காலநிலை வாய்ப்பான பிரதேசங்களாகும்.

அவுஸ்திரேலியாவின் வடபகுதி வெப்பமானது: அவுஸ்திரேலியாவின் மேற்குப்பகுதி பாலைநிலம். அதனால், இப்பகுதிகளில் பெரும்பாலும் மக்கள் இல்லை. அவுஸ்திரேலியாவின் ஏனைய பகுதிகளில் மக்கள் பரவலாய் வாழ்கின்றனர்.

## மக்களின் தொழில்கள்

அவுஸ்திரேலியாவின் சுதேச மக்களான 'மாயாஸ்' இன்றும் வேட்டையாடலிலும் காய்கனி தேடலும் ஈடுபட்டுள்ளனர். ஆனால்,




படம்: 69 மக்களின் தொழில்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேறிய மக்கள், விலங்கு வேளாண்மையிலும் பயிர்ச்செய்கையிலும் அதிகமாக ஈடுபட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் தொழில்களுள் ஆட்டுமந்தை வளர்ப்பு மிகவும் முக்கியமானது. மாட்டுமந்தை வளர்ப்பு நடைபெறுகின்றபோதிலும் பொருள்வருவாயைப் பெறுத்தளவில் ஆட்டுமந்தைத்தொழிலே முதலிடத்தைப் பெறுகின்றது. 'மரினோ' என்ற வகைச் செம்மறியாடுகள் கம்பளிக்காகவும் இறைச்சிக்காகவும் வளர்க்கப்படுகின்றன.



படம் 70 மரினோ செம்மறி ஆடு

அவுஸ்திரேலியாவில் தென் கீழ் அவுஸ்திரேலியாவிலும், நியூசவுத்வேல்சிலும் விக்டோறியாவிலுமுள்ள மறேடார்லிங் வடிநிலத்திலும் செம்மறி ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. பெரியபிரிப்பு மலைத்தொடருக்கு மேற்குப்பாகத்தில், சிறுமழையுடன் கூடிய வறண்ட காலநிலை நிலவுவதால் உரோமத்துக்கான ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. இப்பகுதியில் 'டவுன்ஸ்' என்ற கட்டைப் புற்களைக் கொண்ட புல்வெளி அமைந்துள்ளது.

அவுஸதிரேலியாவின் செம்மறி ஆட்டு வளர்ப்பிற்குத் தேவைப்படும் நீர், ஆட்டீசியன் கிணறுகளிலிருந்து பெறப்படுகின்றது. ஆடு வளர்க்கப்படும் பகுதி சுண்ணக்கல் பகுதியாகும். கிழக்கு அவுஸ்திரேலியாவில் பெய்யும் அதிக மழைநீர், சுண்ணக்கற்படைகளில் சுரந்து, அவுஸ்திரேலியாவின் மேற்குப் பகுதிகளுக்குத் தரைகீழ் நீராக வருகின்றது. இத்தரை கீழ்நீரைக் குழாய்கள் மூலம் பெறுகின்றனர்.

உலகிற்குத் தேவையான உரோமத்தில் 45 சதவிகிதத்தை அவுஸ்திரேலியா உற்பத்தி செய்து வருகின்றது. அவுஸ்திரேலியாவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்த ஏற்றுமதியில் கம்பளி 50 சதவீதமாகும்' சிட்னி, மெல்போன் எனும் துறைமுகங்களூடாக, பெரியபிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது.

பயிர்ச்செய்கை:- கோதுமை, பழவகை, நெல், கரும்பு என்பன அவுஸ்திரேலியாவில் செய்கை பண்ணப்படும் பயிர்களாகும். இவற்றில் கோதுமைச் செய்கை முதலிடத்தைப் பெறுகின்றது. நியூசவுத் வேல்ஸ், விக்டோரியா எனும் பகுதிகள் கோதுமை உற்பத்தியில் அவுஸ்திரேலியாவில் முதன்மை பெறுகின்றன. இக்கண்டத்தின் கோதுமை வயல்கள் பெரியன. ஒரு வயல் ஏறத்தாழ 600 ஏக்கர் பரப்பினையுடையது. யந்திரமயமான, பரந்தளவுப் பயிர்ச்செய்கை முறைமூலம் கோதுமைச் செய்கை நடைபெற்று வருகின்றது. கோதுமை ஏற்றும்தி செய்யும் நாடுகளில் அவுஸ்திரேலியா நான்காம் இடத்தைப் பெறுகின்றது.

விக்டோரியா மாகாணம் பழச்செய்கையில் முதலிடத்தைப் பெறுகின்றது; இங்கு நிலவுகின்ற மத்தியதரைக் காலநிலை பழச்செய்கைக்கு ஏற்றதாக இருக்கின்றது. அவுஸ்திரேலியத் தென்மேல் பாகமும் பழச்செய்கையில் குறிப்பிடத்தக்கது. முந்திரிகை, பீச், தோடை, அப்பிறிக்கோட் முதலிய பழமரங்கள் வளர்க்கப்படுகின்றன. தஸ்மேனியாத்தீவில் அப்பிள், பீச்பழங்கள் செய்கை பண்ணப்படுகின்றன. குயின்ஸ்லாந்து மாகாணத்தில் தோடை, அன்னுசி, வாழை எனும் அயனமண்டலப்பழங்கள் செய்கை பண்ணப்படுகின்றன.

அவுஸ்திரேலியாவின் கிழக்கு மாகாணங்கள் அதிக கனிப்பொருள் வளமுடையன. செம்பு, காரீயம், வெள்ளி, என்பன புரோக்கின்கில் எனுமிடத்தில் உள்ளன; செம்பு, யுரேனியம், தகரம், அலுமினியம் என்பன குளோன்கரி எனுமிடத்திலுள்ளன. இரும்புத்தாதும் நிலக்கரியும் சிட்னியையும் நியூகாசிலேயும் சூழ்ந்து காணப்படுகின்றன. மேற்கு அவுஸ்திரேலியாவில் கால்கூலி, கூல்காடி எனுமிடங்களில் தங்கச்சுரங்கங்களுள்ளன.


அவுஸ்திரேலியாவில், மின்சாரப்பொருட்கள், இரசாயனப் பொருட்கள், நெசவு என்பனவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுள்ளன.

அவுஸ்திரேலியாவின் தலைநகரம் கண்பேரா ஆகும். சிட்னி, மெல்போன், நியூகாசில், கடிலெயிட், பேர்த் என்பன குறிப்பிடத்தக்க நகர்களாகும். தஸ்மேனியாவின் தலைநகர் கொபாட் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்து

அவுஸ்திரேலியாவின் தென்கிழக்கே, 1200 மைல் தூரத்தில் நியூசிலாந்து அமைந்துள்ளது. நியூசிலாந்து இரு பெரிய தீவுகளையும் பலசிறிய தீவுகளையும் கொண்டுள்ளது. வடக்கேயுள்ளது வடதீவு என்றும், தெற்கேயுள்ளது தென்தீவு என்றும் வழங்கப்படுகின்றன. வடதீவையும் தென் தீவினையும் குக் தொடுகடல் பிரிக்கின்றது. தென் தீவுக்குத் தெற்கே ஸ்ரீவாட்தீவு அமைந்துள்ளது. நியூசிலாந்தில் குடியேறியவர்கள் ஐரோப்பாவிலிருந்து குடியேறியவர்களே. நியூசிலாந்தின் பரப்பு 1,03,285 சதுரமைல்களாகும்.




படம்: 71 நியூசிலாந்தின் தரைத்தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரைத்தோற்றம்

இரு தீவுகளின் முதுகெலும்புபோல தென்மேற்கு — வடகிழக்காக ஒரு மலைத்தொடர் அமைந்துள்ளது. அதனை நியூசிலாந்து அல்ப்ஸ் எனப்படும். இம் மலைத்தொடரிலிருந்து வைகாட்டோ, வைற்றாகி முதலிய நதிகள் உற்பத்தியாகிப் பாய்கின்றன. மத்திய மலைப்பகுதியைச் சூழ்ந்து கரையோரத் தாழ்நிலங்கள் அமைந்துள்ளன. தென் தீவிலுள்ள கன்ரபரிச்சமவெளி முக்கியமான தாழ்நிலமாகும். வட தீவிலுள்ள ஒக்லாந்தும் சமவெளியாகும்.

## காலநிலை

நியூசிலாந்து முழுவதும் இடைவெப்பக் காலநிலையைச் சேர்ந்தது மகரக்கோட்டிற்கு தெற்கே இது அமைந்துள்ளது. மேலைக்காற்றுக்களின் செல்வாக்கினுள் இத்தீவுகளுள்ளன. இரு தீவுகளும் ஆண்டு




படம் 72 மக்களின் தொழில்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் மழையைப் பெறுகின்றன. எனினும், மேற்குக்கரை அதிக மழையைப் பெறுகின்றது.

## மக்களின் தொழில்கள்

மந்தை வளர்த்தல், மரம் வெட்டுதல், தானியச் செய்கை, பழச்செய்கை என்பனவே நியூசிலாந்து மக்களின் பிரதான தொழில்களாகவுள்ளன. மந்தை வளர்த்தல் பிரதானமான மக்கள் தொழிலாகும். தென்தீவில் கன்ரபரிச்சமவெளி காற்றெதுக்கில் உள்ளது: இங்கு மழை குறைவு; கட்டைப்புற்கள் நன்கு வளர்கின்றன: அதனால் கன்ரபரிச் சமவெளியில் செம்மறி ஆடுகள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன: நியூசிலாந்தின் வருவாயில் 25 சதவீதம் கம்பளியிலிருந்து கிடைக்கின்றது. வடதீவிலுள்ள தாழ்நிலங்களில் பாற்பண்ணைத் தொழிலே முக்கியமானது. இத் தாழ்நிலங்கள் காற்றுப்பக்கத்தில் இருப்பதனல் அதிகமழையைப் பெறுகின்றன; அதனல் செழிப்பான புல் இப்பகுதிகளில் வளர்கின்றது. வடதீவில் ஒக்லாந்து சிறந்த பாற்பண்ணைப் பிரதேசமாகும்; இங்கு சிறந்த பால்மாடுகள் வளர்க்கப்படுகின்றன. கட்டிப்பால், வெண்ணெய், பாலாடைக்கட்டி. பால்மா என்பன ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தென்தீவின் மேற்குப் பாகத்திலும், வடதீவின் கிழக்குப் பாகத்திலும் காடுகள் செழித்து வளர்ந்துள்ளமையால் இப்பகுதிகளில் மரம்வெட்டுந்தொழில் நன்கு நடைபெறுகின்றது. கன்ரபரிச் சமவெளியில் கோதுமைச் செய்கை முக்கியம் பெறுகின்றது: ஒக்லாந்துப் பகுதியிலும் சிறிதளவு கோதுமைச் செய்கை நடைபெறுகின்றது. ஒக்லாந்துப் பகுதியில் பழச்செய்கையும் நடைபெறுகின்றது. அப்பிள், பியர்ஸ், பீச் எனும் பழவகைகள் செய்கைபண்ணப்படுகின்றன.

## குடிப்பரம்பல்


நியூசிலாந்தில் ஏறத்தாழ 20 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். வெலிங்டன், ஒக்லாந்து, கிறிஸ்ற்சேர்ச், டுனெடின் ஆகிய நகர்களை அடுத்து அதிக குடிச்செறிவு காணப்படுகின்றது. வெலிங்டன், நியூசிலாந்தின் தலைநகராகும்.

## யப்பான்

ஆசியாவின் கிழக்குக் கரையோரத்தில், பசுபிக்சமுத்திரத்தில் யப்பான் அமைந்துள்ளது. நான்கு தீவுகளின் இணைப்பே யப்பானகும். கொக்கைடோ, கொன்சூ, சிக்கோகு, கியூசு ஆகியனவே அந்நான்கு தீவுகளாகும். இவற்றைவிட வேறுபல சிறிய தீவுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் இது கொண்டுள்ளது. இது ஏறத்தாழ 1½ இலட்சம் சதுர மைல் பரப்பினையுடையது. அதிக மக்கட்டொகையையும் கொண்டுள்ளது.




படம்; 73 யப்பான்

## தரைத்தோற்றம்


யப்பான் தீவுகளின் மத்திய பகுதிகளில் முதுகெலும்பு போன்று மலைத்தொடர்கள் அமைந்துள்ளன. இம்மலைப்பகுதிகளைச் சூழ்ந்து ஒடுங்கிய தாழ்நிலங்கள் அமைந்திருக்கின்றன. மலைப்பிரதேசங்களிலிருந்து உற்பத்தியாகும் சிறிய நதிகள், கரையோரத் தாழ்நிலங்களுக்கூடாகப் பரய்ந்து கடலை அடைகின்றன.

## காலநிலை

யப்பான் மத்தியகோட்டிற்கு வடக்கே விலகி அமைந்திருப்பதனால், இடைவெப்பப் பிரதேசத்தில் அமைந்துள்ளது; அதனால், குளிரான காலநிலை பொதுவாக நிலவுகின்றது; யப்பானின் வட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி தென்பகுதியிலும் பார்க்க அதிக குளிரானது. மாரிகாலத்தில் வடபகுதியில் பனிபடர்ந்து இருக்கும் பொதுவாக யப்பானின் கோடைகால வெப்பநிலை உயர்வாகக் காணப்படுகின்றது. யப்பானின் தென்பகுதியில் இருந்து வடக்கே போகப்போக வெப்பநிலை படிப்படியாகக் குறைவடைகின்றது. தென்கிழக்கு ஆசிய நாடுகளைப் போன்றே யப்பான் தீவுகளும் பருவ மழைகளைப் பெறுகின்றன.




படம்: 74 யப்பானின் தரைத்தோற்றம்


இரு பருவக்காற்றுக்களுள். மாரிகாலக் குளிர்பருவக் காற்றுக்கள், கோடைகால சரப்பருவக் காற்றுக்கள் என்பனவே அவை. மத்தியி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள மலைப்பகுதி இவ்விரு பருவக் காற்றுக்களையும் தடுத்து மழை பொழிய வைக்கின்றது. அதனால் கோடைப் பருவக்காற்று யப்பானின் கிழக்குப் பகுதிக்கும், மாரிப்பருவக்காற்று யப்பானின் மேற்குப் பகுதிக்கும் மழையைக் கொடுக்கின்றது. பொதுவாக 40 அங்குலங்களுக்கு மேல் மழைகிடைக்கின்றது.

## பயிர்ச்செய்கை

மழைவீழ்ச்சி போதியளவு இருந்தாலும், பயிர்ச்செய்கைக்குத் தடைகளுள்ளன. மாரி குளிராகவிருக்கிறது. பெரும்பகுதி நிலம்





படம் 75 யப்பானின் காலநிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைப்பாங்குடையதாக இருக்கின்றது. அதனால் போதியளவு விளை நிலம் இல்லை. யப்பானின் மொத்தப்பரப்பில் அரைப்பகுதி மட்டுமே பயிர்ச்செய்கைக்கு ஏற்றதாக விளங்குகின்றது.

நெல் யப்பானின் பயிர்ச்செய்கையில் மிக முக்கியமான தானியப் பயிராகும். யப்பானின் விளைநிலத்தில் அரைப்பகுதி நெற்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. யப்பான் நெற்செய்கையில் நவீன முறைகளைக் கூடியளவில் பயன்படுத்துகின்றது. யந்திர உபயோகம், பசளையிடுதல், களைபிடுங்கல் நாற்றுநடுதல் முதலிய முறைகள்மூலம்




படம்: 76 மக்களின் தொழில்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியளவு பயனை நெற்செய்கையில் பெறுகின்றது. பயிர்ச்செய்கைக்கு நிலம் குறைவாக இருந்தும் விஞ்ஞான முறையிலான செய்கைகளினால் ஒரு ஏக்கருக்குச் சராசரியாக 75 புசல் நெல் பெறப்படுகின்றது. கோதுமை, வாற்கோதுமை, ஓட்ஸ், முசுக்கொட்டைச் செடி என்பனவும் யப்பானில் பயிரிடப்பட்டு வருகின்றன. மலைப் பிரதேசங்களில் காடுகள் செழித்துள்ளன. அதனால் மரம்வெட்டுந் தொழிலும், கடுதாசித் தொழில்களும் விருத்தியுற்றுள்ளன. யப்பானிய மக்கள் மீன்பிடித்தொழிலும் பெருவிருத்தியுற்றுள்ளனர்.

## கைத்தொழில்கள்

அண்மைக்காலத்தில் கைத்தொழிலில் அதிக வளர்ச்சியடைந்த நாடு யப்பானாகும். இங்கு நிலக்கரி, பெற்ரோலியம், இரும்புத்தாது என்பன சிறிதளவு கிடைக்கின்றன. எனினும், நீர்மின்வலு இங்கே அதிகளவில் கிடைப்பது கைத்தொழிலுக்குத் தூண்டுதலாகவுள்ளது. அதிக மழைபெறும் மத்திய மலையிலிருந்து உற்பத்தியாகும் அருவிகள் நீர்மின்வலுவை உற்பத்திசெய்ய உதவுகின்றன.

யப்பானில் பருத்திநெசவுத்தொழில் மிகவும் முக்கியமானது. பட்டு நெசவும் இங்கு முக்கியம் பெற்றுள்ளது. இரும்புப் பொருட்கள், மோட்டார்கள், கப்பல்கள், புகையிரத யந்திரங்கள், மின்சாரப்பொருட்கள் என்பனவும் யப்பானில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. யப்பான் தனது கைத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வருகின்றது. கொன்சூவின் தென்பகுதி பிரதான கைத்தொழில் பிரதேசமாகும். கோபே, ஒசாகா, கியற்ரோ, நாகோயா என்பன கொன்சூவிலுள்ள பிரதான கைத்தொழிற் பட்டினங்களாகவுள்ளன.

யப்பானில் இன்று ஏறத்தாழ 11 கோடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தென்பாகத் தீவுகளிலேயே மக்கள் அதிக செறிவாக வாழ்ந்து வருகின்றனர். முக்கியமாகக் கைத்தொழில் நகர்களைச் சூழ்ந்து மக்கள் அதிக செறிவாக வாழ்ந்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. பொ. த. (சாதாரண) தர
வகுப்பு மாணவர்களுக்குரிய
'சமூகக்கல்வி' நூல்கள்

★ சமூகக்கல்வி — விலை: 8–40

★ சமூகக்கல்வி
தேசப்படவேலை — விலை: 5–00

★ புவியியல் தேசப் –
படத்தொகுதி — விலை: 4–90
(அற்லஸ்)

ஆக்கியோர்:

க. குணராசா B. A. Hons. (Cey.), C. A. S.
கமலா குணராசா, B. A. (Cey.)

விபரங்களுக்கு
ஸ்ரீ லங்கா புத்தகசா[illegible]
234, [illegible]. கே. எஸ் [illegible]
யா[illegible]ப்பாண[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org